1621015

ரொபர்ட்ஸ் பிரபு (1832 1914)

வேதியர் விளக்கு

OFFICE OF THE REGI... 7 - JAN

The Mystery of God and the Mystery of Christ

COLOSSIANS ii. 2; iv. 3; EPH. iii. 14–19

By the Rev. C. H. Monahan, M.A.

Fourth Paper—Power Through the Spirit

THE Mystery of God is Christ. In Him is all the fulness of the godhead bodily. He is pre-eminent; His Person is unique, adequate and final. The mystery of Christ is the Church. 'Christ in us the hope of glory' is that mystery. In Him we are made full.

But how? Our experience of full redemption comes not by asceticism in itself, but by obedience of faith, which certainly implies discipline. Nor does it come by way of metaphysics, although a true metaphysic can never deny Christ who is the Truth, the reality behind phenomena. Nor does full redemption come through any physical marvels, although a believer must recognize Christ's complete freedom and power over nature. Least of all do we find the fulness of God by seeking unto familiar spirits. No! salvation is not a chemical process, as some gnostics imagined, nor a process of abstract thought. It is not to be found in the seances of the spiritualists. It is not mediated by spooks. The occultists are wide of the mark. This mystery, hidden till the fulness of the times in the counsel of God, is now proclaimed on the housetops. There is one way and one way only to reach the fulness of God in humanity—the personal and intensely searching way of repentance toward God and faith in the incarnate Redeemer, our Lord Jesus, who is the mystery of godliness, God manifest in the flesh.

In the Epistle to the Colossians, the main emphasis is upon the mystery of God; the divine glory of our Lord is gloriously displayed. The mystery of Christ in union with His

162015

body, the church is set forth in more detail in the Epistle to the Ephesians, to which we now turn for an exposition of the steps by which we become filled unto all the fulness of God. We paraphrase the classical passage in Ephesians iii. 14–19.

'For this cause I bow my knees unto the Father, from whom every family in heaven and on earth is named, that he would grant you, according to the riches of His glory, that ye may be strengthened with power through His Spirit in the inward man, that Christ may dwell in your hearts through faith; to the end that ye, being rooted and grounded in love, may be strong to apprehend with all the saints what is the breadth and length and height and depth, and to know the love of Christ which passeth knowledge, that ye may be filled unto all the fulness of God.'

Here we have the steps in Christian experience which lead to the fulness of God. And of these the first is

Power through the Spirit deep in the inner life

Do we really know any power save spirit? We have what we call matter, but we are spirit. Kin leaps to kin. Spirit we know, because spirit we are. Matter we do not know as yet. It seems just now to be one of the most elusive objects of thought. But spirit we know as power. When the creative spirit moves in the artist of His choice, waking his soul to music, breathing life into the marble, and soul into the picture, fashioning the words that breathe to the thoughts that burn, sending forth as current coin from the royal mint of heaven, words that reveal the thoughts of many hearts linked to harmonies that charm and master us, then man knows spirit. Deep answers to deep. We know and we are known.

We need as the first step towards the fulness of God a reinvigorated personality, not so much strength in this member or in that, as strength through the spirit in the inner life. The Greek preposition suggests that the spirit penetrates deep below the surface of our life. There is a strange weird world below the threshold of consciousness, largely unexplored by us. In it may be found the trail of the serpent, the entail of the tiger and the ape, to say nought of the devil. Not a few

respectable. Christians have records of cursing, swaggering, evil-living ancestors registered in their brain. One has heard of a blameless clergyman, whose life had always been exemplary, using atrocious language when he was under an anaesthetic on the operation table. He was perfectly innocent yet he used vile language such as he had never even heard in his life. Where did it come from? Out of the inner life where the record of some guilty ancestor had been registered and transmitted to his descendant. The clergyman who used the bad language was guiltless, but he was a sad witness to the ravages of sin in our race. We have the taint in the blood, for the theologians are right after all. Few things are more certain than original sin.

Think of the subliminal life of the wicked, which is like a troubled sea whose waters cast up on the shore of consciousness such mire and dirt as we witness in their lives. Their conscious self feeds upon the filthy scum of the dirty waters of their inner life.

Can no ray of light pierce those depths, no purifying power transform them? In the dim corners of that subterranean land, does the trumpet of God awake no answering echoes? Does power from the spirit reach right down into those dark recesses? Does the sword of the spirit pierce to the very core of our inner life? Yes! The sword of the spirit, which is the word of God, is a power, living, active, sharper than any two-edged sword and piercing even to the dividing of soul and spirit, of both joints and marrow, and quick to discern the thoughts and intents of the heart; and there is no creature that is not manifest in His sight, but all things are naked and laid open before the eyes of Him with whom we have to do. He penetrates the inmost mazes of the mind. Him no depths can drown.

He can search. Can He heal? Every part of the nature, deep down in the inner man? Can He hold what He has healed? Can He annex what He has conquered? Can the indwelling of Christ reach right to the last limit of the searching spirit's penetrating gaze? Or must the territory occupied always fall short of that explored? The spirit searcheth all

things even the deep things of God and of man. But it is the same spirit who is given that we may know the things that are freely given to us by God. The spirit that searches is the spirit that empowers. Is His healing power equal to His insight? How penetrating that insight is! Our frame is not hidden from Him, though it has been fearfully and wonderfully made. He understands our thought afar off. The last brilliant discovery of man is stale news to Him. He besets us behind and before. But He who tries me and knows my thoughts, He who sees if there be any wicked way in me, He it is who leads me in the way everlasting. He does heal. He does empower.

I say, with all the conviction I can summon, to every believing and obedient soul: 'What the spirit explores, Christ may possess. Where sin abounded grace does much more abound. The dark chambers of your life are not too much for Him. He can now free you and fill you with the life of God.'

A spirit lay bound in a house of clay,
Closed to the light of God alway,
Dark with the gloom of mortal sin—
Earth without and a spirit within.

But how can earth with spirit agree, or death with immortality?

There moved a form in the shadows dim,
And a tender radiance flowed from Him;
But the light disclosed in the prison cell
Ignorance, Pride and Hate as well.

His voice was sweet, and soft, and low,
And the poor dumb spirit loved it so;
But Ignorance, Pride, and Hate unite
To drown the voice, and hide the light.

Oh! who will set the spirit free,
And save her from the hideous three?

The light has pierced the gloom of sin,
The Word has silenced the strife and din,
The Saviour has broken the house of clay
And borne the ransomed spirit away.

Oh hidden life! O Christ within!
Break Thou the fetters of my sin!
My soul from mortal limits free
And bear me up to heaven with Thee.

Peter and His Work

பேதுருவும் அவன் செய்த ஊழியமும்

I. பேதுருவின் அழைப்பு:—

இயேசுநாதருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் பேதுரு என்னும் மறுநாமமுடைய சீமோன் என்பவன் பிரதானமான சீஷன். தாய் ஊராகிய கப்பர்நகூம் பட்டணத்தைச் சேர்ந்த செம்படவர்கள் குடியிருந்த பெத்சாயிதா என்னும் கிராமத்தில் சீமோனின் தகப்பனாகிய யோனா வசித்தான் (மத். 16. 17. யோவா. 1. 44; 21. 15). பெத்சாயிதாவிலே சீமோனும் இவன் மனைவியும் மாமியாரும் இவன் சகோதரனாகிய அந்திரேயாவும் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள் என்று நினைக்கலாம் (மாற். 1. 29. மத். 8. 14. லூக். 4. 38). சீமோனும் அந்திரேயாவும் கலிலேயாக்கடலில் மீன்பிடித்து ஜீவனம் செய்தார்கள். இவர்களும் யோவானும் யாக்கோபும் அந்தத் தொழிலில் கூட்டாளிகளாயிருந்தார்கள் என்று தோன்றுகிறது (மத். 4. 18. மாற். 1. 16. லூக். 5. 7). இயேசுநாதர் கலிலேயா நாட்டில் முப்பது வயதுவரையில் வாசம் செய்திருந்தாலும், யோவான்ஸ்நானன் வரப்போகிற மேசியாவைக் குறித்துப் பிரசங்கம்பண்ணும்முன் சீமோன் இயேசுவைக் கண்டிருந்தானோ இல்லையோ என்று தெரியாது. எப்படியென்றாலும் யோவான்ஸ்நானன் யோர்தான் நதிக்கு அக்கரையிலுள்ள பெத்தானியாவிலே தன்னைக் கேட்கும்படி வந்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது, சீமோன் முதலாவது இயேசு அருளின நன்மொழிகளைக்கேட்டான் (யோவா. 1 28-42). அக்காலத்தில் சீமோன், அந்திரேயா முதலியவர்களுடன், யோவான்ஸ்நானன் செய்த பிரசங்கத்தைக் கேட்கும்படி அவ்விடத்திற்குப் போயிருந்தான். அந்திரேயா யோவான்ஸ்நானனுடைய சீஷர்களில் ஒருவன் ஆனதால், யோவான்ஸ்நானன் இயேசுவைப் பார்த்த பிறகு இவர்தான் மேசியா என்று அறிந்து அச்செய்தியை அந்திரேயாவுக்குத் தெரிவிக்க, அந்திரேயா இதைக் கேட்டுச் சந்தோஷத்துடனே சீமோனுக்கு இந்தச் சமாசாரத்தைச் சொல்லி, இவனை இயேசுவினிடத்திற்குக் கூட்டிவந்தான். அப்பொழுது இயேசுநாதர் இவனிடத்திலுள்ள குணாதிசயங்களைத் தெரிந்து 'பாறை' என்று அர்த்தங்கொண்ட அரமேய பாஷையில் வழங்கும் 'கேபா' என்னும் மறுநாமத்தை இவனுக்கு அருளினார். அரமேய பதமாகிய 'கேபா' என்பதற்குப் பதிலாக கிரேக்க பாஷையில் 'பெத்ராஸ்' (Petros)

என்று சொல்லப்படும். ‘பெத்ராஸ்’ என்பதற்குத் தமிழ் பாஷையில் ‘பேதுரு’ என்று சொல்லுவார்கள். இவ்விதமாய்ச் சீமோன் என்பவன் ‘பாறை’ என்றர்த்தங்கொண்ட பேதுரு என்னும் பெயரால் அழைக்கப்பட்டான். இயேசுநாதர் பேதுருவுக்கு இந்தப் பெயர் கொடுத்த காரணம் யாதெனில், அக்காலத்தில் பேதுரு ஆத்திரக்குணமுள்ளவனும், அவசரமாய்ப் பேசுகிறவனுமாயிருந்தாலும், பிற்காலங்களில் இவன் அந்தக் குணங்களை நீக்கித் தமக்காக எல்லாவற்றிலும் அசைக்கக்கூடாதவனும் உண்மையுள்ளவனுமாயிருப்பானென்று அறிந்து இயேசு இவனுக்கு இந்தப் பெயரை அருளினார். இதைப் பெற்ற பேதுரு எப்போதும் நற்குணத்தை நாடித் தேடவேண்டியவனாயிருப்பான். அப்படி இயேசுவின் சித்தப்படி இவன் நடவாமற்போனால், அவர் இவனைப் ‘பேதுரு’ என்றல்ல; ‘சீமோன்’ என்று அழைத்து இவனை எச்சரிப்புச் செய்தார் என்று தோன்றுகிறது. (மாற். 14. 37. லூக். 22. 31. யோவா. 21: 15.)

பேதுரு முதலியவர்கள் இயேசுவைக் கண்ட பிறகு இவர்தான் மேசியா என்று தீர்மானமாய் அறிந்துத் தங்கள் ஊருக்குத் திரும்பிப்போனார்கள். சிலகாலத்திற்குப் பிறகு இயேசுநாதர் கப்பர்நகூமிலே ஜனங்களுக்குப் போதிக்க ஆரம்பிக்கும்போது, அவர் பேதுருவையும், அந்திரேயாவையும், யோவானையும், யாக்கோபையும் அழைத்து அப்போஸ்தலக் கூட்டத்தை ஸ்தாபித்தார். அவர் அந்தக் கூட்டத்தில் பன்னிருவரைச் சேர்த்தபிறகு அவர்களைச் சுவிசேஷ வேலை செய்ய அனுப்பும்போது, அந்திரேயாவையும் பேதுருவையும் கூட அனுப்பினார். (மத். 4. 18; 10. 2. மாற். 1. 1[illegible]; 6. 11. லூக். 1. 5.)

II. பேதுருவில் தோன்றின குணங்கள்.

இயேசுநாதர் பேதுருவை அழைக்குமுன் இவனைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் இவன் மூன்றுவருஷகாலம் இயேசுவுடன் சஞ்சரித்து, அவரைப் பின்சென்று, அவருடைய தோழனாயிருந்தபோது இவனிடத்தில் தோன்றிய குணங்கள் நன்றாய் விளங்கும். இவன் கல்வியில் தேறினவன் அல்ல என்றும், கல்வியின்மேல் விருப்பமுடையவன் அல்ல என்றும், வெகு ஆத்திரக்குணம் உள்ளவனென்றும் நாம் சொல்லவேண்டியிருந்தாலும், இவன் வாய்ச்சாதுரியத்திலும் பக்தி வைராக்கியத்திலும் மிகவும் தேறினவனாயிருந்தானென்று நாம் சொல்லக்கூடும். இவனைப்பற்றிய ஐந்து விசேஷங்களை நாம் கவனித்தால் இவனுடைய குணலட்சணங்களை அறியலாம்.

i. கப்பர்நகூமில் ஐயாயிரம் பெயருக்கு இயேசுநாதர் ஆகாரம் கொடுத்தபிறகு, அவர் பெத்சாயிதாவிலே ஜீவ அப்பத்தைக் குறித்

துப் பிரசங்கம்பண்ணித் தம்மைப் பின்செல்லுகிற சீஷர்களுடைய பக்தியைச் சோதிக்கும்படி, தாம் அவர்களுடைய அபிப்பிராயத்துக்கேற்றபடி யூதாவில் ராஜ்யத்தை ஸ்தாபிக்காமல் ஆவிக்குரிய விதமான ராஜ்யத்தை மாத்திரம் உண்டுபண்ணப் போகிறதாகத் தெரிவித்தார். அப்போது அவரைக் கேட்கவந்தவர்களில் அநேகர் வெறுப்படைந்து பின்வாங்கிப்போனார்கள். தவிர இயேசுநாதருடைய பன்னிரண்டு சீஷர்களில் சிலருக்கும் சந்தேகம் உண்டாயிற்று. இதினிமித்தம் இயேசு பேதுருவை நோக்கி: ‘நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ’ என்று வினவ, பேதுரு சந்தேகமின்றி நாம் இந்நாள்மட்டும் கவனிக்கவேண்டிய சில வார்த்தைகளைச் சொன்னான். அதாவது தான் இயேசுவின் தெய்வீகத்தன்மையை நன்றாய் அறிந்திருப்பதைக் காட்டும்படி ‘நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்’ என்றான். (யோவா. 6. 68-6[illegible].)

ii. இயேசுநாதர் சுவிசேஷ ஊழியத்தை நடத்தின கடைசி வருஷத்தில் அவரும் சீஷர்களும் செசரியா பிலிப்பி என்னும் நாட்டில் அலைந்து திரியும் காலத்தில் அவர் தமது பெயரில் அநேகர் இனிமேல் பக்திவைக்கமாட்டார்கள் என்றும், தமது சத்துருக்கள் அதிக விரோதங்கொண்டு தம்மை ஜயிக்கப்போகிறார்கள் என்றும், தாம் அவர்களுடைய கைகளில் அகோரவிதமாய் மரிக்கவேண்டும் என்றும், உணர்ந்து தம்முடைய சீஷர்களுக்கு இதனால் பயமும் சந்தேகமும் இருக்குமோ இல்லையோ என்று பார்க்கும்படி ‘நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்’ என்று கேட்டார். அப்பொழுது பேதுரு சற்றும் பயமும் சந்தேகமுமில்லாமல் ‘நீர்தான் கிறிஸ்து என்று சொல்லி இவ்விதமாய் இயேசுநாதர் கட்டப்போகிற சபைக்குத் தான் அஸ்திபாரக் கல்லாயிருக்கப்போகிறதைக் காண்பித்தான். இதைக் கேட்டபிறகு இயேசுநாதர் தாம் அடையப்போகிற மரணத்தைப்பற்றிப் பேசினபோது, பேதுரு வெறுப்புடனே ‘இது உமக்கு நேரிடக்கூடாதே’ என்று சொன்னான். இயேசுவுக்கு இந்தக் கெடுதி வராதபடி இவன் விரும்பினதினாலே, இவன் இயேசுவின் முழுக்கருத்தையும் நன்றாய் அறியவில்லை என்று தோன்றினாலும், இவன் இயேசுவின்மேல் வைத்த பக்தியில் கொஞ்சங்கூடக் குறையவில்லை என்று நாம் சொல்லக்கூடும். (மத். 16. 13. மாற். 8. 27. லூக். 9. 18.)

iii. இதற்கு ஒரு வாரத்திற்குப்பிறகு இயேசுநாதர் பேதுரு, யாக்கோபு, யோவான் என்பவர்களை அழைத்து மலைமேல் ஏறி அவர்களுக்கு முன்பாக மறுரூபம் அடையுங்காலத்தில், பேதுரு தான்

கண்டதைப் பூரணமாய் அறியாமல் 'ஆண்டவரே நாம் இங்கே இருப்பது நலம்; உமக்குச் சித்தமானால் இங்கே உமக்கு ஒரு கூடாரமும் மோசேக்கு ஒரு கூடாரமும் எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம்' என்று சொன்னது இவன் மனதில் இருந்த பக்தியினாலே இவனுக்கு இந்த எண்ணம் உண்டானது என்று தோன்றுகிறது. இவன் இப்படிச் சொன்னதின் அபிப்பிராயம் என்னவெனில், நன்றியில்லாத ஜனங்களுக்கும் விரோதமாயிருந்த மூப்பர்களுக்கும் இனிப் போவது ஏன் என்பதும், நாம் எல்லாரும் இந்தப் பரிசுத்த ஸ்தலத்திலே ஞான ஐக்கியத்தோடு எப்போதும் இருந்தால் உத்தமம் என்பதுமாம். இந்த வார்த்தைகளினாலே பேதுரு இயேசுவுக்கு மோசம் வரப்படாது என்றும், இவன் எப்போதும் இயேசுவின் திருச்சமுகததிலே இருக்க விரும்பினான் என்றும் அறிகிறோம். (மத். 17. 1-8. மாற். 9. 2-8. லூக். 9. 28-36.)

iv. இயேசு தாம் சிலுவையில் அறையப்படும் முந்தின நாள் சாயங்காலத்தில் தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவும்பொழுது பேதுரு இயேசுவை இப்படிச் செய்யாதிருக்க வேண்டிக்கொண்டான். இதனால் இவன் ஆண்டவருடைய மகிமையைக் கொஞ்சம் தெரிந்துகொண்டு பெரியவராகிய அவர் அடிமையின் தொழிலைச் செய்வது கூடாது என்று நினைத்தான் எனத் தெளிவாய்த் தோன்றுகிறது. மேலும் இயேசுநாதர் தமது நோக்கத்தை விளக்கிக் காட்டினபிறகு இவன் இயேசுவை நோக்கி, 'ஆண்டவரே, என் கால்களைமாத்திரம் அல்ல; என் கைகளையும் தலையையுங்கூடக் கழுவ வேண்டும்' என்று மன்றாடினதினாலே இவன் இயேசுவின்பேரில் வைத்த நல்ல பக்தி மறுபடியும் தெரியவருகிறது. (யோவா. 13. 6.)

v. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் சத்துருக்கள் அவரைப் பிடிக்கும்பொழுது, பேதுருமாத்திரம் இயேசுவைக் காப்பாற்றும்படி பட்டயத்தை எடுத்தான். அக்காலத்தில் இவன் தன் சுகத்தை நாடாமல் இயேசுவுக்கு உதவிசெய்யும்பொருட்டு ஆவ்வித மாய்ப் போர்புரிய ஆயத்தமுள்ளவனாயிருந்தான். (யோவா. 18. 18.)

(இன்னும் வரும்.)

God's Grace

By the Rev. H. A. Popley

கடவுள் திருவருள்

(தொடர்ச்சி)

மேலும் இதே விஷயத்தைக்குறித்து

'மூக்குணத்தைச் சீவனென்னும் மூடத்தை விட்டருளால்
அக்கணமே எம்மை அறிந்துகொள்வ தெக்காலோ' என்று (xiii)

தாயுமானவர் பூரண அறிவையடையும் எதிர்காலத்தை பார்த்தெழுதினார்.

'எங்குந்தான் நிறைந்த சிவன் நின்றானாகில்
எல்லாரும் காணவே வேண்டுந்தான் என்னில்
இங்குந்தான் அந்த கருக்கிரவி இருளாகும்
ஈசனருட்கண் ணிலார்க் கொளியாயே இருளாம்
பங்கந்தான் எழும்பதுமம் பக்குவத்தை யடையப்
பரிதி அலர்ந்திடுவதுபோல் பருவஞ்சேர் உயிர்க்குத்
துங்கமான ஞானக்கண் கொடுத்தருளாலே சோதிக்குச்
சோதியாய்த் தோன்றிடுவன் காணே' என்று (xiv)

அறிவு பெறும்பொருட்டு தெய்வ அருள் செய்யவேண்டிய வேலை இன்னதென்று சிவஞான சித்தியார் போதித்திருக்கிறார்.

பசுவின் இயல்பும் பாசத்தின் இயல்பும் கடவுளின் திருவருளால் அல்லாமல் ஒருபோதும் தெளிவாய் வெளிப்படா. ஞானத்தேர்ச்சி தெய்வ அருளாலேயே வரும்.

(xiii) மூக்குணத்தைச் சீவன் என்னும் மூடத்தைவிட்டு—முக்குணங்களுடையது சீவனும் என்று நினைக்கும் மூடத்தன்மையைவிட்டு, அருளால் அக்கணமே எம்மை அறிந்துகொள்வது எக்காலோ—திருவருளால் அப்போதே என்னை அறிந்துகொள்ளும் காலம் எப்போது என்பதே.

(xiv) முதலடிக்கு—இறைவன் எங்கும் செறிந்து நின்றால் யாவரும் அறியவேண்டும் என்றால்,

இரண்டாமடிக்கு—இவ்விடத்திலே சூரியன் குருடர்க்கு இருளாதல் போல இறைவன் செயல் விளக்கமாயிருந்தும் அருளாகிய கண்ணிலார்க்கு அது அறியவாராது,

மூன்றாமடிக்கு—சேற்றில் தோன்றி பக்குவமுடைய தாமரை மலரை சூரியன் அலர்வித்தல்போல பக்குவமுடையார்க்கு,

நான்காமடிக்கு—இறைவன் அருள் கண்ணை கருணையினால் கொடுத்து அறிவுக்கறிவாய் நின்று தமமைத் தோற்றுவிப்பான் என்பதே.

(2) முத்தி வழியை ஏற்படுத்தல்.

இதுவே தேவ அருளின் விசேஷித்த தொழில். அருளினாலே முத்திபெற்றோம் என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார்.

அதுபோலவே இந்துமதங்கள் எல்லாம் கடவுளின் திருவருளே நம்மை மீட்கும் கருவியாம் என்று போதிக்கின்றன.

ராமாயணத்தில் விஷ்ணு அவதாரமெடுத்து மனிதர் துன்பங்களை நீக்கப் பூலோகம் வந்த சந்தர்ப்பத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'வானுளோர் அனைவரும் வானரங்களாக்
கானிலும் வரையிலும் கடிதடத்திலும்
சேனையோ டவதரித்திடுமின் சென்றென
ஆனனமலர்ந்தனன் அருளின் ஆழியான்' என்பதே. (xv)

நம்மாழ்வார் கடவுளின் பேரருளை அநேகவிதமாய் வருணித்துப் பாடுகிறார்.

'வினையேன் வினைதீர் மருந்தானாய்! விண்ணோர் தலைவா' என்றும், (xvi)

'அருளின் பெருநசையால் ஆழாந்து நொந்தாயே' என்றும், (xvii)

'மேவியன்தான் நிரைகாத்தவன்—உலகமெல்லாம்
தாவிய அம்மானை எங்கினித் தலைப்பெய்வனே' என்றும் (xviii)

அவர் தருபாடல்களில் எழுதியிருக்கிறது.

மாணிக்கவாசகரும் தம்மை மீட்டுக்கொண்ட தெய்வ அருளை எப்போதும் கொண்டாடுகிறார்.

(xv) அருளின் ஆழியான்—அருட்கடலாகிய விஷ்ணு, ஆனனமலர்ந்தனன்—முகமலர்ந்து, வானுளோர் அனைவரும் வானரங்களா—தேவர்கள் எல்லாம் குரங்குகளாக, கானிலும் வரையிலும் கடிதடத்திலும்—காடு முதலிய இடங்களிலும், சேனையோடு அவதரித்திடுமின் சென்றென—சேனைகளுடன் பூலோகம் சென்று அவதாரம் எடுத்துக்கொள்ளுங்கள் என்றார் என்பதே.

(xvi) தெளிவு.

(xvii) அருளின் பெருங்கருணையாலே அதிக நொந்து துன்பப்பட்டாய் என்பதே.

(xviii) மேவியன்தான் நிரைகாத்தவன்—கோபாலன் நமக்குச் சிநேகிதன், உலகமெல்லாம் தாவிய அம்மானை—உலகமெல்லாம் வலிய நாடி நேசித்த எம்பெருமானை, எங்கினித் தலைப்பெய்வனே—எவ்விடம் சேரலாம் என்பதே.

'மாறிலாத மாக்கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறிலாப் பதப்பரிச பெற்றநின்
மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினார்
ஈறிலாத நீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுடமாக நோக்கியும்
கீறிலாத நெஞ்சுடைய நாயினேன்
கடையனாயினேன் பட்ட கீழ்மையே' என்றும், (xix)

'தேனை அமுதை கரும்பின் தெளிவை தித்திக்கும்
மானை அருளாய் அடியேன் உனை வந்துறுமாறே' என்றும் (xx)

திருவாசகத்தில் பாடுகிறார்.

தாயுமானவரும்,

'அரசே நின் திருக்கருணை யல்லாதொன்றை
அறியாத சிறியேன் நான் அதினால் முத்திக்
கரைசேரும்படிக்குன் னருள்புணையைக் கூட்டும் கைப்பிடியே
கடைப்பிடியாக் கருத்தில் கொண்டேன்' என்று (xxi)

தாம் முத்தியைச் சேரும் கருவியாக அருளைப் பாடினார்.

இவைகளிலும் இன்னும் அநேக பாட்டுகளிலும் கடவுள் தானாகவே அருள்புரிந்து இரட்சிக்கிறார் என்னும் கருத்து வெளிப்படுகிறது.

அவர் வலிய நம்மிடத்தில் அருள் செய்கிறார். நம் பட்சத்தில் யாதொரு புண்ணியமில்லை.

(இன்னும் வரும்.)

(xix) மாறிலாத மாக்கருணை வெள்ளமே—, முந்திவந்து நின்மலர்கொள் தாளிணை—வலிய வந்து உனது தாமரை மலர்போன்ற திருவடியிலிருந்து, வேறிலா பதப்பரிசு பெற்ற—வேறுபடாத பக்குவம் அடைந்த, நின்மெய்ம்மை அன்பர்—உன் மெய்யடியார்கள், உன் மெய்ம்மை மேவினார்—உன் உண்மை நிலையை அடைந்தார்கள், ஈறிலாத நீ ஒளிசெய் மானுடமாக—முடிவற்ற நீ பிரகாசமுள்ள மனிதரூபமாக, எளியை ஆகிவந்து நோக்கியும்—எளியையாய் எழுந்தருளி கடாட்சித்தும், கீறிலாத நெஞ்சுடையனாயினேன்—பிரிவுபடாத (உருகாத) நெஞ்சனாகிய நான், கடையனாயினேன்—கடைப்பட்டவனானேன், பட்ட கீழ்மையே—இதற்கு என் தீவினையே காரணம் என்பதே.

(xx) தெளிவு.

(xxi) புணையை—தெப்பத்தை, மற்று—தெளிவு.

A Grace-filled Life
The 'Retrospect' of Rev. Hudson Taylor
Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்
ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'
பதினோராம் அதிகாரம்
(தொடர்ச்சி)

இதன்பிறகு, அவ்வளவு கலக்கத்திற்கும் காரணம் தெரிவிக்கப்பட்டது. நாங்கள் இல்லாத வேளையில் எவனோ ஒருவன் ஊர்க்காவல் சேவகன் என்று வந்து, பத்துடாலரும் கொஞ்சம் அபினும் கொடுக்கும்படி மிரட்டினான். கொடாவிட்டால் அடுத்திருந்த தேசச்சரக்கு வியாபாரக் கப்பலிலிருந்து ஐம்பதாட்கள் வந்து (திருட்டுப்பு வியாபாரக்காரர்) எங்கள் படவுகளை உடைத்துச் சின்னாபின்னப்படுத்துவார்கள் என்றான். அதைக்கேட்டு, எங்கள் தொழில் வியாபாரமல்ல, ஜனங்களுக்கு உபதேசிப்பதும் புத்தகங்கள் பரிமாறுவதுமே எங்கள் வேலையாகையால், மருந்துக்கும் எங்களிடத்தில் அபின் அகப்படாது; மேலும், எங்கள் கையிருப்பு எல்லாம் செலவாய்ப் போயினமையால் ஒரு காசுகூடக் கொடுக்க வழியில்லை என்று சுங்கு என்பவர் சொல்லிவிட்டார். வந்த ஆள் உன் சொல்லை நம்பமாட்டேன் என்று அடம் சாதித்ததால், எங்களைக் கண்டு பதில் கொண்டுவருமட்டும் காத்திருக்க அவனுக்குச் சொல்லி சுங்கு என்பவர் எங்களைத் தேடிப் புறப்பட்டார். நாங்கள் இதுவரைக்கும் வழக்கமாய்ப் போன இடத்தைவிட்டு வேறிடத்துக்கு மாறிப்போனது அவருக்குத் தெரியாமல் வழக்கமான இடத்தில் தேடி எங்களைக் காணாதவரானார்.

இதற்கிடையில் எங்கள் படவாட்கள் யாருக்கும் தெரியாமல் இடம் நழுவிப் போய்விட்டார்கள். அவர்களுக்கு வந்த பயம் கொஞ்சநஞ்சமல்ல; பட்டப்பகலிலேயே நெஞ்சு துணிவாய் முரட்டுவேலைசெய்த பாதகர்கள் இரவில் என்ன வேலை செய்வார்களோ என்று அவர்கள் மிகக் கலங்கியிருந்தார்கள். இருந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்ததும் அவர்கள் எங்கள் படவுகளை வேறுபிரித்துத் திக்குக்கு ஒன்றாய் ஓட்டினார்கள். ஏன் என்றால் ஒரு படவு அகப்பட்டுச் சேதப்பட்டாலும் இன்னொன்றாவது தப்பி எங்களுக்கு அடைக்கலமாகுமே என்று நினைத்தார்கள். இதன்பிறகுதான் எங்களுக்காகக் காத்திருந்து எங்களைச் சேதமின்றிப் படவுக்கு அழைத்துப்போன படவுக்காரன் நான் முன்னே தெரிவித்த பிரகாரம் தெய்வேத்தனமாய் எங்களுக்கு எதிர்ப்பட்டான். எங்கள் படவுகள் முதலில் கட்டப்பட்டிருந்த கரையைத் தேடி சுங்கு என்பவர் திரும்பிவந்த தருணத்தில் பன்னிரண்டுக்கு அதிகமான ஆட்கள் மரங்களின் மறைவில் இருந்துகொண்டு அந்தப் படவுகள் எங்கே போயிருக்கும் என்று பேசிக்கொண்டும் தேடிக்கொண்டும் இருக்கக்கண்டு நகியாமல் ஒதுங்கிவிட்டார். அதிஷ்டவசத்தால் அவர்கள் தேடினது வாய்க்கவில்லை.

சிறிதுநேரம் தாழ்த்து இரண்டு படவுகளும் ஒன்றுடனொன்று கூடிக்கொண்டு தண்டுவலித்து ஓடின. இராத்திரியாகி வெகுநேரமானதாலும், அந்தப் பக்கம் பிரயாணம் செய்வதால் பொல்லாத மனிதரின் கில்லறைக்குத் தப்புதல் கூடாமையினாலும், இனியென்ன செய்வதென்று ஆலோசிக்கலானோம். இந்த விஷயத்தை படவாட்களே முடிவுசெய்யவிட்டோம். அவர்கள் தங்கள் சுயஇஷ்டமாகவே முன் இருந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்து வந்தார்களல்லவா? ஆகவே, எங்கள் நிமித்தம் அபாயத்தில் அகப்படாமல் பத்திரமாயிருக்கத் தகுந்த ஒரு இடத்துக்கு அவர்களிஷ்டமாகவே போகச்சொன்னோம். ஆயினும், மறுநாள் ஓய்வுநாளாதலால் அதில் பிரயாணம் செய்யமாட்டோமென்பதை மனதில் வைத்துக்கொண்டு அவர்கள் செய்ய விரும்பினதை ஆலசியமின்றிச் செய்யத் தூண்டினோம். மேலும், நாங்கள் எவ்விடத்திலிருந்தாலும் எங்களுக்குத் தேவன் நியமித்த வேலையைத் தாழாமல் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியதாகையால் இடத்தைப்பற்றி எங்களுக்கொரு யோசனையில்லை என்றும், எதிரிகளுக்குத் தெரியாமல் இராப்பொழுதைப் போக்கினாலும் மறுநாள் உதயத்தில் எப்படியும் அகப்பட்டுக்கொள்வோமே என்றும் விளங்கவைத்தோம். அதுகேட்டு அவர்கள் இதுவரை இருந்த முன் இடத்திற்கே போதல் நலம் என்று தீர்க்க, நாங்களும் ஒப்பி அவ்விடத்திற்குத் திரும்பிவருகையில் எவ்விதமாகவோ வாய்க்கால்விட்டு வாய்க்கால்மாறி வெகுதூரம் போனபின், இடந்தெரியாமல் மயங்கி, காரிருளாகையால் இனிப் போகலாகாதென்று கருதி, படவுகளைக் கரைக்கு வலித்துக் கட்டினோம்.

அதன்பிறகு, படவாட்களையும் எங்கள் சுதேச உதவிக்காரரையும் கூட்டி 91-ம் சங்கீதத்தை அவர்களுக்கு வாசித்தோம். இந்த தேவவசனம் எங்களுடைய அக்கோரத்து நிலைமைக்கும் தேவைக்கும் எவ்வளவு ஏற்றிருந்தது என்பது சொல்லவேண்டுவதில்லை. அதானபின், எங்களைக் காரிருளால் கவசம்போட்டு மூடிக் கொடுமை செய்கிறவர்களின் கைக்குத் தப்புவித்தவருக்குத் துதிசெலுத்தி அவரடைக்கலத்தில் எங்களை ஒப்புவித்து நித்திரை செய்யலானோம். இஸ்ரவேலைக் காக்கிற உறங்காதவராகிய காவல்காரருடைய அநுக்கிரகத்

தால் எவ்விதத் தொந்தரையுமில்லாமல் ஆனந்தமாய் அனந்தலாடினோம். நீரே என் ஒதுக்கிடமும் என் கோட்டையுமானவர்' என்பது எவ்வளவு இன்பமாய் எங்களுக்கு அனுபவிக்கக் கிடைத்தது.

(இன்னும் வரும்.)

'Render unto Cæsar the things that are Cæsar's, etc.'

'இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்.'

அநேக வருஷங்களுக்கு முன்னே ஆசியாக் கண்டத்திலுள்ள பலஸ்தீனா தேசத்தை யூதர் ஆண்டுவந்தார்கள். அப்படியிருக்கும்போது, அந்நிய நாட்டாரான ரோமர் அத்தேசத்தில் பிரவேசித்து அந்நாட்டை யூதர் கையிலிருந்து எடுத்துக்கொண்டார்கள்; அதனால் அத்தேசத்தில், சுதேச மன்னர் சுயாதீனமற்றிருந்தார்கள். ரோம தேசாதிபதியே பலஸ்தீனாவை ஆண்டுவந்தான். அதன் நிமித்தம் யூதர்கள் அடிக்கடி ரோமருக்கு விரோதமாகக் கலகம் பண்ணிக்கொண்டே வந்தார்கள் அக்காலத்தில்தான் உலகரட்சகரான இயேசுகிறிஸ்து அந்நாட்டில் யூதவம்சத்தில் அவதரித்து உலக சஞ்சாரம் செய்து, அநேக இடங்களில் சுற்றித்திரிந்து நன்மைசெய்து, ஒரே மெய்யான கடவுளைப்பற்றிப் போதித்துக்கொண்டு, கடவுளுடைய சகல கல்யாண குணங்களைத் தமக்குள்ளிருந்து வெளிப்படுத்திக்கொண்டுவந்தார். யூதஜாதியாரான சில கலகக்காரர் ராஜாங்கத்துக்கு விரோதமானவைகளைப் பேசி அரசனுக்கு வரிகொடுப்பது ந்யாயமல்லவென்று தர்க்கித்துக்கொண்டிருந்த காலங்களில், இயேசுகிறிஸ்து யூதவம்சத்தைச் சேர்ந்தவராயினும், அந்நிய நாட்டாரான ரோமருக்கு மனதாரக் கீழ்ப்படிந்து அடங்கி, அரசனுக்குச் செலுத்தவேண்டிய வரி முதலானவைகளைச் செலுத்தி ராஜவிஸ்வாசம், ராஜபக்தியுள்ளவராயும் நடந்துவந்தார். இப்படியிருக்கையில் ஒருநாள் இவருடைய விரோதிகளில் சிலர் இவரிடத்தில் வந்து அவருடைய பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி, 'போதகரே நீர் சத்தியமுள்ளவரென்றும், எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம். நீர் முகதாட்சிணியம் இல்லாதவராய்க் கடவுளுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீர், இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ? நாம் கொடுக்கலாமோ, கொடுக்கக்கூடாதோ' என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, 'ஒரு பணத்தை என்னி

டத்தில் கொண்டுவாருங்கள்' என்றார். அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர் 'இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது'' என்று கேட்டார்; இராயனுடையது என்றார்கள். அதற்கு இயேசு, 'இராயனுடையதை இராயனுக்கும் கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்' என்றார்.

இயேசுகிறிஸ்து ராஜபக்தியுள்ளவராய் இருந்ததுமாத்திரமல்ல, தேசாபிமானமுள்ளவராயும் சுயஜனாபிமானமுள்ளவராயும் இருந்தார். ஒருநாள் சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய ஒரு கிரேக்கஸ்திரீ அவரிடத்தில் வந்து, தன் மகளைப் பிடித்திருக்கிற பிசாசைத் துரத்திவிடும்படி வேண்டிக்கொண்டாள். அதற்கு இயேசு அவளைப் பார்த்து, முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும் என்று தன் சொந்த ஜனத்தைக்குறித்து அப்படிப் பேசினார்.

இன்னொரு தடவை அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், கடவுளைவிட்டுப் பிரிந்துபோன யூதஜாதியாரான இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள் என்று இவ்விதமாய்ச் சொன்னதினால் அவர் தேசாபிமானம், சுயஜனாபிமானமுள்ளவர் என்று நன்றாய்த் தோன்றுகிறது. கடைசியாக அவர் தேவபக்தியுள்ளவராயும் துலங்கினார். தம்மை முற்றிலும் கடவுளுக்குத் தத்தம்செய்து தமக்கென்று ஜீவிக்காமல், கடவுளுடைய உள்ளத்திலிருந்த விருப்பத்தின்படி நடந்து தம்மையே மற்றவர்களுக்கென்று ஒப்புக்கொடுத்து, உலகத்தாரின் பாவங்களுக்கு வரவேண்டிய ஆக்கினைகளைச் சுமந்து தம் ஜீவனையும் சிலுவையில் கொடுத்து இவ்விதமாய்க் கடவுளுடைய விருப்பத்தை நிறைவேற்றினார். இதை வாசிக்கும் என் நண்பர்களே! நீங்கள் எவ்வளவு தூரம் ராஜபக்தியுள்ளவர்களாயிருக்கிறீர்கள். நாம் ஒரு பெரிய கலக்கமான காலத்தைக் கடந்துவருகிறோம். தற்சமயத்தில் ஐரோப்பாவில் நடக்கிற பயங்கரமான யுத்தத்தினால் நம்முடைய அருமை இங்கிலீஷ் ராஜாங்கத்தாருக்கு நேரிட்டுவருகிற உயிர்ச்சேதம், பொருள் சேதம் கொஞ்சமா? சத்தியத்திற்கென்று பாடுபட முன்னேறினதால் நமது மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மனதில் விளைந்த கவலைக்குக் குறைவா? இச்சமயத்தில் நம்முடைய ராஜவிஸ்வாசம் பொங்கி ஊற்றவேண்டாமா? இக்கலக்கமான நேரத்தில் நம்முடைய இங்கிலீஷ் ராஜாங்கத்துக்கு மூன்றுவிதமாய் உதவி செய்யலாம்.

1. அவர்களுக்காக ஜெபம் செய்யவேண்டும். அநேக உயிர்ச்சேதங்களும் பொருள் சேதமும் உண்டாகாமலிருக்கவும், பயங்கர யுத்தம் அமரவேண்டுமென்றும், சமாதானத்தைக் கடவுள் அனுப்ப

வேண்டுமென்றும், நமது இங்கிலீஷ் ராஜ்யத்தையும் நமதருமை மன்னரையும் கடவுள் ஆசீர்வதித்து நீடூழிகாலம் காக்கவேண்டுமென்றும் கடவுளை நோக்கி ஊக்கமாய்ப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

2. இந்தப் பயங்கரமான யுத்தத்தினால் எத்தனையோ ஆயிரக்கணக்கான புருஷர்கள் யுத்தகளத்தில் மாண்டனர். அநேக ஸ்திரீகள், தங்கள் புருஷர்களை இழந்து விதவைகளாகவும், பிள்ளைகள் தங்கள் தகப்பன்மார்களை இழந்து புலம்புகிறவர்களாகவும், அநேக வீரர்கள் படுகாயப்பட்டு வேதனை அடைகிறவர்களாகவுமிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நம்மால் இயன்ற அல்லது நம்முடைய சக்திக்குத் தகுந்தபிரகாரம் கொஞ்சம் பொருள் உதவி செய்ய நாம் கடமைப்பட்டிருக்கவில்லையா? நாம் அனுப்பும் சகாயம் எவ்வளவு அற்பமாய் இருந்தாலும், பிரஜைகளுடைய உள்ளத்தைக் கவனிக்கிற நமது ராஜாங்கத்தார் அதை அதிக சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வார்கள்.

3. இந்தக் கலக்கமான நேரத்தில் நாம் கொஞ்சமும் அதைரியப்படாமல் கடவுள்பேரில் விஸ்வாசம் வைத்து வீரதீரமாய் இருக்கவேண்டும். கருணை நிறைந்த கடவுள் நம் ஒவ்வொருவரையும் எல்லாத் தீமைக்கும் விலக்கி நம்மைக் காப்பாற்ற அவருடைய வல்ல புயம் சோர்ந்துபோகிறதில்லை. நமக்குள்ளிருக்கிற மற்ற பயங்காளிகளையும் தைரியப்படுத்திக்கொண்டு வரவேண்டுமே ஒழிய மற்றையபடி வீண்வார்த்தைகளை அலப்பித் திரியலாகாது. முற்கூறிய இம்மூன்று விஷயங்களையும் நம்முடைய மனதில் வைத்து அவைகளை நாம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நாம் ராஜாவுக்குச் செலுத்தவேண்டியதோடுகூட நாம் கடவுளுக்குச் செலுத்தவேண்டியதையும் மறக்காமலிருப்போமாக. கடவுள் நம்முடைய பொருளையல்ல, நம்முடைய மனதைக் கேட்கிறார். நாம் சிற்றின்பத்தின்மேல், ஆடம்பரத்தின்மேல், பாவத்தின்மேல் வைத்திருக்கிற மனதைத் திருப்பி கடவுள்பேரில் வைக்கவேண்டும். இவைகளையெல்லாம் போதித்துச் சாதித்துவந்த இயேசுநாதரிடம் நாம் அதிகமாய் சவகாசம் செய்தால் நாம் எவ்விதமாய் இராயனுடையதை இராயனுக்கும் கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்தவேண்டியது என்பதைப்பற்றி நமக்கு நன்றாய்ப் போதித்து வழிநடத்துவார். ஆகையால் இயேசுநாதர் ஒருவர்தான் வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். 'பூவைப்பற்றின நாரும் மணம் பெறும்' என்ற முதுமொழிபோல், இயேசுநாதரில் நிலைத்திருக்கிற ஒவ்வொருவனுக்கும், சுகந்த குணங்கள் உண்டாகும். ராஜபக்தி, தேவபக்தி, தேசாபிமானம், சுயஜனாபிமானம் எல்லாம் வளரும்.

D. L. R.

C. L. S. PRESS, MADRAS—1915

No. 105 பெப்ருவரி 1915

OFFICE OF THE ... 4-FEB 1915 MADRAS.

வேதியர் விளக்கு

The Call of the Disciples

PERHAPS the most significant of the clauses used in the third chapter of St. Mark's gospel, wherein the call of the disciples is recorded, is that in which it is stated that Christ called them *to be with Him*. Most of them had already received a call to discipleship; this second call was to close companionship. When He first began to preach, He had summoned some of them to His side, and some of John's disciples had recognized that a greater than John had come, and had therefore attached themselves to Him; but after a few weeks or days they had returned for the time being to their own homes and occupations, and it was only after this second call that they had definitely left all to follow Him. When, however, it became evident that the ministry of John was ended, and that the enmity which had pursued him was about to fasten on the Saviour as well, He seems to have realized that it was time for Him to begin to train those who were to succeed Him and build upon the foundations He was to lay, and He 'chose twelve that they might be with Him'. Henceforth, though He still worked miracles and spoke to the people in parables, His chief thought and labour were directed towards the training of the twelve; to them He opened His heart and shewed the mysteries of the kingdom of God, explaining to them the inner meaning of the symbolic and parabolic teaching He gave to the crowd, and seeking to fit them for the great task that lay before them in the future. His last word to them was to be 'Go ye', but that could only be spoken because His first word had been 'Come', and because in the quiet of intercourse with Him they had learnt

something of the secret of the gospel they were to proclaim to the whole creation.

And yet, the chief teaching which He gave them was this, that He allowed them to be with Him. It was not only at the Last Supper that He could say 'I have given you an example', His whole life and conversation had been such, and to them had been given a unique opportunity of studying that life, of knowing its motives, of understanding the great principles by which it was guided, and of shaping their own lives accordingly. Of all the great world-teachers, He alone can say without fear of egotism or charge of boastful pride, 'learn of Me'. His inner life was often laid bare before them; not alone in the crowded streets, but in the quiet of the desert and the solitude of the mountain had they been with Him. By day and by night, as He taught in public and as He prayed in private—as He dealt with the sick, the suffering and the sinful, and as He found refuge in the quiet homestead at Bethany, they were with Him. When, surrounded by foes, He shewed heavenly wisdom and supreme courage and resource, they were at His side, and when in the Garden of Gethsemane His soul was exceeding troubled they were still witnesses of all. Three of them had been with Him in the mount, and had seen the divine glory within break for a time through its surrounding veil of flesh, and transfigure His very form before their eyes; and all of them had sat in silent shame as their Lord and Master had laid His glory by and taken on Him the form of a servant that He might perform for them the office of the lowliest slave, and wash His disciples' feet. In all and through all, they were with Him; the tones of His voice and the keen quick glance of His eyes were familiar to them; blind they were to many things, and slow of heart beyond belief, but to them was given this supreme happiness—they were ever with Him.

But it was not only the open teaching which they received by so being with Him that was important. Far more decisive in their after life and work was the fact that this close companionship meant that without let or hindrance, without

OFFICE O... 4-FEB 1915 MA..RAS.

break or intermission, the sublime influence of His constant presence had free play over them. We are all familiar with the power of influence, and with its meaning. In the presence of some it is easy to do right, and hard to do wrong; their very presence seems to shame the evil in us, and without even a spoken word from them, we find our lives instinctively purified and raised, our aspirations quickened and ennobled, and all our thoughts turned to higher things. If that is so in the case of sinful men, whose influence and power must necessarily be diminished by the imperfection of their lives, how much more so must it have been in the case of Him who knew no sin, whose life and every thought were pure unsullied light, and upon whose mind no breath of evil had ever passed. How infinitely greater than that possessed by any other human being must have been the influence of His life, and how it must have unconsciously moulded the thought and life of those who were ever with Him! We can trace some of the changes it wrought. There were two brothers called to be with Him at the same time; and looking on them, and seeing the fiery nature of their hearts and the possibilities of fierceness in their dispositions, he had named them Boanerges, the sons of thunder! But under the stress of that influence that played on their lives, they who would at first have called down fire from heaven to destroy those who seemed to slight their Lord, were so changed that it is not as the son of thunder that we ever think of John, but as the Apostle of Love. And when the members of the Sanhedrim looked upon Peter and John after the resurrection, and marvelled at their boldness, even they, blinded as they were with hate, could not but acknowledge the influence that had been playing on these men's lives, and they 'took knowledge of them that they had been with Jesus'. In two short years the power of the life that overshadowed their own had changed them from narrow-minded Jewish fishermen into men who, inspired by the Holy Ghost, were fitted to be the builders of the Church against which the powers of hell still rage in vain.

At times we are tempted to envy them their privilege, and to wish that to us too had been given that untold blessing

which was theirs. But do we always remember that they purchased their privilege at a great price, and that if we too are willing to pay the price, the privilege may still be ours? It was no light matter for them to be always with the Master; it meant leaving home and friends, livelihood and most earthly comforts; for if the Master had not where to lay His head, the servant would be in like case. Their obedience to His call meant faith and self-sacrifice. Are we willing to pay the same price? What ease or comfort or convenience do we forego that we may be with Him? When days are crowded with pressing business, is it the hour of prayer or the hours of rest that are curtailed? If we are not equal to the slight demands upon our self-denial and faith that are made to-day, would we have been equal to the tremendous sacrifice that the disciples' obedience entailed? Let us pay the price, and we shall reap the reward, and be conscious of a sustaining presence at our side day by day, as were they. For it was as much for us as for them that the sustaining promise, 'lo, I am with you', accompanied the command to go forth into the world. For a time they had been with Him—now for ever, in His spiritual presence, He was to be with them. But again the blessing came as the result of faith and obedience. To the eye of faith He is still visible, and to the ear of faith His voice is familiar; not to the slothful and the disobedient; not to those who care more for their own ease and position than for the reproach of the cross; but to the humble souls who with patient faith attend upon His word, who make the path of His commandments their delight, who prize His company above that of their chief friends is He still near, to mould their life and to transform their souls as he transformed those who beside the Galilean sea heard and obeyed His call.

Peter and His Work

பேதுருவும் அவன் செய்த ஊழியமும்

(தொடர்ச்சி)

III. பேதுருவின் சோதனை.

பேதுரு செய்த குற்றங்களில் இவன் பிரதான ஆசாரியனுடைய மாளிகை முற்றத்தில் இயேசுவை மறுதலித்தது பெரும் பாவமே. நாலு சுவிசேஷகர்கள் அந்தச் சங்கதியைக் கவனித்துப் பேதுருவின் பெயரில் ஒரு வார்த்தையும் குற்றமாகச் சொல்லாவிட்டாலும் அவர்கள் அச்சங்கதியை விவரமாய் எழுதியிருக்கிறார்கள் (மத். 26. 69. மாற். 14. 66. லூக். 22. 54. யோவா. 18. 12). அக்காலத்தில் பேதுரு தனது ராஜாவாகிய இயேசுவுக்குத் துரோகம் செய்தான். ஆனால் பல குற்றங்களைச் செய்த நாம் இவன் இவ்விதமாய்க் குற்றத்தில் விழுவதற்குக் காரணம் இல்லை என்று சொல்வது எப்படி? இதைக் குறித்து நாம் கவனிக்கவேண்டியதாவது:

i. பேதுருவும் யோவானும் மாத்திரம் பிரதான ஆசாரியன் வீட்டில் தங்களுக்கு நேரிடும் அபாயத்தைக் கவனியாமல் கெத்செமனே தோட்டத்திலிருந்து அந்த மாளிகைக்கு இயேசுவைத் தொடரத் துணிந்தார்கள். (மத். 26. 58. மாற். 14. 54. லூக். 22. 54. யோவா. 18. 15.)

ii. பேதுரு தைரியசாலியாயிருந்தும், மனக்கலக்கமும் ஆத்திர குணமும் உள்ளவனானதால், மோசம் உண்டாகும் காலத்தில் தான் செய்யவேண்டியது இன்னதென்று தெளிவாய் அறிந்துகொள்ள மாட்டான். பேதுரு இயேசுவின் பெயரில் பக்திவைத்து அவரைப் பின்தொடர்ந்து பிரதான ஆசாரியன் மாளிகையில் பிரவேசித்திருந்தாலும், இவன் அங்கே வந்தவுடனே தான் இவ்விதமாய்த் தன்னைச் சங்கரிக்க ஆயத்தமாயிருந்த சத்துருவின் கோட்டையில் நுழைந்ததைக் கண்டு இயேசுவின்மேல் தான் வைத்திருந்த பக்தியைவிட்டுத் தனக்கு உண்டான மோசத்தை அறிந்து சொல்லிமுடியாத மனக்குழப்பமுள்ளவனாய்த் தான் விரும்பாத வார்த்தைகளைச் சொல்லியிருக்கக்கூடும்.

iii. பேதுரு இயேசுவை மறுதலித்து மகா பாதகம் செய்தபோதிலும், இயேசுவைக் கண்டவுடனே உண்மையாய் மனந்திரும்பினான். (மத். 26. 75. மாற். 14. 72. லூக். 22. 61.)

iv. இயேசு பேதுரு செய்த பாவம் மன்னிக்கக்கூடாத பாவம் என்று எண்ணாமல், இவனுக்குப் பூரண மன்னிப்பை அருளி

அவர் உயிர்த்தெழுந்த முதல்நாளிலேயே அவனுக்கு தரிசனம் ஆனார். அதற்குப்பின் அவர் கலிலேயாக் கடல் ஓரத்தில் தோன்றி, பேதுருவைப் பார்த்து, கிறிஸ்தவ சபையை ஸ்தாபிக்கும் விஷயமாய் இவனுக்கு முக்கிய உத்தியோகத்தை அருளினார் (லூக். 24. 34. 1 கொரி. 15. 5. யோவா. 21. அதி.). இவ்விதமாய் நமது ஆண்டவர் தாம் பேதுருவில் வைத்த விசுவாசத்தைக் காட்டினார்.

IV. பேதுருவின் ஊழியம்.

இயேசு பரத்திற்கு ஏறினபிறகு பேதுரு ஆதிசபையில் தலைவனாயிருந்ததாகத் தோன்றுகிறது. இவன் யூதாசுக்குப்பதிலாக வேறொரு அப்போஸ்தலனைத் தெரிந்துகொள்ளும்படி மற்ற அப்போஸ்தலர்களை ஏவினான் (அப். 1. 15). பெந்தேகோஸ்தே நாளில் இவன் தான் ஜனங்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றிப் பிரசங்கம் பண்ணினான் (அப். 2. 14). இவன் இயேசுவின் நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தான் (அப். 3. 6; 5. 15; 9. 32). பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் இவனைப் பயமுறுத்தியும் இவன் அதைக் கவனியாமல் தைரியத்துடன் இயேசுவை அறிக்கையிட்டு இயேசுவுக்காக உபத்திரவத்தைச் சகித்தான் (அப். 4. 1; 5. 17; 12. 1). பாவங்களை ஒழிக்கும்படி குற்றவாளிகளை அதிகாரத்துடனே கண்டித்தான். (அப். 5. 1; 8. 14.)

ஸ்தேவான் இரத்தச்சாக்ஷியாய் மரித்தபிறகு கிறிஸ்துவை விசுவாசித்தவர்களில் அநேகர் மற்றத் தேசங்களுக்குத் துரத்தப்பட்டு அவ்விடங்களில் இயேசுவைக்குறித்துப் பிரசங்கம்பண்ணி அநேகரைக் குணமாக்கினதினால் கிறிஸ்தவ சபையில் முதலாவது பிரிவினை உண்டாயிற்று. எப்படியென்றால், இதுவரையில் கிறிஸ்தவமார்க்கத்தாரெல்லாரும் யூதர்களாயிருந்து, இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து நடந்தும் அவர்கள் வழக்கம்போல் மோசேயின் நியாயப்பிரமாண ஆசாரத்தின்படியும் நடந்துவந்தார்கள். இதினிமித்தம் அந்நியமார்க்கங்களிலிருந்து கிறிஸ்தவமார்க்கத்துக்கு வந்தவர்களில் சிலர் இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவை நம்பியும், அவர்கள் ஜீவிய பழக்க வழக்கங்களில் மோசேயின் நியாயப்பிரமாண ஆசாரத்தின்படி நடக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அதாவது ஒரு கிறிஸ்தவன் யூதனுமாயிருக்க வேண்டுமென்பது தான் யூதக் கிறிஸ்தவர்களின் அபிப்பிராயம். இந்த விஷயத்தில் பேதுரு வெகு விவேகமாய்ப் பிலிப்பு முதலியவர்கள் செய்த ஊழியத்தின் மூலமாய்க் கிறிஸ்து மார்க்கத்துக்கு வந்தவர்களை விசாரித்து, இவர்கள் உண்மையாகவே கிறிஸ்துவின் சீஷர்களாயிருக்கிறார்கள் என்பதை அறிந்து, தான் யோப்பாவில் கண்ட தரிசனத்தின்படிக் கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்தவர்கள் கிறிஸ்துவைப் பின்சென்றால் போதும் என்று ஏற்பாடு செய்துவிட்டு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தான் கண்ட தரிசனத்தைக்குறித்து விவரமாய்த் தெரிவித்து, மற்றவர்களும் தான் செய்த ஏற்பாட்டுக்கு இணங்கி வரும்படிப் பண்ணினதினால் ஆதி கிறிஸ்தவ சபைக்கு யூதமார்க்க ஆசாரபாசத்தினின்று விடுதலை உண்டாக்கினான் (அப். 8. 1-25; 10. 1-11. 19). சில வருஷங்களாகப் பேதுருவின் ஊழியத்தைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. பிறகு ஏறக்குறைய கி. பி. 50-ல் அந்தியோகியா பட்டணத்திலுள்ள சிலர் மோசேயின் நியாயப்பிரமாண ஆசாரத்தில் வைராக்கியங் கொண்டவர்களாய், கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வருகிறவர்களுக்கு விருத்த சேதனச் சடங்கு செய்வது அவசியம் என்று கட்டுப்பாடு பண்ணினபோது, எருசலேமிலுள்ள அப்போஸ்தலமார்கள் கிறிஸ்தவ சபையில் முதல் பொதுச் சங்கத்தைக் கூட்டி அதில் இந்த விஷயத்தைக்குறித்து விசாரித்தார்கள். பவுலும் பர்னபாவும் தங்களால் அந்நியர்களுக்கு மீட்பு அருளப்பட்டது என்று சொன்னபோது பேதுரு அவர்கள் பாரிசமாய் நின்று, மறுபடியும் கிறிஸ்தவர்கள் யூத ஆசாரத்தை அநுசரிக்கவேண்டியதில்லை என்று உறுதியாய்ச் சொன்னான். இதன் பெயரில் அப்பொதுச் சங்கத்தார், அந்நிய மதத்திலிருந்துவந்த கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும், வேசித்தனத்துக்கும் விலகியிருக்க வேண்டுமென்றும், மற்ற யூத ஆசாரத்தை அநுசரிக்க வேண்டியதில்லை என்றும் தீர்மானித்தார்கள். இதற்குப்பிறகு பேதுரு அந்தியோகியாவிலுள்ள சபையைச் சந்திக்கப்போயிருந்தபோது, அவ்விடத்தில் யூத ஆசாரத்தை விரும்பின சிலர் செய்த உபாயத்திற்கு இணங்கி, தானும் பர்னபாவும், கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வந்து யூத ஆசாரத்தின்படி நடவாத அந்நியக் கிறிஸ்தவர்களைக் கண்டித்து, அவர்களுடன் சாப்பிடாமல் இவ்விதமாய்க் கட்சிக்காரர்கள் செய்த கட்டுப்பாட்டுக்கு உடன்பட்டார்கள். இவன் இப்படிச் செய்வது தகாது என்று பரி. பவுல் ஆக்ஷேபனை செய்தபோது, இவன் மனந்திரும்பி முன்போல நடந்துவந்தான் என்று தோன்றுகிறது (கலா. 2. 11). இதற்குப் பிறகு இவனைப்பற்றி ஒன்றும் நிச்சயமாய்த் தெரியாது.

OFFICE OF ... 4-FEB 1915 MA RAS.

V. பேதுருவைப்பற்றிய பாரம்பரியம்

ஆதி சபையில் உண்டான பாரம்பரியங்களில் பேதுருவைப் பற்றிப் பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை

எல்லாம் இங்கே எடுத்துக் காட்டுவது அசாத்தியம். அவைகளில் விசேஷமானவை என்னவென்றால்: பேதுரு ரோமாபுரிக்குப்போய் அங்கே பல வருஷங்களாய் தேவ ஊழியத்தை நடத்தினான். அக்காலத்தில் நேரோராயன் கிறிஸ்தவ சபையை உபத்திரவப்படுத்தினபோது பேதுரு பயப்பட்டு ரோமாபுரியைவிட்டு ஓடிப்போகும் வழியில், ரோமாபுரிக்குக் கிறிஸ்தவ சபைகளுடனே உபத்திரவப்படும்படி இயேசு வருகிறதைத் தரிசனத்திலே கண்டு மனஸ்தாபப்பட்டு ரோமாபுரிக்குத் திரும்பிப்போய், பிடிக்கப்பட்டு கி. பி. 68-ல் இரத்தச்சாக்ஷியாய் மரித்தான். போர்ச்சேவகர்கள் இவனைச் சிலுவையில் அறையப் போகும்போது, இயேசு மரித்தவிதமாய் மரிக்கத் தான் அபாத்திரன் என்று நினைத்து, அவர்களைக் கேட்டுக்கொண்டதினால் அவர்கள் இவனைத் தலைகீழாக அந்தச் சிலுவையில் அறைந்தார்கள் என்பதே.

சதா காலங்களிலும் கிறிஸ்தவ சபைக்குப் பரி. பேதுரு செய்த இன்னொரு ஊழியத்தைக் கவனிக்காமல் போவது சரியல்ல. மாற்கு சுவிசேஷகன் பரி. பேதுரு இயேசுவைக்குறித்துச் சொன்ன விஷயங்களைத் தான் இயற்றின சுவிசேஷத்தில் அடக்கியிருக்கிறான் என்பதற்குப் பல அத்தாக்ஷிகள் உண்டு. மாற்கு ரோமாபுரியில் பேதுருவுக்குத் தோழனாயிருந்து இந்தச் சுவிசேஷத்தை எழுதி, பேதுருவுக்கு அதை வாசித்துக் காட்ட பரி. பேதுரு அதெல்லாம் கேட்டு, அதற்குச் சம்மதித்துக் கிறிஸ்தவ சபையார் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவு கொடுத்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

Handbook of Musical Evangelism

Review by Mr. D. Devanesan

சுவிசேஷ காலக்ஷேப கரபூஷணம்

மேற்குறித்த பெயர்பூண்ட சங்கீதப் புத்தகத்தை நாம் வரப் பெற்றோம். இப்புத்தகம், பங்களூர் V. T. காலெஜ் Mr. L. J. Stephen என்பவராலும், ஈரோடு லண்டன் மிஷன் ஐரோப்பிய மிஷனெரி கனம். H. A. பாப்லே ஐயராலும் செய்யப்பட்டது.

இப்பேர்ப்பட்ட புத்தகம், இதுவரையிலும் நமது தமிழ் நாட்டில் வெளிவராதது மிகவும் வியசனிக்கத்தக்கதே. இத்தகைய புத்தகம் பலவிதத்திலும், சுவிசேஷ பஜனைப் பிரசங்கிகளுக்கு மிகவும் அநுகூலமாயிருக்குமென்றே நம்புகிறோம். 'பாடினவன் பாட்டைக் கெடுத்தான் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்கிற பழ

மொழிக்கிசைய நம் தேசத்தார் அவரவர் தம்தமக்கு இசைந்தபடி, இராகத்தை மாற்றியும், அந்த இராகத்துக்கிசையச் சொற்களை மாற்றியும், அதனை இயற்றினவரின் பொருளைக் கெடுத்தும், இவ்விதமாகக் காலஞ் செல்லச்செல்ல, அது முழுவதும் மாறி பிரயோஜனமற்றுப்போகிறது சகஜமாகவேயிருக்கிறது. இப்படி மாறிப்போன அநேக கீர்த்தனைகள் நமக்குத் தெரிந்திருந்தும் அவற்றை இவ்விடத்தில் எடுத்துரைத்தால் விரியும். ஆனால் ஐரோப்பிய தேசங்களில் ஒவ்வொரு பாட்டிற்கும் நோட்டுகள் இருக்கிறபடியால் அது எந்தவிடத்திலும் வழுவிப்போகாமல் ஒன்றுபோலவேயிருக்கிறது. ஆதலின் இக்குறைவை நீக்க இப்புத்தகம் வெளிவந்தது மிகவும் சந்தோஷிக்கத்தக்கதே. இந்த சங்கீத சாஸ்திரத்தில் மிகவும் கற்றுத்தேர்ந்த நிபுணருங்கூட, ஒரு இராகத்தைத் திடீரென்று அறிந்துகொள்வது மிகவும் அசாத்தியம். ஆதலால், முதலாவது இந்தப் புத்தகத்தில் காட்டியிருக்கிறபடி, இங்கிலீஷ் நோட்டுகளோடு தமிழ் நோட்டுகளைச் சம்பந்தப்படுத்தியிருக்கும் அடையாளங்களைக் கவனத்தோடு ஹெச்சு, தக்கு, கால அளவு, தாளம் முதலியவற்றை நன்றாய் ஆராய்ந்து, கற்ற பின்னர், அந்த இராகத்தோடும், அந்த இராகத்தில் எதுவும் வழுவாமலும், காதுக்கு எந்த விதமாக இனிமை தரக்கூடுமோ அந்த விதமாகவெல்லாம் தாங்கள் பாடுகிறதுமாத்திரமல்ல, தமிழ்நோட் இங்கிலீஷ்நோட் தெரியாதவர்களுக்கும் கற்றுக் கொடுத்து இந்தவிதமாக இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் சத்தியவேத கீர்த்தனைகளை விருத்திபண்ணினால் இதனை இவ்வளவு கஷ்டப்பட்டு இயற்றினவர்களுடைய நல்நோக்கம் சரிவர நிறைவேறுகிறது மாத்திரமல்ல, தேவனுடைய திருநாமத்துக்கு மகிமையுமாயிருக்கும்.

சத்திய வேத சரித்திரங்களை, நேரே அங்கு சொல்லப்பட்டபடி எடுத்துரைக்கிறதோடு, அவற்றை தம்புரு, கின்னரம், வீணை, மேளம், தாளம் முதலிய வாத்தியக் கருவிகளோடு அலங்காரமாக பஜனைப் பிரசங்கம் செய்தால், அநேக ஜனங்களை இழுத்து அவற்றைக் கவனிக்கச்செய்து, கடைசிபரியந்தம் அவர்களை நிற்கச்செய்கிறதோடு, அந்த வேதசரித்திரத்தைத் தங்கள் இருதயத்தில் வைக்க, அதைச் சிந்திக்க, அதை மற்றவர்களுக்குச் சொல்ல இது ஒரு நல்ல சாதனமாயுமிருக்கலாம்; ஏனென்றால் நம் நாட்டில் ஒரு நல்ல படிப்பினையுள்ள ஒரு சரித்திரத்தை கதாப்பிரசங்கம் செய்யும்போது, பஜனைப் பிரசங்கமாகவே செய்கிறார்கள். இப்படி நாம் செய்ய வேண்டுமானால் முற்கூறியபடி சுரவியல், தாளவியல், இராகவியல், முதலியவற்றை நன்றாய்க் கற்றுணரவேண்டியது அவசியம்.

ஆதலின் வேதபுத்தகத்திலிருந்து இப்புத்தகத்தில் பாட்டாக பாடியிருக்கிறபடி அநேக சரித்திரங்களையும், நம் இரட்சகர் திருவாய் மலர்ந்தருளிய அநேகம் உவமைகளையும் காலக்ஷேபத்தோடும், அதைக் கேட்கிறவர்கள் மனதில் பதியும்படி, ஜெபத்தோடும், விசுவாசத்தோடும் செய்தால், நாம் தேவனுடைய வேலையைச் செய்கிறதில் சித்திபெறுவது நிச்சயம், பூரண நிச்சயமே.

இப்புத்தகத்தில் கடைசியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஹிந்துமகாத்துமாக்கள் பாடியிருக்கிற மிகவும் அருமையான சில பேரின்பப் பாட்டுகளை நாம் கற்று, அவைகளை உபயோகிக்கத் தகுந்த விடத்தில் உபயோகித்து வருவோமானால், அதினாலுங்கூட சில சமயங்களில் பிரயோஜனம் உண்டாகலாம்.

ஆனபடியால், 'சுவிசேஷ காலக்ஷேப காபூஷணம்' என்ற சங்கீத புத்தகத்தை நம் தமிழ் நாட்டில் தேவ ஊழியஞ்செய்கிற யேசுவினடியார்கள் ஏராளமாக வரவழைத்து, அவைகளைத் தங்களிடங்களில் விர்த்திப்படுத்தி, ஆக்கியோர்களையும் உற்சாகப்படுத்தி, எத்தவித அநாவசியமான தப்பிதமும் கண்டுபிடியாமல் தேவனுடைய திருநாமத்துக்கு மகிமையுண்டாக அதைப் பிரயோகிப்பார்கள் என்று பூரணமாய் நம்புகிறோம்.

God's Grace

By the Rev. H. A. Popley

கடவுள் திருவருள்

(தொடர்ச்சி)

கருடன் ராமபிரானைப்பற்றி பின்வருமாறு சொல்லுகிறான்.

'கண்டிலை முன்பு சொல்லக் கேட்டிலை கடனொன் றெம்பால்
கொண்டிலை கொடுப்பதல்லால் குறையிலை இது நின்கொள்கை
உண்டிலை யென்ன நின்ற உயிர்தந்த உதவி யோனை
பண்டிலை நண்பு நாங்கள் செய்வதென் பகர்தி யென்றான்.' (xxii)

(xxii) கண்டிலை முன்பு சொல்லக் கேட்டிலை—தெளிவு, கடன் ஒன்றெம்பால் கொண்டிலை—எங்கள் பட்சத்தில் செய்யவேண்டிய நியாயமுமில்லை, கொடுப்பதல்லால் குறையிலை—இன்னும் அதிகமாய்க் கொடுக்கவேண்டியதல்லாமல் உம்மிடத்தில் ஒரு குறையில்லையே, இது நின்கொள்கை—இது உமது சுய இச்சைதான், உண்டிலை யென்ன நின்ற உயிர்தந்த உதவியோனை—உண்டு என்றும் இல்லை யென்றும் சொல்ல முடியாதவரும் உயிர்தந்த சகாயப் பெருமானுமாயினீர், பண்டிலை நண்பு—பழைய சிநேகமில்லை, நாங்கள் செய்வதென் பகர்தி யென்றான்—நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுக என்றான் என்பதே.

அப்பர்ஸ்வாமியார் மிக்க சிறப்பாய் இக்கருத்தை ஓர் செய்யுளில் வெளியிட்டார்.

'சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப்பொழிவன முத்திகொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்துநின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப்பிறை அணிந்தாடு மையாறன் அடித்தலமே' என்பதே. (xxiii)

முந்திப்பொழிவன என்று கடவுள் வலியச் செய்ததைக் குறிப்பிடுகிறார்.

பட்டினத்தார் வேறு சிறந்த உவமையால் இச்சத்தியத்தை வெளிப்படுத்தினார்.

'கறவை நினைந்த கன்றென இரங்கி
மறவா மனத்து மாசறும் அடியார்க்—கு
அருள் சுரந்தளிக்கும் அற்புதக் கூத்தா' என்பதே. (xxiv)

கடவுளின் திருவருளின்றி நமக்கு வேறே கதியில்லை என்பதற்கு இன்னும் அநேக பக்தருடைய வார்த்தைகள் இருக்கின்றன.

'அருளாத நீரருளியவராவி துயராமுன்
அருளாழிப் புட்கடவீர் அவர்வீதி ஒருநாளென்று
அருளாழி அம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி
அருள்-ஆழிவரிவண்டே யாமும் என் பிழைத்தோமே' என்று (xxv)

நம்மாழ்வார் பாடுகிறார்.

(xxiii) பாம்பு சுற்றி அந்திப்பிறை அணிந்தாடும் ஐயாறன் அடித்தலமே—பாம்பையும் இளஞ்சந்திரனையும் அணிந்து ஆடுகிற திருவையாறனுடைய சிவனது திருவடிகளே, சிந்திப்பரியன—நினைத்தற்கரியனவும், சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப்பொழிவன—அதை மனதில் வைப்போர்க்குச் சிறப்பாயிருந்து அமுதத்தை வலிய அளிக்கின்றவைகளும், முத்திகொடுப்பன—முத்தியைத் தருகின்றவைகளும், மொய்த்திருண்டு பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன—கும்பலாகச் சேர்ந்து எங்களைக் கட்டின தீவினைப்பயனை நீக்குகின்றவைகளும், (ஆயிருக்கின்றன.) என்பதே.

(xxiv) கறவை நினைந்த கன்றென இரங்கி—தாய் மாட்டை நினைத்த கன்றைப்போல் மனமிரங்கி, மறவா மனத்து—மறவாத மனத்துடன், மாசறும் அடியார்க்கு—பாவம் சேராத பக்தர்க்கு, அருள் சுரந்தளிக்கும்—அருளை மிகுதியாகச் செய்கிற, அற்புதக்கூத்த—அற்புதக்கூத்து செய்த சிவனை என்பதே.

(xxv) வரி ஆழ்வண்டே—வரி பொருந்தியவண்டே, அருளாநீர் அருளியவர்—அருளாகிய தன்மையை எனக்குச் செய்த ராமனை, ஆவிதுயராமுன்—என் உயிர் நீங்குமுன்னமே, அருள் ஆழிபுள் அவர்—அன்புடன் வட்டமாகப் பறந்து செல்லும் கருடனையுடையவரை, ஒருநாள் கடவீர் என்று—ஒருநாள் செலுத்துவீர் என்று, அருள் ஆழி அம்மானை—கிருபாசமுத்திரமாகிய ராமனை, கண்டக்கால்—கண்டால், இது சொல்லியருள்—இதை தயவுசெய்து சொல்லுக, யாமும் என் பிழைத்தோம்—நாமும் ஒரு தப்பிதமும் செய்யவில்லை என்பது.

திருமூலர் குளம் ஆறுகளின் உவமையை எடுத்து கடவுளின் அருளைச் சிறப்பித்துக் காட்டினார்.

'ஊறும் அருவி உயிர்க்கரை உச்சியில்
ஆறன்றிப் பாயும் அருங்குள மொன்றுண்டு' என்பதே. (xxvi)

மேலும் தாயுமானவர் பின்வரும் பாடலில் அந்தத் திருவருளினால் தீவினையெல்லாம் நீங்கும் நிச்சயத்தைத் தெளிவாய்க் காண்பிக்கிறார்.

'காகமானது கோடி கூடினும் ஒரு கல்லின்முன் எதிர் நிற்குமோ
கர்மமானது கோடி முன்னே செய்தாலும் நின் கருணைப்ரவாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ' என்பதே. (xxvii)

இனி எழுதினால் இவ்விலாசம் மிகவும் பெருகும். எண்ணிறந்த திருஷ்டாந்தங்கள் பக்தி செய்யுட்களில் காணப்படுகின்றன. ஒவ்வொருவனும் தேவாரம், மாணிக்கவாசகர், நாலாயிர பிரபந்தம், தாயுமானவர் முதலிய பக்தி நூல்களில் அவைகளைக் கண்டாராய்ந்து படித்தல் உசிதம்.

(இன்னும் வரும்.)

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

பதினோராம் அதிகாரம்

(தொடர்ச்சி)

ஞாயிறு, ஜனவரி, 13உ

இன்று காலை 4 மணிக்கு முழங்காற் பொருத்தில் தாங்கரிய வலியெடுத்து விழித்தேன். முந்தினநாளில் காயம்பட்டது இன்று வீங்கி நோவத் தலைப்பட்டது. மழைக்கு எந்த ஆதாரத்தையும் காணாமல் நித்திரை செய்யப்போன நான் விழித்தபோது மழை வெள்ளமாய்ப் பெய்வதைக் கேட்டுப் பிரமித்தேன். வெளியே எட்டிப் பார்த்தபோது நாங்கள் முன் வழக்கமாய்த் தங்கின இடத்திற்கு மிக அருகில் இருந்தோம். ஆகவே, மழை வந்து தடுக்காவிட்டால், நாங்கள் வழக்கம்போலக் கரையிலிறங்கி ஊருக்குள் பிரவேசித்துப் பிரசங்கிக்காமலிருக்கமாட்டோம். நாள்முழுமையும் மழைவிடாமையால், நாங்கள் படவைவிட்டு இறங்கவில்லை. இவ்வாறு எங்களுக்கு ஒரு ஆனந்தமான விடுதிநாளகப்பட்டது. அப்படிப்பட்ட விடுதிநாள் எங்களுக்கு வெகுகாலமாய்க் கிடைத்ததில்லை. மழை கடுமையாக இருந்தபடியால், எங்களைப்பற்றி எங்கே என்று விசாரிப்பாருமிருந்ததில்லை. பகல்பொழுது துலாம்பரமாய்மட்டும் இருந்திருக்குமானால், நாங்கள் வெளிப்புறப்படாமலிருந்தாலும் எங்களைக் கண்டுபிடித்திருப்பார்கள். இப்படி எங்களை ஒதுக்கிப் பிரித்து இளைப்பாறச் செய்த ஆண்டவருடைய செயலை நன்றியுடனும் ஆச்சரியத்துடனும் சிந்தித்து அந்த நாளைப் போக்கினோம்.

திங்கள், ஜனவரி, 14உ

மாசுமறுவில்லாத துலாம்பரமான உதயகாலம். உதயத்திற்கு முந்தியே, எங்கள் உதவிக்காரருள் ஒருவர் வண்ணானுக்குப் போட்டிருந்த எங்கள் உடுப்பை வாங்கிவரப் போனார். அவர் திரும்பிவந்தபோது நேற்றுமழை ஊற்று ஊற்றென்று ஊற்றியும் எங்களை ஊரில் பல திக்கிலும் ஆட்கள் தேடியலைந்தார்களாம் என்கிற செய்தி சொன்னார். நாங்கள் 'சர்வவல்லவருடைய நிழலில்' பத்திரமாய்க் காப்பாற்றப்பட்டிருந்தோம்.

படவாட்கள் பயந்து திகிற்பட்டு உதயத்துக்கெல்லாம் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு வேறிடத்துக்குப் பெயர்ந்தார்கள். நடக்கவொத நான் அவர்கள் போனவாக்கிலேயே போக விட்டுவிட்டேன். மதியத்துக்குப்பின், ஷங்காய்ப் பாட்டையிலிருந்த பிங்-வாங் ஊருக்கு வந்தோம்.

'வந்ததிங்கும் அவராலே
வெயில்முன் பனியாம்
கெட்டகேடும் அவராலே
திருந்திச் செவ்வையாம்.'

பன்னிரண்டாம் அதிகாரம்

நாங்கள் ஸ்வாட்டோ ஊருக்குப் போனது

கரு சுருக்கு அளவில் நாங்கள் இதுவரைச் செய்த வேலையை இவ்வாறு வினைப்பிரகாரம் நிறுத்தவேண்டியதாயிற்று. அவ்விடத்

(xxvi) முதலடிக்கு—பரந்து திரியும் அருவியாகிய இந்திரியங்களைக் கெட்டாத மேலான விடத்திலே,

இரண்டாமடிக்கு—தனக்கு வருவாயாகிய நதியின்றித் தனது கருணையென்னமே எல்லா உயிர்களுக்கும் பாயத்தக்க சக்தியாகிய அரியகுளம் ஒன்றுள்ளது.

(xxvii) தெளிவு.

தில் இன்னும் அதிக காலம் சுவிசேஷ வேலையை நடத்தலாம் என்றிருந்த எங்களுக்கு அந்த ஆசைக் குலைவு மனவேதனையையுண்டாக்கிற்று. ஆயினும், இப்படி வந்த இடையூறு தேவனுக்குத் தெரியாமல் தற்செயலாய் வந்ததல்ல, எங்கள் மனதுக்குண்டான இப்பேர்ப்பட்ட கஸ்தியெல்லாம் விஸ்தாரமான வேறு வேலைத்தலங்களுக்குத் தேவன் எங்களை நடத்திக்கொண்டுபோன சங்கிலித்தொடர்ச்சியான சம்பவங்களைச் சேர்ந்ததென்று பிற்பாடு அறிந்துகொண்டோம். தகுந்த காரணமின்றித் தம்மவர்களுக்குத் துன்பம்வரத் தேவன் விடுகிறதேயில்லை. எங்களுக்குத் தெரியாத வழியில் அவர் எங்களை அழைத்துப்போனார். அந்த வழி அவரே உண்டாக்கின வழி என்பதற்கு ஐயமில்லை.

'கர்த்தாவின் செயல் நல்லது
சந்தோஷநாள் வந்தாலும்
என் நன்மைக் கவர் எனக்கு
இக்கட் டனுப்பினாலும்
அவர்க்குநான்—ஆதீனம்தான்
கர்த்தாவின் அன்பினியும்
வெளிச்சமாய்த் தெரியும்.'

நாங்கள் ஷங்காய்க்கு வந்தபின் வேண்டுமளவு புத்தகங்களும் பணமும் சேர்த்துக்கொண்டு பழையபடிக்கே உள்நாட்டுக்குப் போகலாமென்று நினைத்திருந்தோம். அப்படியிருந்த சமயத்தில் ஒருநாள் ஸ்வாட்டோ நகரில் வியாபாரம்செய்துகொண்டிருந்த ஒரு கிறிஸ்தவ மாலுமியைக் கண்டோம். அவர் அந்நகரத்துப் பரிதாபங்களை மனதுருகும்படி சொன்னார். அதுவுமன்றி டபிள் அயிலண்டு என்கிற தீவில் பிரிட்டிஷ் வியாபாரிகள் குடியிருந்துகொண்டு அபின் விற்பனைசெய்தும் கூலியாட்கள் வியாபாரம் நடத்தியும் பிழைப்பதைத் தெரிவித்தார். கூலியாட்கள் வியாபாரம் உள்ளபடிக்கு அடிமை வியாபாரமே. ஆயினும், அங்கு சுவிசேஷப் பிரசங்கம்செய்ய ஒரு பிரிட்டிஷ் மிஷனரியும் இருந்ததில்லை. இந்த வேலைதான் உனக்கு நான் குறித்த வேலையென்று தேவாவி என்னுள்ளத்தில் உணர்வூட்டினார்; நானோ அவ்வேலைசெய்யப் பலநாட்களாய் ஆசையற்றிருந்தேன். ஏனென்று கேட்டால், பரனேஸ் போதகரையொத்த ஞானமுள்ள ஒரு தகப்பனை நான் இதுவரை அடைந்ததில்லை. அவருடைய கூட்டுறவு எனக்குப் பரிசுத்தத்தையும் சந்தோஷத்தையும் தரத்தக்கதாயிருந்தது. அப்பேர்ப்பட்ட அநுகூலம் எனக்கு இம்மட்டும் கிடைத்ததில்லை. அதினிமித்தம், அவரும் நானும் ஒருவரை

யொருவர் விட்டுப் பிரிதல் தேவனுக்குச் சம்மதமாயிராது என்று எனக்கு மனதில் தோன்றியிருந்தது.

ஒருநாள் சாயந்திரம் என் ஆத்துமாவுள் கலக்கம் நிறைந்தவனாய் பரனேஸருடன் லவுரி (Rev. R. Lowrie) ப் போதகர் வீட்டில் தேப்பான விருந்துக்குப் போனேன். அவர் ஷங்காய் நகரின் தெற்குக் கெவுனிவாசலில் குடியிருந்தார். அவர் அமெரிக்கன் பிரஸ்பிட்டீரிய மிஷனைச் சேர்ந்தவர். தேப்பான விருந்து முடிந்ததும் லவுரியம்மாள் 'மிஷனரிக்குண்டாகும் திருவழைப்பு'* (The Missionary Call) என்னும் திருக் கீதத்தை கின்னரத்தில் வாசித்தார். அதை இதற்குமுன் ஒருநாளும் நான் காதால் கேட்டதேயில்லை. இப்பொழுது அது என் செவியில் ஏறினதும் எனக்குண்டான உள்ளத்தின் அசைவு சொல்லமுடியாது. அது முடிவடையும் முன்னரே என் உள்ளம் உடைந்துபோகலாயிற்று. இப்பொழுது பாடப்பட்ட கீதவார்த்தைகளால் நான் தேவனை நோக்கிப் பின்வருமாறு சொன்னேன்:—

'நான் போவேன் போவேனிப்போதே! உளத்திற்
கினிய உறவாளருலகத் தியபாசமெனைத் தனக்
கேவளைக்கும் நாட்டாசைத் தளைக
ளறுத்துப் போவதற்குத் தயங்கேன்
தயங்கே னிதுவுறுதி.
இனிக் கலங்கேனெனக் கேதுற்றாலும்,
இருளும் புசலும் வந்தாலும் இன்பப்பொழுது காய்ந்தாலும்,
பருகும்பானம் கசந்தாலும் பாலுமமுது மாறானும்;
ஒன்றே செய்வே னெதுவென்றால்,
உளத்தி லெனைநீ மருவுறுத்து,
குன்றாத் தீரம் தந்தாள்வாய்
கோவே தேவே யடியேனை'

என்றே யவரை யனுதினமும் அடிகள் தொழுது வேண்டுவதே.

புறப்படும்போது என் வீடுமட்டும் வந்து போகும்படி நான் பரனேஸரைக் கேட்டுக்கொண்டேன். அது சுதேசிகள் வாசம் செய்த பாகத்தில் இருந்தது. அவர் உள்ளே வந்ததும் நான் அடக்கமாட்டாத கண்ணீர்களுடன் அவரைப் பார்த்து, ஐயா ஆண்டவர் என்னை வேறிடத்தில் வேலைக்கு அழைக்கிறார், நான் உம்மைவிட்டுப் போகத் தாளாமல் அவருக்குத் தடுத்து உத்தரவு சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்றேன். அவர் சிறிதேனும் விசனமில்லாமல் சந்தோஷ

* இந்தச் செய்யுளை இவ்வதிகாரத்தின் கடைசியில் பார்க்க.

மும் வியப்புமுள்ள பார்வையாய் என்னை நோக்கி, ஆண்டவர் ஸ்வாட்டோவுக்குப் போ என்று எனக்குக் கட்டளை கொடுக்கிறதை என் உள்ளத்தில் கேட்டு வருகிறேன்; இதை இன்று இரவில் உமக்கு எப்படியாகிலும் தெரிவிக்க வேண்டுமென்கிற யோசனையும் உம்மை விட்டுப் பிரிய நேருகின்றதே என்கிற விசனமும் எனக்குள் இருந்து கொண்டிருக்கின்றன என்றார். இதற்குப் பின் இருவருமே ஸ்வாட்டோவுக்குப் போனோம். இவ்வாறு சீனாவின் அந்தப் பாகத்தில் நாங்கள் மறுபடியும் ஒருமித்து மிஷன் வேலை ஆரம்பித்தோம். அது பின்னுற்ற காலத்தில் மிகவும் செழித்து ஓங்கினது.

இதற்கு வெகு காலத்திற்கு முன்னமே, பாஸல் மிஷன் சங்கத்தினரான லெக்கிலர் போதகர் (Rev. R. Lechler) ஸ்வாட்டோவுக்குச் சுற்றுப்புறங்களில் பிரயாணங்கள் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருந்தார். அவர் இடத்தைவிட்டு இடம் ஓடும்படி துரத்தப்பட்டிருந்தும் அவர் செய்த வேலை மனுஷருடைய மனதைவிட்டுப் போகவில்லை. அறுதியாய் அவர் அவ்விடத்தை முற்றும் விட்டு ஹாங்காங்கு நகரில் வந்து தங்கும்படி நேர்ந்தது. ஆண்டவருடைய இந்த உண்மையுள்ள ஊழியர் அந்த நகரத்தில் நாற்பது வருஷங்களுக் கதிகமாய் மற்றவர்களிலும் அதிகமாய்ச் செய்த வேலைகளில் தரித்திருந்தார். சமீபகாலத்தில் தான் அவர் தம் அருமைப் பத்தினியாரோடு ஹாங்காங்கை விட்டுத் தம் தேசத்துக்குப் போனார். போகையில், மறுபடியும் வந்து தாம் அவ்வளவு நீண்ட காலமாயும் மன வுண்மையாயும் நேசித்த அந்த ஜனங்களிடத்தில் தங்கித் தம் ஆயுளின் மீதிக்காலத்துப் பெலனைக் கொடுத்து உழைக்கத் தீர்மானித்தே போனார்.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1915

No. 106 மார்ச்சு 1915

OFFICE OF THE REGISTRAR OF ... 5 - MAR 1915 MADRAS

வேதியர் விளக்கு

The War and Religion

THE effects of the war are already so far-reaching, that it is impossible to say to what extent they will not spread, and what departments of life will not be touched by them. One thing is certain—the world will be a different place when peace is eventually signed, and not only the map of Europe and, indeed of the world itself, but also many of the theories and ideas which have hitherto been generally held by mankind will have been changed.

And, among other things, it seems more than likely that the attitude of many men to the great subject of religion and of the other world will have undergone modification. Signs of such a change are not wanting, and it is our purpose to refer to one or two of them here.

For the past few years there has been evident in the countries of Europe a decided indifference on the part of many people to the claims of religion. It has been shown in England by the fact that for some years past, practically every leading Protestant Church has returned an annual decrease in membership. Various causes have been assigned for it, such as the undoubted increase in the love of pleasure and amusement that has characterized many young people, carrying with it less and less inclination for the more serious aspects of life—and that doubtless has been a contributing cause. Another cause, operating with less power as the years have passed by, has been the growth of rationalism, bringing with it a disregard of authority in general, and in particular of the authority of the Bible, the very truth of which has been called in question. It is not a bad sign of the times that the youth of a country should no longer be content to take everything on trust, and that it should earnestly ask the question

'Why?' to statements made; but such a spirit generally runs to excess at the outset, and that has been the case in England for the past few years. Not only so, the works of certain French and German philosophers have been widely read, and have been more or less the fashion, and have often militated against the growth of true religion in the land. These and other causes have had the undoubted effect of altering the outlook of many persons, and if they have not brought about a decline of true religion, have tended in the direction of causing indifference to its claims.

The same is true of the continent of Europe. It is not many years since the Church in France was completely disestablished, and the immediate result was a wave of irreligion; though that had been to a large extent stopped before the war. Reports from Germany seem to point in the same direction; in especial, the doctrines of the so-called philosopher Nietzsche, who ridiculed the whole Christian system as the very epitome of all that is weak and effeminate, and extolled pleasure and self-will for their own sakes, have been so widely accepted in that land, that they have very seriously hindered the progress of the kingdom of God.

And now the war has come, and with it has come a change. There are many who say that the beginnings of the change were visible in England before the war broke out, and that there were distinct signs that the old indifference of the people in things religious was giving way to a new spirit of enquiry and a new seriousness. However that may be, there can be no doubt about the spirit that now pervades the land. A nation as well as an individual possesses a character, and that character can be powerfully moulded by the events through which it passes. The very fact that England is engaged in a conflict wherein she stands for justice and truth, for honour and the protection of the weak against the strong, for the sanctity of a plighted word, and the destruction of that falsest of all doctrines that Might is Right, cannot but have an effect on the national character. She is prepared for sacrifice, and is pouring forth of her best in the cause of humanity; and while many a home is clouded by the

shadow of death, there is no wonder that a new seriousness has come to the people, and that our Churches are more crowded and men's hearts more open to receive the influences of heaven than ever before for many generations. Among the young men in training in the camps of England, there has been going on a genuine work of revival, while many a man in the trenches of Flanders has given his heart to God, sobered and made thoughtful by the dreadful experiences through which he has passed, and the awful sights he has seen. With death staring him in the face all day long, he has been brought to look at life from a different point of view, and many a man has testified to the fact that men who have never prayed in their lives before, have learnt to pray in the mud and wet of a battle trench. It is true that with some it may be a passing emotion, but with many it is a heart change, and cannot but have a result on the corporate life of the nation when the strife is over. Our information with regard to our allies is not so full, but that similar things are true of them there can be no doubt: the Belgians, and some of the French have lost their homes and their all—but not yet their souls. The world has found its way to its knees as never before, and God is more real than He has been to the thoughts of many for generations.

And what of our Church in India? Is she too to have a share in the sacrifice and in the reward? It would seem as if there is little doubt that she will have to be prepared for the former before long. There is hardly a Missionary Society that has not had warning that serious retrenchment may have to take place in the near future. The homelands are being drained for war and relief funds; the prices of many necessaries of life are rising, while for some, at least, the war has meant serious curtailment of income. Such being the case, it is not improbable that missionary income will suffer temporarily at any rate, and the Indian Church, struggling towards self-support, will have to face the problem of how it is going to meet the crisis if it comes. In China a few years ago, the Boxer rising gave the infant Church a baptism of blood which only served to prove its worthiness and its faith; and there

the blood of the martyrs has proved the seed of the Church Is God going to deal with the Indian Church in the same way —not by physical martyrdom, but by financial stress? Is the Church of God in this land going to be equal to any call that may be made on it for renewed self-sacrifice, for more complete self-support, for a fuller realization of the possibilities of its own life as a Church called of God to evangelize its own homeland? Already, in some of the humblest sections of the Church there are indications that the news of possible reductions in foreign income have set the people to thinking how they can meet themselves some of the expenditure hitherto borne by the missionary body to which they belong —is that a sign of the times? The withdrawal of such aid will mean for many a Church a season of trial; the Church may be sifted as wheat, but if it be so, it will be in order that the chaff may be sifted out and the finest of the wheat remain. Let the prayer of all our readers, and of all who love the Church of Christ in this land be that come what may the good hand of our God may be on us for good, and that we may be willing and ready to hear and to obey His call whatever it may be and whenever it may come.

Biblical Notes

வேதாகம விசேஷங்கள்

ஸ்தோயிக்கர் (Stoics). கிரேக்க தத்துவ சாஸ்திரிகளில் எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கரும் பிரதானமானவர்களாயிருந்தார்கள். பரி. பவுல் அத்தேனே பட்டணத்தில் இவர்களுக்கு உபந்நியாசம் செய்ததற்கு முன்னூற்றைம்பது வருஷங்களுக்குமுன் இந்த ஸ்தோயிக்கர் தத்துவஞானம் ஆரம்பமானது. இதை முதலாவது போதித்த சேனோ (*Zeno*) என்பவன் கிரேக்க பாஷையில் 'ஸ்தோவா' என்னும் மண்டபத்தில் முதலாவது சீஷர்களுக்குப் போதித்ததினாலே, இவர்களுக்கு ஸ்தோயிக்கர் என்னும் பெயர் வழங்கிவந்தது. ஸ்தோயிக்கருடைய போதனையாவது: ஒரு மனுஷன் எப்பொழுதும் புத்திக்கு இணங்கி நடக்கவேண்டும். புத்தியை யடைவதும் அதின்படி தன்னை ஆண்டு கொள்வதும் அவனுடைய கடமை. அவர்கள் சர்வமும் தேவன் என்

னும் கொள்கையை அநுசரித்திருந்தார்கள். அவர்கள் சன்மார்க்கத்தைச் சிறப்பித்தாலும் இரக்கத்தையும், பரிதாபத்தையும் அற்பமாய் எண்ணிவந்தார்கள். உற்சாகத்துடனே சன்மார்க்கத்தை நாடுவது அவர்களுடைய தத்துவத்தின் மேன்மை. இது போதிக்கும் சன்மார்க்கமும் கிறிஸ்தவ சன்மார்க்கமும் சில விஷயங்களில் ஒற்றுமையுடையனவாய் இருந்தாலும் இந்தக் கொள்கையில், நித்திய ஜீவனைக் கொடுக்கும் எது இல்லாததினால் சீக்கிரத்திலே இது கீர்த்தி குறைந்து அற்றுப்போயிற்று. (அப். 17^{16}.)

ஷேவோல் (Sheol). எபிரெய பதமாகிய 'ஷேவோல்' என்பதற்குச் சில வசனங்களில் 'நரகம்' என்று தமிழிலே சொல்லியிருக்கிறது (உபா. 32^{22}. சங். 9^{17}). பெரும்பாலும் இதற்குப் 'பாதாளம்' என்று சொல்லியிருக்கிறது (2 சாமு. 22^{6}. யோபு, 11^{8}; 26^{6}. சங். 16^{10}; 18^{5}; 86^{13}. நீதி. 5^{5}; 15^{11}. ஏசா. 5^{14}; 14^{9}. எசே. 31^{16}; 32^{27}. ஆமோ. 9^{2}. யோனா, 2^{2}). எபிரெயர்கள் அபிப்பிராயத்தின்படி இது இப்பூமிக்குக் கீழே மரித்தோர்கள் சஞ்சரிக்கும் இடம். இதில் மரித்தோர்கள் நடமாடுகிறவர்களா யிருப்பார்களோ அல்லது ஒன்றும் தெரியாமல் மௌன நிலையிலே இருப்பார்களோ என்பதைக் குறித்து எபிரெயர்கள் தீர்மானமாய்ச் சொல்லவில்லை. எப்படியாவது இதில் மரித்தோர்களைத் தண்டிக்குமிடம் இல்லாததினால், இதற்கு 'நரகம்' அல்ல, 'பாதாளம்' என்று சொல்வது சரிதான். (சங். 86^{13}; 94^{17}. யோபு, 14^{13}. எசே. 32^{27}.)

ஸ்திரீ (Woman).

1. பழைய ஏற்பாடு. பூர்வகாலத்திலுள்ள எபிரெயருக்குள்ளே ஸ்திரீக்கு புருஷனைப்போல் கனிசம் இல்லாதிருந்தாலும் அவள் புருஷனுக்கு அடிமையாயல்ல, ஏற்ற துணையாயிருக்கவேண்டுமென்பது அவர்களுடைய அபிப்பிராயமாயிருந்ததென்று தெளிவாய்த் தோன்றுகிறது (ஆதி. 2^{18}; 3^{16}). சாராளும், ரெபேக்காளும், ராகேலும் தங்கள் புருஷர்களைப்போல மேன்மைபெற்றவர்கள். மோசேயையும், ஆரோனையும்போலவே மீரியாமும் கீர்த்திபெற்றவள் (மீகா. 6^{4}). தெபோராள் நியாயாதிபதியாயிருந்தாள் (நியா. 4^{4}). ராஜ ஸ்திரீகளாகிய யேசபேலும், அத்தாலியாளும் ராஜாங்க காரியங்களை நடத்தினார்கள். புருஷர்களோடே மனைவிகளும் தேவஸ்தலங்களுக்குப் போவார்கள் (1 சாமு. 1^{1}). பலி செலுத்தும்போது ஸ்திரீகளும் அதற்கு உதவிசெய்வார்கள் (நியா. 13^{23}). அவர்கள் தேவாலயத்திலே சங்கீதங்களைப் பாடுவார்கள் (எஸ்றா, 2^{65}), நியாயப்பிரமாணத்தில் அவர்களுக்கு அநியாயம் செய்யாதபடிக்குப் பல நியாயங்களுண்டு.

(லேவி. 12, 15 அதி. உபா. 22 அதி. எண். 27 அதி). தீர்க்கதரிசிகள் மேற்கூறிய நியாயத்தின்படி ஸ்திரீகளுக்குச் செய்த அநியாயங்களைக் கண்டித்தார்கள் (எரே. 7^{6}. எசே. 22^{7}. மல். 2^{16}). மங்கள ஸ்திரீயின் சிறப்பு. (நீதி. 31 அதி.)

2. புதிய ஏற்பாடு. இயேசு தமது போதகத்திலே எப்போதும் ஸ்திரீகளைக் கனப்படுத்திப் பேசுகிறார். அவர்கள் கற்புள்ளவர்களானாலுஞ் சரி, பாவிகளானாலுஞ் சரி, அவர் தமது ராஜ்யத்திலே எல்லாரையும் ஏற்றுக்கொள்ளும்படி சித்தமுள்ளவராயிருக்கிறார் (மத். 5^{27}; 19^{3}. லூக். 7^{37}; 8^{2}. யோவா. 4^{27}; 11^{1}). ஆதி கிறிஸ்தவ சபையில் ஸ்திரீகள் புருஷர்களைப்போல அதிக கனம் அடைந்தவர்கள் (அப். 1^{14}; 2^{1}. ரோ. 16^{1}). அச்சபையில் உதவிக்காரர்களைப்போல, உதவிக்காரிகளும் இருந்தார்கள் (1 தீமோ. 3^{11}). பரி. பவுல் இயேசு உடனே வருவார் என்றும், கிறிஸ்தவர்களுக்குத் துன்பம் வருகிறதென்றும் நம்பி, கலியாணத்தினால் பக்திக்குரிய விஷயத்தில் அநேகருக்கு இடறல் இருக்குமென்று பயந்தான் (1 கொரி. 7 அதி.) பிற்காலத்தில் எழுதிய நிருபத்தில் விவாகத்தைச் சிறப்பிக்கிறான் (எபே. 5^{22}.). கொரிந்துபட்டணம் மகா துன்மார்க்கம் நிறைந்த ஊரானதினால் புறமதஸ்தர்கள் கிறிஸ்தவ பெண்களைப் பரியாசமாய்ப் பேசாதபடிக்கு ஸ்திரீகள் சபையில் மௌனமாயிருக்கும்படி அவன் அவர்களுக்குப் புத்திமதி சொன்னான் (1 கொரி. 14^{34}). கிறிஸ்துவுக்கு முன்பாக எல்லாரும் ஒரே நிலையிலிருக்கிறார்கள் என்பது அவனுடைய அபிப்பிராயம். (கலா. 3^{28}.)

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

பதினோராம் அதிகாரம்

(தொடர்ச்சி)

பரனேஸரும் நானும் வியாபாரம் பெருத்ததும், முக்கியம் பொருந்தினதும், ஜனத்திரட்சியுள்ளதுமான ஸ்வாட்டோவுக்குப் போய் சுவிசேஷப் பிரபல்லியம் செய்யத் தீர்மானித்ததை அவ்விடத்து ஆவசி

யங்களை எங்களுக்கு முன் எடுத்துக்காட்டித் தூண்டின எங்கள் கிறிஸ்தவ அன்பராகிய போவர்ஸ் மாலுமியார் (Captain Bowers) கேட்டபோது மிக மனமகிழ்ந்து, அவர் அந்நகருக்குத் திரும்பும் யாத்திரைக்காரராயிருந்தமையால் எங்களுக்குக் கப்பல் கேள்வி இல்லாமலே தம் ஜீலாங்கு (Geelong) என்னும் கலத்தில் பிரயாணம்செய்ய சம்மதி கொடுத்தார். நாங்கள் 1856-ம் ௵ மார்ச்சு ௴ முற்பகுதியிலே ஷங்காயைவிட்டுப் புறப்பட்டோம்.

இடையூறு இல்லாமல் ஆறுநாள் யாத்திரைபண்ணி டபிள் அயிலண்டுக்கு வந்தோம். அங்கே தெய்வ பயமேயில்லாத அந்நிய தேசத்தாரான ஒரு சிறு பகுதியார் குடியிருந்தார்கள். அவர்கள் அபினும் வேறு சரக்குகளும் வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கள் சொந்த தேசத்தினராதலால் அவர்கள் நடுவில் இறக்கிவிடப்பட்டோம். நாங்கள் அவர்களோடொத்தவர்கள் என்கிற நினைப்பு சுதேசிகளுக்குள் உண்டாகாமல் தடுக்கும்பொருட்டு, ஐந்து மைலுக்கப்பால் ஹான் ஆற்றங்கரையில் சுதேசிகள் வாசம் செய்த பகுதியிலேயே வீடு அமர்த்திக்கொள்ளப் பிரயாசப்பட்டோம். அப்படி அத்தேசத்து ஜனங்களுக்குள்ளேயே குடியிருக்க மனம் வைத்து வீடு தேடியும் அது கிடைப்பது மிகத் துர்லபமாயிருந்தது. அது அகப்படாது என்று தோன்றினபோது நாங்கள் ஆண்டவரிடத்தில் நெருங்கி எங்கள் சங்கடத்தை அவருக்குச் சொன்னோம். அவர் சீக்கிரத்திலேயே எங்களுக்குச் சங்கட நிவர்த்தியுண்டாக்கினார். கன்டன் நகரத்து வியாபாரி யொருவனை பரனேஸர் ஒருநாள் பார்த்து அவனுடன் கண்டன் சீனப்பாஷையில் பேசினார். அவன் அந்நகரத்து அதிகாரிகளுக்கெல்லாம் பெரிய அதிகாரிக்கு இனத்தான். புறநாட்டான் தன் பகுதிப்பாஷையில் அவ்வளவு சித்திரமாய்ப் பேசினதற்கு அவன் வியந்து, எங்களுக்கு உடனே நண்பனாகி, எங்களுக்கு ஒரு வீடு அமர்த்திக் கொடுத்தான். அது ஒரு சிறு அறைமாத்திரமே. நின்றபடிக்கே அதின் கூரையோரத்தைத் தொடலாம். அவ்வளவு தாழ்வான வீடு. வீட்டிறக்கத்து ஓடுகளைத் தொட்டால் கை கொப்பளிக்கும். அவ்வளவு சூடேறியிருந்தது. உள்ளபடி அது ஒரு பெரிய அடுப்புப்போல் எங்களுக்கு இருந்தது. அதில் வேனிற்காலத்தைப் போக்க நாங்கள் பட்ட பாடு ஒருநாளும் என் மனதைவிட்டு நீங்காது. கிடைத்த அறையைத் தவிர இன்னொரு அறையாவது, அதிலும் அதிக வசதியுள்ள ஒரு வீடாவது அமர்த்த நாங்கள் என்ன பாடுபட்டும் வாய்க்கவேயில்லை.

வீட்டின் துன்பத்தை மாற்றுவதற்கு நாங்கள் பலமுறை வெளிப்பட்டுச் சுற்றுப்புறங்களில் தங்கினோம்; அவ்வேளைகளில் எங்களுக்கு

ஓயாமல் உண்டாகிக்கொண்டேயிருந்த துன்பங்களையும் பிராண மோசங்களையும் நினைத்துப் பார்த்தால் எங்களுக்கு இதற்குமுன் வடக்குப்பகுதியில் நேர்ந்த உபத்திரவங்களெல்லாம் இவற்றிற்குமுன் ஒன்றுமில்லாதவைபோல் தோன்றின. கண்டன் நகரத்தார் எங்களுக்குக் காட்டின விரோதமும் இகழ்ச்சியும் மனதிற்குத் தாங்கரிய வாதையாயிருந்தது. 'அந்நியப் பிசாசு', 'அந்நிய நாய்', 'அந்நியப் பன்றி' இப்படித் தினம் எங்களை வைதார்கள். 'மனுஷரால் இகழப்பட்டவரும் வேண்டாமென்று வெறுக்கப்பட்டவருமானவரிடத்தில்' இதற்கெல்லாம் சலுகைதேடி அவரையே முன்னிலும் அதிகமாய் நெருங்கிப் பற்றிக்கொண்டேன்.

நாங்கள் நாட்டுப்புறங்களில் போய் வேலைசெய்த தருணங்களில் எங்களை இவ்விடத்து ஜனங்கள் பிடித்துக் கைதிசெய்து எங்களைப் பொருள்கொடுத்து மீட்டுக்கொள்ளும்படி வருத்தப்படுத்தியிருக்கலாம். 'எங்கள் ஜில்லா முழுமைக்கும் அரசனுமில்லை, அதிகாரியுமில்லை, தேசச்சட்டமுமில்லை' என்று அங்குள்ள ஜனங்கள் இறுமாப்பாய்ச் சொல்வது வழக்கம். அக்காலத்தில் இங்கே எங்கு பார்த்தாலும் வல்லான் வகுத்ததே வாய்க்காலாயிருந்தது. ஒருநாள் ஒரு சிற்றூருக்கு வந்தோம். அங்கே வந்த வேறு ஜில்லாக்காரன் ஒருவனை அவன் பணக்காரனென்றறிந்து அவ்வூரார் பிடித்துச் சிறையில் வைத்திருந்தார்கள். அவனை விடுதலை செய்வதற்குப் பெருந்தொகையொன்றை நியமித்துக் கேட்டார்கள். அவன் கொடுக்கமாட்டேன் என்றதற்கு அவனுடைய மணிக்கட்டு எலும்பைக் கொட்டாப்புளியால் ஒவ்வொன்றாய் நொறுக்கினார்கள். இம்சை பொறுக்கமாட்டாமல் அவன் கடைசியாய் அவர்கள் கேட்ட தொகை தரச் சம்மதித்தான். அவர்கள் எங்களையும் பிடித்து அவ்வாறு இம்சிக்க யாதொரு தடையுமிருந்ததில்லை. தேவபராமரிப்பு எங்களைக் காத்தது. அந்த ஜில்லாவில் ஒவ்வொரு பட்டணமும் மதில் சூழ்ந்தது. ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரே பட்டப் பெயருடைய ஒரே வம்சத்து மனுஷர் பதினாயிரம் இருபதினாயிரம் பேர் அடுத்த பட்டணத்திலிருந்த மனுஷருடன் எதிரித்தன்மை பாராட்டிக்கொண்டிருந்தார்கள். ஒரு பட்டணத்திலே நாங்கள் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது இன்னொரு பட்டணத்தை எங்களுக்கு விரோதமாய் மூட்டிவிடக்கூடியதாயிருந்தது. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் எங்களைத் தீங்குக்கு விலக்கிக் காத்த தேவ கிருபையை நாங்கள் வெள்ளிடை மலைபோல் அறிந்துகொண்டோம்.

நாங்கள் இங்கே வந்த சிலநாள் பின்னர் இவ்விடத்து மந்தாரீன் அதிகாரி கொடிய வியாதிப்பட்டார். சுதேச வயித்தியர்கள் அவரைச்

சுகப்படுத்த முடியாதிருந்தார்கள். என்னிடத்தில் வயித்தியத்துக்கு வந்து அநுகூலம் அடைந்த யார்மூலமாகவோ கேள்விப்பட்டு அவர் எங்களிடத்தில் சகாயம் தேடலானார். நாங்கள் அவருக்குப் பிரயோகித்த மருந்தை ஆண்டவர் ஆசீர்வாதமாய்ப் பலிக்கச் செய்தார். அதற்கு நன்றியுள்ளவராய் ஒரு ஆஸ்பத்திரி வைக்கவும் வருவோருக்கு மருந்துகொடுத்து உதவவும் ஒரு வீட்டை முழுவதும் அமர்த்திக்கொள்ள அவர் எங்களுக்கு உத்தரவு கொடுத்தார். அவருடைய அநுமதி கிடைத்தவுடனே, நாங்களிருந்த முழுவீட்டையும் அமர்த்திக்கொண்டோம். என்னுடைய மருந்துச் சரக்குகளையும் வயித்திய ஆயுதங்களையும் நான் இங்கு வருமுன் ஷங்காய் நகரிலேயே மாஜி உவைலியாரிடம் (Mr. Wylie) அடைக்கலமாய் வைத்துவந்தேனாதலால் அவைகளை எடுத்துவர உடனே அவ்விடத்துக்குப் பயணம் புறப்பட்டேன்.

நான் புறப்படும்போது என்னை வழிகூட்டியனுப்ப பானேஸர் அம்போ என்னும் ஊரிலிருந்து வந்திருந்தார். அந்த ஊருக்கு நானும் அவரும் இதற்குமுன் பலமுறை போனதுண்டு. என்னை அனுப்பிவிட்டு, அவருக்குதவியாக அமெரிக்கன் பாப்டிஸ்டு மிஷனரி யூனியனைச்சேர்ந்த ஜான்ஸன் போதகர் அனுப்பியிருந்த இரண்டு சுதேச சுவிசேஷகரை அழைத்துக்கொண்டு அவர் அவ்விடத்திற்குத் திரும்பிப்போனார். அங்குள்ள ஜனங்கள் அவர்கள் சொன்ன உபதேசத்தைக் கேட்கவும் அவர்கள் கொடுத்த புத்தகங்களை இனாமாக வாங்கிக்கொள்ளவும் பிரியமுள்ளவர்களாயிருந்தும் விலைகொடுத்து அவைகளை வாங்க மனமில்லாதிருந்தார்கள். ஒரு இரவில் திருடர் கன்னமிட்டு உட்புகுந்து அவர்களுக்கு இருந்த எல்லாவற்றையும் கொள்ளையடித்துப் போனார்கள். போயும், அவர்கள் வசமிருந்த புத்தகங்களை மாத்திரம் உதவாதனவென்று நினைத்து விட்டுவிட்டுப் போனார்கள். மறுநாள் வெள்ளென விடியுமுன்னமே ஆட்கள் வந்து கதவைத் தட்டி கிரயத்துக்குப் புத்தகங்கள் தரக் கேட்டார்கள். புத்தகங்கள் விற்பனையாகிக்கொண்டேயிருந்தன. காலைப்பசியாறும் வேளையில் இருந்தவர்களுக்கு ஆகாரங்கொள்வதற்கும் டபின் அயிலண்டுக்குப்போய் அங்கிருந்த பானேலருடைய எஜெண்டுக்கு அவரெழுதின கடிதத்தை ஒப்புவித்து அவருக்குத் தேவையான பணம் வாங்கிவர ஒரு ஆளுக்குக் கேள்விகொடுப்பதற்கும் போதுமான காசு கையில் இருந்தது. அந்த நாள் முழுமையிலும் மறுநாளிலும் புத்தகம் வாங்குவோர் வந்துகொண்டேயிருந்தார்கள். அதினால் அங்கிருந்த என் அன்பர்களுக்குத் தாழ்ச்சியுண்டாகாதிருந்தது. மூன்றாம் நாளிலோ ஒரு புத்தகமும் விற்க முடியவில்லை. அவர்தீர் கையிருப்புப் பணமும்

தீர்ந்தது. அங்கோத்தில் அவர்களனுப்பியிருந்த ஆள் வேண்டுமளவு பணம் கொணர்ந்தான்.

நான் ஸ்வாட்டோவிலே நாலுமாதம் வாசஞ்செய்தபின் ஜூலைமாத ஆரம்பத்தில் ஷங்காய்க்குப் புறப்பட்டேன். சுமார் இரண்டொரு வாரங்களுக்குள் என் வயித்திய தளவாடங்களை எடுத்துக் கொண்டு திரும்பிவந்து உவில்லியம் பாரேனஸ் போதகருடைய கூட்டுறவிலிருந்துகொண்டே தொடர்ந்து வேலைசெய்யலாம் என்று உத்தேசம்பண்ணியிருந்தேன். நாங்கள் ஒரு புது வயலில் புகுந்து வேலை செய்தோமே, அதிலே நல்ல விளைச்சலை நாங்களிருவரும் அறுத்துவிடலாமென்று நம்பியிருந்தோம். ஸ்வாட்டோ நகருக்கும் அதின் அயற்புறங்களுக்கும் பெரிய தேவாசீர்வாதம் வரக் காத்திருந்தோம். ஆயினும், அங்குள்ள விளைச்சலை எங்கள் இருவரில் ஒருவரும் அறுக்க தேவனுக்கு இஷ்டமிருந்ததில்லை. பாரேனஸர் உள் நாட்டுள் போயிருந்த சமயத்தில் சீன அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு கண்டன் நகரில் கைதியாகக் காவலில் வைக்கப்பட்டார். இது நான் அவரை விட்டுப்போன ஆரம்பத்திலேயே நடந்தது. யுத்தம் துவக்கின சமயத்தில் விடுதலையடைந்து, அவர் ஸ்வாட்டோவுக்குத் திரும்பிவந்தும் வேறிடத்தில் வேலைசெய்ய அழைக்கப்பட்டுப்போனவர் மறுபடி அவ்விடத்திற்கு வரவேயில்லை. ஷங்காய்க்குப் போன நான் வேறு தலங்களில் வேலைசெய்யப் புறப்பட நேர்ந்தது. மறுபடி நானும் ஸ்வாட்டோப் பக்கம் திரும்பவேயில்லை.

(இன்னும் வரும்.)

God's Grace

By the Rev. H. A. Popley

கடவுள் திருவருள்

(தொடர்ச்சி)

3. உயிர்ப்பித்தலும் நற்செய்கைக்கு ஏவுதலும்.

கடவுளின் திருவருளானது இவ்வுலகத்தில் செத்துக்கிடக்கிற சற்குண சக்திகளையும் தெய்வ வல்லமைகளையும் உயிர்ப்பித்து அவைகளைப் பலப்படுத்தி மனிதர் யாவரையும் நன்மைசெய்ய அவர்களை ஏவிவிடுகிறது. இதுவே கடவுளின் அருள் சக்திசெய்யும் முக்கியமான தொழிலாம். தாயுமானவர் இச்சத்தியத்தை மிக்கச் சிறப்பாய் ஓர் கண்ணியில் வெளியிட்டார்.

'குற்றம் குறையக் குணமேலிட அருளை
உற்றவரே ஆவிக்குறவாம் பராபரமே' என்பதே. (xxviii)

திருமந்திரத்தில் கடவுளின் அருளாலேயே நாம் அவரை வணங்குவோம் என்றும் நன்னெறியில் நடக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறது.

'நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவதென்செயு நாட்டினில்
நந்தி வழிகாட்ட நான் இருந்தேனே' (xxix)

'நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி அருளாலே மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான் இருந்தேனே' என்பதே. (xxx)

இப்படிப்பட்ட தெய்வ அருளை கடவுள் எப்போதும் தமது அடியார்க்குக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். இக்கருத்துடன் பட்டினத்தார்,

'கறவை நினைந்த கன்றெனா இரங்கி
மறவா மனத்து மாசறும் அடியார்க்கு
அருள் சுரந்தளிக்கும் அற்புதக் கூத்தனே' என்று (xxxi)

கோயினுன் மணிமாலையில் பாடியிருக்கிறார்.

திருவாசகத்திலும்,

'அருளாலே அவன் தாள் வணங்கி' என்று

மாணிக்கவாசகர் அவரை வணங்கும்படியாக திருவருள் அவசியம் என்று காண்பித்திருக்கிறார்.

(xxviii) குற்றம் குறைய குணம் மேலிட—குற்றம் குறைந்து நற்குணம் அதிகரிக்கும்படி, அருளை உற்றவரே ஆவிக்குறவாம்—அருளுடையவராகிய கடவுள் அடியார் மனதிற்கு உறவாம் என்பது.

(xxix) குருபரனுடைய அருளால் சிவன் என்னும் பெயர் பெற்றும், கடவுளை நாடியுமிருந்தேன். அவர் அருளினால் என்ன செய்யலாம்; அவர் வழிகாட்ட நான் இருக்கிறேன் என்பது.

(xxx) குருபரன் அருளால் கடவுளை நாடிப் பின் கடவுளைச் சேர்ந்து மெய்ஞ்ஞானம் பெற்று உயிருள்ளவனானேன் என்பது.

(xxxi) அற்புதமாய் நடனம் செய்தவர் கன்றை நினைந்த மாட்டைப் போல இரங்கி மறவாத மனதுள்ளவராகிய மாசில்லா தமது அடியார்க்கு அருளை மிகுதியாய்க் கொடுப்பார் என்பது.

மனிதரில் நல்லாசைகளும் தீய ஆசைகளும் உண்டு என நல்லாசைகளைத் தூண்டி விருத்தியாக்குகிறது தெய்வத் திருவருள்தான்.

கிருஷ்ண பிள்ளை இதைப்பற்றி,

'நல்லாவி யைத்தந்து திரமான விசுவாசம் நல்கி இகலோக போகம்
நாடாது பரலோக போகமே விழைகின்ற நல்மனம் நிலைக்க அருள்வாய்'

என்றும்,

'பொய்யும் வஞ்சமும் போக்கியே
மெய்யும் அன்பும் விடாமல்யான்
தெய்வமே உனைச் சேவித்திங்கு
உய்யும் நல்வரம் உதவுவாய்' என்றும் (xxxii)

பாடினர்.

கடவுள் திருவருளானது துன்பத்திலும் துக்கத்திலும் அடியார்க்கு நல்ல துணையாம் என அப்பர்ஸ்வாமியார் சூலையில் இருந்தபோது பின்வருமாறு பாடினதாகச் சொல்லப்பட்டது.

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே' என்பதே. (xxxiii)

அப்பர்ஸ்வாமியார் இன்னொரு இடத்தில் பாடினதுபோல கடவுளின் திருவருள் எக்காலத்தும் அடியார்க்குத் தோன்றாத் துணையாய் இருக்கிறது.

தாயுமானவர் அதைப்பற்றி,

'காக்கு நின்னருள் காட்சியல்லால் ஒரு
போக்கும் இல்லைஎன் புந்திக் கிலேசத்தை
நீக்கி ஆளுகை நின்பர மன்பினர்
ஆக்கமே முக்கண் ஆனந்தமூர்த்தியே' என்று (xxxiv)

சொல்லியிருக்கிறார்.

(xxxii) தெளிவு.

(xxxiii) பக்கம் பார்க்க.

(xxxiv) காக்கும் நின் அருள் காட்சியல்லால்—நம்மைக் காத்துக் கொண்டு வருகிற உமது திரு அருள் அல்லாது, ஒருபோக்கும் இல்லை—தெளிவு, என் புந்திக் கிலேசத்தை நீக்கி—என் மனதின் சங்கடத்தை நீக்கி, ஆளுகை—நீர் ஆட்கொள்ளுதல், நின் பரமன்பினர் ஆக்கமே—உமது அன்பர் ஆஸ்தியாம் என்பது.

The Israelites—A Sermon

ஓர் பிரசங்கம்

எபி. 3. 8–11

இந்த அதிகாரத்தையும் விசேஷமாய் இந்த வாக்கியங்களையும் நாம் வாசிக்கும்போது இஸ்ரவேலரின் சரித்திரத்தையும் விசேஷமாய் அவர்களின் எகிப்திய சஞ்சாரத்தையும், வனாந்தர பிரயாணச் சரித்திரத்தையும் நம்முடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருகிறது. ஆகவே அவர்களின் சரித்திரத்தை மூன்று பாகமாகப் பிரித்து அவைகளினால் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய சிலவற்றைக் கற்றுக்கொள்வோமாக.

இந்த இஸ்ரவேலின் சரித்திரத்தை

I. எகிப்தின் ஜீவியம் என்றும்,

II. வனாந்தர ஜீவியம் என்றும்,

III. கானான் ஜீவியம் என்றும் மூன்று பாகங்களாகப் பிரித்துச் சிந்திப்போமாக.

I. எகிப்தின் ஜீவியம். இது அவர்கள் எகிப்தில் ஜீவித்த காலவரையைக் குறிக்கும்.

1. இது அடிமைத்தன ஜீவியம். இஸ்ரவேலர் எகிப்தில் ஜீவித்த காலத்தில் யோசேப்பின் நன்மைகளை அறியாத ராஜன் வந்த காலம் முதல் அடிமைத்தன ஜீவியமாகவே இருந்தது என்று அவர்களின் சரித்திரத்தினால் அறிகிறோம்.

அவர்கள் அரசனுக்கு அடிமைகளாயிருந்தார்கள். ஆளோட்டிகளுக்கு அடிமைகளாயிருந்தார்கள். குடிகளுக்கும் அடிமைகளாயிருந்தார்கள்.

அரசன் தன்னுளோட்டிகளைக்கொண்டு வாங்கக்கூடிய சகல வேலைகளையும் அவர்கள் செய்து அவனுக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் சுமை சுமக்கக் கட்டளையிட்டான்—கீழ்ப்படிந்தார்கள். செங்கல்லும் சாந்துமாகிய இவைகளைச் செய்யும் வேலையைக் கொடுத்தான். அவைகளையும் செய்து அவனுக்குக் கீழ்ப்படிந்தார்கள். வயலிலும் வெளியிலும் செய்யப்படவேண்டிய சகல வேலைகளிலும் அவனுக்குக் கீழ்ப்படிந்தார்கள். கடைசியாய் அவர்கள் ஜீவனையே போக்கும்படியாய் இட்ட கட்டளையைத் தெய்வாதீனமாய் அவன் ஆட்கள் நிறைவேற்றக்கூடாமற் போனார்கள். இப்படியாக யாத். 1[14]-ல் நாம் காண்கிறபடி அவர்களின் எகிப்திய ஜீவியம் அவர்களுக்குக் கசப்பாகவேயிருந்தது. இதற்கெல்லாம் காரணம் அவர்கள் தங்களை அடிமைத்தனத்திற்குட்படுத்தினதே.

2. பெருமூச்சின் ஜீவியம்.

இஸ்ரவேலர் பார்வோனின் நிர்ப்பந்தத்தைத் தாங்கமுடியாமல் கதறி பெருமூச்சு விடுகிறார்கள். (யாத். 2^{23}, ^{24}.)

பார்வோனின் ஆளுகைக்குத் தங்களை விற்றுப்போட்டதினால் தங்கள் பெருமூச்சைத் தணித்துத் தங்களை ஆற்ற ஆளில்லை. தஞ்சமென்று அடைக்கலப்புக இடமில்லை. ஓடி ஒளிக்க ஒதுக்கிடமில்லை. ஆகையால் நாங்கள் என் செய்வோமென்று ஏங்கி பெருமூச்சு விடுகிறார்கள்.

3. எகிப்தின் ஜீவியம் தேவாராதனையற்ற ஜீவியமாகவுமிருந்தது. யாத். 3^{18}-ல் நாம் வாசிக்கிறபடி இவர்கள் அடிமைகளாயிருந்ததினால் தேவதா விஷயங்களிலுங்கூட அவர்களை ஆட்கொண்டவன் அவர்களுக்குச் சுயாதீனம் கொடுக்கவில்லை. தங்கள் தேவனாகிய இஸ்ரவேலின் தேவனுக்கு ஆராதனைசெலுத்த உத்தரவளிக்கக் கேட்டதற்கு அவர்களைப் போகவிடேன் என்றான். ஆகவே அவர்கள் அடிமைகளாயிருந்த காலமெல்லாம் தங்கள் தேவனுக்கு ஆராதனை செலுத்தச் சுயாதீனமற்றிருந்தார்கள்.

அப்படியே பிசாசு, பாவம், உலகம் என்னும் முச்சத்துருக்களான எஜமான்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருப்பவர்கள் தாங்கள் விரும்பும் எந்த நல்காரியங்களையும் செய்யாதபடிக்கு அவர்களைக் கட்டிப்போடுகிறான்.

இப்படியாகத் தங்களை ஒப்புவித்திருப்பவர்கள் செய்ய விரும்புவதையுங்கூட செய்யவிடான். ஆராதனைசெய்யக் கேட்கிறார்கள் பார்வோன் விடேன் என்கிறான். கிறிஸ்தவர்கள் ஓய்வுநாள் ஆராதனைக்குப் போக விரும்பினாலும் இடங்கொடேன் என்கிறான். இஸ்ரவேலர் கொடுமையைச் சகிக்கமுடியாமல் பெருமூச்சு விட்டதுபோல பாவம் என்னும் எஜமானன் ஒருவனை அழுத்தும்போது: ஐயோ! நிர்ப்பந்தமான பாவி நான்; யார் இந்த மரண சரீரத்தினின்று என்னை விடுதலையாக்குவார் என்று கதறவேண்டியவனாகிறான்.

II. வனாந்தர ஜீவியம்.

1. இது நிலையற்ற ஜீவியம். நாற்பதுநாளில் முடியவேண்டிய பிரயாணம் நாற்பது வருஷமாய் மாறினது. அலைகிறார்கள். அவர்கள் பிரயாணத்தின் பாதையைப் பார்த்தால் அவர்கள் எவ்வளவு தூரம் அலைந்திருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கும். முன்னுக்குச் செல்லுகிறதும் பின்னுக்கு வருகிறதுமாயிருந்தார்கள். இப்படியாக ஒரே நேராய் முன்செல்லாமலும், ஒரே இடத்தில் தாபரிக்காமலும் அலைந்து திரிகிறார்கள்.

ஒவ்வொரு பேர்க்கிறிஸ்தவனுடைய கிறிஸ்தவ ஜீவியமும் இப்படித்தானிருக்கிறது. தன்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலையற்றிருக்கிறான். ஒருநாள் நல்ல ஜீவியம், மறுநாள் தவறுதல்; ஒருநாள் நல்ல தீர்மானம், அடுத்த நாள் அத்தீர்மானங்களைக்கொண்டு செலுத்தாமல் தவறுதல். இப்படியாக நிலையற்ற தீர்மானமுடைய ஜீவியமாயிருக்கிறது.

2. முறுமுறுப்பின் ஜீவியம். வழி கஷ்டமாயிருப்பதினால் முறுமுறுப்பு. சத்துருக்கள் சூழ்ந்திருப்பதினால் முறுமுறுப்பு. முன்னுக்குச் சமுத்திரம் பின்னுக்கு எகிப்தியராகிய சத்துருக்கள் வலப்பக்கமும் இடப்பக்கமும் தப்பியோட வழியில்லாமல் மலைகள் மூடிக்கொண்டிருக்கின்றன. இப்படியாக ஆபத்துகளும், மோசங்களும், சத்துருக்களும் எப்பக்கமும் சூழ்ந்திருந்ததினால் ஐயோ நாங்கள் எகிப்திலேயே இருந்துவிட்டால் தாவிலை. எங்களைக் கொல்லவா கொண்டுவந்தீர் என்று மோசேயோடு முறுமுறுக்கிறார்கள். (யாத். 16^{12}.)

பேர்க்கிறிஸ்தவனும் கூட தன் கிறிஸ்தவ பிரயாண ஜீவியத்தில் உண்டாகக்கூடிய கஷ்டங்களைப் பார்த்து சிலுவையின் உபத்திரவத்தையும் சகிக்கக்கூடாதவனாய் முறுமுறுக்கிறான். ஜெபிப்பதும் ஆத்தும சத்துருக்களோடு போராடுவதும் தேவாராதனைக்குப் போவதும் அவனுக்குக் கஷ்டமாயிருப்பதினால் முறுமுறுக்கிறான். ஆகையால் இஸ்ரவேலரைப்போலவே உலகத்தோடு சேர்ந்துபோக விரும்புகிறான்.

3. பலனற்ற ஜீவியம். நாற்பது வருஷங்களாக அவர்கள் வனாந்தரத்தில் அநேக சத்துருக்களோடு போராடியும் கடைசிவரை அதாவது எரிகோமட்டும் போராடாததினால் அநேகர் பலனற்றவர்களாய்ப் போனார்கள்.

பேர்க்கிறிஸ்தவனும் தன் ஆத்தும சத்துருக்களோடு சமயாசமயங்களில் போராடியும் முடிவுமட்டும் போராடத் தவறிப்போவதினால் தான் அடையவேண்டிய நித்திய ஜீவனை யடையாமல் போகிறான். கடைசி போராட்டமாகிய எரிகோமட்டும் போராடினவர்களே கானானில் பிரவேசித்தார்கள். அப்படியே தன் ஜீவகாலமெல்லாம் அல்லது கடைசிமட்டும் போராடுபவனே பலனை யடைவான். முடிவுமட்டும் நிலைத்திரு அப்போது ஜீவகிரீடத்தைப் பெறுவாய் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

இந்த வனாந்தர ஜீவியம் பண்டிகை ஆசரிப்போடு துடங்கின போதிலும் நிலையற்ற ஜீவியமும், முறுமுறுப்பின் ஜீவியமுமாயிருந்ததினால் பலனற்ற ஜீவியமாய் முடிந்தது. பேர்க்கிறிஸ்தவனும் வருஷப்பிறப்பன்றே ஆவியின் எழுப்புதலான கூட்டங்களிலோ நல்ல தீர்

மானங்கள் அல்லது பிரதிக்கினைகள் செய்தாலும முற்றுமுடிய அத தீர்மானங்களைக்கொண்டு செலுததக்கூடாமையினுல் பலனடையாமல போகிருன்.

III. கானானின் ஜீவியம்.

இது சுதந்தர ஜீவியம். எகிப்தின் ஜீவியத்தையும், வனாந்தர ஜீவியத்தையும் வென்றவர்களே சுதந்தர ஜீவியமாகிய கானானில் பிரவேசித்தார்கள். எததனையோ சததுருக்களை வென்ருர்கள். எததனையோ உபத்திரவங்களையும், கஷ்ட நஷ்டங்களையும் மேற்கொண்டார்கள். எரிகோவின் மதில்களை உடைத்தார்கள். யோர்தானின் பிரவாகத்தைக் கடந்தார்கள். வெற்றி யடைந்தவர்களாய் ஜெயம, ஜெயம் என்று சொல்லி கானானுக்குள் பிரவேசித்தார்கள். பிரவேசித்தவர்கள் தங்கள் சுதந்தர பாகத்தைப் பெற்று இளைப்பாறுகிருர்கள். எகிப்தைவிட்டுப் புறப்பட்டவர்கள் கானானில் பிரவேசிக்கக் கூடாமற் போனார்கள். காரணம் அவர்கள் அவிசுவாசமே. (எபி. 3[19].)

ஒவ்வொரு மெய்க் கிறிஸ்தவனுடைய ஜீவியமும் இப்படித்தானிருக்கிறது. எகிப்தின் ஜீவியத்தையொத்த மூச்சத்துருக்களின் அடிமைத்தனத்தையும் ஒழித்து வனாந்தர ஜீவியத்தைப்போன்ற நிலையற்ற ஜீவியமாகிய அவிசுவாசத்தை நீக்கி, கானானின் ஜீவியமாகிய சுதந்தர ஜீவியத்தை அடைகிருன்.

இதை வாசிக்கும் என் அன்பான கிறிஸ்தவர்களே, இந்த மூன்று வகையான ஜீவியத்தையும் கண்டீர்களே. உங்கள் ஜீவியம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? உங்கள் ஜீவியம் எகிப்தின் ஜீவியமா? ஐயோ! அது அடிமைத்தன ஜீவியம். எவ்வளவு காலம் உங்கள் ஆத்தும சத்துருக்களுக்கு அடிமைகளாயிருக்கப்போகிறீர்கள்? காலம் சுருக்கம, புறப்படுங்கள், மோசேயிலும் பெரியவர் உங்களை அழைக்கிருர். புறப்பட்டும் வனாந்தர ஜீவியத்தையொத்த நிலையற்ற ஜீவியத்திலிருக்கிறீர்களோ? பரிதாபம! அது அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பாச்சுதே. ஆகையால் அது தேவன் உன்னை வாந்திபண்ணும் நிலைமை. இரண்டு நினைவுகளால் எந்தமட்டும் குந்திக் குந்தி நடப்பீர்கள். முன் செல்லுங்கள்.

எகிப்தின் ஜீவியத்தையும், வனாந்தர ஜீவியத்தையும் கடந்து கானானின் ஜீவியத்தையடைந்து உங்கள் சுதந்தர பாகமாகிய ஜீவ கிரீடத்தைப் பெற தேவகிருபையை முன்னிட்டு பிரயாசைப்படுவீர்களாக.

C. L. S. PRESS, MADRAS—1915

No. 107 ஏப்பிரல் 1915

வேதியர் விளக்கு

9 - APR 1915
MADRAS

The Fourfold Gospel

[*The following is an abridgement of the First Lecture of a course of Lectures on the Gospels, given by Dr. Findlay to the Students of the Wesleyan Theological College, Headingley.*]

THERE is only one Gospel. There are various narratives but only *ONE* Gospel. The word is always singular in the New Testament.

Then why is there a multiple narrative?

There might have been many advantages in one narrative only. E.g. Much discussion, enquiry and trouble would have been saved.

There has however been a special Providence in the revelation and formulation of the Gospel. And God in His wisdom has ordained that there should be not one but several narratives. (See Luke 1[1])

There are certain advantages arising from the multiple narrative which we can note.

1. *Jesus Christ is so great a Person.*

(*a*) No one writer could set forth Christ completely. See Eph. iii. 8; John xxi. 25.

(*b*) Different people take a different view of the same subject.

To view adequately a fine view, or a lofty mountain, one needs to take different standpoints.

To fully understand the life of a great man, we need different estimates from men of varied sympathy and tastes. This applies with far greater force to Him 'in whom dwelleth all the fulness of the Godhead bodily.'

(c) The evangelists individually or collectively do not give a complete biography. Their narratives are only Memoirs. They give us so much as needed to be set down in permanent record in order to sustain and justify the Church's faith in her Lord.

They do not tell us all we should like to know; they do not satisfy curiosity. They have been written as John says 'that ye may believe.'

2. The variety of the narratives suits the variety of Readers.

The story has to adapt itself to every order and type of mind. It has to fulfil a world-wide Mission. It has to satisfy men of every kind. The record we have is admirably suited to this end. If we only had the record of St. John, how many people would fail to understand its difficult discourses and subtlety of thought. And these people may be charmed at once by the homely and touching parable of Luke—or by the moral beauty and practical force of Matthew's record of the sermon on the Mount, or by the glowing recital of Mark crowded with incident and rich in the colour of life.

3. The existence of this multiple narrative gives surer evidence of the truth of the Record.

(a) The evangelists speak as independent witnesses and differ in their way of putting things. But they all tell one story. Their differences are such as will always be found in truthful witnesses, relating the same events. They assert the same facts and their accounts fit in numberless particulars.

(b) The view of the evangelists as to the Person and Work of Christ harmonize with and complete each other. The four accounts thus make up one perfect whole. The character they thus pourtray is wholly beyond the reach of human art. Men could never have imagined so perfect a manhood. That four accounts should thus come together and make the one perfect whole is sure evidence that the Record is by Divine Inspiration.

(c) 'In the mouth of two or three witnesses shall all things be established', ran the old law; we have four witnesses and these four represent a whole host and the whole of the Apostolic age and church.

The existence of four separate witnesses has of course given rise to difficulties.

(a) There are differences on minor points. Many of them are capable of easy solution: others are not easily explained.

For Example

(1) John and the other three appear to disagree as to whether Jesus died on the fourteenth or fifteenth of the month Nisan.

(2) There are minor differences in the narratives of the Resurrection. The disciples were in an excited state and were unable therefore to be precise in every detail. The absence of such minor differences would have been suspicious. Uniformity would have suggested collusion.

(3) Blind Bartimaeus. Luke says that the miracle took place at the entrance to Jericho, Matthew and Mark say on leaving Jericho.

(b) The wonder is that these differences are so few and of such minor importance. Unless the conditions of human testimony were entirely superseded such discrepancies must always arise. Mysteries and contradictions are common in most matters—Why not in the Gospel narrative?

(To be continued)

Quench not the Spirit—A Sermon

By the Rev. F. Goodwill

‘ஆவியை அவித்துப்போடாதிருங்கள்’

1 தெச. 5^{19}.

யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது என்னவென்றால் ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட முதல்நாள் சாயந்திரம் அதிக இருட்டாயிருந்தபடியால் ஆதாம் அதிகமாய் பயப்பட்டான். தேவன் அவன் பயந்ததைக் கண்டு பரிதபித்து அவனுக்கு நெருப்பை யளித்தார் என்பதே. அந்நாள்முதல் இந்நாள்வரை நெருப்பை மனிதர் உபயோகித்து வருகிறார்கள். பூர்வகாலத்தார் நெருப்பு அவிந்துபோகாதபடி வெகு கவனத்தோடே காப்பாற்றிவருவது வழக்கம். ஏனென்றால் அவர்களுக்கு நம்மைப்போல நெருப்புக்குச்சிகளைக்கொண்டு நெருப்பை ஏற்றும் சிலாக்கியம் இருந்ததில்லை. தீவெட்டிக்கற்களை அடித்தும் மரத்தோடு மரத்தை தேய்த்தும் நெருப்பை உண்டாக்கவேண்டியதாயிருந்தது. அது அணைந்துபோனால் மறுபடியும் மூட்டுவது மிகப் பிரயாசையாக இருந்திருக்கலாம்.

சத்தியவேதத்தில் பல விடங்களில் பரிசுத்தாவி அக்கினிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. தெசலோனிக்கேயர் அடைந்திருந்த ஆவியை அவர்கள் அவித்துவிடப்படாது என்று பவுல் அப்போஸ்தலன் இங்கே எச்சரிக்கிறார்.

முதலாவது: பரிசுத்தாவி மனிதருக்கு உபயோகமாயிருப்பதில் எவ்வாறு நெருப்புக்கு ஒப்பாயிருக்கிறது என்று பார்க்கலாம்.

(*a*) நெருப்பு ஜீவனைக் காப்பாற்றுவதற்கு இன்றியமையாதது. குளிர்தேசங்களிலுள்ளவர்கள் நெருப்பில்லாமல் உயிரோடிருக்க முடியாது. அவர்கள் குளிரின் மிகுதியால் கொடுகி உயிரிழக்க நேரிடும். நெருப்பின் அனலே அவர்கள் குளிரை ஓட்டிவிடுகிறது. எத்தேசத்திலுமுள்ளவர்களுக்கு நெருப்பு அத்தியந்த அவசியமானது; நெருப்பில்லையானால் நம்முடைய உணவுபதார்த்தங்கள் புசிப்புக்கு ஏற்றதாயிராது. நெருப்பின் உதவியில்லாமல் நமது ஜீவன் இருக்கக்கூடுமானால் அது மிருகத்தின் ஜீவனுக்கொப்பாய்த் தாழ்வான நிலைமையுள்ளதாயிருக்கும். நர ஜீவியத்தை உயர்த்தி மேன்மைப்படுத்துகிறவைகளில் விசேஷித்தது நெருப்பும் ஒன்று என்று சொல்லத்தகும். அப்படியே பரிசுத்தாவியானவரும் நமக்கு ஜீவனையும் தேவபலத்தையும் தரு

கிறார். பரிசுத்தாவிதான் தேவனை நமக்குச் சொந்தமாக்குகிறார். அவரையன்றி நம்மிலுள்ள எந்தக் காரியமும் பரிசுத்தமாகாது. ஆதலால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க விரும்புகிற ஒவ்வொருவரும் பரிசுத்தாவியாகிய அக்கினியின் ஸ்நானமடையவேண்டுமென்று ஸ்நானகனாகிய யோவான் சொல்லுகிறார். பூர்வீக யூதர், இரத்தச் சாட்சிகள் அக்கினியின் வழியாய் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கிறதாக சாட்சி பகர்ந்தார்கள் அப்படியே நாமெல்லாரும் பரிசுத்தாவியாகிய அக்கினியின் மூலமாய் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கவேண்டும்.

(*b*) நெருப்பு சுத்தஞ்செய்வதற்கு அவசியமானது. நெருப்பு பிரவேசித்த விடத்திலுள்ள அசுத்தமும் பாவுகிற வியாதியும் பரிகரிக்கப்படுகின்றன. லண்டன் நகரத்தில் 1665-ம் ஆண்டில் பிளேக் என்னும் பெருவாரி வியாதி வியாபித்து அநேக உயிர்களைக் கொள்ளைகொண்டுபோயிற்று 1666-ம் ஆண்டில் அந்தப் பெரிய பட்டணம் தீக்கு இரையானது; அந்த மகாமாரி அதனால் சமூலமாய் வேரற்றுப்போக ஜனங்கள் உயிர்தப்பினார்கள். பரிசுத்தாவியானவரும் நமக்கு விரோதமாயிருக்கும் கேடுகளை நீக்கி, சுத்திகரித்து நம்மைக் காப்பாற்றுகிறவராயிருக்கிறார். இன்னும், நெருப்பு உலகத்திலுள்ள ஜடபொருட்களைத் தகனித்து அவைகளிலுள்ள ஆவிப்பொருட்களை விடுதலை செய்கிறது என்கிற அபிப்பிராயத்தோடு தேவனுக்குச் செலுத்தவேண்டிய பலிகளை மனிதர் நெருப்பிலே அர்ப்பித்துவருகிறார்கள். அவ்வாறே ‘நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய்’ (எபி.12^{29}) நம்முடைய இருதயங்களைத் தகுதியான பலியாகும்படி அதிலுள்ள உலகத்துக்குரியவைகளை எரித்து பரிசுத்தமாக்குகிறவராயிருக்கிறார்,

(*c*) நெருப்பு அந்நியோந்நியத்துக்கு ஏற்றது. குளிர்தேசங்களிலுள்ளவர்கள் குடும்பங்களோடு நெருப்பண்டை உட்கார்ந்து அதின் அனலை உபயோகிக்கிறார்கள். அதின் கூட்டுறவு குளிரிலிருக்கிற ஜனங்களைப் பூரிக்கச் செய்கிறது. தன்னிலுள்ள அனலினால் மனிதரை ஒன்றாய்ச் சேர்த்து பந்தஞ் செய்கிறது. அதைப் பார்க்கிலும் மேலாக பரிசுத்தாவியானவரும் தேவனுடைய மனிதரை தம்முடைய ஆவியின் அனலினால் சேர்த்துக் கட்டுகிறார். மெதொடிஸ்தருடைய ஒழுங்குகளல்ல, அவர்களுடைய விசுவாசமுமல்ல, அவர்கள் அநுபவமே அதிசய அந்நியோந்நிய ஒற்றுமைக்குக் காரணமாயிற்று. பிரசங்கிகளும் போதகர்களும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருந்தாலும் ஆவியிலும் அநுபவத்திலும் ஒன்றாயிருக்கக்கூடும். அடுப்பு தழல் ஒன்று, தன்னையடுத்த கரித்துண்டுகளைத் தழல்களாக்கிவிடுமாறு பரிசுத்தாவியும் தம்மை யடுத்தவர்களை அனல்கொள்ளச் செய்கிறார்.

இரண்டாவது: ஆவியை எப்படி அவித்துப்போடாதிருக்கலாம்.

(a) காடோ, வீடோ ஏதோ ஒன்று பற்றி எரியும்போது மண்ணினாலும், தண்ணீரினாலும், வேறு லோக பதார்த்தங்களினாலும் அவித்துவிடக்கூடும். அவ்விதமே நாம் செய்கிற எவ்விதமான பாவத்தினாலும் எரிந்து பிரகாசிக்கிற ஆவி அவிந்துபோகக்கூடும். நாம் அனுசரிக்கும் கிரமங்களை கைநெகிழவிடுவதினால் நமக்குள் சுவாலிக்கும் ஆவி தணிந்துபோம். இக்காரணத்தினால் பவுல் தீமோத்தேயுவை முதல் நிருபம் 4^{14}-ல் 'உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே' என்று எச்சரித்து, இரண்டாம் நிருபம் 1^{14}-ல் 'உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல் மூட்டி எழுப்பிவிடு' என்று உற்சாகப்படுத்தி எழுதியிருக்கிறார். பவுல் தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போன காலத்தில் சமயபேதம் ஒன்றுமில்லாதிருந்தது. 'ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு,' தங்கள் விக்கிரகங்களைவிட்டு தேவனிடத்தில் மனந்திரும்பினவர்கள் அப்பட்டணத்தார்தான் (1 தெச. 1^{9}). அது வியாபார பட்டணமாயிருந்தபடியால், அதற்குச் செல்வம் மிகுதியாயிருந்தது. சொற்திறம், செல்வாக்கு, அந்தஸ்து முதலிய சாதனங்கள் மிஞ்சின ஸ்தலமாதலால் அவர்கள் ஆவி அவிந்துபோகத்தக்க சோதனைகள் அங்கு அநந்தம். தீமையான பாவங்களினால் பற்றி எரிகிற ஆவியை அவித்துப்போடாதபடி பவுல் புத்தி சொல்லுகிறார். கல்வி, வியாபாரம், அந்தஸ்து, பெரிய சம்பளம், நாகரீகம் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் பெரிய அபாயத்துக்கு அருகாயிருக்கிறார்கள். தங்களுக்குள்ள ஆவியை உலக நேசத்தால் அவித்துவிடக்கூடும். அவ்வித நிலைமையிலுள்ளவர்களாதலால் விழிப்புள்ளவர்களாயிருக்கக் கடவர்கள்.

(b) நன்றிகேடாய் நடப்பதினால் ஆவியை அவித்துவிடக்கூடும். 1 தெச. 5^{18}-ல் 'எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்' என்று பவுல் சொல்லுகிறார். அடுத்த வசனத்திலே 'ஆவியை அவித்துப்போடாதிருங்கள்' என்கிறார். நன்றி நிறைந்த ஆத்துமாவே சகல ஆசீர்வாதங்களுக்கும் உரிமையானது. ஆதலால் ஆசீர்வாதங்களைப் பெறுகிறது. ஜெபிப்பதைப் பார்க்கிலும் துதிப்பதே நலம். உலகமும் துதிக்கிறவர்களுக்கு இரக்கம் பாராட்டுகிறது. நன்றியற்ற இருதயம் ஆவியை அவித்துவிடக்கூடும். ஆதலால்,

'என்நாளும் இந்த நன்மையை,
என் ஆத்துமாவே,
மறந்திடாமல் கர்த்தரை
வணக்கமாய்த் துதி'

என்று நன்றியறிந்த இருதயத்தோடே அவரைத் துதிக்க நாம் பாத்திராகும்படிப் பிரயாசப்படுவோமாக. நாம் எவ்வித ஸ்திதியிலிருந்தாலும் பெறக்கூடிய நன்மைகளும் ஆசீர்வாதங்களும் ஏராளமாய் அவரிடத்திலுண்டு என்றறிந்து, அவரை ஸ்தோத்திரிப்போமாக.

(c) சத்தியத்தை அற்பமாய் எண்ணி ஆவியை அவித்துவிடக்கூடும். 1 தெச. 5^{20}-ல் 'தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள்' என்று பவுல் சொல்லுகிறார். தெசலோனிக்கேயர் 'வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவில்லை' (அப். 17^{11}). ஏனென்றால் வேதவசனத்தை அவர்கள் புறக்கணித்தார்கள். இந்த நிருபத்தை எழுதினபோதும் அவர்கள் அவருடைய போதனையைக்குறித்து இடறலடைந்தார்கள். தேவனுடைய வசனம் அவர்களைச் சுத்தமாக்கக்கூடும் என்று அவர்கள் அறியாதிருந்தார்கள். அவர்கள் சத்தியத்தை அனுசரிக்கக்கூடாதபடி இடஞ்சல்கள் இருந்தது. அவர்கள் ஆவி தணிந்துபோக நேரிட்டது. அவ்வாறே வேதவசனங்களை வாசித்து தியானியாமற் போகும்படி தடைசெய்கிற மோசங்களும் சோதனைகளும் நமக்கு வரும். நமக்குள் இருக்கும் ஆவி எரிந்து பிரகாசிக்கிறதற்கு வேதவசனம் உதவியானது. தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து தியானித்து, ஆவியை அவித்துப்போடாமல் எப்பொழுதும் பிரகாசிக்கப் பிரயாசைப்படுவோமாக. 'ஆவியை அவித்துப்போடாதிருங்கள்.'

St. Paul

பரி. பவுல் ஜீவிய சரித்திரம்

குணப்படுதல். (கி. பி. 32, 33.)

பரி. பவுல் என்பவருடைய குணப்படுதலின் விவரங்களை மூன்று இடங்களில் வாசிக்கிறோம் (அப். 9^{1-16}; 22^{4-16}; 26^{9-18}.). அதுவும் தவிர அவர் அடிக்கடி அதைப்பற்றி எழுதினார். (1 கொரி. 9^{1}; 15^{8}. பிலி. 3^{7}. முதலியவை.)

அச்சமயத்தில் தாம் இயேசுவை உண்மையாய் தரிசித்ததாகச் சொல்லுகிறார் (1 கொரி. 9^{1}). அவரோடிருந்தவர்கள் அத்தரிசனத்தைக் காணாமலும் கேட்கப்பட்ட சப்தத்தின் கருத்தறியாமலும் இருந்தார்கள்.

தமது மனமாறுதலுக்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெற்று தாமதமின்றி இயேசுவைப் பிரசங்கித்தார் (அப். 9^{18-20}). குணப்பட்ட அந்நாள்முதல் தாம் அப்போஸ்தல ஊழியத்தைச் செய்யும்படி

தெரிந்துகொள்ளப்பட்டார் என்று அவர் அடிக்கடி சொல்லுகிறார் (கலா. $1^{1,12,16}$. ரோ. 1^{17}. 1 கொரி. 1^{1}; 4^{1}; 9^{1}; 15^{9}). அதுவும் தவிர தாம் புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி அழைக்கப்பட்டார் என்பதையும் ஆதி முதல் அறிந்திருந்தார் (அப். 9^{15}; 22^{21}; 26^{17}. ரோ. 11^{13}. கலா. 2^{7}. முதலானவை). அந்த வேலை செய்வதற்குத் தம்மை ஆயத்தப்படுத்தும்படி அவர் அரபிதேசம் போய்ச் சற்றேறக்குறைய மூன்று வருஷமளவும் அங்கே தங்கித் திரும்பவும் தமஸ்குவுக்கு வந்தார் (கலா. 1^{17}. அப். 9^{22}). அவ்விடத்தில் அவர் அதிக ஊக்கமான வேலை செய்துவந்ததினால், அவ்வூர் யூதர்கள் அவரைக் கொலைசெய்ய வகை தேடினார்கள். அவரோ ஓர் கூடையிலே வைக்கப்பட்டு மதில் வழியாய்த் தப்பித்துக்கொண்டு எருசலேமுக்குப் போனார். (அப். 9^{23-25}. 2 கொரி. 11^{32}.)

அவர் குணப்பட்டபின் எருசலேமுக்குப் போன முதல் சமயம் இதுவே (கி. பி. 35.) (கலா. 1^{18}. அப். 9^{29-30}). சபையார் அவரை ஏற்றுக்கொள்ள பயப்பட்டபடியால் பர்னபா என்பவன் அவரைக் கூட்டிக்கொண்டுபோய் நடந்த சங்கதிகளையெல்லாம் விவரித்துச் சொன்னான். அவர் அங்கே பதினைந்துநாள் தங்கி, கிரேக்கருக்குள் அவர் செய்த பிரசங்கத்தினால் கலகமுண்டானபடியால், சீஷரால் தர்சுவுக்கு அனுப்பப்பட்டார். (அப். 22^{17}-ல் சொல்லப்படுகிற தரிசனத்தை இச்சமயத்தில் கண்டார் எனச் சிலர் நினைக்கிறார்கள். வேறு சிலர், அவர் எருசலேமுக்குப் போன இரண்டாம் முறையிலே இச்சம்பவம் நடந்ததாக உத்தேசிக்கிறார்கள்.) அவர் தர்சுவிலே சில வருஷ காலமாகத் தரித்து அவ்விடத்திலும் அதற்குச் சுற்றுப்புறங்களாகிய சீரியா சிலிசியா நாடுகளிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். (கலா. 1^{21}.)

ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்களில் சிலர் சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதியாருக்கும் தேவ வசனத்தை அறிவித்தார்கள். அவ்வூரின் கிரேக்கரும் கிறிஸ்தவர்களானார்கள் என்று எருசலேமிலுள்ள சபை கேட்டு அவ்விடத்துக்குப் போக பர்னபாவை அனுப்பினார்கள் (அப். 11^{19-24}). அவன் தர்சுவுக்குப் போய் பவுலை அழைத்து அவரோடு ஒரு வருஷமாக அந்தியோகியாவிலே வேலை செய்தான். (கி. பி. 43, 44.) (அப். $11^{25, 26}$.)

அக்காலத்தில் எருசலேமிலே பஞ்சம் உண்டானபடியால், அவர் இரண்டாவது முறை அவ்வூருக்குப் போய் அந்தியோகியாவிலுள்ள சபையாரால் சேகரிக்கப்பட்ட பணத்தை மூப்பர் கையிலே கொடுத்தார். (கி. பி. 45-6.) அப். 11^{30}. கலா. 2-ல் சொல்லப்படுகிற

பிரயாணம் இதுவாயிருந்தால் அவர் தேவ அறிவிப்பினாலே போய்த் தீத்துவையும் கூட்டிக்கொண்டு போனார்.

கொஞ்சகாலம் எருசலேமிலே இருந்து செய்யவேண்டிய ஊழியத்தைச் செய்து முடித்தபின் அவரும் பர்னபாவும் பர்னபாவின் இனத்தானாகிய மாற்கு என்பவனும் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். (கி. பி. 46-7.)

முதல் சுவிசேஷப் பிரயாணம் (கி. பி. 47-48.) (அப். 13^{4}; 14^{26}). தேவாவியானவரால் ஏவப்பட்டு சவுலும் பர்னபாவும் மாற்கும் அந்தியோகியா பட்டணத்தைவிட்டு கப்பலேறி, பர்னபாவின் ஜனன தேசமாகிய சீப்புரு தீவுக்கு வந்து சாலமி என்னும் ஊரிலே கப்பல் விட்டிறங்கி பிரசங்கம்பண்ணி அத்தீவைக் கடந்து பாப்போ பட்டணத்தில் ரோம தேசாதிபதியாகிய செர்கியு பவுலையும் மாயவித்தைக்காரனாகிய எலிமாவையும் சந்தித்தார்கள்.

அதற்கப்புறம் கப்பலேறி சின்ன ஆசியாவிலுள்ள பம்பிலியா நாட்டுக்கு வந்து பெர்கே என்னும் துறையிலே இறங்கினார்கள். யோவான் மாற்கு அவ்விடத்தில் அவர்களைவிட்டுத் திரும்பி எருசலேமுக்குப் போனான். அவன் அவர்களை விட்ட காரணம் இன்னதென்பது சொல்லப்படவில்லை. உள் நாட்டுக்குப் போவது அதிக அபாயத்திற்கிடமாயிருந்தபடியால் அவன் போக பயந்திருக்கலாம். எப்படியோ அவன் தங்களைமாத்திரமல்ல சுவிசேஷ ஊழியத்தையும் விட்டுப் பின்வாங்கினதாக பவுலுக்குக் காணப்பட்டது. அப். 15^{38}. கலா. 4^{13}-ல் தாம் சரீர பலவீனத்தோடு முதலில் கலாத்தியருக்குப் பிரசங்கித்தார் என்கிறார். மூல பாஷையில் சரீர பலவீனத்தால் என்று அர்த்தங்கொள்ளுகிறதினால் பெர்கே பட்டணத்தில் அவருக்கு விஷஜுரம் (Malaria) கண்டபடியால் மலைநாட்டுக்குப் போகவேண்டியதாய் நேரிட்டதென்றும் இவ்விதமாய் அந்த நோயே அவ்விடத்தில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்குக் காரணமாயிற்றென்றும் சிலர் உத்தேசிக்கிறார்கள். அவர்கள் பெர்கே பட்டணத்தில் தாமதம்பண்ணாமல் உடனே மலைவழியாக நூறுமைல் தூரம் பிரயாணம் செய்து பிசிதியா நாட்டிலுள்ள முக்கியமான பட்டணமாகிய அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அங்கே சிறிதுகாலம் தங்கி யூதருக்கும் புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபின் யூதருடைய விரோதத்தினால் அவ்வூரை விட்டுவிடவேண்டியதாயிற்று.

‘கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.’ (அப். 18^{49}.)

அந்தியோகியாவை விட்டு எண்பது மைல் தூரத்திலிருந்த இக்கோனியா என்னும் ஊருக்கு வந்து, அங்கே அநேக நாள் தரித்து

அநேகரைச் சபையிலே சேர்த்துக்கொண்டார்கள். யூதர்கள் கலகம் செய்ததினால் அவ்விடத்தையும் விட்டு லீஸ்திராவுக்கு வந்தார்கள். அங்கே சப்பாணியாயிருந்த ஓர் மனுஷனை அவர்கள் சொஸ்தமாக்கின நிமித்தம், ஜனங்கள் அவர்களைத் தேவர்கள் என்று எண்ணி அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தார்கள். கொஞ்ச காலத்திற்குள்ளே அந்தியோகியா இக்கோனியா என்னும் ஊர்களினின்று வந்த யூதர்கள் செய்த உபாயத்தினால் அவர்கள் பவுலைப் பிடித்துக் கல்லெறிந்தார்கள். ஆகவே அப்பட்டணத்தை விட்டு தர்பைக்கு வந்து சில நாள் சென்றபின் திரும்பவும் தாங்கள் வந்த வழியாகப் போய்ச் சீஷரைத் திடப்படுத்தி, ஒவ்வொரு ஊரிலும் மூப்பரை ஏற்படுத்தி வைத்தார்கள். 2 தீமோ. 3[11]-ல் தாம் பட்ட பாடுகள் இவ்வளவென்று பவுல் சொல்லுகிறார். கடைசியாய் அவர்கள் பெர்கே அத்தாலியா என்னும் ஊர்களுக்கு வந்து கப்பலேறி தாங்கள் விட்டுப் போன சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்தார்கள். பவுலானவர் போன ஒவ்வொரு ஊரிலும் முதல்முதல் யூதர்களுக்கும் அப்புறம் புறஜாதியாருக்கும் அவர் பிரசங்கித்ததாகக் காண்கிறோம் (அப். 14[1]; 17[2] முதலானவை). கலா. 2[11]-ல் பேதுருவோடு செய்ததாகச் சொல்லப்படுகிற தர்க்கம் இக்காலத்தில் நடந்திருக்கலாம். அப்படியிருந்தால் பவுல் சொல்லியதை பேதுரு நன்குமதித்தார் என்று அப். 15[7]-ஐக்கொண்டு அறியலாம்.

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்நோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

பதின்மூன்றும் அதிகாரம்

நான் ஒன்று நினைக்க தேவன் ஒன்று நினைக்கிறார்

நான் ஸ்வாட்டோவுக்குத் திரும்பிப்போகாமல் நிங்போ நகரத்தில் அறுதியாய் நிலைபெற்று, அதை நடுமையமாக வைத்துக்கொண்டு அதைச் சூழச் சுவிசேஷ வேலை செய்ய என்னைத் தூண்டின

எல்லா தேவச்செயல்களையும் சொன்னால் கேட்கிறதற்கு இனிமையாயிருக்கும்.

ஷங்காய்க்கு வந்து பார்த்ததில் என் மருந்துகளும் ஆயுதங்களும் இருந்த வீடு வெந்து என் மருந்துகள் சமூலமும் என் ஆயுதங்கள் பெரும்பாலும் சேதமாயினவென்று தெரிந்து திடுக்கிட்டேன். இது எனக்குத் தாங்குதற்கரிய தீமையாய்த் தோன்றிற்று. அந்நேரத்தில் நான் தேவன்மேல் நம்பிக்கை யிழந்திருந்த யாக்கோபைப்போல 'என் மேலே இதெல்லாம் வருகிறதே' என்று சொன்னேன். 'தேவனைச் சிநேகிக்கிறவர்களுக்கு எல்லாம் நன்மைக்கு உதவுகிறது' என்பதை அவ்வேளையில் அநுபவிக்கப் புத்தி கெட்டுப்போயிற்று. சகல நிகழ்ச்சிகளும் தேவன் என்கிற மூதற்காரணத்திலிருந்தே உற்பத்தியாகிறதும், 'நாம் அவருக்குள்ளேயே பிழைத்து, அசைந்து, இருக்கிறதும்,' இவ்வாறு, தேவனே சகல சந்தர்ப்பங்களிலும் பெரிய சந்தர்ப்பமாயிருக்கிறதும் என் புத்தியில் அந்நேரம் வரவில்லை. அவரொழிந்த மற்றச் சிறு சிறு சந்தர்ப்பங்கள் யாவும் அவராலே வரவிடப்பட்டனவாகையால், அவை வெளிக்கு எப்படித் தோன்றினாலும் உள்ளுக்கு அன்பும் ஞானமும் நன்மையும் நிறைந்தவைதான் என்கிற அநுபவம் எனக்கு அப்போதிருந்ததில்லை. இதினால்தான் என் எண்ணம் குலைந்து எனக்கு வந்த சோதனை மட்டுக்கு மிஞ்சினதாய்த் தோன்றிற்று.

ஷங்காயிலே மருந்து வாங்குகிறதானால் கிராக்கியான விலை கொடுக்கவேண்டும். நிங்போவிலே பார்க்கர் என்கிற வயித்திய பண்டிதர் இருந்தார். அவர் என்னை அனுப்பின மிஷனைச் சேர்ந்தவர். அவரிடத்தில் அகப்படக்கூடிய மருந்துகளைக் கேட்டு வாங்கிவரலாமென்று கரைமார்க்கமாய் நிங்போவுக்குப் புறப்பட்டேன். ஷங்காயிலே எனக்கிருந்த பணத்தில் ஒரு பாகத்தை வைத்துவிட்டு, மற்றப்படி எனக்கு மீந்திருந்த சொத்துக்களை எடுத்துக்கொண்டு போகலானேன். அவற்றுள் முக்கியமானவை இவை:—என் கடிகாரம், சில சூத்திர ஆயுதங்கள், ஒரு கன்செர்ட்டினா, சீனப்பாஷை போதிக்கிற புத்தகங்கள்; இப்புத்தகங்களுக்கு அக்காலத்தில் ரொம்ப விலை.

என்னுடைய கரைமார்க்கம் மழைத்தாழ்வால் அவஸ்தைக்குள்ளாயிருந்தது. அக்காலம் முதுவேனிற்காலம். பெரிய வெட்டு வாய்க்காலில் (Grand Canal) தண்ணீர் மிக அடங்கிப்போயிற்று. ஏனென்றால், அதினிருகரையிலும் இருந்த நெல் வயல்களுக்குப் பாய்ச்சப்பட்டதும் தவிர, அகோர வெயிலினால் நீராவியாய்ப் பறந்தும் போயிற்று. என் பிரயாணம் கூடியவரையில் மிஷன் பிரயாணமாயிருக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு வேண்டுமளவு

கிறிஸ்தவ புத்தகங்களும் சிறு தாட்பிரதிகளும் எடுத்துக்கொண்டு போனேன். நான் போன நாடெங்கும் ஜனத்திரட்சியிருந்ததால், அவசரப்படாமல் மெதுவாய்ப் பதினன்கு நாள் வழி நடந்து பிரசங்கம் செய்து புத்தகங்கள் மாறினேன். இந்தப்படி செய்து பெரிய நகரமாகிய ஷி-மூன்-வன்னுக்கு வந்ததும் நான் கொண்டுபோன புத்தகங்களெல்லாம் ஆய்ப்போயின. ஆகவே, இனி வழியில் ஆடங்கம் செய்யாமல், ஹுயி-நிங் என்கிற நகர்மார்க்கமாய்த் தீவிரித்து நிங்போவுக்குப் போய்ச் சேரத் தீர்மானித்துக்கொண்டேன்.

ஆகஸ்ட்டு 4, 1856-ஹு.

ஷி-மூன்-வன் மட்டுந்தான் வாய்க்கால் மார்க்கம். அதுவரையில் நான் ஏறிவந்த படவுக்குக் கூலிகொடுத்து அனுப்பிவிட்டு, என் சாமான்களை எடுத்துவர கூங்-கன் நகரமட்டும் ஆள் அமர்த்திக்கொண்டு சூரியோதயத்துக்குமுன் புறப்பட்டேன். ஆட்களைக் கொண்டுவந்து சேர்க்க என் வேலைக்காரனை அவர்களுடன் விட்டு நான் தனியே இடைவழியிலிருந்த ஒரு பட்டணத்துக்கு வந்து அதின் வடக்குக் கெவுனிக்கு வெளியே அவர்கள் வருகைக்குக் காத்துக்கொண்டிருந்தேன். கூலியாட்கள் வழியில் அடிக்கொருதரம் நின்று களையாறி மெதுவாய் நடந்து வந்து சேர்ந்தார்கள். சேர்ந்தும், அப்புறம் போக ஏலாமல் சோர்ந்திருந்தார்கள். விசாரித்துப் பார்த்ததில் அவர்கள் இருவரும் அபின்புகைக்குப் பழக்கப்பட்டவர்களானதால், ஒரு பலமுள்ளவன் லட்சியமில்லாமல் மும்மடங்குதூரம் தூக்கிச் செல்லக்கூடியதை இருவரும் பாகித்துத் தூக்கிவந்தும் அவர்கள் வாஸ்தவமாகவே களைத்திருந்தார்கள் என்று அறிந்தேன்.

அவர்களுக்குச் சோறுபோட்டு, தேப்பானம் பருகுவித்து, ஒரு மணிநேரம் இளைப்பாற்றினபின் அவர்கள் இரகசியமாய் அபின் புகைத்து களை தெளிந்தவர்களானார்கள். அதைக்கண்டு சூரியன் கடுமையாய் காயத்துவக்குமுன் கூங்-கன்னுக்குப் போகப் புறப்படுங்கள் என்றேன். அதற்கு என் வேலைக்காரன் இணங்கவில்லை. ஏனென்றால், அவ்வூரில் அவனுக்கொரு சிநேகிதனிருந்தான். அவனிடம் அந்த நாளைப்போக்கி மறுகாலையில் புறப்படலாம் என்றான். அதற்கு நான் இடங்கொடாமல் இன்று இரவுக்குள் ஹுயி-நிங் நகருக்குப் போய்ச் சேரவேண்டும் என்றேன். அதுகேட்டு எல்லாரும் புறப்பட்டார்கள். நாங்கள் வடக்குக் கெவுனி வழியாய் உட்பிரவேசித்து, நகரில் மூன்றில் ஒரு பாகம் வந்துவிட்டோம். அப்பொழுது கூலியாட்கள் ஆயாசம் தீர நின்றுவிட்டார்கள். அதுவுந்தவிர கூங்-கன் வரை என் மூட்டைகளை எடுத்துப் போகத் தங்களால் இயலாது என்றும் சொன்னார்கள். கடைசியாய் தெற்கு கெவுனிமட்டும் அவைகளைச் சுமந்துவரச் சம்மதித்தார்கள். அங்கு வந்தபின் அவர்களுக்குக் கணக்குப்பிரகாரம் கூலியைக் கொடுத்து அனுப்பிவிடுவேன் என்றேன். என் வேலைக்காரன் அந்தக் கெவுனியில் வேறு கூலியாட்களை அமர்த்தி அவர்களுடன் கூங்-கன்னுக்கு வருவதாய் உறுதி சொன்னான்.

அதை நம்பி நான் முன்போலவே தனியே நடந்து, இன்னம் நாலே மைலுக்கு அப்பாலிருந்த கூங்-கன்னுக்கு வந்து என் ஆட்கள் வருகைக்குக் காத்திருந்தேன். மேலும் அவ்விடத்தில் ஹுயி-நிங்குக்குப் போகப் புதுக் கூலியாட்களையும் அமர்த்தி வைத்திருந்தேன். வெகு நேரம் காத்திருந்தும் ஆட்கள் வரவேயில்லை. என்னத்தினால் வரவில்லை என்று யோசித்துக்கொண்டிருக்கும்போதே பொழுதுபோய் விட்டது. அதைக்குறித்து மனதிலே கோபம் வந்தது. என் பாதங்கள் கொப்பளித்துப் புண்ணாகி வலித்திராவிட்டால் அவர்களைத் தேடித் திரும்பிப்போயிருப்பேன். ஒருவேளை என் வேலைக்காரன் தன் சிநேகிதன் வீட்டில் பொழுதெல்லாம் கழித்து இருட்டினதும் வருவானென்று நினைத்தேன். இருட்டி வெகுநேரமாகியும் வரவேயில்லை.

மனதிலே அமைதியில்லாமல் குழம்பி அவர்களை யாராகிலும் கண்டதுண்டா என்று விசாரிக்கத் துவக்கினேன். அப்படி விசாரித்துக்கொண்டிருக்கையில் ஒருவன் 'நீர் ஷி-மூன்-வன்னிலிருந்து வருகிறவரா?' என்று கேட்டான். நான் ஆமென்றேன். 'ஹுயி-நிங்குக்கா போகிறீர்?' 'அவ்விடத்துக்குத்தான்.' 'அப்படியானால் உம்முடைய தளவாடங்கள் உமக்கு முந்தியே போய்விட்டனவே; நான் ஒரு தேத்தண்ணீர்க் கடையில் உட்கார்ந்திருக்கையில் ஒரு கூலியாள் வந்து, அவசரமாய் ஒரு கோப்பை தேத்தண்ணீர் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டான்; அவன் ஒரு மூங்கிற் பெட்டியையும் ஆள் படுக்கும் படுக்கையையும் தூக்கிச் சென்றான்; அவைகள் நீர் ஷி-மூன்-வன்னில் விட்டு வந்ததாகச் சொல்லுகிற பெட்டியும் படுக்கையும்போலவே இருந்தன. அவைகளை ஹுயி-நிங்கில் இன்று இரவிற்குள் கொண்டுசேர்த்தால் ஒரு இருத்தல் எடைக்குப் பத்துக் காசு வீதம் கூலி கிடைக்கும்' என்றான். இதுகேட்டு, என் சாமான்கள் எனக்கு முந்தியே போய்விட்டன என்று நினைத்தேன்! நானோ மிகக் களைத்திருந்ததினாலும் பொழுதுபோய் அதிக இருட்டாயிருந்ததினாலும் அவர்களை உடனே தொடர்ந்துபோய்க் காண முடியாதிருந்தேன்.

ஆதலால், இராப்பொழுதுக்குத் தங்கியிருக்க ஒரு விடுதி தேடினேன்; விடுதி கிடைப்பதோ எளிதாயிருந்ததில்லை. ஆண்டவரு

டைய சகாயத்தை ஜெபத்தினால் தேடிக்கொண்டு இன்னம் எட்டி ஊருக்குள் போனேன். அங்கே எவனோ அன்னியன் வந்திருக்கிறான் என்கிற செய்தி பரவியிராது என்று நினைத்து அப்படிச் செய்தேன். அங்கு சென்றதும் ஒரு சத்திரத்தைத் தேடியடைந்து, இவ்வளவு இருட்டுக்குப்பின் நம்மை யார் கேள்விகேட்கப் போகிறார் என்று நினைத்து, இங்கே சாப்பாட்டுக்கு என்ன கிடைக்கும் என்று விசாரித்தேன். பழஞ்சோறும் விளக்கெண்ணெயில் வறுத்த பாம்புகளுந்தான் அகப்படும் என்று சொல்லப்பட்டது. அந்தப் பழஞ்சோறு வழக்கத்துக்கு மிஞ்சி நொந்துபோயிருந்தது. ஆயினும் இவை வேண்டாம் என்றால் நான் வேற்றுத் தேசத்தான் என்று நினைப்பானே என்று மனதிற் குறித்து கொஞ்சம் கொண்டுவரும்படி சொல்லி சாப்பிடப் பார்த்தும் முடியவில்லை.

அந்நேரத்தில் 'இங்கேயே இராத்தங்கிப்போக எனக்கு இடமிருக்குமா' என்று சத்திரக்காரனைக் கேட்டேன்.

இடம் இருக்கும் என்று சொல்லிக்கொண்டே போய்த் தன் பதிவுப் புத்தகத்தை எடுத்துவந்தான். வந்து:—

'தேசத்திலே கலாதிகள் உண்டாயிருக்கிற இந்தக் காலத்தில் எங்கள் சத்திரங்களில் வந்துபோகிறவர்களுடைய பேரைப் பதிவு செய்யவேண்டுமென்கிற சர்க்கார் உத்தரவிருக்கிறது. உம்முடைய மேன்மையான குடும்பப் பெயர் தெரிவிப்பீரா?' என்றான்.

அதற்கு 'என் உதவாத குடும்பப் பெயர் தை' என்றேன்.

'உம்முடைய கனம்பெற்ற சிறப்புப் பெயர்?'

'என் தாழ்வான இரண்டாம் பெயர் யா-கோ' (ஜேம்ஸ்). 'என்ன! வழக்கமில்லாத பெயர்! அதை இதற்குமுன் நான் கேள்விப்பட்டதேயில்லை. அதற்கு எழுத்து எப்படிக் கூட்டுவீர்?'

அதைச் சொல்லி 'அப்பெயர் எங்கள் நாட்டில் ரொம்ப வழக்கமான பெயர்' என்றேன். 'எங்கிருந்து எங்கே போகிறீர்? தயவு செய்து சொல்லுவீரா?'

'ஷங்காயிலிருந்து ஹஸ்-சேஷுமார்க்கமாய் நிங்-போவுக்குப் போகிறேன்.'

'உம்முடைய மேன்மையான உத்தியோகமென்ன?'

'நோயாளிகளைச் சுகப்படுத்துவது.'

'அப்படியா? ஆகவே நீர் ஒரு வயித்தியர்' என்று சொல்லிக்கொண்டே புத்தகத்தை மூடினான். அதினால் எனக்கு மனப்பயம் தீர்ந்தது. ஆயினும் அவனுடைய மனைவி பேச்சுத் தொடுத்தாள்.

அவள்: 'நீர் வயித்தியரா? அது எனக்குச் சந்தோஷம். எனக்கு ஒரு மகளிருக்கிறாள். அவளுக்குக் குஷ்டரோகவாதை யிருக்கிறது.

அதைச் சொஸ்தப்படுத்தினால் உமக்குச் சாப்பாடும் இராப்படுக்கையும் காசில்லாமல் தருவேன்' என்றாள்.

'அதிருக்கட்டும்; இரண்டுக்கும் காசு எவ்வளவாகும்' என்க, அவள் 'ஒன்றரையணா' என்னவே, என் மனதிற்குள்ளே சிரிப்பு உண்டாயிற்று. 'அம்மா உன் மகளுக்கு எவ்விதத்திலும் பரிகாரம் செய்ய என்னாலாகாது, அது வைத்தியவித்தைக்குள் அகப்பட்ட வியாதியல்ல, அதுவுந்தவிர நான் மருந்துப் பெட்டியும் எடுத்துவரவில்லை' எனச் சொன்னேன். அவளோ பென்னும் காகிதமும் கொணர்ந்து 'ஏதாகிலும் மருந்து எழுதித் தாருமய்யா, அதினால் குணமில்லாவிட்டாலும் இருக்கட்டும்' என்றாள். அதுவும் செய்யச் சம்மதிக்காமல் எனக்குப் படுக்கை எங்கே காட்டு, அம்மா என்றேன். தரையடுத்த அறையிலே இரண்டு மணைகள்மேல் சில பலகைகள் அடுக்கியிருந்ததைக் காண்பித்தாள். அதிலே துப்பட்டி விரிக்கவுமில்லை, தலைக்கு உயரமுமில்லை. கொசுகுமூடி கேட்க வாயெழவில்லை. அதுவுந்தவிர இன்னம் பத்துப் பதினொருவர் அந்த அறையிலேயே உறங்கிக்கொண்டிருந்தார்கள். சட்டையைக் கழற்றிவைத்துத் தூக்கங்கொண்டால் திருட்டுப்போகும் என்றஞ்சி உடுத்தபடிக்கே, குடையையும் சப்பாத்தையும் தலைக்கு உயரமாக வைத்துக்கொண்டு உறங்கினேன். நடு இரவு வந்ததும் இறுக்கம் போய்விட்டது, சுகமாய் நித்திரை வந்தது.

God's Grace

By the Rev. H. A. Popley

கடவுள் திருவருள்

(தொடர்ச்சி)

III. கடவுள் திருவருளே சிறந்த செல்வமாம்.

கடவுளின் திருவருள் இத்தனை நன்மைகள் எல்லாம் நமக்குச் செய்ததால் அதுவே மனிதர்க்குப் பெருஞ்செல்வம் என்று யாவரும் அறியவேண்டும். இத்திருவருளைப் பார்க்கிலும் உயர்ந்த பொருள் யாதொன்றும் இல்லை என்பது அறிவாளிகளுக்கும் பக்தர்களுக்கும் தெளிவு.

திருவருட்பயன் என்னும் நூல்

'அருளில் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளில் தலையிலது போல' என்று (i)

வெளியிடுகிறது.

(i) வேண்டும் பொருளில் தலையிலது போல — ஒருவன் விரும்பிய பொருளைப்பார்க்கிலும் உயர்ந்த பொருள் இல்லாதது போல, அருளில் பெரிய தகிலத்து (இலது)—அருளைப்பார்க்கிலும் உலகத்தில் மேலானது ஒன்றும் இல்லை என்பது.

‘எல்லாம் இருந்தாலும் ஈசர் அருளில்லையேல்’
இல்லாத தன்மையென்றே எண்ணிப் பணியாயே’ என்றும் (ii)

அந்தப் பாட்டில் சொல்லலுற்றது.

திருமங்கையாழ்வார் இவ்வருள் செல்வத்தைக்குறித்து

‘கதியேலில்லை நின் அருளல்ல தெனக்கு
நிதியே திருநீர் மலைநித்திலத் தொத்தே’ என்று (iii)

பாடினார்.

நந்தனார் சரித்திரத்தில்,

கடவுள் அருளுடையவன் உலகத்தில் பெரியவன் என்று விளங்கத்தக்கதாக யாருக்கும் தெரிந்த பாட்டொன்றுண்டு.

‘ஆருக்குப் பொன்னம்பலம் கிருபை இருக்குதோ
அவனே பெரியவனும்’ என்பதே. (iv)

இக்கருத்தை விளக்க மாணிக்கவாசகர் ஓர் நேர்த்தியான பாட்டைப் பாடினார்.

‘யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச் சிவனே எம்பெருமான் எம்
மானே உன்னருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே’ என்பதே. (v)

இதுவே சிறப்புப் பொருள் என்றும் இதைப் பெறுவதே பேரின்பம் என்றும் அறிக.

(ii) தெளிவு.

(iii) உமது திருவருள் அல்லாது எனக்குக் கதி இல்லை. அது எனக்குப் பொக்கிஷமும் பரிசுத்த மலையின் முத்தைப்போன்றதுமாய் இருக்கிறது என்பது.

(iv) தெளிவு.

(v) முதலாம் அடிக்கு—நான் எந்தப் பிறப்பையும் அஞ்சாமலும் இறப்பைப்பற்றிக் கவனமில்லாமலும்,

இரண்டாமடிக்கு—வானத்தைப் பெறக்கூடுமாகில் அதை வேண்டாமலும், அரசுபெற விரும்பாமலுமிருந்து, மற்று—சிவனே, எம்பெருமான், எம்மானே, உன்னருள் பெறுநாள் என்றென்றே, வருந்துவனே—வருந்தி யாசைப்படுகிறேன் என்பது.

C. L. S. PRESS, MADRAS—1915

No. 108 மே 1915

OFFICE OF THE REGISTRAR O... MA..RAS.

வேதியர் விளக்கு

The Origin of the Four Gospels

[*From Lectures on the Gospels by Dr. Findlay.*]

I. **At the beginning of the Church in early Apostolic times there was no occasion for the publishing of a written Gospel.**

Probably many notes were taken privately by the hearers of our Lord and of the Apostles. Writing was as common in Palestine as it is in India to-day. For example, Matthew as the head of the Customs at Capernaum must have been able to write and take notes.

1. *While the Apostles were alive no book was called for.*

The words of living men who had been eye-witnesses were more authoritative than any such writings could have been. No one would care to read what he could hear from living lips. The ‘spoken word’ is mentioned in Heb. ii. 3 as being *all important.*

The early Church being small, probably all the members had heard and seen one or more of these eye-witnesses and would therefore not need a written record. Moreover Christ sent His discriples to *preach* the Gospel not to write it necessarily, and most of the Christians for the first forty years of the history of the Church heard this preaching.

When we turn to the Epistles most of which were probably written earlier than our Gospels, it is clear that they were written as a substitute for personal intercourse. Paul could not visit all the Churches which were springing up. Peter could not preach for ever. Therefore the written message was required.

The same necessity led to the composition of the Four Gospels. The Gospels were written because of the need of the time. The testimony of the first preachers, was replaced by a written record, more permanent and more wide-spread. The disciples may easily have begun to write down our Lord's words to aid memory or to communicate to friends. It is well to notice that the agreements of the Gospels are much closer in relating our Lord's *words* than in narrating *events.*

Another reason why there was not an earlier publication of the Gospels was:—

2. *The Church already had the O. T. Canon.*

The O. T. was used in the Church. It was not till the second century that the Church realized that it possessed a second new Scripture, side by side with the Old.

3. *A third reason may be that the Apostles, except Paul, were not literary men, and they were not likely to write Books except on an imperative call.*

Theirs was not a reading age like ours. Under their more simple conditions of life, knowledge was spread in a way other than by books.

Oral teaching and tradition had the most important place. In Jewish education oral teaching was carried to great perfection until the memory was like a book. The only way in those days to spread new facts was to go everywhere preaching them and for this work men, of Jewish training were eminently fitted.

II. By the end of the first generation after our Lord's departure the number of first witnesses had gradually diminished. Peter the leader of the twelve and Paul the apostle had gone. Soon all the sacred band would have departed.

Therefore as Oral Teaching at second or third hand cannot be so safe and so free from mistake as when given first hand the need arose for some fixed record to be put in writing.

The preface to Luke's Gospel (Luke i. 1–4) shows the *need* of a written Gospel and the *purpose* for which it was written.

(1) Many attempts had been made by unqualified persons to form a written Gospel.

(2) They were so faulty and mistaken that Luke wrote his account in order that there might be a true and fixed record.

(3) We have proof that Luke's is a real and true record in the fact that whilst his Gospel has survived all the others he refers to have disappeared.

III. The date of the First Three Gospels.

From various sources we gather that the first three Gospels were written early in the Christian era—say somewhere between A.D. 60 and A.D. 80.

The most important event for fixing this date is the fall of Jerusalem A.D. 70.

This event profoundly influenced the early Church. The prophecies of Christ concerning it figure largely in all these three Gospels. The prominence given to this subject in all the three Gospels leads to the conclusion that they were written when the Fall of Jerusalem was occupying men's minds. There is no statement that the event had taken place. The narratives of Matthew and Mark seem to look upon the event as about to happen very soon.

See Mark xiii. 14. Matthew xxiv. 15.

IV. The date of Saint John's Gospel.

The Fourth Gospel differs strikingly from the other three. In all probability it was written later, and along with John's Epistles is amongst the latest of the N. T. books. The language of this Gospel in its reference to Jewish affairs implies that it was written subsequent to the Fall of Jerusalem. For this and other reasons it is referred to the later period of the first century—say A.D. 96. This allows about twenty years between this Gospel and the other three.

Their work had answered the purpose for which they had written, namely to preserve the substance of the Gospel as held by the first witnesses. John's Gospel meets the needs of the Church at a later age.

False teaching had become widely prevalent in the region where John had taken up his residence. In the midst of the controversy against heresy, the Ephesian elders requested John to write, in order to re-assure the Church and to put a stop to the spreading evil.

See John xx. 31 I John ii. 18

(*To be continued*)

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டேய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

பதின்மூன்றும் அதிகாரம்

(தொடர்ச்சி)

ஆகஸ்ட்டுமீ 5உ

விடியலில் எழுந்தபோது எனக்குச் சரியானபடி ஆயாசம் தீர்ந்திருந்ததுமில்லை, என் உடம்பில் சுகம் இருந்ததுமில்லை. காலைச் சாப்பாட்டுக்கு வெகுநேரம் காத்திருக்க நேரிட்டது. தவிர, என் கையில் ஒரே ஒரு டாலர் மாத்திரம் இருந்தது, அதற்கு இரண்டொரு சொட்டை விழுந்திருந்ததினால் சில்லறை மாற்றுவதில் இன்னம் அதிகப் பொழுது போய்விட்டது. சில்லறை கொடுத்தவன் இந்தப் பழுதினிமித்தம் முந்நூறு காசுக்கதிகமாய்ப் பிடித்துக்கொண்டான். எனக்கது எப்பேர்ப்பட்ட நஷ்டம் என்பது நினைத்தால் தெரியும்.

அதன்பின் அந்த ஊரெல்லாம் சுற்றி என் வேலைக்காரனையும் ஆட்களையும் தேடினேன். ஒருவேளை எனக்குச் சற்று பிந்தியாவது இன்று காலையிலாவது அவர்கள் வந்திருப்பார்களென்று எண்ணி அப்படிச் செய்தேன். அந்த ஊர் பெரியது, நீட்டம் அதிகம் உள்ளது. வீடுகள் அடர்த்தியாயில்லாமல் சிதறியுள்ளது. அதின் ஒரு அந்தத்திலிருந்து மறு அந்தத்துக்கு இரண்டுமைல் தூரம். இப்படித் தேடியலைந்ததிலும் நெடுநேரம் கழிந்தது. ஆகிலும், அவர்களைக் காணவுமில்லை, அவர்களைப்பற்றிச் செய்தி தெரியவுமில்லை. காலெல்லாம்

புண்ணாயிருந்தது. களைப்பும் அதிகம். மதியம் வெயில் தீக்ஷண்ணியமாக இருந்தது. ஆகிலும் அந்நேரத்திலே ஹுயி-நிங்குக்குப் புறப்பட்டேன். அதற்கு தூரம் எட்டுமைல்தான். ஆகிலும், அது நடக்க எனக்கு வெகுநேரம் பிடித்தது. சரியாய் நடுத்தூரத்தில் ஒரு கிராமம்; அதிலே ஆயாசந் தீர்வதற்கு இடமும் பருகத் தேப்பானமும் கிடைத்தது. புறப்படுகிற சமயத்தில் ஒரு பாட்டம் நல்ல மழை பெய்தது. இதினால் தாமதிக்க நேர்ந்ததினால், அந்நேரப் பொழுதில், சுவிசேஷத்தின் சில பாகங்களைக் கூடியிருந்தவர்களுக்கு விளக்கி உபதேசித்தேன்.

நான் ஹுயி-நிங்குக்கு வந்து, வடக்குப் பேட்டையில் விசாரிக்கும் போது பொழுது அதிகமாய்ப் போய்விட்டது. செய்தியும் ஒன்றும் அகப்படவில்லை. கிழக்குக் கெவுனியண்டை கடற்கரைக்குப் போகிற பெரும் படவுகள் வாத்துப்போக்குச் செய்வதால் அங்கே விசாரித்தால் செய்தி ஏதாகிலும் கிடைக்கும் என்று கேள்விப்பட்டு அங்கேயும் போய் சின்னக் கிழக்குக் கெவுனியிலே விசாரித்தேன். பயன்படவில்லை. மிகச் சோர்ந்து, ஒரு தேக்கடையில் ஆயாசமாய் உட்கார்ந்தேன். அப்பொழுது, அங்குள்ள மந்தாரீனுடைய ஆபீசுகள் ஒன்றிலிருந்து ஆட்கள் வந்து, நான் யார், எங்கிருந்து வருகிறேன் என இப்படிப் பல கேள்வி கேட்டார்கள். நான் என் ஆட்களைத் தேடிக் கொண்டு அலைவதை யறிந்து, ஒருவன்: 'நீர் சொல்லுகிற மாதிரி மூங்கிற்பெட்டியும் படுக்கையும் தூக்கிக்கொண்டு அரைமணி நேரத்திற்குமுன் யாரோ ஒருவன் இந்த வழியாய்த்தான் போனான். அவன் பெரிய கிழக்கு வாசலுக்காவது தெற்கு வாசலுக்காவது போயிருப்பான், அங்கே விசாரித்தால் தெரியும்' என்றான். என்னுடன் வந்து தேடினால், நீ செய்கிற உதவிக்குக் கூலி தருவேன் என்று சொல்லியும் அவன் மறுத்துவிட்டான். இன்னொருவன் வரச் சம்மதித்தான். அவனும் நானும் அந்த இரண்டு கெவுனிகளின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் சுறுசுறுப்பாய்த் தேடி விசாரித்தும் எல்லாம் வியர்த்தமாய் முடிந்தது. அலுத்துப்போனபின், ஒரு ஆளை அமர்த்தி ஒரு இடமும் தப்பாமல் தேடிப் பார்த்துச் செய்தி சொன்னால் தகுந்த வெகுமானம் செய்வேன் என்று அனுப்பிவிட்டு, கொஞ்சம் பகற் சாப்பாடு வாங்கி உண்டபின், என்னைச் சூழவந்த பெருங் கூட்டமான ஜனத்திற்கு உபதேசம் சொன்னேன்.

அவன் போன காரியம் சித்திக்காமல் திரும்பி வந்தபோது: 'இப்போது மிகக் களைத்திருக்கிறேன்; இராத்தங்க விடுதி அமர்த்தித் தந்தால், நீ எனக்காகப் படுகிற சிரமத்துக்கு உனக்குக் கூலி கொடுப்பேன்' என்றேன். அதற்கவன் சம்மதிக்க, இருவரும் புறப்பட்டு

இடம் தேடினோம். முதலில் அகப்பட்ட இரண்டொரு இடங்களில் என்னை ஏற்றுக்கொள்ள ஒருவருக்கும் சம்மதியில்லை. துவக்கத்தில் அவர்களுக்குப் பிரியமிருந்தும், எங்களோடு விடாமல் தொடர்ந்து வந்த ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தனைக் கண்டதும் பயந்து, பிரியமற்றுப்போனார்கள். மூன்றாமிடத்திலே வந்தபோது மந்தாரீனுடைய ஆள் போய்விட்டபடியால் எங்களுக்கு இடம் கொடுத்து கொஞ்சம் தேப்பானமும் தந்தார்கள். எனக்காக அவ்வளவு சிரமப்பட்ட ஆளுக்குக் கூலி கொடுத்து அனுப்பிவிட்டேன்.

அவன் வெளிப்பட்டபின் சில சர்க்கார் ஆட்கள் உள்ளே வந்தார்கள். சீக்கிரமே அவர்கள் போய்விட்டார்கள். ஆயினும், அவர்கள் வந்ததினால் விளைந்த பலன் சத்திரத்தான் என்னை விடுதி கொடாமல் வெளியே போகச் சொன்னதுதான். ஒரு வாலிபன் அதைப் பார்த்து அப்பேர்ப்பட்ட இரக்கமற்ற செய்கையைக்குறித்து அவர்களைக் கடிந்துகொண்டு: 'பரவாயில்லை, என்னுடன் வாரும்; சரியான விடுதி அகப்படாவிட்டால், எங்கள் வீட்டில் வந்து தூங்கும்' என்றான். அவனுடன் போனபோது அவன் வீட்டிலுள்ளவர்கள் எனக்கு இடமில்லை என்றார்கள். உடம்பு களைத்து கால் கடுத்து உளைக்கத் துவக்கிற்று. கால் புண்ணாயிருந்ததால் நிற்கக்கூடாதிருந்தது. அப்படியிருந்தும், இருக்க இடத்துக்குத் தேடி யலையலாயிற்று. கடைசியாய் ஒரு இடம் அகப்பட்டது. அதிலிருக்கலாமென்று நினைக்கையில், ஒரு சிறு கூட்டம் வாசலுக்கெதிரில் கூடினதினால், வீட்டுக்காரன் என்னைப் பார்த்து ஜனங் கலையுமட்டும் எங்கேனும் தேப்பானக் கடையில் இரு, மற்றப்படி இங்கே உனக்கு விடுதி கொடுக்க ஏலாது என்றான். வேறு செய்வதற்கில்லாமல் புறப்பட்டேன். என்னுடன் வந்த வாலிபனும் கூடவே தொடர்ந்தான். பாதி இரவளவும் தரித்திருந்து, விடுதி பேசின இடத்திற்குப் புறப்பட்டோம். எனக்கு வழிகாட்டி வந்த அந்த வாலிபனோ அந்த விடுதிக்கு என்னைக் கொண்டுபோகாமல் வேறொரு இடத்துக்கு அழைத்துப்போய், அறுதியாய் இரவு ஒருமணிக்கும் இரண்டுமணிக்கும் இடையில் எப்படியாகிலும் போ என்று என்னைத் தனித்தொழித்து நீங்கினான்.

அந்நேரம் எனக்கெதிரில் ஒரு கோவில் சந்நிதி இருந்தது. அது சாத்திப் பூட்டியிருந்ததினால் உள்ளே போக ஏலாமல் அதின் முகப்பிலிருந்த கருங்கல் படியில் உறங்குவதற்குப் படுத்தேன். என் கையிருப்பிலிருந்த பணத்தை தலைக்குயரமாக வைத்துக்கொண்டு, அப்போதிருந்த குளிரையும் லட்சியம் செய்யாமல், உறக்கங்கொண்டதும் கொள்ளாததுமாயிருக்கையில், யாரோ ஒருவன் அரவங்காட்டாமல் வரப் பார்த்தேன். கிட்ட வந்ததும், அவன் சீனாவில் மிகுந்தத்

திரிகிற பிச்சைக்காரருள் ஒருவன் என்று அறிந்தேன். என் பணத்தைத் திருடிப்போக வந்தான் என்று சொல்லவேண்டுமோ? நான் அசையாமல் அவன் என்ன செய்கிறான் என்று கவனித்துக்கொண்டிருந்தேன். அதுவுந்தவிர, என் பரம பிதாவை நோக்கி இந்த ஆபத்தில் என்னைக் காக்கும்படிக்கும் வேண்டினேன். அவன் நான் தூங்கிவிட்டேனா இல்லையா என்று சற்று நிதானித்து, கலியாமல் பணமுண்டா என்று சோதிக்க, என் உடையைத் தடவிப் பார்த்தான். என் கண்கள் விழித்து அவனையே பார்த்த பார்வையாய் இருந்தது; இருட்டில் அவனுக்குத் தெரியவில்லை. நான் தூங்காமல் விழித்தே இருக்கிறேன் என்று அவனுக்குக் காட்ட மெதுவான அமர்ந்த சத்தமாய்: 'என்ன வேண்டும்?' என்று கேட்டேன். அவன் ஒன்றுஞ் சொல்லாமல் போய்விட்டான்.

அவன் கண்ணுக்கெட்டாமல் போகுமட்டும் சும்மா இருந்து, இருந்த பணத்தில் பாக்கெட்டில் போகக்கூடியதை அதற்குள் போட்டு, மீதியை என் சட்டைக்கையில் இட்டுப் பத்திரம்பண்ணினேன். தலைக்குயரமாய் சுவருக்கு வெளியே நீண்டு வந்திருந்த கல்லை அணைத்துக்கொண்டேன். இனி அச்சமில்லை என்று பாதி தூங்கினதும் தூங்காததுமாயிருக்கையில் யாரோ இருவர் சமீபித்து வந்த ஒலியால் நித்திரை தெளிந்தேன். என் நரம்புகளெல்லாம் நொந்து மெலிந்திருந்ததினால் சிறு தொனியும் என்னை விழிக்கப் பண்ணிற்று. இப்போதும் முன்போலவே எனக்கு ஆதாரவாகிய தேவனிடத்திலேயே ஒத்தாசையைத் தேடிக்கொண்டு அசையாமல் படுத்திருந்தேன். ஒருவன் கிட்டிவந்து என் தலைமாட்டில் பணமிருக்கிறதாவென்று சோதித்தான். நான் மறுபடியும் குரலெழுப்பி இங்கே என்ன செய்கிறீர்கள் என்று கேட்க, அவர்கள் என் கால்மாட்டில் உட்கார்ந்து உன்னைப்போலவே நாங்களும் இவ்விடத்தில் இராப்பொழுது போக்க நினைக்கிறோம் என்றார்கள். அப்படியானால் நல்லது! நமக்கு இவ்விடத்தில் போதுமான இடம் இருக்கிறதே, எனக்கு இந்த இடத்தைவிட்டு நீங்கள் எதிர்ப்பக்கத்தில் போய் இருக்கலாகாதா என்று நான் சொல்ல, அவர்கள் என் கால்மாட்டை விட்டு அசையமாட்டோம் என்றார்கள். அதன்பிறகு, நான் எழுந்து முதுகு சுவரில் சார உட்கார்ந்தேன்.

அவர்கள்: 'படுத்து உறங்கையா. உறங்காவிட்டால் நாளை நடக்க ஏலாதே. ஒன்றுக்கும் அஞ்சாதே. யாரும் உன்னைச் சேதம் செய்யாமல் நாங்கள் உன்னைப் பாதுகாப்போம்' என்றார்கள். அதற்கு: 'நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என்னைக் காக்கவேண்டுவதில்லை. நான் சீனன் அல்ல. உங்களுடைய உதவியற்ற விக்கிரகங்

களை நான் வணங்குகிறதுமில்லை. நான் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிறவன். அவர் எனக்குப் பிதா. அவரில் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன். நீங்கள் ஆர் என்றும் உங்கள் நினைவு என்னவென்றும் எனக்குத் தெரியும். நான் தூங்காமல் உங்கள் மேலேயே கண்ணுயிருப்பேன்' என்றேன்.

இதுகேட்டு ஒருவன் போய் மூன்றுமொருவனை அழைத்து வந்தான். அதைப் பார்த்து எனக்குப் பயம் உண்டானதால் எனக்கு ஒத்தாசை செய்ய தேவனைச் சார்ந்துகொண்டேன். இரண்டொரு தரம் அவர்களில் ஒருவன் எழுந்துவந்து என்னை சோதித்தான். அப்போது 'வீண் பிரயாசைப்படாதே, நான் உறங்கவில்லை' என்றேன். வேளாவேளைகளில் நித்திரை மயக்கத்தால் என் தலை சாயும்போதெல்லாம் அவர்களில் ஒருவன் உடனே எழுந்திருப்பான். அது கண்டதும் நான் உசாராகி ஏதாகிலும் வாய்விட்டுச் சொல்லுவேன். இராப்போது வெகு தாமதமாய்ப் போகிறதுபோல் தோன்றினதால் எனக்கு மிகுந்த தோய்வு உண்டாயிற்று. தூக்கம் வராமல் தடுத்துக்கொள்ளவும் என் மனதுக்கு ஆறுதலாகவும் அநேக ஞானப்பாட்டுகளைப் பாடினேன். மனப்பாடம் பண்ணியிருந்த திருவசனங்களை வாய்விட்டுச் சொன்னேன். இங்கிலீஷில் உரத்த சத்தமாய் ஜெபம பண்ணினேன். இதெல்லாம் என்னண்டையிருந்த அந்த இரவலர்க்குக் காதுக்கு நாராசமாயிருந்தது. என் வாயை ஓயப்பண்ண ஏது வேண்டுமானாலும் கொடுத்திருப்பார்கள். இதன் பிறகு அவர்கள் எனக்குத் தொந்தரை செய்யாமலிருந்து விடிகிறதற்கு முந்தியே போய்விட்டார்கள். நானும் சிறிது கண்ணயர்ந்தேன்.

(இன்னும் வரும்.)

A Model for Preachers

By the Rev. A. Paramanandam

பிரசங்கிகளுக்கு உத்தம முன்மாதிரி

கீர்த்திப்பிரதாபமான குருமார் தாங்கள் போதிக்கும் சத்தியத்தை விவரிக்கும் விதமே விசேஷம் என்று நினைப்பதுண்டு. போதனை செய்யும்விதம் மிகவும் முக்கியமானது. அது சத்தியத்தைத் துலக்கிக் காட்டுவதற்கு மிக்க உதவியாக இருக்கிறது. கெட்டிக்கார உபாத்திமாரைக்குறித்துச் சம்பாஷிக்கும்போது, 'அவர் சித்தியடைகிறதற்குக் காரணம் அவர் விஷயத்தை விவரிக்கிறவிதம் அவ்வளவு

தெளிவாயிருக்கிறதுதான்' என்று பேசிக்கொள்ளுகிறோம். அதுபோல பிரசித்திபெற்ற குருவாகிய இயேசுவானவர் போதித்த விதத்தை ஆராய்ந்து அறிவது பிரசங்கிகளுக்கு நலம் என்று நம்ப வேண்டும்.

இயேசு ஒரு சபையை நாட்டி, பிரசங்கத் தொழிலை ஓர் ஏற்பாடாக நியமித்து அதை நடத்தும்படி ஆட்களையும் திட்டம்பண்ணி, தாமே பிரசங்கி ஆகாமலிருந்திருக்கலாம். ஆனால் பாவிகளைத் தேடி இரட்சிக்க தயவும் அன்பும் நிறைந்த அவருக்கு அப்படியிருப்பது தகுதியாகக் காணப்படவில்லை. 'நான் பிரசங்கிக்க வந்தேன்' என்று தம்மைக்குறித்துச் சொன்னதுமல்லாமல், தாமே அந்த பிரசங்கத் தொழிலை நடத்தி, தமது தாசர்களாகிய பிரசங்கிகள் யாவருக்கும் அதை உத்தம மாதிரியாக வைத்துப்போயிருக்கிறார்.

இதரமார்க்க குருக்கள் தங்கள் உபதேசத்தையும் கொள்கைகளையும் போதகங்களையும் ஏட்டில் எழுதி புஸ்தக ரூபமாய் தமது சிஷர்கள் அனுசரித்துவரும்படி கொடுத்ததுபோல், அவர் ஒரு புஸ்தகத்தையும் நமக்கு எழுதிக்கொடாமல், அவரது போதனைகளையெல்லாம் வாய்மொழியாகவே தந்திருக்கிறார். தாம் போதித்த போதனைகளை ஜனங்கள் மறந்துபோவார்கள் என்று அவர் நினைக்கவில்லை. கலிலேயா நாட்டிலுள்ள அக்காலத்து ஜனங்களின் ஞாபகத்தில் எழுதினது போதும் என்று நினைத்திருக்கலாம். அதினால்தான் 'வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை' (மத். 24[35]) என்றார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவருடைய போதனைகளைக் கவனித்துப் பார்க்கையில், மனிதர்களாகிய நாம் சில விஷயங்களில் அவருடைய மாதிரிப்படி செய்யக்கூடாதவர்களாய் இருக்கிறோம். அவரில் விளங்குகிற தெய்வீக மகத்துவங்களைக் கண்டு பிரமித்து அவரைப் போற்றிப் பணிந்துகொள்ளவேண்டுமேயொழிய அப்படிப் பிரசங்கிக்க நம்மால் முடியாது. திருஷ்டாந்தமாக: அவர் அதிகாரத்தோடே போதித்தார். மனுக்குலத்தை மீட்கும்படியாக அடிமைக்கோலம் எடுத்திருந்தாலும் அவர் அதிகாரமுள்ளவராயிருந்தார். 'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்பதுபோல அவருடைய அதிகாரம் அவருக்குச் சுதாவாயுள்ளது. அப்போஸ்தலருக்கும், மற்ற குருமாருக்கும், பிரசங்கிகளுக்கும் இருக்கிற அதிகாரம் அவரால் அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதேயொழிய சுதாவாய் அவர்களுக்கு உரியதல்ல. பூர்வ அப்போஸ்தலரும் மற்றவர்களும் தேவாவியினால் ஏவப்பட்டு போதித்தாலும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே மாத்திரம் போதித்தார்கள். இயேசு தமது தெய்வீக வல்

லமையால் அற்புதங்களைச் செய்து அதிகாரத்தோடு பிசாசுகளைத் துரத்திப் போதித்துக்கொண்டுவந்தார். அதைக்கண்டு பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்து: 'இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?' என்று கேட்டார்கள் (மத். 21[23]). ஆம், இந்த அதிகாரம் அவருக்குச் சுதாவாயுள்ளது. இன்னும் பார்ப்போமானால் மத். 5[21-48]-ல் கொலை, விபசாரம், தள்ளுதற்சீட்டால் மனைவியை விலக்கல், பொய் ஆணையிடுதல். அடிக்கு அடிகொடுத்தல், சத்துருவைப் பகைத்தல் முதலான விஷயங்களின்பேரில் பூர்வத்தாருக்குச் சொல்லியிருக்கிறவைகளைத் தமது சொந்த அதிகாரத்தினால் விரிவாக்குகிறார்; வேறுவிதமாகச் சொல்லவேண்டுமானால், 'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்', இன்னின்ன விதமாய்ச் செய்யுங்கள் என்று அந்த நியாயப்பிரமாணங்களை விஸ்தரிக்கிறார். அவருடைய தெய்வீக சம்பந்தத்தில் நாம் பின்பற்றக்கூடாததாயிருந்தாலும், நாம் பின்பற்றக்கூடிய வேறே அநேக காரியங்களுண்டு. அவைகளில் பிரசங்க விஷயமே பிரதானமானது. இதில் பிரசங்கிகளுக்கு விசேஷித்த முன்மாதிரி காட்டியிருக்கிறார்.

1. அவருடைய பிரசங்கங்கள் போதனை நிறைந்தவைகளாயிருந்தன. 'அவர் ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார்' என்று வாசிக்கிறோம். ஆம் அவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர். தமது பிதாவின் காரியத்தை கரிசனையோடு செய்துவந்தார். தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டு எஜமானைக்குறித்து அவர் சொன்ன உவமைக்கு அவரே திருஷ்டாந்தம். அவர் பழைய சத்தியங்களை புதிய ரூபமாயும், புதிய சத்தியங்களை பழைய நியமங்களால் உவமானித்தும் விவரித்துப் போதித்துவந்தார். இந்தக் காரியத்தில் ஒவ்வொரு பிரசங்கியும் பரமபோதகனைப் பின்பற்றுவானாக. பிரசங்கி போதிக்கும் பொருள் அவன் மனதிலும் இருதயத்திலும் பதிந்ததாய் இருக்கவேண்டும். ஒருவன் தான் உணர்ந்து அறியாததை மற்றவர்களுக்கு எப்படிப் போதிக்கக்கூடும்? ஆதலால் பிரசங்கி மற்றவர்களுக்குப் போதிப்பதில் ஜாக்கிரதையும் ஊக்கமுமாயிருக்கவேண்டும்.

2. இயேசு வேதவாக்கியங்களைக்கொண்டு போதித்தார். அடிக்கடி பழைய ஏற்பாட்டிலுள்ள வாக்கியங்களை எடுத்துக் கூறி, அவைகளை வியாக்கியானம்பண்ணி விஸ்தரிப்பதுமல்லாமல், ஓய்வுநாள்தோறும் ஜெப ஆலயத்துக்குப்போய் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசன புஸ்தகங்களையும் சபையாருக்கு வாசித்துப் பிரசங்கிப்பதும் அவருக்கு வழக்கமாயிருந்தது என்று லூக். 4[16-24]-ல் வாசிக்கிறோம். அருமை இரட்சகர் வேதவசனங்களை நன்றாய்ப் பாராயணஞ் செய்திருந்ததினால் எக்காலத்திலும் எவ்விடத்திலும் சர்வ சாதாரணமாய் உபயோகிக்கிறார். பிரசங்கியே, உம்முடைய விஷயம் என்ன? கர்த்தருடைய வசனத்தை மனப்பாடம் செய்து உமது பிரசங்கங்களில் உபயோகிக்கிறீரா? அல்லது உமது சொந்த வார்த்தைகளைப் போதகம் செய்கிறீரா? கிறிஸ்துவே நாம் பின்பற்றத்தக்க நல்லமாதிரி காட்டியிருக்கிறார். பிரசங்கிகளுக்குச் சோதனை வருவதுண்டு. இன்று பரவாயில்லை; அடுத்த வாரம் தகுந்த ஆயத்தத்துடன் கோவிலுக்குப் போய் பிரசங்கிக்கலாம் என்று அசட்டையாயிருத்தலே அந்த சோதனை. ஓய்வுநாள்தோறும் ஜெபாலயத்துக்குப் போய்ச் சபையாருக்கு வேதவாக்கியங்களை வாசித்துப் பிரசங்கிப்பது உமக்கு வழக்கமாயிருக்கிறதா.?

3. நமது இரட்சகரின் பிரசங்கங்கள் காலத்துக்கும் காரியத்துக்கும் ஏற்றதாகவிருந்தன. நமது இரட்சகர் காலத்தில் யூத ஜாதியார் மார்க்க விஷயத்தில் பல வகுப்பாகப் பிரிந்திருந்தார்கள். இயேசு அவர்கள் நம்பியிருந்த தப்பறைகளைக் கண்டித்து உணர்த்தி, சத்தியத்தை விளக்கத்தக்கதாக போதித்தார். உதாரணமாக, சமாரிய ஸ்திரீயோடு செய்த சம்பாஷணையைக் கவனிப்போமானால், அவளிடத்திலிருந்த தப்பான எண்ணத்தைத் தகர்த்து, கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவிடம், அவரைத் தொழுதுகொள்ளும்விதம் முதலானவைகளை எவ்வளவு தெளிவாய்ப் போதிக்கிறார்! பரிசேயனாகிய நிக்கோதேமுக்கு மறுபிறப்பின் உபதேசத்தை எவ்வளவு ஸ்பஷ்டமாய்க் காட்டுகிறார்! கானானிய ஸ்திரீ அவரிடத்தில் வந்து, தனக்கு இரங்கித் தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்தும்படி வேண்டிக்கொண்டாள். புறஜாதியாரும் அவரை விசுவாசித்துப் பற்றிக்கொண்டால் அவரிடத்தில் நன்மைகளையடையலாம் என்கிற சத்தியத்தை அவர்களுக்கு அளித்து பரிகாரங்களால் ஸ்தாபிக்கிறார். பரிசேயத் தலைவன் வீட்டில் நீர்க்கோவை வியாதிக்காரனுக்கு இந்த ஓய்வுநாளில் என்ன செய்யப்போகிறார் என்று நியாயசாஸ்திரிகளும் பரிசேயரும் அவர்மேல் நோக்கமாயிருந்தபோது, அவர்கள் எல்லாவிடங்களிலும் தாழ்மையாய் நடக்கவேண்டுமென்றும், ஏழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும் அழைத்து விருந்திடவேண்டுமென்றும் போதித்தார். திபேரியாக் கடலுக்கு அக்கரையில் அவர் போஷித்த ஐயாயிரம்பேரில் அநேகர் மாம்ச சிந்தையோடே அவரைப் பின்தொடர்ந்து, அவருக்குச் செவிகொடுத்தவர்களைக் கடிந்துகொண்டு, ஜீவ அப்பமாகிய தம்மை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதினால் பசியடையாமலிருக்கும் ஆத்மீக பாக்கியத்தை அருளுகிறார். ஓய்வுநாளைக்குறித்து பரிசேயருக்கிருந்த குருட்டாட்டத்தை

வேத ஆதாரத்தினாலும் நியாயதோரணையினாலும் தாம் நடப்பித்த
அற்புதத்தினாலும் கடிந்துகொள்ளுகிறார் (மத். 12^{1-21}). இவ்விதமாய்
நன்மாதிரியை வாசித்துவருகிற பிரசங்கியே, காலத்துக்கும் அவசியத்
துக்குமேற்ற பிரசங்கங்களைச் செய்ய முயற்சித்து வருகிறீரா? ஏனோ
தானோவென்று சமயத்துக்கேற்காத பிரசங்கங்களைக் கடமைக்கென்று
செய்வதினால் ஆத்தும ஈடேற்றத்தில் சித்தியடைவது அபூர்வமாகும்.
இயேசுவின் போதனை சமயத்துக்கேற்றவைகளா யிருந்ததுமன்றி,
அவைகளைக் கேட்டவர்களுக்குப் பொருந்தினவைகளாயுமிருந்தன.
இவ்விதமான பொருத்தம் சாதாரணமாய் நம்முடைய பிரசங்கங்களில்
இல்லாமையால் அது சித்திக்காமல் போய்விடுகிறதுண்டு. இந்தமுறை
அவருடைய போதனைகளில் தெளிவாயிருக்கிறது. அவருடைய
போதனை எங்கும் வியாபிக்கத்தக்கதா யிருக்கவேண்டுமென்று கருதி
னாலும், அவர் போதித்துவந்த யூத ஜனங்களுக்கே பொருந்தத்தக்கதாய்
பலமுறை உபதேசித்தார். யூதரான தம்முடைய சீஷருக்குத் தம்
மண்டை கூடிவந்த திரளான ஜனங்களுக்குமுன் அவர் திட்டமாய்ச்
சொல்லுகிறதென்ன? 'வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய
நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக ராஜ்யத்தில்
பிரவேசிக்கமாட்டீர்கள்' (மத். 5^{20}) என்கிறார். அவர் எடுத்துக்காட்
டுகிற குற்றங்களும் வெளியாச்சாரங்களும், மாய்மாலங்களும் அந்தக்
காலத்தையும் நாட்டையும் அடுத்தவைகள் மாத்திரமல்ல எல்லாக் காலங்
களிலும் எவ்விடங்களிலுமுள்ள ஜனங்களுக்கும் பொருந்தினவைகளா
யிருக்கிறது என்கலாம். இன்னும் (மாற். 12^{37}-ல்) 'அநேக ஜனங்
கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்'
என்று வாசிக்கிறோம். ஏனென்றால் அவருடைய போதனை ஜனங்க
ளுடைய பழக்கவழக்கங்களுக் கொத்திருந்தது. மனிதருக்கு வெகு
சாதாரணமாயுள்ள இயற்கை அறிவுக்குத்தக்கபடியே அடிக்கடி போ
தித்து வந்தார். கற்றவர்களும் கல்லாதவர்களும், உள்ளவர்களும்
இல்லாதவர்களும், தங்களுக்குள்ள இயற்கை அறிவைக்கொண்டே
அவருடைய போதனைகளை ஆவலாய்க் கேட்டார்கள். மேலும் அவ
ருடைய பாஷைநடை தெளிவாயும், ஆழ்ந்த கருத்து அமைந்ததாகவு
மிருந்தன. கல்விமான்களுடைய மனதுக்குப் பொருந்தியிருந்தது,
பேதைகளுடைய புத்திக்குத் தெளிவாகவுமிருந்தது. பிரசங்கியே,
கர்த்தர் நன்மாதிரியை வைத்துப்போயிருக்கிறார். உன் சாமர்த்தி
யத்தையும் கல்வியையுமல்ல, ஜனங்களுடைய நிலைமையைத் தக்கபடி
யறிந்து அவர்களுக்குப் பொருந்தும்படி பிரசங்கிக்க வகைபாரும்.
அவருடைய பிரசங்கங்கள் அனைத்திலும் மாட்சிமையாய்த் துலங்கும்

பொருளும் நோக்கமும் ஒன்றாயிருந்தது. மனிதர் மனந்திரும்பி பர
லோக ராஜ்யத்தையடைந்து, நித்திய ஜீவனை அடையவேண்டும்.
அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்பது அவர் கொண்ட ஆவல்.
அவருடைய பிரதிநிதிகளாய் நியமிக்கப்பட்டிருக்கிற பிரசங்கி
களும் இந்த ஆவலை யுடையவர்களாயிருக்கவேண்டுமல்லவா? இத்
தனை பிரசங்கங்களைச் செய்தேன் என்றல்ல, இத்தனை பேர் இரட்
சிக்கப்பட பிரசங்கிப்பேன் என்கிற நிர்ணயத்தோடே பிரசங்கிக்கக்
கடவோம்.

4. கிறிஸ்துவானவருடைய பிரசங்கம் உவமானங்கள் அடங்கிய
வைகளாயிருக்கின்றன. ஜனங்கள் 'கேட்டறியும் திராணிக்குத்தக்க
தாக அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு
வசனத்தைச் சொன்னார். உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு
ஒன்றும் சொல்லவில்லை' (மாற் $5^{33,34}$). கிறிஸ்துவானவரைப்
போல உவமானங்களையும் ஒப்பனைகளையுங்கொண்டு சத்தியத்தை
நிலைநிறுத்தினவர்கள் வேறு யாருமில்லை என்கலாம். உலகத்திலே
நாம் பார்க்கிற பல பொருள்கள், விஷயங்களைக்கொண்டே தமது
உபதேசத்தை தெளிவித்து திருஷ்டாந்தப்படுத்தி போதித்தார்.
உவமைகளும் ஒப்பனைகளும் சொல்லுகிற விஷயங்களை உயிருள்ள
தாக்குகிறது. போதனாமுறையில் 'தெரிந்ததிலிருந்து தெரியாத
திற்கு மனதை நடத்து' என்றிருக்கிற பிரகாரம் உவமானங்கள்
போதிக்கும் சத்திய உபதேசத்தை வெறும் எலும்புக் கூடுபோல்
அல்ல, மாம்சமும் இரத்தமும் ஜீவனுமுள்ள தேகம்போல் உயிருள்ள
தாக்கி தெளிவாய்த் தோன்றச் செய்கிறது. ஆகலால் இயேசு நாம்
பார்க்கிற சூரியன், சந்திரன், நட்சத்திரம், ஆகாயம், தண்ணீர்,
வெளிச்சம், இருள், புல், லீலி புஷ்பம், களை, பயிர், விதை, விதைக்
கிறவன், உழுகிறவன், செம்மறியாடு, வெள்ளாடு, மேய்ப்பன், திராட்
சச்செடி, கொடி, தோட்டம், ஆகாயத்துப் பறவை, வளுந்தா நரி,
அநீதியுள்ள நியாயாதிபதி, ஏழைக்கைம்பெண், சிறுபிள்ளை, தேவ
தூதன், விளக்குத்தண்டு, கோழி, குஞ்சு, வெள்ளிக்காசு, துடைப்பம்,
புழு, அக்கினி, இறந்தகால சம்பவங்கள், நிகழ்கால சம்பவங்கள்,
வருங்கால சம்பவங்களுமாகிய சகல விஷயங்களிலுமிருந்தும் உவமா
னம் எடுத்துப் போதித்தார். இவைகளை உல்லாசத்துக்காகவும், பிர
சங்க அலங்காரத்துக்காகவும், ஜனங்கள் புகழச் சொல்லாமல்,
தாம் போதித்த சத்தியத்தை தெளிவாய் மனதில் காட்டும்படிக்
காகவே அவைகளை உபயோகித்தார். பாடசாலையில் கற்பிக்கிற
உபாத்தியாயர் பிள்ளைகளுக்குமுன் பொருளை வைத்து விஷயத்தைப்
போதிக்கிற வழக்கம் இக்காலத்தில் சாதாரணமாக இருக்கிறதைப்

பார்க்கிறோம். ஏன் பொருள்களைப் பிள்ளைகளுக்குக் காட்டவேண்டும். அதற்கு நாலு காரணங்களுண்டு.

1. அந்தப் பொருள் பிள்ளைகள் கவனத்தை இழுக்கிறது.

2. அவர்கள் பார்க்கிற பொருள் அவர்களில் யோசனையை உண்டாக்குகிறது.

3. பொருள்களைப்பற்றிய சங்கதிகளை பிள்ளைகள் இலகுவில் கிரகித்துக்கொள்ளுகிறார்கள்.

4. விவரித்த விஷயம் ஞாபகத்தில் உரமாய் பதிந்துபோகிறது.

கலிலேயா நாட்டு ஜனங்களுக்குள்ளே இயேசு பெரிய உபாத்தியாயராக விளங்கினார். அவருடைய போதனாமுறையை சர்வ ஜனங்களும் பிரசங்கிகளும் கையாடவேண்டும். அப்படிச் செய்தால் பிரசங்கிகள் செய்கிற பிரசங்கங்கள் அலுப்பாயிராமல், ஜனங்கள் பிரியமாய்ச் செவிகொடுத்து கவனித்து பயனையடையத்தக்கதாகும். அன்றாட ஜீவியத்திலுள்ள நடபடிகளையும் காட்சிகளையுமே உவமானமாக இயேசு எடுத்துப் பேசினபடியால், அவரது போதனைகளைக் கேட்டவர்கள் மறந்துபோகாமலும், தப்பர்த்தங்கொள்ளாமலும், பிற்காலத்தாராகிய நாமும் அப்போதனையை அறிந்துகொள்ளும்படி, அவர்களுடைய ஞாபகம் என்னும் புஸ்தகத்தில் எழுதிவிட்டார். பிரசங்கியே, உம்முடைய பிரசங்கம் திருஷ்டாந்தங்களால் நிறைந்து தெளிவாயிருக்கின்றனவா? செய்த பிரசங்கம் ஜனங்களுடைய ஞாபகத்தில் எழுதப்பட்டாயிற்று என்கிற நிச்சயமுண்டா? நம்முடைய இரட்சகர் உவமைகளினாலே யல்லாமல் ஒன்றும் பிரசங்கித்ததில்லையே. அவருடைய முறையைப் பின்பற்றுவீராக.

(இன்னும் வரும்.)

St. Paul's Second Missionary Journey

பரி. பவுல் செய்த இரண்டாம் சுவிசேஷ பிரயாணம்

(கி. பி. 50—53) அப். 15^{36}; 18^{22}.

பரி. பவுல் இவ்விரண்டாம் பிரயாணத்தைச் செய்ய உத்தேசித்து, பர்னபாவையும் மாற்குவையும் திரும்பவும் கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்று விருப்பமுள்ளவராய்ப் பர்னபாவை விட்டுவிட்டு சீலாவை அழைத்து சீரியா சிலிசியா நாடுகள் வழியாய் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் வந்தார். லீஸ்திராவிலே அவர்கள்

தீமோத்தேயுவைச் சந்தித்து, அவனுடைய தாயார் யூத ஸ்திரீயாயிருந்ததினிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம் பண்ணி அவனைத் தங்களோடு கூட்டிக்கொண்டுபோனார்கள் (2 தீமோ. 1^{5}; 3^{15}). அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோய் ரோமை இராஜதானியாகிய ஆசியாவிலே வேலை செய்யத் தலைப்பட்டாலும் தேவாவியானவரால் தடை பண்ணப்பட்டார்கள் (ஆசியாவின் தலைநகராகிய எபேசுவிலே வேலைசெய்ய அவர்கள் விருப்பமாயிருந்திருக்கலாம்). வடக்கேயிருந்த பித்தினியா நாட்டுக்குப் போக பிரயத்தனம் செய்தும் அங்கேயும் ஆவியானவரால் தடை பண்ணப்பட்டார்கள். போகக்கூடிய வழி ஒன்றாயிருந்தமையால் அவ்வழியாக மீசியா பக்கமாய்ப் போய்த் துரோவா என்கிற துறைக்கு வந்தார்கள். அவ்விடத்திலே அவர்கள் லூக்காவைச் சந்தித்தார்கள். எப்படியெனில் அப். 16^{10}-ல் 'அவர்கள்' என்பதற்குப் பதிலாய் 'நாங்கள்' என்கிறார்; அதாவது இந்நூலின் ஆசிரியனும் அதுமுதல் அவர்களோடு சேர்ந்திருக்க வேண்டும்.

அப். 16^{9}-ல் சொல்லிய தரிசனத்தைப் பவுல் கண்டவுடன், ஆசியாவை விட்டு முதல் தடவையாக ஐரோப்பாக் கண்டத்துக்குப் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர்கள் நேயப்போலியாகிய துறைக்கு வந்து அவ்விடத்திலிருந்து தாமதமின்றி பிலிப்பிப் பட்டணத்துக்கு வந்து அங்கே சிலநாள் தங்கினார்கள். அவ்விடத்தில் யூதமார்க்கத்தமைந்தவளும் நல்ல ஸ்திதியிலுள்ளவளுமாகிய லீதியாளும் ஒரு ஏழை அடிமை கிரேக்கப் பெண்ணும் ஒரு ரோமப் போர்ச்சேவகனும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார்கள். குறிசொல்லும் பெண்ணின் எஜமான்கள் செய்த கலகத்தினால் பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டு இராவிலே உண்டான பூமி அதிர்ச்சியினால் விடுதலையாக்கப்பட்டார்கள். மறுநாள் காலையில் அதிகாரிகள் அவர்களை இரகசியமாய் அனுப்ப மனதாயிருந்தபோது அவர்கள் ரோமர் என்று கேள்விப்பட்டுப் பயந்து அவர்களுக்கு மரியாதைசெய்து அனுப்பினார்கள். அவர்கள் அவ்விடத்தில் லூக்காவை விட்டுவிட்டார்கள் (அப். 17^{1}. நாங்கள் என்கிற பதத்தினால் இது விளங்குகிறது.) அந்நாட்டின் தலைநகராகிய தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்து அங்கே சில மாசக்காலமாகத் தங்கி யூதருக்கும் கிரேக்கருக்கும் சுவிசேஷத்தை அறிவித்து அநேகரைக் குணப்படுத்தினார்கள். (அப். 17^{4}. 1 தெச. 1^{9}. $2^{1,9}$.) தம்முடைய ஜீவனத்துக்காகப் பவுல் தமது தொழிலைச் செய்தார் (2 தெச 3^{8}). ஆயினும் பிலிப்பி சபையார் அவருக்குச் சமயா சமயங்களில் உதவி செய்தார்கள் (பிலி. 4^{15}. 2 கொரி. 11^{9}). தெசலோனிக்

கேயர் சுவிசேஷத்தை ஆவலாய் ஏற்றுக்கொண்டதுமல்லாமல் அதை மற்றவர்களுக்கும் அறிவித்தார்கள் (1 தெச. 1^{8}). மற்ற விடங்களில் நடந்ததுபோல இங்கேயும் யூதர்கள் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி, அதிகாரிகளுக்கு முன்பாக பாரமான குற்றமாகிய இராஜ துரோகத்தை அவர்கள்பேரில் சுமத்தி அவர்களை ஏற்றுக்கொண்ட யாசோனை அதிகாரிகளுக்கு முன்பாக நிறுத்தினார்கள். அவனிடத்தில் அவர்கள் ஜாமீன் வாங்கினமையால் அப்போஸ்தலர் திரும்பவும் வெளியரங்கமாய்ப் பிரசங்கம் பண்ண முடியாமற்போயிற்று! அவர்கள் அப்படிச் செய்து வந்திருந்தால், திரும்பவும் கலகம் உண்டாயிருக்கும்; உண்டாயிருந்தால், ஜாமீனைக் கொடுத்த யாசோனுக்கு பிராண அபாயம் நேரிட்டிருக்கும். ஆனதுகொண்டு அவர்கள் உடனே பெரோயா பட்டணத்துக்குப் போனார்கள். அங்கேயும் தெசலோனிக்கே பட்டணத்து யூதர்கள் வந்து அவருக்குத் தீங்கு செய்யப் பார்த்ததினால் சமுத்திர வழியாக அத்தேனே என்னும் பட்டணத்துக்கு சகோதரரால் கூட்டிக்கொண்டு போகப்பட்டார். அவர் தெசலோனிக்கே ஊருக்குத் திரும்பிப்போக மனதாயிருந்தும் இந்த யூதர்களின் விரோதத்தினால் போகக்கூடாமற்போயிற்று. (1 தெச. 2^{11-18}. 2 தெச. 1^{4}). சீலாவும் தீமோத்தேயுவும் பெரோயாவிலே இரண்டொரு நாள் தரித்திருந்து பின் பவுலைத் தொடர்ந்து அத்தேனே பட்டணத்துக்குப் போனார்கள். கிரேக்குத் தேசத்துக்கு முக்கியமானதும் உலகத்திலுள்ள எல்லாப் பட்டணங்களைப் பார்க்க நாகரீகத்திலும் கல்வியிலும் சிரேஷ்டமானதுமாயிருந்த அத்தேனே பட்டணத்தில் அவர்கள் நாலைந்து வாரம் தங்கினார்கள்.

சீலாவும் தீமோத்தேயுவும் வாராததற்குமுன் பவுல் அப். 17^{22-31}-ல் சொல்லப்படுகிற உபந்நியாசஞ் செய்தார். அதிலே அவர் ஓர் தத்துவ சாஸ்திரியாகத் தத்துவ சாஸ்திரிகளுடன் பேசினதாகக் காண்கிறோம். மூல பாஷையில் 'மார்ஸ் மேடை' என்று மொழி பெயர்க்கப்பட்ட 'அரியோப்பகஸ்' (Areopagus) என்னும் பதமானது அநேகமாய் ஓர் இடத்தையல்ல, தத்துவ சாஸ்திரிகளின் சங்கத்தையே குறிக்கிறது.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1915

No. 109 ஜூன் 1915

வேதியர் விளக்கு

OFFICE OF THE REGIS... 7 - JUN 191. MADRAS

The Oral Gospel

[From *Lectures on the Gospels by Dr. Findlay.*]

The object of this lecture is to see what we can discover without the use of the Gospel narratives, as to the preaching of the Apostles and the primary Gospel.

1. ***For some thirty years the story of Jesus was subject to the conditions of oral delivery, before it came into its present written form.***

The remarkable uniformity of the first three Gospels, while largely due to pre-existent writings, must be ascribed to the fact that they embody the deliverance of men accustomed as Jews to exact oral repetition. Further they were written by men closely bound together, who had been in constant intercourse with each other, hearing each other speak, and who were all influenced in preaching and teaching by the leadership of one man, PETER.

See Acts i–v; x.

2. ***Note carefully the first act of the Apostles after the Ascension.*** It is very significant.

See Acts i. 21, 22.

The newly appointed Apostle Matthias was to be:—

(i) A witness of the Resurrection.

(ii) The limits of his testimony were 'beginning with the Baptism until the Ascension'.

NOTE. The Birth of Jesus was not included in the oral testimony.

3. Note carefully Peter's speech in Acts x. 36–43

These verses contain only the substance of the speech, but we find them to be a compendium of the first three Gospels. The important points are:—

(i) Nazarene origin of Jesus.
(ii) Public Ministry of Jesus from His baptism to Pentecost.
(iii) Ministry commencing in Galilee and extending to Judæa and Jerusalem but confined to the people of Israel.
(iv) His beneficent journeys through the land especially His healing of demoniacs.
(v) His crucifixion and resurrection on the third day.
(vi) His appearance to the chosen witnesses.
(vii) The commission He gave them to preach.
(viii) His claim to be the universal Judge.
(ix) The prophetic testimony to Him.
(x) His power to forgive sins.
(xi) His mission of peace to the world.

All this is found in Luke's summary of Peter's address. The passage is evidently no compilation from the Gospels, being quite independent of them, yet in striking agreement.

This passage may be thought of as a short *summary of the Gospel as preached by Peter.*

Peter was the great Evangelist—the preacher of Pentecost-the man who with 'the keys' opened the door of Faith, first of all to the Jews, and then to the Gentiles. He was the leader in all the deeds of enterprise in the primitive Church. The early preachers were all influenced by Peter and worked on his lines.

4. St. Paul occupied in the Gentile world a position similar to that occupied by Peter in the Jewish world. (See Gal. ii. 7–8.)

Acts xiii. 16–47.

In this passage we have a report of one of Paul's earlier addresses at Antioch in Pisidia, and we can take it as a sample of Paul's preaching. After an historical introduction Paul refers to the ministry of John the Baptist, with the baptism of repentance (v 24). He then hastens to the crucifixion (v 28) and to the death and resurrection of Christ (vv. 29–30) which he relates with much fulness and emphasis.

This may be taken as a type of Paul's preaching.

5. Viewing these as samples of Apostolic preaching, we can see that the **death** *and* **resurrection** *of Christ were the chief points up to which the Gospel story was made to lead.* These were dwelt upon at length. In the oral teaching of the apostles the resurrection of Jesus was the critical point. The baptism of Jesus to the ascension were the limits of the teaching.

See also in the Epistles

1 Cor. xv. 1–9 1 Pet. i. 18–20 1 Pet. ii. 21–25

These subjects held the same paramount importance in the records of the four Evangelists.

6. To fill in the outline furnished above we will refer to a few passages showing what the apostolic churches were taught respecting some other points.

(a) The Birth and Person of Christ

Rom. i. 3–4 refers to two facts well-known in the early church.

(i) Birth according to the flesh, from David's line.
(ii) His recognition as the Son of God, attested by His resurrection. Rom. ix. 5; 1 Tim. ii. 5.

Phil. ii. 5–8. The divine side first—then humbled to human life and death.

Heb. i. 2–13. Note. The outbeaming of His glory-contrasted with prophets and men—Christ perfectly manifests God, etc.

Gal. iv. 4. 'Sent forth' from a higher region. These passages show that the subject was familiar to the readers of the Epistle and commonly believed by them. These readers had received their instruction by word of mouth, from eye-witnesses of Christ and from ministers of the word.

(b) **As to the moral character of Jesus**

1 Pet. ii. 21–23 : iv. 1. Describe His unexampled patience and gentleness.

2 Cor. viii. 9 ; x. 1	Heb. iv. 15
Eph. iv. 20–21	Heb. iii. 1–2
1 Tim. vi. 13	

These and many other passages show how thoroughly the early church, even before the Gospels had been written, know the character and life of Jesus. We know it all because we have it in the written Gospels. They knew it equally certainly and it came to them by the oral tradition.

7. *James very largely reproduces the Teaching of Jesus.* His epistle echoes the Sermon on the Mount.

James i. 2	compared with	Matt.	v. 10–12
i. 4	,,	,,	v. 48
i. 5	,,	,,	vii. 7
i. 9	,,	,,	v. 3
i. 20	,,	,,	v. 22
i. 22	,,	,,	vii. 26, 27

8. *Paul also echoes the moral teaching of Jesus using his own words.*

Acts xx. 35 cf. Luke vi. 27–38

Paul is evidently quoting a well-known maxim uttered by Jesus.

Cp. Rom. xii. 12–18 ; 1 Cor. iv. 10–13 and xiii. 4–7 with the Sermon on the Mount.

Paul does not give a verbatim repetition of the teaching of Jesus, but reproduces the spirit of the teaching in his own words.

Cp. 1 Cor. ix. 14 with Matt. x. 10

1 Cor. vii. 10 with Matt. xix. 3–9

Paul formed no new doctrine. He built upon the teaching of Jesus. He was a translator or reproducer of Christ's doctrine.

9. *Finally let us search the Epistles for references to particular events recorded in the Gospel history.*

(i) The death and resurrection of Jesus are alluded to in almost every page of the epistles, except James. It is evident that no one could have understood these epistles without the knowledge of the events referred to. The oral tradition had supplied the knowledge thoroughly.

(ii) The account of the Lord's Supper 1 Cor. xi. 23–25 is an historical account corresponding with Luke xxii. 14–20. This is important for the amount of detail it contains. Evidently Paul recognized the story of the betrayal as being known to the Corinthians generally.

(iii)	1 Tim. vi. 13	recalls whole scene of the		trial
(iv)	1 Pet. ii. 23	,,	,,	passion
(v)	2 Pet. i. 16–18	,,	,,	transfiguration
(vi)	1 Pet. iii. 32	,,	,,	ascension

This brief review may serve to show how full and vivid was the portraiture of the person, work, life, death, resurrection and ascension of Christ given by the first preachers and evangelists. The special force of the references lies in the fact that they are extremely incidental ; they presume that the readers are well informed on the whole subject. They could only, of course, at this early period, be informed by the oral tradition which preceded our written Gospel.

So far as we can judge of that oral tradition by these samples of it, it agreed very completely with what is found in our written Gospels.

(To be continued)

St. Paul's Missionary Journeys

பரி. பவுல் செய்த சுவிசேஷ பிரயாணங்கள்

(தொடர்ச்சி)

தெசலோனிக்கேயாவிலுள்ள கிறிஸ்தவர்களைக்குறித்துப் பவுல் அதிக மனக்கவலையுள்ளவரானதால், அத்தேனே பட்டணத்தினின்று அவர் தீமோத்தேயுவை அவ்விடத்திற்கு அனுப்பினார் (1 தெச. 3[1],[2]).

அதுவுமல்லாமல் அவர் சீலாவையும் மக்கெதோனியாவுக்கு (அநேகமாய் பிலிப்பி பட்டணத்துக்கு) அனுப்பினார். இவர்கள் இருவரும் கொரிந்து பட்டணத்தில் அவரிடம் திரும்பி வந்து சேர்ந்தார்கள். (அப். 18^{5}). ஏனெனில் அவர் அத்தேனே பட்டணத்தை விட்டு கொரிந்துவுக்குப் போயிருந்தார். அவர் தேவ தரிசனத்தால் அப்பட்டணத்தில் ஒன்றரை வருஷகாலமாய்த் தங்கி, ஆக்கில்லா பிரிஸ்கில்லாள் என்பவர்களோடிருந்து தம்முடைய தொழிலைச் செய்தார். அவ்வூரில் அநேகர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசித்தார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் ஏழைகளாயிருந்தார்கள். (1 கொரி. 1^{26}.)

அங்கிருந்து அவர் 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர் என்கிற நிருபங்களை எழுதி அனுப்பினார். (1 தெச. 3^{6}. அப். 18^{5}.)

கொரிந்து பட்டணத்தில் அவர் முதலில் யூதருக்குப் பிரசங்கித்து, அவர்கள் தம்மை எதிர்த்துப் பேசினதினால் அவர்களை விட்டு, யுஸ்து என்பவனுடைய வீட்டிலே பிரசங்கஞ் செய்தார். ஆயினும் ஜெப ஆலயத் தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் விசுவாசித்தான். (அப். 18^{8}.) இதைக் கண்டு யூதர்கள் சினங்கொண்டு கல்லியோன் என்னும் ரோம அதிபதியிடம் அவர்கள்மேல் பிராது செய்தார்கள். கல்லியோன் அப்பிராதைத் தள்ளினார் என்று யூதர்கள்பேரில் எப்போதும் விரோதங்கொண்டிருக்கும் கிரேக்கர் கண்டு அப்பிராதைச் செய்த ஜெப ஆலயத் தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து அடித்தார்கள் (அப். 18^{17}). 1 கொரி. 1^{1}-ல் சொல்லப்பட்ட சொஸ்தேனே இவன்தானானால் அதற்கப்புறம் அவன் கிறிஸ்தவனாகி இருக்கவேண்டும். அநேக நாள் சென்றபின், பவுல் கொரிந்தைவிட்டு, ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் கூட்டிக்கொண்டு கெங்கிரேயா என்னும் துறை வழியாக எபேசு பட்டணத்துக்குப் போனார் (அப். $18^{18, 19}$). அவர்களை அங்கே விட்டுவிட்டுச் செசரியா பட்டணத்துக்குப் போய், அந்தியோகியாவுக்கு வந்தார். எருசலேமுக்குப் போன நாலாவது முறை இதுவே. (கி. பி. 53.)

அநேகமாய்த் தீமோத்தேயு எபேசு பட்டணத்தினின்று தான் பிறந்த ஊராகிய லீஸ்திராவுக்குப் போய், கலாத்தியா சபைகளில் யூதகட்சிக்காரர் உண்டாக்கின தீமைகளைக் கண்டு, அச்சங்கதிகளைப் பவுலுக்கு அறிவிக்கும்படியாக அந்தியோகியாவுக்கு வந்தான். அவைகளைக் கேட்டு பவுல் அவர்களுக்கு நிருபத்தை எழுதி தாமும் அவ்விடம் போகவேண்டும் என்று தீர்மானித்து அந்நிருபத்தை தீமோத்தேயுவிடம் கொடுத்து அவனை முந்தி அனுப்பினார்.

மூன்றும் சுவிசேஷ பிரயாணம். அப். 18^{23}-21^{16}. (கி. பி. 53-57.)

அந்தியோகியாவிலே சிலகாலம் சஞ்சரித்தபின்பு அவர் கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் திரிந்து, சீஷரைச் சந்தித்து, மேடான தேசங்கள் வழியாய் எபேசுவுக்கு வந்தார் (அப். 19^{1}. கொலோ. 2^{1}). (பேதுருவோடு அவர் செய்த தர்க்கம். கலா. 2^{11}—அந்தியோகியாவை விட்டுவிடாததற்குமுன் நடந்ததாகச் சிலர் நினைக்கிறார்கள்.) யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்ற பன்னிரண்டுபேரை எபேசுவில் சந்தித்து, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு அவர்கள்மேல் கைகளை வைத்தார். அவ்விடத்திலே அவர் இரண்டரை வருஷகாலமாகச் சஞ்சரித்து, அநேகரைக் குணப்படுத்தினார். அங்கிருந்து அவர் மக்கெதோனியா வழியாக எருசலேமுக்குப் போகவும், அப்புறம் ரோமாபுரிக்கும் ஸ்பானியா தேசத்துக்கும் போகவும் வேண்டுமென்று தீர்மானித்திருந்தார். (அப். 19. ரோ. 1^{10-12}; 15^{24-28}.)

அதற்கு முன்னே அவர் தீமோத்தேயுவை மக்கெதோனியாவுக்கும் (அப். 19^{22}), கொரிந்து பட்டணத்துக்கும் (1 கொரி. 4^{17}; 16^{10}) அனுப்பி, சொஸ்தேனே என்பவனைத் தம்மோடிருக்க நிறுத்தினார் (1 கொரி. 1^{1}). தீமோத்தேயு போனபின் (1 கொரி. 4^{17}) அவர் முதல் கொரிந்தியர் என்னும் நிருபத்தை எழுதி கொரிந்து சபையார் தம்மிடம் அனுப்பிய ஸ்தேவான் முதலியவர்கள் மூலமாய் அதை அனுப்பினார் (1 கொரி. 16^{7}). அதற்குமுன் அவர் ஓர் நிருபத்தை எழுதியிருந்ததாகக் காணப்படுகிறது (1 கொரி. 5^{9}). கொரிந்து சபையிலே சில ஒழுங்கீனங்கள் இருந்தமையால் அவைகளைப்பற்றி அச்சபையாரைக் கண்டிக்கவும், அவர்கள் கலியாண விஷயங்களைப்பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு ஆலோசனை சொல்லவும் இந்நிருபத்தை எழுதினார் (1 கொரி. 1^{11}; 5; 6^{11-17}). அவ்வூரிலே அப்பொல்லோ என்பவன் வேலைசெய்து வந்திருந்தான் (அப். 18^{24}-19^{1}. 1 கொரி. 3^{6}). தாம் அவர்களைக் காண வருவார் என்று சொல்லுகிறார் (1 கொரி. 16^{5}). அச்சமயத்தில் அவர் அங்கே போனாரோ இல்லையோ திட்டமாய்த் தெரியாது: 2 கொரி. 1^{16}, 3—ஐப் பார்த்தால், அவர் தமது தீர்மானத்தை மாற்றினார் என்று காணப்படுகிறது. எபேசு பட்டணத்திலே அவர் அநேக பாடுகளைப் பட்டு, மரணத்துக்கு ஏதுவானவைகளை அனுபவித்து வந்தாலும் (2 கொரி. 1^{8}) அதிக ஊக்கமாய் வேலை செய்து மாயவித்தைக்காரரையும் குணப்படுத்தினார். கடைசியாய்த் தெமேத்திரியு

என்பவன் எழுப்பின கலகத்தினால் அவர் அப்பட்டணத்தை விட்டு விட வேண்டியதாய் நேரிட்டது. (அப். $29^{28,41}$.)

எபேசுவை விட்டுத் துரோவா என்னும் துறைவழியாக மக்கெதோனியாவுக்கு வந்து (2 கொரி. 2^{12}) கொரிந்து பட்டணத்தினின்று தீத்து என்பவன் தம்மிடம் வரக் காத்திருந்தார். மக்கெதோனியாவிலிருந்து அவர் இரண்டாம் கொரிந்தியர் என்னும் நிருபத்தை எழுதி அதைத் தீத்துவினிடம் கொடுத்து அனுப்பினார் (2 கொரி. $7^{6,7}$; 8^{16-18}). மக்கெதோனியாவிலிருந்தபோது அவர் திரும்பவும் உபத்திரவத்தை அனுபவித்தார். (2 கொரி. 7^{5}.)

மக்கெதோனியாவை விட்டுக் கொரிந்து பட்டணத்துக்கு வந்து அங்கே மூன்றுமாத காலமாக சஞ்சரித்தார் (அப். 20^{3}). அங்கிருக்கையில் அவர் ரோமர் என்னும் நிருபத்தை எழுதி, அதைக் கொரிந்து பட்டணத்தின் துறையாகிய கெங்கிரேயா ஊர் சபையின் ஊழியக்காரியாகிய பெபேயாள்மூலமாய் அனுப்பினார். (ரோ. 16^{1}.)

அவர் கப்பலேறி சீரியாவுக்குப் போக மனதாயிருக்கவே யூதர்கள் தமக்கு விரோதமாய் உபாயங்களைச் செய்துவந்ததினிமித்தம் (அநேகமாய் அவரைக் கப்பலிலேயே கொலைசெய்யும்படியாக யோசனையாயிருந்தார்கள்.) அவர் மக்கெதோனியா வழியாகப் போய், பிலிப்பி பட்டணத்துக்கு வந்தார் (அப். 20^{6}). கொரிந்து பட்டணத்தில் அவரோடிருந்தவர்கள் முந்தி கப்பலேறி துரோவாவுக்குப் போய் அவர் வரக் காத்திருந்தார்கள். (அப். $20^{4,5}$). பிலிப்பி பட்டணத்திலிருந்து லூக்கா என்பவனைக் கூட்டிக்கொண்டு (அப். 20^{6}. நாங்கள்) துரோவாவுக்கு வந்து, மரித்துப்போன ஐத்திகு என்னும் வாலிபனை உயிரோடெழுப்பி (அப். 20^{8-12}), பின்பு கப்பலேறி மிலேத்துவுக்கு வந்து, எபேசு சபையின் மூப்பரை வரவழைத்து அவர்களுக்குப் பிரசங்கஞ்செய்தார். (அப். 20^{18-}).

திரும்பவும் கப்பலேறி தீரு, செசரியா பட்டணங்கள் வழியாக எருசலேமுக்கு வந்தார். செசரியா பட்டணத்தில் அகபு என்கிற தீர்க்கதரிசி எருசலேமிலே பவுலுக்கு நேரிடப்போகிறவைகளைச் சொன்னான் (அப். $21^{10,11}$). ஆயினும் பெந்தெகோஸ்தே பண்டிகை நாளிலே எருசலேமிலே இருக்கவேண்டும் என்று தாம் தீர்மானித்தபடி (அப். 20^{16}) அவ்விடம் வந்து மினாசோன் என்பவனுடைய வீட்டிலே தங்கினார். (அப். 21^{16}).

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டேய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

பதின்மூன்றாம் அதிகாரம்

(தொடர்ச்சி.)

ஆகஸ்ட்டுமீ 6வ

நேற்றுச் சாயந்திரம் என்னை வழிவிலக அழைத்துப்போய்க் கைவிட்ட அதே வாலிபன் இன்று உதயத்தில் வந்து என்னை எழுப்பினான். அவன் மரியாதையில்லாமல் பேசி நேற்று உனக்காக உழைத்ததற்குக் கூலி கொடுத்துப்போ என்று சொன்னதுமன்றி பலவந்தமாய் என் காசைப் பிடுங்கிக்கொள்ளவும் பார்த்தான். இது என் கோபத்தை மூட்டினதால், நான் மனதை அடக்கிக்கொள்ளாமல், அவனுடைய கையைப் பிடித்து அழுத்தின அழுத்து அவனுக்குப் பொறுக்கமுடியாத நோவாயிருந்தது. இன்னொருதரம் கைபோடு, அப்போது என்ன செய்கிறேன் பார் என்றேன். இப்படி நான் செய்திருக்கத் தகாது. அது என் பெலவீனக் கொடுமை என்று விசனப்படுகிறேன். இதன்பிறகு அவன் சரியாய் நடக்க ஆரம்பித்தான். குண்டுபோட்டு நகரக் கெவுனி திறக்கும்வரைச் சும்மாயிருந்து அபின் வாங்கித் தின்னக் காசு கேட்டான். அதற்கு நான் சம்மதிக்கவில்லை என்று சொல்லத் தேவையில்லை. அப்பால் நேற்று முன்னிரவில் எனக்காக இரண்டு வத்தி கொளுத்தியலைந்த செலவாகிலும் தர வேண்டினான். அது கொடுத்து அனுப்பிவிட்டேன். அவன் அவ்விடத்து மாக்தாரீனுடைய ஆபீசைச் சேர்ந்தவன் என்று அறிந்தேன்.

கொஞ்சம் அரிசிக் கஞ்சியும் தேப்பானமும் வாங்கிக் காலைப் பசியாறினபின் என் சாமான்கள் போனவிதம் என்னவென்று தேடிப் பார்த்தேன். இதில் சில நாழிகைகள் செலவாகியும் என் பண்டங்கள் அகப்படவில்லை. அதன்பிறகு வந்த வழியே திரும்பிப்

போகப் புறப்பட்டேன். வழி தொலையவில்லை. கால் நோவெடுத்துக் களைப்பும் தவிப்பும் வந்தது. இவ்வாறு தள்ளாடி மதியப்பொழுதில் சங்கானுக்கு வந்தேன். இந்த இடத்திலும் என் பொருட்களைப் பற்றி விசாரித்தும் அவை போனவிதம் தெரியவில்லை. ஒரு தேப்பானக் கடையில் எனக்குச் சாப்பாடு சமைத்துக்கொடுக்கச் சொல்லி சாப்பிட்டு, அங்கேயே செம்மையாய் ஸ்நானம்செய்து, வீங்கியிருந்த என் கால்களை வெந்நீரில் தோய்த்து நோயடக்கி, சாயந்திரம் நாலு மணிவரை அயர்ந்த நித்திரை செய்தேன்.

இப்படிப் பெரும்பாலும் களைதீர்ந்து உடம்புக்குப் பெலன் வந்ததும், நகரத்துக்குப் போகப் புறப்பட்டேன். அதின் தெற்குக் கெவுனியில்தான் இரண்டு நாட்களுக்குமுன் என் வேலைக்காரனையும் கூலியாட்களையும் விட்டுப் பிரிந்தேன். போகிற வழியில் தேவன் எனக்குப் பாராட்டின நன்மைகளை நினைத்துக்கொண்டே போனேன். கடந்த இரவில் எனக்குப் பத்திரமான தாவு தர தேவனை நான் மன்றாடினதில்லை என்பது என் ஞாபகத்தில் உதித்தது. அதுவுந்தவிர என்னைச் சூழப் பல்லாயிரம் மானிடர்கள் சேதப்பட்டுப் போகிறது என் மனதில் உறுத்தாமல் என் சில சாமான்கள் சேதப்பட்டது மாத்திரமே என் மனதில் கிலேசமுண்டாக்கினது என் மனச்சாட்சிக்கு வாதையாயிருந்தது. பாவ வாதையுற்றவனால் நான் தேவனிடத்தில் போய் இயேசுவின் இரத்தத்தினிமித்தம் எனக்கு மன்னிக்க வேண்டினேன். அவருக்குள் தேவன் என்னை ஏற்றுக்கொண்டார். அதாவது, அவர் எனக்கு மன்னிப்பருளி, என்னைக் கழுவி, என்னைப் பரிசுத்தனாக்கினார். அந்நேரத்தில் இயேசுவின் அன்பு எனக்கு எவ்வளவு பெரிய அருமையாயிருந்தது! மனுஷரால் அற்பமாய் மதிக்கப்பட்டுப் புறக்கணிக்கப்படுகிறதும், தலைசாய்க்க இடமற்ற அகதியாய் இருக்கிறதும் என்னவாயிருக்குமென்று எனக்கு அப்போது தெரிந்ததுபோல் அதற்குமுன் தெரிந்ததேயில்லை; என் ஆண்டவர் மகிமையிலிருந்த தமது ஆனந்த மாளிகையை என் பொருட்டு விட்டு எனக்காகப் பாடுகளை அநுபவிக்கவும், எனக்காகத் தம் ஆருயிரைச் சிலுவையில் கொடுக்கவும், அவரைத் தூண்டின அவருடைய அன்பு மகத்துவம் எப்பேர்ப்பட்டது என்பது எனக்கு அப்போதுதான் ஒருவாறு தெரிந்தது. அவரை மக்கள் பெருங்கூட்டத்தால் அவமதிக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டவராயும், துக்கங்களின் மனுஷனும், மனக்கிலேசத்தை அநுபவித்தறிந்தவராயும் என் மனதில் தியானம் பண்ணினேன். அவர் யாக்கோபின் துரவண்டை களைத்துப் பசித்துத் தாகித்து உட்

கார்ந்திருந்தும் தம் பிதாவின் சித்தத்தைச் செய்வதையே தமக்கு ஊணும் பானமுமாக மதித்ததையும் என் உள்ளத்தின் அன்பு சிறுமையையும் அதோடு ஒப்பிட்டு மனங் குழைந்தேன். போன காலத்துப் பழுதுகளை மன்னிக்கவும், இனி வருங்காலத்தில் அவருடைய சித்தத்தைச் செய்வதற்கும், அவருடைய ஜீவிய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும், முன்னிலும் அதிக பூரணமாய் அவருக்கே ஆதீனமாயிருப்பதற்கும் வேண்டிய கிருபையும் பெலனும் தரவும் அவரை அண்டிக்கொண்டேன். துக்கம் ஒரு பக்கத்திலும் சந்தோஷம் ஒரு பக்கத்திலும் கசிவித்த ஆனந்தக் கண்ணீர் சொரிந்துகொண்டே வழி நடந்ததில் களைக்களை தெரியாமலே ஊர் வந்து சேர்ந்தேன். தெற்குக் கெவுனிக்கு வெளியே இருந்த ஆகாரக் கடையில் ஒரு கோப்பைத் தேப்பானம் சாப்பிட்டு, காணாமற்போன என் சாமான்களைப்பற்றி விசாரித்தபின், இயேசுவின் அன்பைப் பற்றிப் பிரசங்கித்தேன். பிறகு நகரத்துக்குள் போய்ப் பல விடங்களில் விசாரித்தும் பயனில்லாமல் வடக்குக் கெவுனிவழியாய் ஊரை விட்டுப் புறப்பட்டேன்.

வழி நடக்கையில் நான் தேவனோடு செய்துகொண்டு வந்த ஞான சகவாசத்தினால் உள்ளமும் உடம்பும் அயர்வு நீங்கியிருந்தது. அதைப் பார்த்து இன்று சாய்பொழுதிலேயே ஷிமுன்வான் ஊருக்கு இன்னமிருந்த ஆறுமைலும் நடந்துவிடலாம் என்கிற துணிவுண்டாயிற்று. அதற்குமுன் இன்னொரு தேப்பானக் கடைக்குப் போய் சுதேசிகளுடைய பலகாரம் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அந்நேரத்தில் முதல் அஞ்சலில் என் சாமான்களைத் தூக்கிவந்த கூலிகளில் ஒருவன் வந்தான். அவனை விசாரித்ததில் என் சாமான்களைத் தெற்கு கெவுனிக்குக் கொண்டுபோனபின், என் வேலைக்காரன் அவ்விடத்தில் கூலியாட்களை நிறுத்திவிட்டு தான் மாத்திரம் எங்கேயோ போய்த் திரும்புகையில் நான் முற்பட போய்விட்டதாயும் தான் உடனே புறப்படாமல் அந்த நாள் முழுமையும் தன் சிநேகிதன் வீட்டில் செலவுசெய்து பிறகு என்னண்டை வந்து சேர நினைத்திருப்பதாயும் சொன்னான். கூலியாட்கள் என் சாமான்களை அவனுடைய சிநேகிதன் வீட்டிற்குக் கொண்டுபோய் வைத்துப் போனார்களாம். அந்த வீட்டை எனக்குக் காட்ட அவனை அழைத்துப்போய் விசாரித்ததில் என் வேலைக்காரன் ஒரு பகலும் ஒரு இரவும் தங்களோடு இருந்தபின் வேறு கூலியாட்களை அமர்த்தி ஹங்சவ்வு ஊருக்குப் புறப்பட்டதாய் அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். இதற்கப்பால் ஒரு செய்தியும் கிடைக்காமையினால், ஷங்ஙாய்க்குத் திரும்புகிற என்

பயணத்தைச் சுறுக்காய் முடிக்க நினைத்து ஊரைவிட்டுக் கிளம்பினேன். இதற்குமேல் ஷிமுன்வானுக்குப் போகப் பொழுதிருந்ததில்லை. எனக்கு வேண்டிய யாவும் தர என் பரம பிதா வல்லவர் என்று அவரையே அண்டிக்கொண்டேன். அவர் என்மேல் வைத்திருந்த மாறாத அன்பும் கரிசனமும் இப்பொழுது ஒருமாதிரியாய் எனக்கு அனுபவிக்கக் கிடைத்தது. நீர் வற்றிப்போன ஆற்றினுள் வாயில் இருந்த நெடும் படகு ஒன்றில் இராத்தங்க எனக்கு உத்தரவு அகப்பட்டது. இன்றும் இராப்பொழுது வெகு குளிராகவே இருந்தது. தவிர, கொசுகு உபத்திரவமும் பெரிதாயிருந்தது. ஆயினும், சிறிது உறக்கம்கொண்டு இளைப்பாறினபின் சூரியோதயத்திற்கு எழுந்து பயணம் செய்யலானேன்.

(இன்னும் வரும்.)

A Model for Preachers

By the Rev. A. Paramanandam

பிரசங்கிகளுக்கு உத்தம முன்மாதிரி

(தொடர்ச்சி)

1. இயேசுவானவருடைய பிரசங்கங்கள் குறிவைத்துச் சுட்ட குண்டுகள்போல் ஜனங்கள் இருதயத்தில் படத்தக்கவைகளாயிருந்தன. சில சமயங்களில் ஜனங்கள் தங்களைக்குறித்து அதிகமாய்ச் சிந்திக்கும்படி உவமைகளினால் பேசினார். அவைகள் குறிப்புள்ளவைகளாயிருந்தது. அவருக்குச் செவிகொடுத்தவர்கள் அவருடைய கருத்து இன்னதென்று தெளிவாய் அறிந்துகொண்டார்கள். சீஷர்களும், அதிகாரிகளும், வேதபாரகரும், பரிசேயரும், மாயக்காரரும் அவருடைய போதகத்தைக் கேட்டார்கள். அவர் யாரைக்குறித்துப் போதித்தாரோ அவர்கள் தங்களைக்குறித்தே போதித்தார் என்று அறிந்துகொள்ளத்தக்கதாக அவ்வளவு தெளிவும் உயிருமுள்ளதாயிருந்தது. பாவத்தை எடுத்துக்காட்டி அதின் அகோரத்தையும் கேட்டையும் ஜனங்கள் உணரத்தக்கதாகவும் கிறிஸ்துவின் அன்பையும் இரட்சண்யத்தையும் அவர்கள் விசுவாசக் கையால் பற்றிக்கொள்ளத்தக்கதாகவுமுள்ள வைராக்கியமும் ஊக்கமும் உமது போதனையில் காணப்படுகிறதா? குறிவைத்து எய்த அம்புபட்டாற்போல் உமது

பிரசங்கத்தால் மனிதருடைய இருதயம் பிளந்து, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று சிந்தைகொள்ளும்படியாக உமது பிரசங்கங்கள் இருந்ததா? கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, உமது மாதிரியைக் கைக்கொள்ள எங்களுக்குக் கிருபையளித்தருளும். பிரசங்கமுறையைக் கற்றுக்கொள்ள விரும்பும் ஒவ்வொரு பிரசங்கியும் இரட்சகருடைய பிரசங்கத்தின் தன்மையையும் முறையையும் நன்றாய்க் கவனித்து அந்தமாதிரியே தானும் செய்ய முயற்சி எடுப்பானாக.

கர்த்தராகிய இயேசுவானவருடைய பிரசங்க மாதிரியைச் சாவதானமாய்க் கவனித்த நாம், அப்போஸ்தலருடைய மாதிரியையும் சிந்திப்பது நலமாக இருக்கும். கிறிஸ்து பரமேறுமுன் தாம் செய்துவந்த சுவிசேஷ ஊழியத்தை, தாம் தெரிந்தெடுத்த சீஷர்கள் கையில், 'நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' (மாற். 16[15]) என்று ஒப்புக்கொடுத்தார். அவர் பரத்துக்கெழுந்தருளினபின்பு அச்சீஷர்கள் கீர்த்திபெற்ற பிரசங்கிகளாய் விளங்கினார்கள். இவர்கள் இயேசுவோடிருந்து அவர் முறைகளைக் கேட்டு உணர்ந்து, மாதிரியைக் கண்டு படித்துப் பிரசங்கத்தொழிலுக்குச் சரியாய்த் தயாராக்கப்பட்டிருந்தார்கள். ஆயினும் உன்னதத்திலிருந்துவரும் பெலனைப் பெற்றுக்கொள்ளவேண்டியதாகவிருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தாவியானவர் அவர்கள்பேரில் இறங்கினபோது பிரசங்கிக்கும் மகத்துவ வரம் அவர்களுக்குக் கிடைத்தது. அதுமுதல் எருசலேம் முதல் பூமியின் கடைசிபரியந்தம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். இவர்கள் இந்த சுவிசேஷ வேலையைச் செய்வதில் காண்பித்த ஊக்கமும் முயற்சியும், அவர்கள் பிரசங்கித்த பொருளும், மாதிரியும் நாம் கைப்பற்ற வேண்டியவைகளாயிருக்கின்றன. ஜனங்கள் வியந்து கேட்கத்தக்க சொல் அலங்காரமுள்ள பிரசங்கங்களை எழுதி வாசித்து போதிக்க நற்சமயம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பரிசுத்தாவியானவர் அவர்களை எழுப்பினவுடனே அவர்கள் எழுந்து திடீரென்று பேசினார்கள். பேதுரு பேசின பிரசங்கம் நமக்கு திருஷ்டாந்தமாக எழுதப்பட்டிருக்கிறது (அப். 2[14-41]). இந்த அரிய வேலையைச் செய்வதற்கு எப்பொழுதும் ஆவியானவரால் நிரப்பப்பட்டிருந்தார்கள். ஸ்தேவானோடே ஜனங்கள் எதிர்த்துநிற்கக் கூடாமற்போயிற்று; ஏனென்றால் ஆவியானவரால் நிறைந்திருந்தான். 'அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கவும் கண்டார்கள்' (அப் 6[17]). சீஷர்கள் ஒருமனமாய் ஒரே விஷயத்திற்காக ஊக்கமுடையவர்களாயிருந்தினாலே மூவாயிரம் பேர் ஒரே நாளில் சுவிசேஷத்தைக் கேட்டுக் குணப்பட்டு ஞானஸ்நானம்

பெறக்கூடியதாக விருந்தது. கர்த்தாவே ஆவியானவராலே என்னை நிரப்பியருளும் என்று மன்றாடுவோமாக.

2. சீஷர்களிடத்தில் காணப்பட்ட விடாமுயற்சியும் பிரசங்கிகள் கைப்பற்றத்தக்கது. உதாரணமாக, தேவாலயத்தில் பிரசங்கித்துக்கொண்டிருந்த பேதுருவும் யோவானும் சங்கத்தார்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டபோது, அவர்கள் இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று கட்டளை கொடுத்தார்கள். அவர்களோ 'மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே நியாயம்' என்று உணர்ந்து சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போய்த் தேவனுடைய வசனத்தைத் தைரியத்தோடே பிரசங்கித்தார்கள். இதைப் பிரதான ஆசாரியனும் அவனைச் சேர்ந்தவர்களும் கேட்டு அவர்களைத் திரும்பவும் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்து காவலில் வைத்தார்கள். கர்த்தருடைய தூதனானவன் இரவில் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே அழைத்துக்கொண்டுவந்து, நீங்கள் போய்த் தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான். அவர்கள் அதைக் கேட்டு சங்கத்தாருக்கும் அதிகாரிகளுக்கும் ஆசாரியருக்கும் பயப்படாமல், தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம்பண்ணினார்கள். மறுபடியும் பிடிக்கப்பட்டு ஆலோசனைச் சங்கத்துக்குமுன் நிறுத்தப்பட்டார்கள். நாங்கள் உங்களுக்குக் கண்டிப்பாய் கட்டளையிட்டிருந்தும் எருசலேமை உங்கள் போதகத்தினால் நிரப்பினீர்கள் என்று அவர்கள்மேல் குற்றம் சாட்டினார்கள். மறுபடியும் அவர்களை அடித்து இயேசுவைக்குறித்துப் பேசப்படாது என்று தாக்கீதுபண்ணி அனுப்பினார்கள். அவர்களோ அதைப் பொருட்டாக எண்ணாமல் ஆலோசனைச் சங்கத்தைவிட்டு சந்தோஷமாய்ப் போய் நாடோறும் வீதிகளிலும் வீடுகளிலும் ஆலயங்களிலும் பிரவேசித்து உபதேசித்து, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்துக்கொண்டு வந்தார்கள். (அப். 4, 5 அதி). சனதிரீம் சங்கம் இவர்கள் விடாமுயற்சியாய் ஊக்கத்தோடே பிரசங்கித்ததைக் கண்டு பயந்தார்கள். இக்காலத்திலும் சுவிசேஷப் பிரசங்கம் ஊக்கமாய் நடத்தப்படுகிற விடங்களிலுள்ள பிராமணர் முதலான இந்துக்கள் பிரசங்கிகளை இம்சித்து நிந்தித்தாலும், அவர்கள் உள்ளத்திலோ பயமும் திகைப்பும் உண்டு. சுவிசேஷப் பிரசங்கியே! பேயின் கோட்டை கொத்தளங்களை இடித்து சுவிசேஷ ராஜ்யத்தை மனுஷருடைய இருதயங்களிலே கட்டுவதற்கு கர்த்தர் சித்தங்கொண்டிருக்கிறார். இடைவிடாமல் ஊக்கத்தோடே கிறிஸ்துவின் கொடியை

ஏந்தி, வாழ்விலும், தாழ்விலும், எல்லாக் காலத்திலும் பயமின்றி அவரைப் பிரசங்கிப்பீராக. அப்போஸ்தலரும் ஆதிக்கிறிஸ்தவர்களும் ஜீவ வசனங்களைப் பிரசங்கிப்பதில் ஆவத்தமும் விடாமுயற்சியுமுள்ளவர்களாயிருந்தார்களே. சத்துருக்களின் விரோதமும் பற்கடிப்பும் எப்படியிருந்தாலும் அவைகளைக் கவனியாமல் செய்யவேண்டியதைத் திருந்தச் செய்வீராக.

3. அப்போஸ்தலர் இயேசுகிறிஸ்துவையே எங்கும் பிரசங்கித்தார்கள். அவருடைய லட்சணங்களை மாத்திரமல்ல அவருடைய உத்தியோகத்தையும் விவரித்துவந்தார்கள். அவர் சிலுவையில் அறையுண்டவர் என்று சொல்ல வெட்கப்படவில்லை. மரித்தோரிலிருந்து உயிர்த்தவர் என்று போதிக்க சந்தேகப்படவில்லை. பாவங்களை மன்னிக்கிறவர், சர்வ ஜனங்களுக்கும் இரட்சகர், சகலத்துக்கும் மேலான ஆண்டவர், உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் நியாயாதிபதி என்று உணர்வோடே உபதேசித்தார்கள். இவைகளே இயேசுகிறிஸ்துவின் சுத்த சுவிசேஷம். அவர் நாமத்தினால் சர்வ ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் சமாதானம் உண்டு என்று கூறவும் ஐயப்படவில்லை. அவர்கள் பிரசங்கங்களெல்லாம் ஆவியினாலும் பலத்தினாலும் நிறைந்து, இருதயங்களை அசைக்கத்தக்க தாபந்தம் பொருந்தினவைகளாயிருந்தன. தங்கள் மீட்பருக்கு எங்கும் சாட்சி சொல்லுகிறவர்களாயுமிருந்தார்கள். அவர்களும் திருஷ்டாந்தங்களையும் உவமானங்களையும் உபயோகித்தார்கள். அவர்களுடைய பிரசங்கம் யூதர், கிரேக்கர், அந்நியர், அடிமைகள், சுயாதீனர் ஆகிய சகல நிலைமையுள்ளவர்களுக்கும் ஏற்றவைகளாயிருந்தன. அப்போஸ்தலருடைய நடபடி புஸ்தகத்தில் அவர்களைக்குறித்த லட்சணங்களை வாசித்தறியலாம். ஓ பிரசங்கியே! உன் பிரசங்கத்தில் இயேசுவே உட்பொருளாயிருக்கிறாரா? பிரசங்கிகளில் அநேகர் தங்கள் தத்துவஞானத்தையும் வானசாஸ்திரத்தையும், பூமிசாஸ்திரத்தையும் தேச சரித்திரத்தையும் எடுத்துக் கூறும்போது, கிறிஸ்துவை ஜனங்களுக்கு எடுத்துக்காட்ட மறந்துபோகிறதுண்டு. கிறிஸ்து என்னும் பேர் வராமல் போதிக்கும் பிரசங்கங்கள் இக்காலத்தில் தமிழ் தேசங்களில் செய்யப்படவில்லையோ? பவுல் அப்போஸ்தலன் இதின் சம்பந்தமாய் தன்னைக்குறித்துச் சொல்வதென்ன? 'சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ' (1 கொரி. 9[16]) என்று ஓலமிடுகிறான். கிறிஸ்தவ பிரசங்கி ஒருவன் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவைப் பிரசங்கிக்காமல் போவானாகில் அவனுக்கு ஐயோ என்று சுவிசேஷமும் ஓலமிடுமல்லவா?

கடைசியாக, பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்குச் சொன்னதை ஞாபகங்கொள்வோமாக; கருத்தாய் தியானிப்போமாக. 'நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்தி சொல்லு. நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று' (2 தீமோ. $4^{1, 2, 5}$). இதை உண்மையாய் உணர்ந்து கைக்கொண்டு கர்த்தரின் நாமத்தில் பிரசங்கிகளாயிருப்போமாக.

C. L. S. PRESS, MADRAS—1915

No. 110 ஜூலை 1915

வேதியர் விளக்கு

MADRA

The Synoptic Tradition

[From *Lectures on the Gospels by Dr. Findlay.*]

THE first three Gospels resemble each other in many particulars. This close resemblance points to the existence of some common basis, either written or oral, upon which they had founded their narratives. At least for the period of the Galilean Ministry the resemblances are so great that they seem to imply the use by all three of some writers' narrative which they more or less incorporated.

St. Mark comes the nearest of all to this original common narrative.

The following is a general outline of the common material.

1. Baptist's Ministry and preparation.
2. Baptism and Temptation of Jesus.
3. Christ's return to Galilee and Controversy with the Pharisees *re* the Sabbath.
4. Early Ministry and Teaching in Galilee—Christ's popularity.
5. The calling of the twelve and their Mission.
6. Falling away of the people.
7. Retirement of Jesus and testing of disciples.
8. Transfiguration.
9. Prophecy of Death and Resurrection.
10. Journey through Perea to Jerusalem.
11. Public entrance into City.
12. Final testimony to Jewish rulers.
13. Prophecies of the judgement.

14. Last Supper.
15. Anguish in the garden.
16. Betrayal and Denial.
17. Double Trial before High Priest and Pilate.
18. Crucifixion and Death.
19. Resurrection and appearances to women and Apostles.
20. Commission to Apostles.

The Gospel according to St. Mark

The second Gospel reflects more immediately the common tradition of the Primary Oral Gospel from which all three drew their material.

I. In proof of the early origin of Saint Mark's Gospel we may note:

1. The limits of the Gospel correspond to those indicated in Acts i. 21–22; x. 34–43.

2. The style has the characteristics of a spoken address.

It is vivid and pictorial and colloquial. It freshly records the impressions made upon the eye witnesses by the sayings and doings of Jesus.

3. In the contents of the Gospel, Mark keeps closely to the matter of the original common narrative.

The Gospel has peculiar to itself only

(1) One Parable	...	Mark iv. 26–29
(2) Two Miracles	...	Mark vii. 31–37
		„ viii. 22–26.

In the whole Gospel there are only 24 verses peculiar to it.

4. This view of the early origin is strengthened by the close connexion of Mark with Peter. Mark is said to have written down what he heard from Peter.

It is thought, that although Mark was not a disciple of Jesus, that he had seen and heard him. It is also thought that he was the 'young man' mentioned in Mark xiv. 51, 52.

It is difficult to understand why such a trivial incident should have been mentioned by any other than the one to whom it had happened. Note also Mark xiv. 13. There is a curious tradition that this young man who carried the pitcher was also Mark.

It is very likely that the young man of Mark xiv. 51, 52 was Mark. It is not at all impossible that the young man of xiv. 13 may also have been he. Mark accompanied Paul and Barnabas on their first Missionary journey. He was cousin to Barnabas. He grew discouraged and returned home (Acts xiii. 13). Afterwards Paul refused to take him and separated from Barnabas on that account (Acts xv. 38). Mark was afterwards reconciled to Paul and was greatly valued by him in later years (Col. iv. 20; Philem. 24). Writing to Timothy on the eve of his death Paul expresses a desire to have Mark with him (2 Tim. 4–11).

It is thought that Mark went to Rome with Peter shortly before his death, and that the Gospel originated in A. D. 67. Mark wrote, it is said, at the request of the Roman elders, to preserve Peter's testimony.

II. The style of the Gospel.

1. One peculiarity of the Gospel is the speed at which the writer passes from one subject to another.

'Straightway' is his favourite adverb. He gives scarcely any long discourses and he rarely stops to make reflections of his own. His art consists in bringing together a crowd of figures and a rapid succession of events briefly and speedily pourtrayed.

2. Fulness of descriptive detail is a chief characteristic.

This Gospel reproduces minute details which give lifelikeness to a picture.

(*a*) Mark uses the language of direct narration. He gives each speech as though spoken to our ears: each act as performed before our eyes.

(*b*) Though he wrote in Greek, Mark quotes words used by Christ in the vernacular of the country. He

alone gives us the 'Abba' Father of Gethsemane; Talitha Cumi; Ephphatha, etc.

(*c*) He gives particulars of persons, places, time, etc., such as a vivid observer is likely to remember.

(*d*) He notes the impressions made on the bystanders and the people generally by the words and deeds of Jesus.

(*e*) Most precious of all are the touches he adds to the portrai of the Master. His gestures, tones, looks are often given.

E.g., Ch: i. 13; i. 3: i. 42, 43; vi. 5, 6

Compare vi. 14-19; with Matt. xiv. 1-12 and Lk: iii. 19, 20 ix. 7-9.

and vi. 30-52 with Matt. xiv. 13-16 and Lk: ix. 10-17.

The Church in Ephesus

எபேசு சபை

வெளிப்படுத்தின விசேஷம் 2. 1-7.

வெளிப்படுத்தின விசேஷப் புஸ்தகத்தில் கண்டிருக்கிற ஏழு சபைகள் மற்றச் சபைகள் யாவற்றிற்கும் அறிகுறியானவைகள் என்கலாம். இந்தச் சபைகளையல்லாமல் ஆசியா நாட்டில் பேர் கூறியிராத பேர்போன வேறு பல சபைகளுமிருந்தன. இந்த ஏழு சபைகள் தான் அக்காலத்தில் முதற்றரமானவைகளாய் இருந்தனவென்று எண்ணப்படாது. இராஜாங்க தபால் மார்க்கத்தில் இச்சபைகளிருந்தமையால் அச்சபைகள் மூலமாய் மாகாணமுழுவதிலும் இருந்த இதர சபைகளுக்கும் நிருபங்கள் வாசிக்கப்பட்டுக் கேள்விப்படக்கூடியதாய் இருந்தது.

கிறிஸ்தவ சபைகளின் நிலைமையும் அனுபவங்களும் ஒருவாறு ஒன்றுக்கொன்று ஒத்திருந்தபோதிலும், ஒவ்வொரு சபைக்கும் கூற வேண்டிய விசேஷித்த சத்தியம் வெவ்வேறாய் இருந்தது.

முதலில் தனித்தனி சபைக்கும், பின்பு சபைகளெல்லாவற்றிற்கும் உண்டான கர்த்தருடைய தரிசனத்தைக்குறித்து எழுதியிருந்தாலும், அந்தக் காட்சி தனித்தனி சபைக்கும் உண்டாயிற்று. ஆயினும் அதின் கருத்து என்னவென்று மொத்தமாய்ச் சொல்லுதலும் கூடாமை.

162015
600 008

ஒவ்வொரு சபைக்கும் அருளப்பட்ட வாக்குத்தத்தங்களும் ஒன்றுக்கொன்று வேற்றுமையாகக் காண்கிறது.

I. சபைகளுக்குச் சொல்லப்பட்ட சமாச்சாரங்க[illegible]ப் என்னும் அத்தியட்சர்களுக்கல்ல, நட்சத்திரங்கள் என்னும் சபைகளின் தூதர்களுக்கே அனுப்பப்பட்டது. திருச்சபையின் தலைவருடைய சித்தம் பூலோகத்திலுள்ள சபைகள் மூலமாக வெளியாயிற்று. சபைகளாலேயே அவர் அறியப்படுகிறார். தமக்குச் சொந்தமானவர்களை அவர் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுகிறார். அவர்கள் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறார். அவர்களுடைய காரியங்களெல்லாம் அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இருக்கின்றன. 'உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்' என்று ஐந்து நிருபங்களிலும் ஆரம்பமாகச் சொல்லுகிறார். அதுவுமல்லாமல், சிமிர்னாசபையின் தூதனுக்கு 'உன் உபத்திரவத்தை அறிந்திருக்கிறேன்' என்றும், பிலதெல்பியா சபையின் தூதனுக்கு 'உன் குடியிருப்பை அறிந்திருக்கிறேன்' என்றும் சொல்லுகிறார். நாம் எவ்வித நிலைமையுள்ளவர்களாயிருந்தாலும் நம்முடைய பேரும், இருப்பிடமும், நம்முடைய கிரியைகளும் அவருக்கு நன்றாய்த் தெரியும். நாம் அவரால் அறியப்பட்டிருக்கிறோம்.

II. சர்வவல்லமையுள்ள கர்த்தர், எபேசு சபையாருடைய பிரயாசத்தையும், பொறுமையையும், பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமலிருக்கிறதையும் சோதித்துக் கண்டறிவதையுங் குறித்துப் புகழ்ந்து பேசுகிறார்.

(a) எபேசு பட்டணத்தில் மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் இருந்தது. இந்த தேவியைச் சேவிக்கும்படி ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுவார்கள். பவுலின் முயற்சியால் பலமாய் கர்த்தருடைய வசனம் இங்கே விருத்தியடைந்தது. கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. பிற்காலத்தில் இந்தத் தியானாள் கோவில் அழிந்து பாழாய்ப்போயிற்று (ஆழமாய்ப் புதைந்திருந்த இந்த ஆலயம் சிறிது காலத்துக்குமுன் தேசபரிசோதனைக்காரரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது).

(b) இப்பட்டணத்துக்கருகே ஓர் துறைமுகமிருந்தது. இதற்கருகாமையிலிருந்த நதி பிரவாகக் காலத்தில் மணல்களை யடித்துக் குடாவைத் தூற்றிவிடாதபடி துறைமுக அதிகாரிகள் பலத்த முயற்சி எடுப்பது வழக்கம். கி. பி. 65-ம் ஆண்டில் இத்துறைமுகத்தை தூர் எடுத்து வைத்தார்கள். இப்போதோ அந்தப் பட்டணம் கடலுக்கு ஆறுமைலுக்கப்பால் இருக்கிறது. ஆற்றுமணலால் கடல் ஓரம் நிறைந்து வரவர விலகிப்போயிருக்கிறது.

(c) எபேசு பட்டணம் ரோமை ராஜ்யத்திலுள்ள சின்ன ஆசியாவுக்குத் தலைநகரி. இதிலிருந்து சின்ன ஆசியாவிலுள்ள மற்றப் பட்டணங்களுக்குப் பாதைகளிருந்ததினாலும், இங்கிருந்து கிரேக்கு இத்தாலியா முதலிய பிரதேசங்களுக்கும் கடல்மார்க்கமாய்ப் போகும் வழி இருந்ததினாலும் வர்த்தகர்கள் கொண்டுவரும் சரக்குகளினால் வியாபாரஞ் செழித்துப் பேர் பெற்றிலங்கினது. பக்கத்திலிருந்த சிறிய குன்றின்மேல் கட்டப்பட்டிருந்த அழகான கோவிலிலிருந்த தியானாள் பேராலே வர்த்தகங்கள் நடைபெற்றன. வியாபாரத்தில் விளைந்த லாபம் இக்கோவில் பொக்கிஷத்தைச் சேரும். அந்நாட்டு நாணயத்திலே இம்மகா தேவியின் ரூபமாகிய தேனீ அச்சிடப்பட்டிருக்கும்.

(d) சபைகளைச் சந்திக்கும்படி வருகிறவர்கள் இப்பட்டணத்துக்கூடாய்ப் போன இராஜபாட்டை வழியாய்ப் பிரயாணஞ்செய்வார்கள். அநேகர் சுவிசேஷத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தமும் இரத்தச்சாட்சிகளாய்க் கொல்லப்பட்டிருக்கிறபடியால், ரோமாபுரிவரைக்கும் 'இரத்தச்சாட்சிகளின் பாட்டை' என்று அழைக்கப்படுகிறதுண்டு. இக்னேஷியஸ் என்பவர் இதைக்குறித்து 'கர்த்தருக்கென்று கொல்லப்பட்டவர்களுடைய பாதை' என்று எழுதியிருக்கிறார்.

பவுலும், தீமோத்தேயுவும், யோவானும் இந்நகரில் கர்த்தருக்காக ஊழியஞ்செய்திருக்கிறார்கள். இன்னும் பலரும் சுவிசேஷத்தைப் போதித்து பற்பல காலத்தில் உழைத்து வந்திருக்கிறார்கள். இங்கே இருந்தவர்கள் கிறிஸ்தவர்களாயிருக்க எவ்வளவோ பிரயாசத்தையும், கஷ்டத்தையும் அடையவேண்டியதாக விருந்தது. ஏழு சபைகளில் மற்றெந்த சபையும் இந்தச் சபையைப்போல இந்தக் காரியத்திற்காக இவ்வளவாய்ப் புகழப்படவில்லை.

இக்னேஷியஸ் 'பொய்யான போதனைகளுக்கு உன் செவிகளை விலக்கினாய்' என்று எழுதுகிறார். ஆம், எபேசு சபை, சர்வவல்லமையுள்ள கர்த்தர் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை வெறுத்தது நிசம் (வாக். 6). இந்த மதஸ்தர் அப். 20^{29}-ல் 'கொடிதான ஓநாய்கள்' என்றழைக்கப்படுகிறார்கள்.

இன்னும் (கி. பி. 117-ல்) இக்னேஷியஸ் 'விசுவாசத்திலும், கண்டிப்பிலும், சகிப்பிலும், நீடிய பொறுமையிலும் நான் உங்களால் போராட்டத்தில் பழக்குவிக்கப்படவேண்டும்' என்று எபேசு சபையைக்குறித்துச் சொல்லியிருக்கிறார்.

ஜனங்கள் துறைமுகத்தை மூடாமல் திறந்துவைக்கும்படி எவ்வளவாய் முயற்சி எடுத்துக்கொண்டார்களோ, அவ்வளவாய் தீமை

யையும் பொல்லாப்பையும் தங்களைவிட்டு நீக்கவும், பரமலோகம் தங்களுக்காகத் திறந்துவைக்கப்படவும் முயற்சித்தார்கள்.

III. கண்டிப்பு 'நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு.' அன்பை விடவில்லை, ஆதியில் கொண்டிருந்த அன்பையோ விட்டார்கள் (அப். 19); விசுவாசிகளானார்கள்; ஞானஸ்நானம் பெற்றார்கள்; பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டார்கள்; இவர்களால் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட்டது. தாங்கள் வைத்திருந்த தீமையான புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள். பவுலும் (எபே. 1^{15}) 'பரிசுத்தவான்கள் எல்லார்மேலுமுள்ள அவர்கள் அன்பைக்குறித்துக் கேள்விப்பட்டு இடைவிடாமல் அவர்களுக்காக ஸ்தோத்திரம் பண்ணினார்' (அப். $20^{36, 37}$). பவுலை எபேசு சபையார் வெகுவாய் நேசித்தார்கள். அவன் ஊரைவிட்டுப் புறப்படுகிறபோது 'கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தஞ்செய்து கப்பல்வரைக்கும் அவனோடுகூடப் போனார்கள்.' எவ்வளவு ஆழமான அன்பு இது. இப்போதோ அவர்கள் அன்பு தணிந்துபோயிருக்கிறது. மனுஷருக்குள்ள வழக்கமான கண்ணியில் விழுந்துவிட்டார்கள். இந்தப் பொல்லாப்பை அறிந்துகொள்வதற்காக ஒவ்வொருவருடைய நடபடிகளையும் நிலைமையையும் சிந்தனை செய்வாயாக. நாம் ஆதியில் கொண்டிருந்த அன்பை நினைவுகூர்ந்து, அதைக் கையாடி நடப்பதே போதுமானது. முன் நமக்குள்ள அன்பை புதுப்பித்துக்கொள்வோம். அதையே விரும்புகிறார். அன்பு தணிந்துபோக விடப்படாது. 'நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக.' (வாக். 5.)

விளக்குத்தண்டு நீக்கிவிடப்படும். இது அழிவைக் காட்டுகிறதில்லை. மகிமையும் மேன்மையும் போய்விடும் என்பதைக் காட்டுகிறது. வியாபாரமும் செல்வாக்கும் செழித்திருந்தபோது எபேசுவின் நிலைமை சிறப்பாகவிருந்தது. அவைகளில் மாறுதலுண்டானபோதோ அப்பட்டணத்தின் கீர்த்தியும் சிறப்பும் மங்கிவிட்டாற்போல், சபையின் நிலைமையும் இருந்தது என்றறிந்துகொள்வோமாக.

IV. வாக்குத்தத்தம். (வச. 7) 'தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்.'

தியானாள் ஓர் மலைத்தேவி. அவள் படத்தில் மரங்களின் ரூபத்தையும் பார்க்கலாம். அந்த ஊர் ஜனங்களின் அபிப்பிராயத்தையே மூலமாகக்கொண்டு சர்வவல்லவர் ஜீவவிருட்சத்தின் கனியைக் கொடுத்துத் திருப்தியாக்கிச் சந்தோஷிப்பிப்பதாக வாக்கருளுகிறார்.

விசுவாசிகளுக்குத் தேவனிடத்திலுண்டாகும் ஐக்கியம் மேலான இன்பத்தை அளிக்கிறது. அவருடைய சந்தோஷத்தினால் அவர்கள் ஆத்துமா திருப்தியடைகிறது.

இக்காலத்தில் விசுவாசிகளாயிருக்கிற நம்முடைய காரியமென்ன? இங்கேயே தேவனோடு பழகி, ஐக்கியமாக ஜீவித்து வருகிறோமா? நாம் ஜீவ விருட்சத்தின் கனியாகிய கிறிஸ்துவை ஆவிக்குரிய அப்பமாகப் புசித்து, நம்முடைய ஆத்துமா பலத்தின்மேல் பலத்தை அடைகிறதா? நம்முடைய கதி நித்திய கதியாயிருக்கிறதா? எபேசு சபையின் தூதனுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தத்தை நம்முடையதாக்கிக்கொள்வோமாக.

பாடங்கள்

அப்போஸ்தலர் 19 அதி.
வெளிப்படுத்தல் 1. 9—2. 7.

A Grace-filled Life

The ‘Retrospect’ of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டேய்லர் ஐயரின் ‘பின்னோக்குச் சரித்திரம்’

(தொடர்ச்சி.)

பதின்மூன்றும் அதிகாரம்

ஆகஸ்ற்று, 7௳

முதலில் என் உடம்பு அதிக நோவாயிருந்தது. தொண்டையும் இரணமாகி வலித்தது. அதை மறக்கும்பொருட்டு, இவ்வளவு காலமாய் பகலின் வெயிலையும் இரவின் குளிரையும் தாங்குவதற்கு எனக்குத் துணைசெய்த தேவனுடைய ஆச்சரியமான அன்பைத் தியானம் பண்ணிக்கொண்டேன். என் காரியங்களையெல்லாம் அவருக்கே ஒப்புவித்து, என் சாமான்கள் திரும்பக் கிடைப்பது எனக்கு நன்மையும் அவருக்கு மகிமையுமாகுமானால் அவை கிடைக்கும் என்கிற துணிவடைந்தேன். என் பிரயாணத்தின் மிகச் சங்கடமான பாகம் இத்தோடே தொலையும் என்கிற நம்பிக்கையினால், எனக்கு இக்கோத்திலிருந்த களைப்பையும் காலவலியையும் பாராட்டாமல் நடந்து

ஷிமுன்வானுக்கு வந்து சேர்ந்தேன். அங்கு காலைச்சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டபின் என் கையில் இன்னம் எண்ணூற்றுப் பத்துக்காசு மீந்திருந்தது. இங்கிருந்து கியாஹிங்பூவுக்குப் போக வியாபாரப் படகுச் சத்தம் நூற்றிருபது காசும் அங்கிருந்து ஷங்காய்க்குப் போக முந்நூற்றுப் பத்துக்காசும் நீங்கலாக மீருவது முந்நூற்று முப்பதுகாசு. இது ஏறத்தாழ ஒரு ரூபாய்க்குச் சமம். உடனே படகு ஆபீசுக்குப்போய் விசாரித்ததில், இப்போது ஆறு வற்றமாயிருந்தபடியால் சரக்கேற்றிப் படகுகள் வரவில்லையென்றும் இங்கிருந்து இன்றும் நாளையும் ஒரு படகும் புறப்படாதென்றும் அறிந்தேன். தபால் படகுகளாவது கியாஹிங்பூவுக்குப் போகாதா என்று கேட்டதில் அவை முந்தியே புறப்பட்டுவிட்டன என்று சொன்னார்கள். இனி வேறு சொந்தக்காரர்களுடைய படகு அகப்படுமோவென்று தேடிப் பார்த்ததில் அதுவும் அகப்படவில்லை. ஷங்காய்வரையில் தகுந்த சத்தத்திற்கு யாராகிலும் படகு விடுவார்களா என்று கேட்டுப் பார்த்தும் யாரும் விடமாட்டோம் என்றார்கள். விட்டிருப்பார்களானால் என் சங்கடங்களெல்லாம் நிவிர்த்தியாகியிருக்கும்.

இப்படி மனது கலங்கிக்கொண்டிருக்கையில், கால்வாயின் ஒரு முடுக்கில் கியாஹிங்பூத்திசை நோக்கி ஒரு தபால் படகு போகக் கண்டேன். இது அதிர்ஷ்டவசமாய்த் தாமதித்திருந்து புறப்பட்ட கியாஹிங்பூவைச்சேர்ந்த படகாக்கும் என்று மனதிற்கொண்டு ஆபத்துக்கு உதவி அகப்பட்டதே என்கிற நினைவிலே கால் நோவையும் களையையும் மறந்து அதைத் தொடர்ந்து பிடிக்கவேண்டி என்னாலானமட்டும் ஓடினேன். ஒரு மைல் ஓடிப் பிடித்தேன்.

‘படகு கியாஹிங்பூவுக்கா போகிறது’ என்றேன்.

‘இல்லை.’ இந்த ஒற்றைச் சொல்தான் வந்த உத்தரம்.

‘அந்தத் திசைக்காகிலும் போகாதா?’

‘போகாது.’

‘அந்தத் திசையாய் எவ்வளவு தூரம் படகு போகுமோ அவ்வளவு தூரமாகிலும் என்னை ஏற்றிக்கொள்ளலாகாதா?’

‘ஏற்றிக்கொள்ளலாகாது.’

மனங்களைத்து உடம்பயர்ந்து புல்லில் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து மூர்ச்சையானேன்.

ஸ்மரணை தெளிந்ததும் சிலர் பேசின சத்தம் என் காதில் விழுந்தது. அது என்னைப்பற்றிய பேச்சாயிருந்தது. ஒருவன் ‘இவன் அசல் ஷங்காய்ப் பேச்சுப் பேசுகிறான்’ என்றான். அவர்கள் பேசின பேச்சும் ஷங்காய்ப் பேச்சுதான். அதனால் அவர்கள் ஷங்காயைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்துகொண்டேன். கொம்பி

யுட்கார்ந்து பார்த்தபோது அவர்கள் கால்வாயின் அந்தண்டைப் பக்கத்தில் ஒரு பெரிய வியாபாரப் படகிலிருந்தார்கள். ஒருவரோடொருவர் ஆலோசித்துக்கொண்டு என்னை இட்டுப்போக தங்கள் சிறு வள்ளத்தை அனுப்பினார்கள். அதிலேறி அவர்களுடைய மரக்கலத்திற்குள் வந்தேன். அவர்கள் எனக்கு வெகு பக்ஷம் காட்டிக் கொஞ்சம் தேப்பானம் கொடுத்தார்கள். ஆயாசம் தீர்ந்து முகம் தெளிந்தபின் கொஞ்சம் சாப்பாடும் போட்டார்கள். பிறகு, என் காலுக்குச் சுகம் உண்டாகும்படி சப்பாத்தையும் துணியுறையையும் கழற்றினேன். படகு மாலுமி அதைக் கழுவுகிறதற்கு வேண்டிய வெந்நீர் தந்தான். என் கதையைக் கேட்டு கொப்புளமெழும்பியிருந்த என் பாதங்களையும் பார்த்தபின் அவர்களுடைய மனது மிகவும் இளகி, அந்த வழியாய்ப் போன கலங்களையெல்லாம் நான் போகவேண்டிய ஊருக்குப் போகிறவைகளா என்று விசாரித்தார்கள். ஒன்றும் அகப்படவில்லை. பிறகு சில மணிநேரம் நித்திரைசெய்து, குவண்டிக் கோவிலில் கூடின ஜனத்திற்கு உபதேசிக்கலாம் என்று நினைத்து மாலுமியோடு கரைக்குப் போனேன்.

பெரிய படகுக்குச் சீனப்பாஷையில் ஜங்கு என்று பெயர். நான் இருந்த ஜங்கை விட்டுக் கரையிறங்குமுன் அதில் இருந்தவர்களுக்கும் மாலுமிக்கும் சொன்னது இது:—இப்போது என் உடம்பில் பலமேயில்லை, கியா—ஹிங்—பூவுக்கு நடக்கவும் என்னால் இயலாது. தபால் படகுக்குக் கேள்வி கொடுத்துப் போகலாமேயென்றால் அதற்கு என் கையில் நிர்வாகமில்லை. நான் சேவிக்கிற தேவன் எனக்கு ஒத்தாசை செய்யப்போகிற விதம் எனக்குத் தெரியாது. ஆயினும் அவர் நிச்சயமாகவே ஒத்தாசை செய்வார். இப்பொழுது நான் செய்ய வேண்டிய தென்னவெனில் நான் இருக்கிற இடத்திலேயே அவருக்கு ஊழியம் செய்வதுதான். எனக்கு ஒத்தாசை அவரிடமிருந்து வருவதைப் பார்ப்பதே நானும் ஷங்காயிலிருக்கிற வேறு மிஷனரிகளும் போதிக்கிற மார்க்கம் சத்தியமார்க்கம் என்பதற்கு உங்களுக்கு ரூபகாரம்.

மாலுமியுடன் பேசிக்கொண்டே குவண்டியூருக்கு நடக்கையில் ஒரு தபால் படகு வந்தது. மாலுமி இதில் புறப்படலாமே என்க, அதற்கு என் கையில் காசு இல்லை என்றேன். ஆயினும், அவன் அந்தப் படகை நிறுத்தச்சொல்லி விசாரித்ததில் அது ஷங்காய்க்கு ஒன்பது இங்கிலீஷ்மைல் தூரத்ததாகிய ஒரு ஊர்வரைப் போகுமென்றும், அங்கிருந்து தபால் கட்டுகளை ஒரு படகாள் சுமந்து நகரத்துக்குக் கொண்டுபோவான் என்றும் வெளிப்பட்டது. அதற்குமேல் மாலுமி: ‘இவர் அந்நிய தேசத்தார், ஷங்காயிலிருக்கிறவர், அவரு

டைய சொத்துக்களை இவ்விடத்துக் கள்ளர் கொண்டுபோய்விட்டார்கள், ஊருக்குப்போகக் கையில் ஒன்றுமற்றவராயிருக்கிறார். நீங்கள் போகுமிடம் மட்டும் இவரைக் கொண்டுபோய் அப்பால் பிரயாணத்திற்கு ஒரு சிதம் நாற்காலி அமர்த்திக் கொடுத்தால் ஷங்காய்க்கு வந்ததும் உங்களுக்குக் கூலி கொடுப்பார். நீர்த்தாழ்வால் என் படகு அதோ தரை தட்டிக் கிடக்கிறது. அதினால் நான் புறப்பட முடியவில்லை. ஒன்று சொல்லுகிறேன், இவர் ஷங்காய் வந்ததும் கூலி கொடாவிட்டால் நீங்கள் திரும்புகாலில் நானே அந்தக் கூலியை உங்களுக்குக் கொடுக்கப் பொறுப்பாளி’ என்றான். சீனருடைய குணம் தெரிந்தவர்களுக்கு இதொரு பெரு வியப்பாயிருக்கும். கைக்காசை பிறருக்குக் கொடுக்க அவர்களுக்கு மனதே வராது. அதிலும் முற்றும் முகம் அறியாத அந்நியனுக்குத் தானே வலியக்கொடுக்க மனமிருக்குமா? தபாற் படகுக்காரர் அதற்குச் சம்மதிக்கவே, நான் அதிற் பிரயாணியானேன். மறுபடியும் ஷங்காய்க்குப் பிரயாணம் கிடைத்ததற்காகச் சந்தோஷித்து ஆண்டவருக்குத் துதி செலுத்தினேன்.

நான் ஏறிப்போன மாதிரியான தபாற் படகுகள் அகலம் குறைந்து நீளம் அதிகமாயிருக்கும். உள்ளிடம் ஒடுக்கமானதால், பிரயாணி படுத்தே கிடக்கவேண்டும். அல்லாவிட்டால் ஒரு சிறு அசைவும் படகைக் கவிழ்த்துவிடும். ஆயினும், இது எனக்குக் கஷ்டமாயிருந்ததில்லை. படுத்துக் கிடப்பதே என் உடம்புக்குச் சுகமாய் இருந்தது. சீனாவில் இவைகளே மிகத் துரிதமான படகுகள். ஒவ்வொன்றிலும் இரண்டே யாட்கள் இருப்பார்கள்; இவர்கள் மாறி மாறிப் படகோட்டுவார்கள். இப்படி இரவும் பகலும் ஓயாமல் செய்வார்கள். அவர்கள் கையையும் காலையும் துடுப்பும் தண்டுமாக உபயோகிக்கிறார்கள். காற்று வளமாயிருந்தால், கால்களையே துடுப்பாக உபயோகித்து, ஒரு கையால் சிறு பாயை விரித்துப் பிடித்துக்கொண்டு, மறுகையால் சுக்கான் முடுக்குவார்கள்.

ஆகஸ்ற்றுமாதம் ஒன்பதாம் தேதியில் ‘நான் உன்னை விடேன், உன்னைக் கைவிடேன்;’ ‘இதோ, உலக முடிவுவரை நான் உங்களுடன் எப்போதும் இருக்கிறேன்’ என்றவருடைய சகாயத்தால் இன்பமும் சுறுக்குமான பிரயாணம் செய்து ஷங்காய்க்குச் சுகமாய் வந்தேன்.

Biblical Notes

வேத குறிப்புகள்

தூபம். Incense.

வெள்ளைப்போளம் சாம்பிராணி முதலிய கந்தவர்க்கங்களால் பலி பீடத்தில் கடவுளுக்குமுன்பாக ஆசாரியர் தூபங்காட்டுவார்கள் (யாத். 30^{24-26}). ஒவ்வொருநாள் காலையிலும் மாலையிலும் ஆசாரியர்கள் பலிபீடத்திலிருந்து அக்கினி எடுத்து இந்தக் கந்தவர்க்கப் பொடிகளை அதில் போட்டு, தூபங்காட்டுவார்கள் (யாத். 30^{7}. லூக். 1^{9}). பாவ நிவாரண நாளிலே பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திலே தூபங்காட்டுவான். ஆரோன் குடும்பத்தைச் சேர்ந்த ஆசாரியர் மாத்திரம் தூபங்காட்டவேண்டும் (எண். 16 அதி. 2 நாளா. 26^{16}). ஆசாரியர் தூபங்காட்டும்போது ஜனங்கள் வெளியே நின்று ஜெபம் பண்ணிக்கொண்டிருப்பார்கள். தூபங்காட்டுகையில் அதின் புகை வானத்துக்கு ஏறுகிறதுபோல தங்கள் ஜெபங்களும் ஏறும் என்று எபிரெயர்கள் நினைத்ததினாலே, தூபம் ஜெபத்துக்கு உவமையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது (எண். 6^{22-27}. சங். 141^{2}. மல். 1^{11}. லூக். 1^{10}. வெளி. 5^{8}). விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுவது பாவம் (எரே. 11^{12}). அந்நிய மார்க்கத்திலிருந்துவந்த ஆதி கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் நியமிக்கப்பட்ட சடங்குகளை அனுசரிக்காததுபோல, அவர்கள் முதலில் இந்தச் சடங்கையும் அனுசரிக்கவில்லை. கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்பட்ட பிந்தின காலங்களில் குகைமுதலான மறைவான இடங்களில் அவர்கள் ஆராதனை நடத்தும்போது அங்குள்ள துர்நாற்றத்தை நீக்கும்படி சுகந்த வாசனையுள்ள தூபவர்க்கங்களை எரிக்க ஆரம்பித்தார்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது எப்படியாயினும், கி. பி. 6-ம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் ஏற்படுத்தின கட்டளையை அனுசரித்து அல்லது தங்களைச் சுற்றியிருந்த அந்நிய மார்க்கத்தாருடைய வழக்கங்களைப் பின்பற்றி, கிறிஸ்தவக் கோயில்களிலே தூபங்காட்டத் தொடங்கினார்கள்.

தீர்க்கதரிசிகளின் புத்திரர். The sons of the Prophets. தீர்க்கதரிசிகளின் புத்திரர் என்பது தீர்க்கதரிசிகளின் மக்களை அல்ல அவர்கள் ஸ்தாபித்த சில சங்கங்களைச் சேர்ந்த மாணாக்கரைக் குறிக்கும். இந்தச் சங்கங்களில் தீர்க்கதரிசிகள் சன்மார்க்கத்துக்குரிய விஷயங்களைப்பற்றித் தங்கள் சிஷர்களுக்குப் போதித்து, பிற்காலங்களில் தங்களுக்குப் பதிலாக அவர்களே ஜனங்களுக்கு வேண்டிய புத்திமதிகளைக் கொடுக்கும்படி அவர்களை ஆயத்தம்பண்ணுவார்கள். சாமுவேல் சந்தித்த சில ஊர்களில் இந்தச் சங்கங்கள் இருந்ததினால், சாமுவேலே இச்சங்கங்களை முதலாவது ஏற்படுத்தினான் என்று நினைக்கிறதற்கு இடம் உண்டு. இது எப்படியாயினும், சாமுவேலுக்குப் பிறகு சில காலம் இவைகள் இருந்தன என்பது நிச்சயம். (1 சாமு. 10^{5}; 19^{18}. 1 இரா. 18^{13}; 20^{35}; 22^{6}. 2 இரா. 2^{3}; 6^{1}. ஆமோ. 2^{11}; 7^{14}.)

தீர்க்கதரிசியின் அடையாளங்கள். The mark of the Prophets. (1 இரா. 20^{37}. சகரி. 13^{6}.) இவ்வசனங்களில் தீர்க்கதரிசிகளுக்கிருந்த காயத்தைக்குறித்து வாசிக்கிறோம். முகமுக்காட்டினால் இந்தக் காயம் மறைக்கப்பட்டபடியால் இக்காயம் முகத்திலே இருந்தது என்று தீர்மானமாய்ச் சொல்லவேண்டும். மேலும் தீர்க்கதரிசி தன் முக்காட்டை நீக்கினவுடனே ராஜா இவன்தான் தீர்க்கதரிசி என்று அந்தக் காயத்தினாலே அறிந்ததினால், தீர்க்கதரிசிகள் ஒரு காயம் அல்லது தழும்பை தங்கள் ஊழியத்துக்கு அடையாளமாக நெற்றியில் தரித்திருப்பார்கள் என்று நினைக்கிறதற்கு இடம் உண்டு.

குறிப்பு. தமிழ் வேதாகமத்தில் சொல்லியிருக்கிற 'சாம்பல்' என்னும் பதத்துக்குப் பதிலாக மேற்கூறிய வசனங்களில் 'முக்காடு' என்னும் பதம் இருக்கவேண்டும். ஆங்கிலேய R. V. வேதாகமத்தில் மேற்சொன்ன வசனங்களைக் காண்க.

தீர்க்கதரிசியானவள். Prophetess.

1. தீர்க்கதரிசியின் மனைவி. ஏசா. 8^{3}.
2. தீர்க்கதரிசன ஊழியம் செய்கிறவள்.

மிரியாம். யாத். 15^{20}.

தெபோராள். நியா. 4^{4}.

உல்தாள். 2 இரா. 22^{14}.

நொவதியாள். நெகே. 6^{14}.

3. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசியான ஸ்திரீகள். யூதஸ்திரீயாகிய அன்னாள் (லூக். 2^{36}). சில கிறிஸ்தவ ஸ்திரீகள். (அப். 21^{9}; 1 கொரி. 11^{5}.)

வெளி 2^{20}-ல் சொன்ன கள்ளத் தீர்க்கதரிசியானவளுக்கு யேசபேல் என்று பெயரானதினாலே, இவள் தியத்தீரா சபையில் உள்ள கிறிஸ்தவர்களைப் பெரிய பாவத்துக்கு ஏவின ஒரு ஸ்திரீ என்று தோன்றுகிறது.

St. Paul

பரி. பவுல்

ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருத்தல். அப். 27^{28}.

அப். 25^{11}-ல் நாம் வாசிக்கிறபடி, பரி. பவுல் இராயனுக்கு அபயமிட்டதினால் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டார். இத்தாலியா தேசத்துக்கு லூக்காவும் அரிஸ்தர்க்குவும் அவரோடு போனார்கள் (27^{2}). (கி. பி. 59.) இக்கப்பல் யாத்திரையை பரி. லூக்கா அதிக திட்டமாய் விவரிக்கிறார். மீரா பட்டணத்தில் எகிப்து தேசத்திலிருந்து இத்தாலியாவுக்குத் தானியத்தைக் கொண்டுபோகிற சர்க்கார் கப்பல் ஒன்றிலே இவர்கள் ஏறிப்போனார்கள். வெகுகாலம் சென்று மாரி காலம் சமீபமானபோது யாத்திரை செய்யத் தலைப்பட்டு கப்பற்சேதத்தில் அகப்பட்டார்கள். சம்பவத்தின் சரித்திரத்தினால் அதிலே பவுலுக்கிருந்த ஞானமும் தைரியமும் பரிஷ்காரமாய் விளங்குகிறது.

அவர்கள் மெலித்தா (Malta) என்னும் தீவிலே விழுந்து கரை சேர்ந்து அங்கே மூன்று மாதமாகத் தரித்திருந்து புபிலியு என்பவனால் உபசரிக்கப்பட்டுத் திரும்பவும் கப்பல் ஏறி புத்தேயோலி என்னும் பட்டணத்தில் இறங்கி கரைவழியாய் ரோமாபுரிக்குப் போனார்கள். அவ்விடத்திலுள்ள கிறிஸ்தவர்கள் பவுல் வருகிறதைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைச் சந்திக்க மூன்று சத்திரம் என்கிற இடம் வரை எதிர்கொண்டு வந்தார்கள். (கி. பி. 60.)

ரோமாபுரியில் இரண்டு வருஷ காலமாய் தாம் வாடகைக்கு வாங்கின வீட்டிலே தம்மைக் காத்திருந்த சேவகனுடன் சஞ்சரித்து சுவிசேஷ வேலைசெய்தார். (அப். $28^{30, 31}$. பிலி. 1^{7-19}. கொலோ. 4^{3}. எபே. 3^{1} முதலானவை). (கி. பி. 60, 61.)

அவர் ரோமாபுரியிலிருக்கையில் நாலு நிருபங்களை எழுதினார். எபேசியர். கொலோ 4^{16}-ல் சொல்லப்பட்ட லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபம் இதுவானால், இது ஒரே சபைக்கு எழுதப்பட்டது என்கலாம். கொலோசெயர். அவர்களை அவர் இன்னும் சந்திக்கவில்லை (2^{1}). சபையிலே கள்ள உபதேசம் நுழைந்திருக்கிறதைக் கேட்டு எச்சரிப்பாக இந்நிருபத்தை எழுதினார். அதே சமயத்தில் பிலேமோன் என்பவனுக்கு எழுதி கொலோசெ பட்டணத்துக்குப் போனவர்கள் கையில் கொடுத்தனுப்பினார். அவர்களில், பிலேமோனுக்கு அடிமையாயிருந்து, ஓடிப்போய் பவுலால் குணப்படுத்தப்பட்ட ஒநேசிமு என்பவன் ஒருவன் (பிலே. 10. கொலோ. 4^{9}).

பிலேமோன் அவனைத் திரும்பவும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பவுல் மன்றாடுகிறார். பிலிப்பியர். இவர்கள் அவருடைய அவசரத்துக்கு எப்பாப்பிரோதீத்துவின் கையால் சகாயம் அனுப்பி இருந்தார்கள். சபையிலே பிரிவினை உண்டென்பதைக் கேட்டு இதை எழுதினார். தாம் சீக்கிரமாக விடுதலைபெற்று அவர்களிடம் வருவார் என்று நம்பினார்கள். (2^{24}. பிலே. 22)

பிந்தின ஜீவிய சரித்திரம் (கி. பி. 61–67.)

1, 2 தீமோத்தேயு, தீத்து என்னும் நிருபங்களைக்கொண்டு பரி. பவுலின் பிந்தின ஜீவிய சரித்திரத்தைப்பற்றி நாம் சிற்சில காரியங்களை அறியலாம். ரோ. 15^{24}-ஐக் கண்டால் அவர் ஸ்பானியா தேசம் போக விருப்பமாயிருந்தாரென்பதைக் காண்கிறோம். அவர் அப்படியே போனார் என்று ஓர் பாரம்பரை உண்டு. ஆயினும் அதற்கு அத்தாட்சி ஒன்றுமில்லை.

பிலி. 2^{24}-ஐப் பார்த்தால் அவர் விடுதலை பெற்றால் அவ்விடம் போக உத்தேசித்திருந்தார் என்று பார்க்கிறோம். அநேகமாய் அவர் அப்படிச் செய்தார். அவர் கொரிந்து பட்டணம் போய், எரஸ்து என்பவனை அங்கே விட்டு (2 தீமோ. 4^{20}), சின்னாசியாவின் கரைக்குச் சமீபமாய் கப்பல் யாத்திரைசெய்து, 'துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டுவிட்டு, தீமோத்தேயுவை எபேசுவிலுள்ள சபைக்குக் கண்காணியாக ஏற்படுத்தி அவ்வூரிலே விட்டுவிட்டார் (தீமோ. 1^{4}). அவர் துரோவாவுக்குப் போய்ச் சில சாமான்களை அங்கே வைத்துவிட்டு, மக்கெதோனியா நாட்டுக்குப் போனார். (2 தீமோ. 4^{13}. 1 தீமோ. 1^{4}.)

இந்தச் சம்பவங்கள் எல்லாம் ஒரே யாத்திரையிலே நடந்திருக்குமோ இல்லையோ தெரியாது.

அவர் இன்னொரு சமயத்தில் கிரேத்தா தீவிலே தீத்துவை விட்டுவிட்டார் (தீத். 1^{5}). அதற்கப்புறம் கிரேக்குத் தேசத்திய நிக்கொப்போலி என்னும் ஊரிலே மாரிகாலத்தைக் கழிக்க மனதாயிருந்தார் (தீத். 3^{12}). அங்கே போய்ச் சேராததற்குமுன் 1 தீமோத்தேயு, தீத்து என்னும் நிருபங்களை எழுதினார்.

அவர் 2 தீமோத்தேயுவை எழுதிய காலத்தில் திரும்பவும் ரோமாபுரியில் சிறைச்சாலையிலிருந்தார் என்று 2 தீமோ. 2^{9}-ஐக் கொண்டு அறிகிறோம். அக்காலத்தில் லூக்காவைத்தவிர வேறொருவனும் அவரோடிருந்ததில்லை. மாற்கு என்பவனைக் கூட்டிக்கொண்டு தாம் துரோவாவிலே விட்டுவிட்ட சாமானை எடுத்துக்கொண்டு வர வேண்டும் என்று தீமோத்தேயுவை வேண்டிக்கொண்டார் (2 தீமோ.

4^{2-18}). தாம் தப்பிக்கொள்ளமாட்டார் என்று நிச்சயங்கொண்டவராகக் காணப்படுகிறார். (4^{6}.)

அவருடைய மரணம்.

ரோமாபுரியில் நேரோ என்னும் இராயனால் உண்டான துன்பங்களில் ஒன்றில் அவர் அநேகமாய்ச் சிரச்சேதம் பண்ணப்பட்டார். (கி. பி. 67). அதற்குப் பூர்வீக பாரம்பரியம் உண்டு. ரோமாபுரிக்கு மூன்றுகல் தூரத்திலுள்ள ஓர் இடத்தில் சிரச்சேதம் பண்ணப்பட்டு அந்நகரத்துக்குச் சமீபமாய் அடக்கம்பண்ணப்பட்டார் என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். அவர் அடக்கம் பண்ணப்பட்டதாக அவர்கள் சொல்லுகிற விடத்தில் ஓர் கோவில் கட்டப்பட்டிருக்கிறது.

அவருடைய தேகதோற்றம்.

2 கொரி. 10^{10}; 11^{6}-ல் தமது சரீர தோற்றத்தைக்குறித்து மற்றவர்கள் சொல்லக்கூடிய காரியங்களையே சொல்லிவந்தார். பூர்வீக பாரம்பரியத்தின்படி அவர் குள்ளனும் கோணக்காலுடையவனுமாயிருந்தார். அதுவுமல்லாமல் அவர் பட்ட பாடுகளின் தழும்புகள் தம் தேகத்தில் அதிகமாய்க் காணப்பட்டன (கலா. 6^{17}). தவிர மாமிசத்தில் அவருக்கு ஓர் முள் கொடுக்கப்பட்டது (2 கொரி. 12^{7}). அது இன்னதென்பதைப்பற்றி அதிக வாக்குவாதம் உண்டாயிருந்தாலும் திட்டமான ஓர் தீர்மானத்திற்கு வர முடியவில்லை. அநேகமாய் அது கண்ணோயாயாவது காக்காய் வலியாயாவது இருந்திருக்கலாம் (கலா. 4^{15}; 6^{11}). (மூல பாஷையிலே எவ்வளவு பெரிதான எழுத்துக்களை என்பதே 4^{14}.) ('அரோசியாமல்' என்கிற பதத்திற்கு மூலபாஷையிலே 'காறித்துப்பாமல்' என்றர்த்தமாம். அதாவது காக்காய் வலி அதிக அரோசிகமான ஓர் வியாதியானதால் பூர்வீகத்தில் அவ்வியாதியையுடைய ஓர் மனுஷனைக் கண்டால் எல்லாரும் துப்புவார்களாம்.)

அவர் தேகத்தில் அவ்வளவு சவுந்தரியமும், பலமுமுள்ளவராயிராவிட்டாலும், ஆவியிலே மற்றெல்லா அப்போஸ்தலரைவிட பெலனுள்ளவராயிருந்து, திருச்சபைக்கு உத்தம அஸ்திபாரத்தைப் போட்டு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தவிர மற்ற எல்லாரிலும் முதன்மையானவரானார்.

C. L. S. PRESS, MADRAS—1915

No. 111 ஆகஸ்டு 1915

வேதியர் விளக்கு

THE REGISTRAR ... AUG 1915 MADRAS

The Gospel according to St. Mark

(Continued)

[From *Lectures on the Gospels by Dr. Findlay*]

III. Subject Matter of Gospel according to Mark.

1. The words of Peter in Acts x. 38 are descriptive of Mark's Gospel. The subject of the Gospel is *Jesus in the fulness of His living energy.* He gives a succession of scenes from Christ's life which show how 'God anointed Jesus of Nazareth with the Holy Ghost and with Power' and how 'Jesus went about doing good—healing all that were oppressed with the devil.'

This Gospel is a simple picture of our Lord's actual work on earth. It does not unfold the relation of that work to the past as Matthew's shows Christ's attitude towards Judaism—nor does it keep in view the bearing of Christ's work on the world's future. Mark lived in the present. He just tells his story and tells it perfectly. Amongst the evangelists he is pre-eminently the story-teller.

2. Mark therefore dwells on the commanding feature of our Lord's work, namely, **Mighty Works.**

This is the Gospel of Miracles. There is only one long discourse (ch. xiii). There are only four parables briefly given but this Gospel records as many miracles as Matthew and Luke and gives two miracles peculiar to itself, namely, The Sower (ch. iv) and The Husbandmen (ch. xii).

3. Mark's Gospel was destined for Gentile Readers.

In the first instance, as Tradition affirms, it was written for the Roman Church.

This is confirmed by:—

(i) The rarity of O. T. quotations

(ii) Frequent explanation of Jewish words and customs.

4. *The influence of Peter is seen in this Gospel.*

It is supposed that the author betrays himself in Ch: xiv. 51, 52.

This Gospel shows a resemblance to Peter's style.

NOTE. (*a*) There are a number of passages where he alone mentions Peter by name. i. 36; xi. 21; xvi. 7.

(*b*) There are other passages where Matthew and Luke mention Peter by name and Mark does not.

vi. 48–52 Peter not mentioned.

Cp. Mark xiv. 13 with Luke xxii. 8.

(*c*) Compare Mark viii. 29–33 with Matt. xvi. 13–19 where all that was spoken to the honour of Peter is omitted by Mark.

(*d*) Compare also Mark's account of Peter's denial Ch. xiv. 69–72 with the other Evangelists where the sin is made to appear less heinous. In Mark the cock crowing twice heightens the offence.

These references go to support the conjecture that there was a close connexion between the second Gospel and Peter.

5. *The last paragraph xvi. 9–20 is not found in some of the oldest manuscripts.* It is not in the same style as the rest of the Gospel and probably did not belong to it as originally composed by Mark.

The probability is that the last leaf of the Gospel was lost in some way. Verse 8 would not make a satisfactory conclusion, so at a very early date an attempt was made to supply the defect by some editor who had the other Gospels before him.

IV. Analysis of St. Mark's Gospel

I. **Preface to the Ministry of Jesus.** i. 1–13.

(*a*) Coming of John Baptist and his message i. 2–8.

(*b*) Baptism and Temptation of Jesus 9–13.

II. **The Good news published by Jesus in Galilee.** i. 14–vi. 29.

The ministry in Galilee is later than the first Ministry of Jesus in Judæa related only by St. John. This period begins

with the imprisonment of John Baptist (i. 14) and ends with the news of his death (vi. 29). This Galilean ministry was a time of activity and seeming success. It did not last much more than six months. Miracles overshadow everything else at this time.

III. **The breach with the multitude and Christ's retreat beyond the borders of Galilee.** vi. 30–ix. 50.

(*a*) At the death of John Baptist, Christ retires for a time, the multitude follows, and Christ feeds the 5,000. This stirs up the opposition of the rulers.

(*b*) Jesus now takes (chs. vii and viii) a wide and rapid journey into Decapolis, Phœnicia, Cæsarea-Philippi. He spends much time with the disciples testing their faith and preparing them for His death.

(*c*) The transfiguration is the culmination of this period.

IV. **Later Ministry in Perea and Judæa.** x.

This is the time of the last journey to Jerusalem. Jesus renews his old way of teaching, but in a new portion of the country—Perea. The teaching is sterner than in the earlier period. It has not the brightness and joyousness of it. The Cross and Judgement overshadow all.

V. **Story of the Passion week.** xi–xvi.

In recording this, all the three Evangelists give very much the same story.

The Letter to Smyrna

By the Rev. F. Goodwill

சிமிர்ணா சபையின் தூதனுக்கு எழுதின திருபம்

வெளி. ௨ 8-11

முதல் திருபம் எபேசு சபைக்கு எழுதப்பட்டதென்று அறிவோம். எபேசு ரோம இராஜ்யத்திலுள்ள சின்னஆசியாவுக்குத் தலைநகரம். இது ஒரு பெரிய துறைமுகப் பட்டணம். இந்தப் பட்ட

ணத்தைப்போலவே சிமிர்னுவும் சின்ன ஆசியாவின் மேற்கு எல்லையிலுள்ள ஓர் பெரிய துறைமுகம். எபேசுவுக்கு வடக்கே முப்பத்தைந்து மைல் தூரத்திலிருந்தது. கீழ்த்தேசங்களிலிருந்து மேல்திசையாய்ச் சென்ற பெரிய இராஜமார்க்கம் இங்கே முடிவடைகிறது. இது நல்ல துறைமுகப் பட்டணமாயிருந்ததினால் சின்ன ஆசியாவுக்கு அநேக ஜனங்கள் போக்குவரவு செய்வதுண்டு. வியாபாரத்தில் எபேசுவுக்கு இரண்டாவதாக விசேஷித்திருந்தது. வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் சிறப்படைந்த பட்டணங்களிலுள்ளவர்கள் பொதுவாய் மதவைராக்கியமற்றவர்களாயிருந்ததுபோல சிமிர்னுவிலுள்ள ஜனங்களும் ஒரே தெய்வத்தின்பேரில் மதவைராக்கியமற்றவர்களாயிருந்தாலும், பக்தியில் சிறந்தவர்களாயிருந்தார்கள். இந்த ஊர் வெகு அழகாயும் ஆசியா நாட்டிலுள்ள பட்டணங்களிலெல்லாம் மிகவும் விசேஷித்ததாயுமிருந்தது. இங்கே சபையானது எப்போது யாரால் ஸ்தாபகமானது என்று புதிய ஏற்பாட்டை ஆதாரமாகக்கொண்டு சொல்வது கூடாமை. பாரம்பரியமாய்ச் சொல்லிக்கொள்ளுவது என்னவென்றால், 'பவுல் பிரதேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டு வந்த காலத்தில் இங்கே ஓர் கிறிஸ்தவ சபையைக் கண்டுபிடித்தார்' என்பதே. எபேசு சபையில் பவுல் இரண்டு வருஷ காலமாய்த் திருப்பணிவிடை செய்தபோது இந்த ஊரைச் சந்தித்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருப்பார் என்று நாம் அனுமானிக்கலாம்.

1. நிருபம். எல்லா நிருபங்களைப்பார்க்கிலும் இது மிகவும் சுருக்கமானது. ஏறக்குறைய மற்றெல்லா நிருபங்களிலும் ஆண்டவர் அந்தந்தச் சபையாரைக் கண்டிக்கிறார். இந்தச் சபையாரையோ ஆண்டவர் கண்டிக்கிறதில்லை. இவர்கள் அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நிறைவேற்றினவர்கள். ஆதலால், அந்தச் சபையாரின் தற்கால ஸ்திதிக்கும் அவர்களுடைய முற்கால சரித்திரத்துக்குஞ் சரியாக தரிசனமளிக்கிறார். 'முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமாகத்' தம்மை வெளிப்படுத்துகிறார் (2[8]). இந்த தரிசனத்திலடங்கிய போதனை ஆண்டவருடைய உயிர்த்தெழுதலைக் காட்டுகிறது. இவர் மரணத்தையும் பலவீனத்தையும் வென்று பலத்தையும் உயிரையுமுடையவராகத் தம்மை அவர்களுக்குக் காட்டுகிறார். சபையாருக்குத் தெரிந்திருந்தபடி தங்கள் பட்டணம் பூர்வகாலத்தில் சத்துருக்களால் பிடிபட்டு இடிபட்டு மூன்று நூற்றாண்டுகளாகப் பாழாய்க் கிடந்தது. ஆயினும் ஜனங்களுடைய அரும்பிரயாசத்தினாலும் சாமர்த்தியத்தினாலும் அவாந்தர வெளியான அந்தப் பட்டணம் மறுபடியும் மரணத்தினின்று எழுந்தாற்போல் கட்டப்பட்டது. இப்பட்

டணத்தின் சரித்திரத்தையும், சபையாரின் சரித்திரத்தையும் ஆண்டவருடைய ஜீவிய சரித்திரத்தோடு கவனித்துப் பார்த்தால், இவர்கள் மரணத்தையும் அழிவையும் வென்று ஜெயசீலரானார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

2. சபையின் நிலைமை. ஆண்டவர் இந்தச் சபையைப் பார்த்து பேசும்போது, 'உன் உபத்திரவத்தையும்......உனக்கிருக்கிற தரித்திரத்தையும் அறிந்திருக்கிறேன்' என்கிறார் (2[9]). அவர்களுக்கு உபத்திரவமும் தரித்திரமும் இருந்தாலும், ஆண்டவருடைய பார்வையில் அவர்கள் ஐசுவரியமுள்ளவர்களாயிருந்தார்கள். எப்படியென்றால் ஜனங்களில் பெரும்பாலார் மற்றவர்களுடைய ஆதீனத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கல்வியிலும், ஆஸ்திபாஸ்திகளிலும் இவர்கள் ஏழைகள். அநேகர் லௌகீக விஷயங்களில் தேர்ச்சியடைந்து, நன்மையானவைகளில் முதற்தரமானவர்களாயிருந்தாலும் சத்துருக்கள் செய்த வஞ்சகமான பிரயத்தனங்களினாலே அவைகளை இழந்துபோனார்கள். தங்கள் குணலட்சணங்களிலும் நற்செய்கைகளிலுமோவென்றால் ஐசுவரியமுள்ளவர்களாயிருந்தார்கள். இதற்குமுன் ஒரு காலத்தில், ஓர் பிரபு இப்பட்டணத்தாருக்கு உபந்நியாசித்தபோது, அவர்கள் பட்டணத்தின் அழகையும் அவர்கள் கட்டடங்களின் அலங்காரத்தையுங் குறித்து மெச்சிப் பேசி, அவர்களை வெகுவாய்ப் புகழ்ந்தார். முக்கியமாக எல்லாரும் நன்றாய்ப் பார்க்கக்கூடிய பகோஸ் என்னும் குன்றின்மேல் கட்டியிருந்த சேர்த்தியான மாளிகைகள் கிரீடம் போல் நிற்பதைக் கண்டு களித்து, இந்த விநோதமான மாடமாளிகைகள் இப்பட்டணத்துக்கு ஒருவாறு அலங்காரமாயிருந்தாலும், சகல வித சற்குணங்களுமுள்ள குடிகள்தான் இப்பட்டணத்தின் கிரீடமாக இருக்கிறார் என்பதாகச் சாதித்தாராம். அருமையான இவ்வார்த்தைகள் இக்காலமட்டும் ஜனங்களின் மனதில் பதிந்திருந்தது. ஆகவே ஆண்டவரும் இவர்களுக்கு நீங்கள் ஏழைகளாயினும் நற்குணமுள்ளவர்களும், கிரீடதாரிகளும் ஐசுவரியமுள்ளவர்களுமாயிருக்கிறீர்கள் என்று சொல்லிப் புகழுகிறார்.

ஒன்பதாம் வசனத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் தங்களை யூதரென்று சொல்லியும், யூதக்கொள்கையின்படியும், அவர்கள் சரித்திரத்தின்படியும் நடவாத அநேகர் அந்தப் பட்டணத்திலிருந்தார்களாம். பிறப்பு, வளர்ப்பு, போதனை முதலானவைகளில் ஐசுவரியவான்களாயிருந்தும், நன்னடத்தை, நற்குணம் முதலானவைகளிலோ ஒன்றுமற்ற தரித்திரராயிருந்தார்கள். பஞ்ச் (Punch) என்கிற பத்திரிகையில் சில வாரத்துக்கு முன்னே விசேஷமான படமொன்று பிரசுரமாயிருந்தது. அதாவது, ஜெர்மனி தேசத்து சக்கரவர்த்தியானவர்,

பெல்ஜியம் தேசத்து இராஜனைப் பார்த்து, ‘பெல்ஜியம் இராஜனே, நீர் உம்முடைய தேசத்தையும் குடிகளையும் மற்றெல்லாவற்றையும் இப்போது இழந்திருக்கிறீரே’ என்று ஏளனமாகச் சொன்னார். அதற்கு பெல்ஜிய தேசத்தரசன், ‘நான் என் ஆத்துமாவை இழந்து போகவில்லை’ என்று கௌரதையோடு சொன்னாராம் என்பதே. நீதி நியாயத்துக்கென்றே பெல்ஜியம் தேசத்தார் இப்போது போராடுகிறதினால், என்ன நஷ்டமும், என்ன உபத்திரவமும் அவர்களுக்கு வந்தாலும், நித்தியகாலமாக மானமும் கீர்த்தியும் அவர்களுக்கு உலகமெங்கும் உண்டாயிருக்குமல்லவா? பிரியமானவர்களே, நாமெல்லாரும் நித்திய ஆஸ்தியைத் தேடவேண்டும்; இதுவே ஆண்டவர் பார்வையில் சிரேஷ்டமானது. நாம் பாடுபட்டுத் தேடும் பணமும் தனமும் அழிந்துபோம். நாம் கல்லறையில் படுத்துக்கொள்ளும்படி, கட்டையாய்த் துணியில் சுற்றப்படுகையில், நம்முடைய பணப் பைகளைக் கூட வைக்கிறதில்லையே. நாம் நற்குணத்திலும் நன்னடத்தையிலும் இப்போது ஐசுவரியவான்களாயிராவிட்டால், அப்போது மிகத் தரித்திரராகவே சுற்றப்படுவோம். ஆதலால் விழிப்புள்ளவர்களாயிருப்போமாக.

3. சபைக்கு வருந்துன்பம். பத்தாம் வசனத்தில், ஆண்டவர் சொல்லுகிறபடி, வரும் நாட்களில் சபையாருக்கு இன்னும் வெகு துன்பம் உண்டாகும்; அது முக்கியமாய் அவர்களுக்கு யூதர்களாலே வரும். நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிற சபைகளில் கிறிஸ்தவர்கள் யூத ஜனங்களாலே இம்சிக்கப்பட்டார்கள். அப்படியே சிமிர்னா பட்டணத்திலுள்ள யூதர்கள் இந்தச் சபையாரை உபத்திரவப்படுத்தினார்கள் என்று பார்க்கிறோம். கி. பி. 155-ம் வருஷத்தில் போலிகார்ப் என்ற அத்தியட்சர் இரத்தச்சாட்சியாய் மரணமடைந்தபோது, யூதர் மதவைராக்கியத்தினால் மூர்க்க வெறிகொண்டு, வைக்கோலையும் விறகையும் சேர்த்து பந்தயசாலையில் அவரைக் கொளுத்தி கொல்லும்படி ஓய்வுநாளாகிய சுபதினத்திலே ஒத்தாசை புரிந்தார்கள். ‘பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள்’ என்று ஆண்டவர் சொல்லுகிறார். சிலர் அபிப்பிராயங்கொள்ளுகிறபடி, இந்த வார்த்தைகள் சபையார் சகிக்கவேண்டிய பின்வரும் பொதுவான பத்து உபத்திரவத்தைக் குறிக்கிறது என்று நாமும் நினைக்காமல் கொஞ்சக்கால மாத்திரம் இந்தச் சபையார் உபத்திரவத்தை அடைவார்கள் என்று அறிய வேண்டும். சிலர் சொல்லுகிறபடி ‘பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்’ என்கிற வார்த்தைகள் திட்டமான உபத்திரவ காரியத்தைக் காட்டுகிறது என்று எண்ணாமல், சபையாரின் உபத்திரவத்தைப் பொதுவாகச் சொல்லியிருக்கிறதென்று நாமறிய

வேண்டும். எப்படியென்றால், தற்காலத்தில் சர்க்கார் கைதிகளைச் சிறைச்சாலையில் வைக்கிறபிரகாரம், கிரேக்கரும் ரோமரும் தங்கள் கைதிகளை வைக்கவில்லை. அக்காலத்தில் அவர்கள் குற்றவாளிகளுக்கு மூன்று விதமான சிட்சைகளைக் கொடுப்பது சாமான்யமாக விருந்தது. அவையாவன: மரணதண்டனை, பரதேசத்துக்கு ஓட்டிவிடுதல், அபராதமிடுதல் என்பவைகளே. அவர்கள் விசாரணை நடக்குமட்டு மாத்திரம் குற்றவாளிகளை காவலில் வைப்பது வழக்கம். சிலருக்கு ‘மரணபரியந்தம்’ என்கிற வார்த்தை இந்த வசனத்தின் அர்த்தத்தைத் திட்டமாய்க் காட்டுகிறதில்லை; பிராணபாயம் வந்தாலும் உண்மையாயிரு என்பதே மூலவாக்கியத்தின் கருத்து. ஆண்டவருடைய வார்த்தையின்படி இச்சபையில் சிலர் இரத்தச்சாட்சிகளாய் மரிக்கவேண்டியதே. ஆதலால் அவர்கள் உண்மையாயிருக்கவேண்டும் என்று சொல்லுகிறார். உண்மையாயிரு என்கிற வார்த்தை இவர்களுக்கு அதிக எழுப்புதலும் ஏவுதலுமானதாக விருந்தது. ஏனென்றால், மூன்று நூற்றாண்டாக சிமிர்னா பட்டணத்தார் ரோம இராஜ்யத்தோடு மிகப் பாசமும் நேசமுமாயிருந்து அவர்களுக்கு உண்மையுள்ளவர்களாகவே இருந்தார்கள். ரோம இராஜ்யத்துக்குப் பல கஷ்டங்களும் நஷ்டங்களும் வந்தாலும், இவ்வூரார் தங்கள் வாக்குத்தத்தத்தை விடாமல் அவர்களுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள். ஆதலால் ரோமர் இதை ‘உண்மையுள்ள பட்டணம்’ என்கிற பேரால் அழைத்து வந்தார்கள். இதினிமித்தமே ரோம சக்கரவர்த்தியின் பேரால் தேவாலயம் ஒன்றைக் கட்டும் சிலாக்கியத்தையும் பெற்றார்கள். இப்பட்டணத்தார் ரோம இராஜ்யத்துக்கு எவ்வாறு விடாத நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்களோ அவ்வாறே இவ்வூர்ச் சபையாரும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று உற்சாகப்படுத்தி ஏவுகிறார்.

4. சபைக்கருளப்பட்ட வாக்குத்தத்தம். பத்தாம் பதினோராம் வசனங்களில் உண்மையுள்ளவர்களுக்கு ஜீவகிரீடத்தைத் தருவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். பேர்பெற்ற பெரிய பட்டணங்களில் அக்காலத்து ஜனங்கள் வருஷந்தோறும் ஆட்டங்கள் வைத்து விசேஷித்த உற்சவம் கொண்டாடுவது வழக்கம். இப்பட்டணத்திலும் அவ்விதமான உற்சவ காலங்களில் பந்தய ஓட்டம், குஸ்தி முதலான ஆட்டங்கள் நடக்கும். இவைகளில் கெலித்தவர்களுக்கு இலைகளால் பின்னப்பட்ட கிரீடங்கள் கௌரதைக்காகச் சூட்டுவார்கள். ஆண்டவரோ தமக்கு உண்மையாயிருக்கிறவர்களுக்கு வாடி வதங்கிப் போகும் இலைக்கிரீடத்தையல்ல, எங்கும் பிரகாசித்து என்றென்றைக்கும் இருக்கத்தக்க ஜீவகிரீடத்தையே கொடுப்பதாக வாக்களி

கிறார். இன்னுமொரு திருஷ்டாந்தத்தையும் பார்க்கலாம். அக்காலத்திலிருந்த தேவாலயங்களில் விசேஷித்த உற்சவங்கள் நடக்கிற காலங்களில் ஜனங்கள், எந்தெந்த தேவர்களுக்கு எந்தெந்த மரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தனவோ அந்தந்த தேவர்களுக்குப் பிரியமாயிருந்த அந்தந்த மரங்களின் இலைகளையும் புஷ்பங்களையும் அணிந்துகொண்டு காணிக்கைகளோடு பூஜிப்பது சகஜமாயிருந்தது. அப்படி கிறிஸ்தவர்கள் வெறும் இலைகளையும் காய்களையும் புஷ்பங்களையும் தரித்துக்கொள்ளாமல், மெய்த்தேவனுக்குரிய சிறந்த லட்சணமாகிய ஜீவனையே தரித்துக்கொள்வார்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இவரே சர்வத்துக்கும் ஜீவ ஊற்றும் காரண கர்த்தாவுமானவர். இவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்தால்தான் அவரிடத்திலிருந்து புறப்படும் ஜீவனை அலங்காரமாக அடையக்கூடும். உபத்திரவத்தின் மூலமாய் அவர்கள் தேகம் மரணமடைந்தாலும், இரண்டாம் மரணமாகிய தேவ கோபாக்கினையோ அவர்களைக் கிஞ்சித்தும் அணுகாது. இந்தச் சபையார் அக்காலத்தில் பாவமாகிய மரணத்தின் மத்தியில் வாழ்ந்து, தேவ பலத்தையும் ஜீவனையும் அடைந்ததுபோலவே, அந்தப் பட்டணத்து கிறிஸ்தவர்கள் இம்மட்டும் ஆண்டவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். மகமதியர் ஆசியா நாட்டை ஜெயித்து பிடித்தபோது இவ்வூர் கடைசியாக அவர்கள் கைவசமாயிற்று. இப்போதும் அவ்வூரில் முக்கால் வாசிப்பேர் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். ஆதலால் மகமதியர் இதை 'அவபக்தரின் நகரம்' (Infidel City) என்று சொல்லுகிறார்கள். பிரியமானவர்களே, விரோதிகளும், பொய் யூதர்களும், கொடிய பாவிகளும் நிறைந்த இப்பட்டணத்தில் சிமிர்னா சபையார் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருந்து ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொண்டதுபோல, நாம் யாவரும் அந்தகாரமும், அபத்தமும், அவபக்தியும் நிறைந்த இத்தேசத்தாரின் மத்தியில் நமது ஆண்டவருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து, பிசாசானவனை ஜெயித்து பாவத்தின்பேரில் வெற்றிகொள்ளும்படி ஆண்டவர் தமதருளை நமக்கருளுவாராக. ஆமென்.

The Glory of Believers

By the Rev. A. Paramanandham

விசுவாசிகளுக்குத் தேவனளிக்கும் மகிமை

'நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். யோவா. 17^{22}.

பூலோகத்தில் மனிதர் பற்பல விதமான மகிமையை யடைகிறவர்களாயிருக்கிறார்கள். சிலர் தாங்கள் கற்ற கல்வியினிமித்தம் மகிமையடைகிறார்கள்; வேறு சிலர் தாங்கள் நடப்பித்த அரிய கிரியைகளுக்காக மகிமை யடைகிறார்கள்; இன்னுஞ் சிலர் தாங்கள் காட்டிய வீரியச் செய்கைகளின்பொருட்டு மகிமையடைகிறார்கள். தற்காலத்தில் ஐரோப்பா தேசங்களில் நடந்துவருகிற யுத்தங்களில் ஒவ்வொரு தேசத்தாரும் காட்டுகிற தைரியம், யுக்தி, புத்தி இவைகளுக்காகவும், யுத்தசாமர்த்தியம், யுத்தமுறை, யுத்தாயுதங்கள் முதலானவைகளுக்காகவும் மகிமையடைகிறார்கள். இவ்வித மகிமைகள் சாஸ்வதமானவைகளல்ல; இவை யாவும் மறந்து மறைந்துபோகக்கூடியவைகளேயொழிய வேறல்ல. கனத்தினாலும் மகிமையினாலும் முடிசூட்டப்பெற்ற இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தமது தாசர்களாகிய கிறிஸ்தவ பக்தருக்கு அளிக்கும் மகிமையோ பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவனுக்குத் தந்த மகிமை (17^{24}). இது உலகம் கொடுக்கக்கூடாத மகிமை; நித்தியமான மகிமை. இந்த மகிமையையே தமது அடியாருக்குக் கொடுத்தேன் என்கிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் மனுஷனுடைய சுபாவ நிலைமையைக் குறித்துக் குறைவாகவும் தாழ்வாகவும் சொல்லியிருந்தாலும், கிருபையினால் அவனுக்குக் கிடைத்திருக்கிற மேலான நிலைமையைக்குறித்தும் விசேஷித்துப் போதித்திருக்கிறது. சில விஷயங்களில் மனிதன் தேவதூதருக்கும் மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறான். இந்த விஷயத்தைக்குறித்து பிரசங்க வாக்கியத்தில் கண்டிருக்கிறதைப் பார்க்கிலும் சிறந்த விதமாய்ச் சொல்லத்தக்க வார்த்தைகள் வேறு இல்லை என்கலாம். ஆகையால் சிறிதுநேரம் பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவனுக்குக் கொடுத்ததும், குமாரனாகிய தேவன் தமது தாசராகிய கிறிஸ்தவ ஜனங்களுக்குக் கொடுத்ததுமான மகிமையைப் பற்றித் தியானிக்கும்படி ஆவியானவருடைய சகாயத்தைத் தேடுவோமாக.

முதலாவது, தெய்வீக வல்லமையில் காணும் மகிமையைத் தந்தார். தேவதூத குழாங்கள் மனுஷரை ரட்சிக்கவும் சிட்சிக்கவும் நியமிக்கப்பெற்ற தேவவல்லமையின் கருவிகளானவர்கள். இவர்களில் விளங்கிய வல்லமையைப்பார்க்கிலும், கிறிஸ்துவில் விளங்கின வல்லமையோ மிகவும் விசேஷித்ததாக விருந்தது. இவருக்கு விரோதிகள் மனிதரும் பிசாசுக்களுந்தான் (சங். $2^{1,2}$). 'ஜாதிகள் கொந்தளித்து...கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணினார்கள்.' கெத்செமனே தோட்டத்து வாசலில் கிறிஸ்துவைப் பிடிக்கவந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத்தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி அவர், 'இதுவே உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார்' (லூக். 22^{53}). ஆயினும் அவர் பாவத்தைத் தொலைத்தார்; சாத்தானை மடங்கடித்தார்; மரணத்தை ஜெயமாக விழுங்கினார்; நரகத்தின் வாசலை யடைத்தார்; இத்தியாதி சத்துருக்களைத் தமது வல்லமையால் ஜெயித்தார்; இன்னும் அவர் 'துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்' (கொலோ. 2^{15}). 'அவர் உன்னதத்திற்கு ஏறி சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கினார்' (எபே. 4^{8}). இவ்விதமாய் ஜெயித்த கிறிஸ்து ஆத்மீக சத்துருக்களை ஜெயிக்கும்படியான வல்லமையின் மகிமையைத் தமது ஜனத்துக்கும் கொடுத்திருக்கிறார். விசுவாசிகளான அவருடைய ஜனங்கள் போராட்டநிலைமையிலுள்ளவர்கள். 'மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்' (எபே. 6^{12}) போராடவேண்டியவர்கள். இப்போர்க்கொத்த போரில் வெற்றிசிறக்கும் மகிமையை விசுவாசிகளுக்குத் தந்திருக்கிறார். 'நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்' (ரோ. 8^{37}) என்பது பவுலின் அனுபவம். பவுலின் மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அது தன்னைவிட்டு எடுபடும்படி மூன்றுதரம் வேண்டிக்கொண்டார். அதற்கு 'என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்' (2 கொரி. 12^{9}). இவ்வாறே கிறிஸ்துவின்மூலமாய்த் தேவவல்லமை மனிதருக்கு அருளப்படுகிறது என்பதை நம்பி நம்முடைய உபத்திரவங்களிலும் சோதனைகளிலும் எல்லாவற்றிற்கும் எல்லாமுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை விசுவாசிகளான நாம் நோக்கிப் பார்க்கவேண்டும். திருச்

சபை சரித்திரத்தில் அநேகமாய் இரத்தச்சாட்சிகளைக்குறித்து வாசிக்கிறோமே. அவர்களுக்குண்டான வேதனைகளிலும் சோதனைகளிலும் அவர்கள் காட்டிய விசுவாசம், அன்பு, பொறுமை முதலியவைகளுக்கு கிறிஸ்துவின் வல்லமை அவர்கள்மேல் தங்கினதல்லவா? வட ஆபிரிக்காவில் கார்த்தேஜ் (Carthage) என்னும் பட்டணம் ரோம ராஜ்யத்துக்குள்ளானபோது விவியா பெர்பெச்சுவா (Vivia Perpetua) என்னும் இருபத்திரண்டு பிராயமுள்ள வாலிப ஸ்திரீயும் அவள் சகோதரனும் கிறிஸ்து மார்க்கத்தை யடைந்தார்கள். மற்றவர்கள் அஞ்ஞானிகளாயிருந்தார்கள். இவளுடைய புருஷன் இராணுவ உத்தியோகமாய் வெளியே போயிருந்த காலத்தில், விரோதிகள் இவள் கிறிஸ்தவளாயிருக்கிறாள் என்று கண்டுபிடித்து நியாயாதிபதிமுன் கொண்டுவந்து நிறுத்தி, 'கிறிஸ்தவளாகிய இவள் ரோம தெய்வத்தைக் கும்பிடமாட்டேன் என்று சொல்லுகிறாள்' என்று அவள்மேல் குற்றஞ்சாட்டினார்கள். நியாயாதிபதி அவளைப் பார்த்து, 'ரோம தெய்வத்தை வணங்காமற்போவாயாகில் மரணதண்டனை யடைவாய்' என்றான். அவள் தகப்பன் அவளுடைய ஒரே பிள்ளையைத் தன் கையில் ஏந்தி, 'என் அருமை மகளே, உன் குழந்தையினிமித்தமும் என் நரைவயதினிமித்தமும் கிறிஸ்துவை மறுதலித்து, நியாயாதிபதியின் ஆக்கினைக்குத் தப்பித்துக்கொள் என்று கெஞ்சினான். இது அவளுக்குப் பலத்த சோதனையாக விருந்தது. என்றாலும் அவளுடைய பலவீனத்தில் கிறிஸ்துவின் வல்லமை பூரணமாய் தங்கினபடியால், கிறிஸ்துவை நம்பிப் பிடித்திருக்கிறேன். அவரை நான் விடமாட்டேன் என்று தைரியமாய்ச் சொன்னாள்.' நியாயாதிபதி, அவளை மரணதண்டனைக்கு ஒப்புக்கொடுத்தான். விரோதிகள் அவளைப் பிடித்து, அத்தேசத்து வழக்கத்தின்படி காட்டுமாடுகள் அடைத்திருந்த பட்டியில் கொண்டுபோய் விட்டார்கள். அந்தக் காட்டுமாடுகள் அவள்மேல் பாய்ந்து முட்டிக் கொன்றுபோட்டன. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினிமித்தம் இரத்தச்சாட்சியாய் மரித்தாள். பலவீனமாயிருந்தபோதே பலமுள்ளவளானாள். கிறிஸ்துவிலே தேவவல்லமையின் மகிமையை அடைந்தாள். சகோதரரே, கிறிஸ்து தேவவல்லமையின் மகிமையை விசுவாசிகளுக்குத் தந்திருக்கிறது எவ்வளவு அன்பு. இந்த வல்லமையின் மகிமைக்காக அவரை ஸ்தோத்திரிப்போமாக. நன்றி மறப்பது நன்றன்று. கிருதக்ஞராயும் இருப்போமாக.

இரண்டாவது, தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும் மகிமையைக் கொடுத்தார். தேவதூதர் சில சமயங்களில் 'தேவபுத்திரர்' என்று வேதாகமத்தில் அழைக்கப்படுகிறார்கள் (யோபு. 1^{6}; 38^{7}). தேவாதி தேவனால் இவர்கள் ஞானம், பரிசுத்தம், பாக்கியம், சுயாதீனமுள்ள

அரூபிகளாய்ச் சிருஷ்டிக்கப்பட்டார்கள். இதனால் தேவனுக்குப் புத்திரர் என்னும் உறவு அவர்களுக்குண்டாயிற்று. பேரறிவுள்ளவர்களானாலும் அனந்த அறிவுள்ளவர்களல்ல (எபே. 3^{10}). கிறிஸ்துவோ மேலான வகையாய் சனனமுடையவர். தெய்வீகத்தின்படியும் மனுஷீகத்தின்படியும் குமாரனானவர். கொலோ. 1^{13}-ல் 'அன்பின் குமாரன்' என்னப்படுகிறார். பூலோகத்தாரும் 'மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரனாயிருந்தார்' என்று சாட்சி பகர்ந்தார்கள் (மத். 27^{54}). பிதாவினால் குமாரன் அங்கீகரிக்கப்பட்டு, மனமகிழ்ந்த வானோரால் வாழ்த்துதலையும் வணக்கத்தையும் பெற்று, பிதாவின் வலதுபாரிசத்தில் பூரண இரட்சகராகவும், ஏக சக்கரவர்த்தியாகவும், மகிமையோடும் கனத்தோடும் முடிசூட்டப் பெற்றவர் (சங். 110^{1}. எபி. 1^{6}. வெளி. 5^{9-12}). இப்பேர்க்கொத்த மகிமைபொருந்திய இயேசுகிறிஸ்து தம்முடைய மகிமையையே நமக்கருளுகிறார். கிறிஸ்துவைத் தன்னுடைய இரட்சகர் என்று நம்பி விசுவாசிக்கிற ஒவ்வொரு ஆளும் இந்த உறவுக்குள்ளாகிறான். இது மனதுக்கெட்டாத கிருபையின் சிலாக்கியம். 'பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்' (கொலோ. 3^{1}). விசுவாசிகளாகிய நாம் தேவனுக்குப் பிள்ளைகளாயிருக்கும் மகிமையை கிறிஸ்துவாலேயே அடைகிறோம். 'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறாரே' (யோவா. 1^{12}). விசுவாசியே, தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும் மகிமை நமக்குண்டாயிருக்கிறது. இது எத்தனை பாக்கியம். உலகத்தில் மனிதர் சாதாரணமாய்ச் சிலர் பணக்காரனுடைய பிள்ளைகள் என்று அறியப்பட விரும்புகிறார்கள். சிலர் இராஜகுமாரர் என்று சொல்லப்பட ஆசிக்கிறார்கள். வேறு சிலர் கனம்பெற்ற குடும்பத்தை யடுத்தவர்கள் என்னப்பட நாடுகிறார்கள். விசுவாசிகளுக்கோ உலகத்தின் சகல மகிமைக்கும் மேலான மகிமை கிறிஸ்துவுக்குள் உண்டாயிருக்கிறது. ஆதலால் 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்றலரிது' என்று நன்றியறிந்த குணத்தோடு இரட்சகரைப் பற்றிக்கொண்டு தேவனை வந்தித்துப் போற்றுவோமாக நமது தேசத்திலுள்ள அநேகர் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும் மகிமையை அடையாமலிருக்கிறார்கள். தேவனுக்கோ உத்தமமான பிள்ளைகள் அநேகர் வேண்டும். இதை எழுதுகிற என்னையும் இதை வாசிக்கும் உம்மையும் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும் மகிமையினின்று தள்ளிவிட பிசாசானவன் வகைபார்க்கிறான். இந்த உறவை அவன் கெடுத்துப்போடாதபடி மரணபரியந்

தம் ஜாக்கிரதையும் விழிப்புமுள்ளவர்களாயிருந்து, தேவனால் பிறந்த உண்மையான பிள்ளைகளாய் நடந்துகொள்வோமாக. 'நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே, பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பார்த்து' (1 யோவா. 3^{1}) 'எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கமில்லாமலும்' அவருடைய நாம மகிமைக்கென்று செய்து, 'தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருப்போமாக.' (பிலி. 2^{15}.)

மூன்றாவது, தேவனோடே ஐக்கியமாயிருக்கும் மகிமையைத் தந்தார். பிதாவானவர் குமாரனுக்குத் தந்த மகிமையை குமாரன் விசுவாசிகளுக்குக் கொடுப்பதற்கு இருந்த காரணம், பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறதுபோல, குமாரனும் விசுவாசிகளும் ஒன்றாயிருக்கும்படிக்குத்தான். 'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' (யோவா. 10^{30}) என்று இயேசு சொல்லுகிறார். ஆகவே, 'தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் கிறிஸ்துவிலிருக்கிறது' (கொலோ. 2^{9}). பிதாவுக்கும் குமாரனுக்குமிருக்கிற ஐக்கியத்தைப்போலவே கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிருக்கிற ஐக்கியமுமுண்டு. ஆதலால் கிறிஸ்து, 'நானே திராட்சச்செடி நீங்கள் கொடிகள்,' 'என்னில் நிலைத்திருந்தால் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள்' என்கிறார். குமாரன் பிதாவோடே ஐக்கியமாயிருக்கும் மகிமையைச் சுயமாக அடைந்தார். இந்த ஐக்கியத்தின் மகிமையில் விசுவாசிகளுக்குப் பங்குண்டு. பிரதர் லாரன்ஸ் என்னும் பக்திமான் தேவன் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எந்த நிலைமையிலும் தம்மோடுகூட இருக்கிறார் என்று உணர்ந்து தம்முடைய வேலையைப் பிரியத்தோடும், தம்மோடு இருக்கிற தேவனைப் பிரியப்படுத்தவேண்டுமென்கிற ஆசையோடும் செய்துவந்தார். இவ்வுலகத்திலும் பாத்திரமுள்ள விசுவாசிகளில் ஒருவராக எண்ணப்பட்டு வருகிறார். தேவனோடே ஐக்கியமாயிருக்கும் மகிமையைக் கிறிஸ்துவின் மூலமாய்ப் பெற்றுக்கொண்டார். இந்த மகிமையைச் சிலருக்கு மாத்திரமல்ல கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றும் விசுவாசத்தை அடைந்தவர்கள் எத்தனை பேர்களோ அத்தனைப் பேர்களுக்கும் கொடுக்கப்படும்படி அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுத்தவர்களான விசுவாசிகள் 'தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்' (வெளி. 7^{15}). 'ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்' (7^{17}). பிரியமான சகோதரரே, இராஜாக்க

ளோடும் பிரபுக்களோடும் ஐக்கியமாயிருக்கும் சிலாக்கியம் சிலருக்கு மாத்திரங் கிடைக்கும். கிறிஸ்துவின் மூலமாய் பிதாவாகிய தேவனிடத்தில் ஐக்கியமாயிருக்கும் பாக்கியம ஒவ்வொரு ஏழைக் கிறிஸ்தவ பக்தனுக்கும் உண்டாயிருக்கிறபடியால், பத்திராசனத்தில் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து அவரைத் தொழுதுகொண்டு, 'ஆமென் எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென்' என்று சாஷ்டாங்கஞ் செய்வோமாக.

நான்காவது, தேவனோடே அரசாளும் மகிமையையுங் கொடுத்தார். நல்ல தூதரும் பொல்லாத தூதருமானவர்களுக்கு 'வல்லமைகள், அதிகாரங்கள்' என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், தேவனோடே அரசாளுகிறார்கள் என்பதை நாம் வாசிக்கிறதில்லை; இந்த மகிமை இவர்களுக்கு அருளப்படவில்லை; ஆனால் அவர்கள் 'இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு தூதர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்' (எபி. 1[14]). விசுவாசிகளினிமித்தம் தேவதூதர்கள் பரலோகத்தில் பிதாவாகிய தேவனுடைய சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறவர்கள் (மத். 18[10]) ஊழியக்காரர்கள் (வெளி. 22[9]) என்னப்படுகிறார்கள். குமாரனாகிய தேவன் இந்தக் கனத்தையும் மகிமையையும் பிதாவாகிய தேவனால் பெற்றுக்கொண்டார். ஆதலால் அவர் 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது' (மத். 28[18]) என்கிறார். பவுலும் அவரைக்குறித்து 'எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக... எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி...சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்' (எபே. 1[20-22]) என்று சாட்சிபகருகிறான். கிறிஸ்தவ பக்தரே, இந்த மேலான உன்னத கனத்தையும் மகிமையையும் கிறிஸ்துவானவர் தமது ஜனத்துக்குத் தந்தேன் என்கிறார். அவபக்தரையும் அவரை நேசியாதவர்களையும் கடைசிநாளில் நியாயந்தீர்க்குந் தருணத்தில் அவர் தாசர் யாவரும் அவரோடேகூட நியாயாசனங்களில் வீற்றிருக்கும்படி இடம் பெறுவார்கள். ஓ, கிறிஸ்துவின் அன்பு எவ்வளவு ஆச்சரியமானது. மனிதரிடத்தில் எவ்வளவு நேசங்கொண்டிருக்கிறார். முன்னே அவர்களுக்காகவே தமது மகிமையைக் களைந்து அடிமையின் ரூபமெடுத்தார். இப்போதோ சிலுவையின் மூலமாய்ச் சம்பாதித்த எல்லா கனத்தையும், பிதா தமக்குத் தந்த

மகிமையையும், பிதாவின் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப் பெற்றவர்களுக்கும், அவர்கள் வார்த்தையினாலே தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கும் கொடுத்தேன் என்கிறார். ஆதலால் தேவவல்லமையில் விளங்கிய மகிமையையும், தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும் மகிமையையும், அவரோடே ஐக்கியமாயிருக்கும் மகிமையையும், அவருடன் அரசாளும் மகிமையையும் இலவசமாய்ப்பெற்ற நாம் என்ன ஈட்டை அவருக்குச் செலுத்தக்கூடும்? பவுலுடன் நாம் யாவரும் சேர்ந்து 'இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக' என்று அறிக்கையிட்டு 'நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென் 1 தீமோ. 1[17] என்று அவரை வாழ்த்திப் போற்றுவோமாக.

போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!
  விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்,
போற்றும், போற்றும், மீட்பர் மகத்துவமாக!
  ஆட்சி செய்வார் நித்திய காலமும்;
ஏக ராஜா, மாட்சிமையோடு வந்து,
  யேசு ஸ்வாமி, பூமியில் ஆளுமேன்;
லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
  ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்.

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி.)

பதினாலாம் அதிகாரம்

தெய்வ நடத்துதல்

காணாமற்போன சாமான்கள்தான் (தங்காயில் நான் மீர்த்து வைத்த ஒரு சொற்பத்தொகையைத் தவிர) சீனாவில் எனக்கிருந்த

என் முழு ஆஸ்தியும் என்று சொல்லத்தகும். அதையெல்லாம் என் வேலைக்காரன் மனதாரத் திருடி எடுத்துக்கொண்டு ஹங்கௌவுக்குப் போய்விட்டான். இவ்வளவு தீமை செய்தவனுக்கு நன்மை விளைவிப்பது எப்படி யென்கிற கேள்வியே என் மனதில் முதலில் உதித்தது. அவனைப் பிடித்துத் தண்டிக்க ஏற்பாடு செய்வது கஷ்டமாயிராது. திருடின சொத்துக்கு ஈடு அவனிடத்தில் அகப்படாது என்பதும் ஏறத்தாழ நிச்சயமே. அவன் என் சேவகத்திலிருக்கையில் அவனுடைய இரட்சிப்புக்காக உழைத்து ஜெபித்தேன். இது என் மனதில் அழுத்தமாய்க் கிடந்தது. அவன்மேல் வழக்குத் தொடுப்பது 'பொல்லாப்போடு எதிர்த்து நிற்கலாகாது' என்று நானும் அவனும் ஒருமித்துப் படித்த மலைப்பிரசங்கத்தின் உபதேசத்துக்கு ஒத்து வராது. கடைசியாய், அவன் ஆத்துமா அவன் திருடிக்கொண்ட நாற்பது சவரனிலும் அதிக விலைபெற்றது என்கிற துணிவினால் அவனுக்கு இரங்கி, அவனுக்கு இதை மனதிற்பட உணர்த்தி, அவன் மனந்திரும்பி இயேசுவில் விசுவாசம் வைக்கத் தூண்டுகிற ஒரு கடிதம் அவனுக்கு எழுதினேன். இப்படி நான் செய்தது இங்கிலாந்திலிருந்த என் சிநேகிதர்களுக்கு மிகப் பிரியமாயிருந்தது. வெகுநாள் பொறுத்து அவர்களுள் ஒருவர் எனக்கு நாற்பது ரூபாய்க்கு பாங்கி நாணயமனுப்பினார். அதற்குப் பின்னும் அவர் பலமுறை இப்படி எனக்குப் பணச்சகாயம் செய்ததுண்டு.

ஷங்காயில் மீந்துவைத்திருந்த சிறுதொகையைக் கைப்பற்றின பின் நான் திரும்ப நிங்போவுக்குப் புறப்பட்டேன். நான் இதற்கு முன் அக்கினி உபாதையில் நஷ்டப்பட்டிருந்த மருந்துகளுக்குப் பதில் மருந்துகளை அங்கிருந்த டாக்டர் பார்க்கர் மூலியமாய்ச் சவதரித்துக்கொள்ள விரும்பி அங்குபோய் வேண்டியவளவு சம்பாதித்துக்கொண்டு ஸ்வாட்டோவுக்குப் போகிறதற்கே உத்தேசித்து அதற்கு மார்க்கமாக மாத்திரம் ஷங்காயை வைத்துக்கொண்டு அதற்குத் திரும்பிவந்தேன். ஸ்வாட்டோவில் திருவேலை செய்துகொண்டிருந்த என் பிராணநேசரான பரனேஸ்ஸரைத் திரும்ப அடுத்திருக்கவேண்டும் என்கிற அபிலாசை எனக்கிருந்தது. தேவனோ இதற்கு எதிர்மறையான மனமுடையவராயிருந்தார். பொருள் பறிகொடுத்ததில் எனக்கு நேர்ந்த கால நஷ்ட அளவே நான் நினைத்தபடி தெற்கே போகாமல் என்னைத் தடுப்பது அவருக்குச் சித்தமாயிருந்தது.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1915

No. 112 செப்டெம்பர் 1915

OFFICE OF THE REGISTRAR SEP 1915 MADRAS

வேதியர் விளக்கு

The Gospel according to St. Matthew

(Continued)

[From *Lectures on the Gospels* by Dr. Findlay]

Whilst Mark gives a general view of the life of Christ, Matthew and Luke unfold particular aspects of it.

I. Matthew is a Jew and writes specially for Jews.

1. *He relies much on the Old Testament.*

Hence the Church has placed his Gospel first, since it is a link between the two Scriptures. It looks back to the Old dispensation and shows how the Old authenticates the New and the New explains the Old. Matthew saw in Jesus the Messiah, the end of the Law and the Prophets, and the Founder of the new kingdom of heaven.

This Gospel therefore contains numerous quotations from the Old Testament.

2. *Christ's discourses are fully reported, especially those bearing on the relation of His law and kingdom to the law and kingdom. Old Testament.*

This is pre-eminently the Gospel of the kingdom.

3. *The parables are very prominent in this Gospel.*

This was an oriental method of teaching very popular among the Jews. The parables contain much of illustration concerning the teaching of Jesus about the Kingdom.

E. g. There are seven parables about the growth of the kingdom in chap. xiii.

Three refer to the seed ... The Sower; the Wheat and tares; the Mustard Seed.

Three refer to seeking the kingdom ... The hidden treasure; the Pearl; the Drag-net.

One refers to the leaven.

There are three parables of the last judgement in chaps. xix–xxii.

4. *The genealogy of our Lord*, shows Him to be

(*a*) of Abraham's Seed;
(*b*) of David's line.

5. *The matter peculiar to St. Matthew is principally such as would be of interest peculiarly to Jewish readers.*

(i) Joseph, as our Lord's legal father.
(ii) The visit of the Magi and Herod's cruelty.
(iii) Flight into Egypt.
(iv) Payment of Temple tribute by Christ.
(v) Fate of Judas.
(vi) Story of Pilate's wife.
(vii) Apparition of ancient Saints at Crucifixion.
(viii) The watch at the tomb of Jesus.
(ix) The story invented to explain the disappearance of Christ's body.

6. *Explanations of Jewish names and customs such as we find in other Gospels, are not given in Matthew.* (But Aramaic words are translated for Jews living outside Palestine.)

II. Note about Matthew.

Matthew was perhaps the name he assumed on becoming a disciple of Jesus. It means the gift of God. His first name was Levi the son of Alphæus (Mk. ii. 14). This was not the Alphæus who was the father of James (Matt. x. 3).

Levi was a publican or Roman tax-gatherer, belonging to the class most hated and despised amongst the Jews. It was disgraceful for a Jew to gather money from his own people for their oppressors. He appears with the title of 'publican' only in the list of the Apostles given in his own Gospel. Note also chap. xviii. 17.

It also appears from Mark ii. 14, 15 that Levi was in a position of trust and possessed a certain amount of wealth. He was in charge of the Custom office at Capernaum. This occupation would accustom him to the use of the pen and led him perhaps at an early time to commit the Master's sayings to writing.

Levi's experience of the harshness and bitterness of the Pharisees made him particularly apt to remember such discourses as those in Matthew xxiii.

III. Analysis of the Gospel

Matthew's Gospel may be analyzed on the lines of its main discourses.

Gospel of the Kingdom of Heaven.

I. **Birth of the King.** Chaps. i–ii.

II. **Heralding the Kingdom.** Chaps. iii–iv.
- (*a*) By John the Baptist
- (*b*) By Jesus

III. **Instituting the Kingdom.** Chaps. v–xxv.

In five great discourses

(*1*) *Sermon on the Mount followed by ten miracles which illustrate the teaching*

Three miracles of compassion }
Three " mastery } chs. v–ix.
Four " fame }

(*2*) *Discourses on the Apostolate*

(a) Ministry of Kingdom }
(b) Connecting narrative } chs. x–xii.

(*3*) *Parables of the Kingdom*

(a) Setting forth its working and future History }
(b) Connecting narrative with Account of Peter's confession and the Transfiguration. } chs. xiii–xvii.

(*4*) *Discourse on Church, etc.*

(a) Brotherhood of Kingdom }
(b) Connecting narrative. } chs. xviii–xxi.

(5) *Discourse on Judgement.*

(a) Coming on the enemies of Kingdom. } chs. xxii–xxv.
(b) Recompense to its faithful and unfaithful servants. }

IV. **Conflict for the Crown.** xxvi–xxviii.

Includes the Trial, Death and Resurrection of the King, ending with the announcement 'All authority is given unto me' followed immediately by the great Commission 'Go ye therefore. . .'

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

பதினைந்தாம் அதிகாரம்

தேசத்தில் யுத்தம் கிளம்பும் என்கிற அறிகுறிகள் வெகுநாளாய்த் தோன்றிக்கொண்டிருந்த இந்த வருஷம் (1856) அக்டோபர் ஆரம்பத்திலே காண்டன் நகரத்தில் முதல் முதல் பற்றி யெரியத் தலைப்பட்டது. சீனாவுக்கும் அந்நிய தேசங்களுக்கும் வெகுநாட்பட நின்ற யுத்தம் இரண்டாமுறை தொடங்கிற்று. அதினால் தெற்குப் பகுதிகளிலே விசேஷமாய் மிஷன் வேலையை நிறுத்துவது அவசியமாயிற்று. இந்தச் செய்தியும் பர்னேஸர் எனக்கு எழுதின கடிதங்களும் நான் ஸ்வாட்டோவுக்குப் புறப்படப்போகிற தறுவாயில் ஷங்காய்க்கு வந்து என் பயணத்தை நிறுத்தின. இதைப் பார்த்ததும் நான் உட்பிரவேசிக்க நினைத்த கதவைச் சாத்தியடைத்தது தேவனுடைய கரமே என்கிற நிச்சயம் எனக்கு உண்டாயிற்று.

நிங்போவுக்குப் போயிருந்த காலத்தில் அங்கே டாக்டர் பார்க்கரோடுகூடி யுழைத்த ஜான் ஜோன்ஸ் என்பவருடைய அறிமுகம்

எனக்குக் கிடைத்தது. அவர்களிருவரும் சீனச் சுவிசேஷப் பிரபல்லிய சங்கத்தைச் சேர்ந்தவர்கள். ஸ்வாட்டோவிலே வேலைக்குப் போகத் தடைப்பட்டபின் அவர்களுடன் நிங்போவில் உழைக்கத் தீர்மானித்து உடனே புறப்பட்டேன். இரண்டாம் நாள் மதியத்திற்குப் பின் ஷங்காயைவிட்டு முப்பதுமைல் வந்தபின் ஜோன்ஸ் என்பவரும் நானும் சுங்கியாங்கு என்னும் பெரிய நகரத்தை யணுகினபோது ஆற்றங்கரையிலும் நகரத்தின் வெளிவரையிலும் நிறைந்திருந்த ஜனத்திற்குப் பிரசங்கிக்கப் படகைவிட்டு இறங்கப்போகிறேன் என்றேன்.

பல தேசங்களைக் கண்டு, இங்கிலாந்துக்குப்போய் அங்கே பீட்டர் என்று பெயர் வகித்துக்கொண்டிருந்த புத்திகோசரமுள்ள ஒரு பிரயாணி எங்களோடிருந்தான். அவன் காதில் சுவிசேஷம் விழுந்திருந்தது என்பது சொல்லவேண்டுவதில்லை. ஆயினும் அதின் இரட்சிக்கிற வல்லமையை அவன் அறிந்ததில்லை. முந்தின இரவில் அவனோடு சம்பாஷிக்கையில் அவனுத்தமாவின் இரட்சிப்பைப்பற்றி உருக்கமாய்ப் பேசினேன். அவன் கனிவுடன் கேட்டுக் கண்ணீரும் விட்டான். இப்பொழுது நான் கரையிறங்கிப் பிரசங்கிக்கப்போகையில் உம்முடன் வந்து பிரசங்கம் கேட்க ஆசைப்படுகிறேன் என்று அவன் சொன்னது எனக்குப் பிரியமாயிருந்தது.

இந்தச் சீனனோடு கரையிறங்கிப் பிரசங்கிக்க நேர்ந்தால் சிறு புத்தகங்களும் பெருநூல்களும் பரிமாறுவதற்காக அவைகளைத் தெரிந்தெடுக்க ஜங்கின் உள்ளறைக்குப் போனேன். அந்நேரத்தில் திடீரென்று யாரோ ஜலத்தில் விழுந்த சத்தமும் அண்டையில் இருந்தவர்கள் இட்ட கூச்சலும் என் காதில் விழவே, நான் மேற்றட்டுக்கு ஓடிப் பார்த்தேன். பீட்டர்தான் விழுந்தவன். மற்றவர்கள் அவனைத் தூக்க எதுவும் செய்யாமல் அவன் விழுந்த இடத்தைப் பார்த்துக்கொண்டு சும்மா நின்றார்கள். கடுங்காற்று அடித்துக்கொண்டிருந்தது. நீரோட்டம் அதற்கெதிர்த்திருந்தும் காற்று அதைச் சட்டைபண்ணாமல் ஜங்கைத் தீவிரமாய் ஓட்டிக்கொண்டு போயிற்று. ஆற்றுக்கிருகரையிலும் பூண்டேயில்லாமையால், விழுந்தவன் எவ்விடத்தில் கிடக்கிறான் என்று இலக்கு அறியக் கூடவில்லை.

நான் உடனே பாயை இறக்கி, ஆற்றில் குதித்து அவனைத் தேடியும் அகப்படவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் சுற்றிப் பார்க்கையில் மீன்பிடிக்கிற படகு ஒன்று கிட்ட இருந்தது. அதிலே இருந்த வலைகளுக்கு ஒருவகைக் கொக்கிகள் இருந்தன. அவைகளைத் தாழ்த்தி இழுத்தால் விழுந்தவனைத் தூக்கிவரும் என்று கண்டேன்.

அந்தப் படகிலிருந்தவர்களை 'இங்கே ஒருவன் முழுகிக் கிடக்கிறான். இவ்விடத்தில் உங்கள் வலைக்கொக்கிகளைத் தாழ்த்தி இழுத்தால் ஆள் அகப்படுவான்' என்றேன்.

அவர்கள் சொன்ன அனுதாபமற்ற உத்தரம் இது: 'வேபின்' (அசந்தர்ப்பமாயிருக்கிறது.)

'அசந்தர்ப்பமா? ஐயோ, ஆள் அல்லோ வீணாய் முழுகிச் சாகிறான்.'

'எங்களுக்கு மீன்பிடிக்கிற சோலி, அதைவிட்டு வரமுடியாது.'

'மீன்பிடிக்கிறதிருக்கட்டும். அநேக நாள் மீன்பிடிக்கிற கூலியை இன்று ஒருநாள் தருவேன். ஜல்தியாய் வாருங்கள்.'

'எவ்வளவு பணம் அது?'

'அதெல்லாம் பேசித்தீர்க்க இது நேரமா? காரியம் மிஞ்சிப் போகுமுன் உடனே வாருங்கள். ஐந்து டாலர் தருவேன்.'

'அவ்வளவுக்கு வரமாட்டோம். இருபது டாலர் தந்தால் வலை போட்டு இழுப்போம்.'

'எனக்கு அவ்வளவு பணமில்லை. ஐயோ சீக்கிரம் வாருங்கள், எனக்குள்ளதெல்லாம் தருவேன்.'

'அதெவ்வளவிருக்கும்?'

'சரியாய்த் தெரியாது, பதினாலு டாலரிருக்கும்.'

அதற்குப் பிறகு மிகவும் தாமதமாய் படகைக் கொணர்ந்து வலை போட்டு இழுத்தார்கள். ஒரு நிமிஷத்திற்குள் உடல் அகப்பட்டது. அதை உயிர்ப்பிக்கும்படி செய்யப்பட்ட பிரயாசையினால் காலதாமதம் நேரிட்டது. அதற்குள்ளாக அவர்கள் பணத்திற்காகப் போட்ட கூச்சல் சகிக்க முடியவில்லை. என் பிரயாசம் வீணாயிற்று. அந்த மனிதன் செத்தே போனான்.

இந்தச் சம்பவம் எனக்குள் ஆழ்ந்த துக்கத்தை விளைவித்ததும் தவிர இன்னம் அதிகத் துயரமான ஒரு சங்கதிக்கு அறிகுறியாயும் இருந்தது. இந்தச் சினர் அந்த ஏழைச் சீனனுடைய பிராணனைச் சாகாமற் காக்க ஏதுவிருந்தும், அந்த ஏதுவைத் தருணத்தில் கையாடாமல் அவனுடைய இரத்தப்பழிக்கு ஆளானார்கள் அல்லவா? ஆம் நிச்சயமாகவே அவர்கள் கொலைக்குற்றவாளிகளே. அவர்களைக் குற்றஞ்சாட்டுகிறதற்குமுன், நாத்தானிலும் பெரியவர் நம்மைப் பார்த்து: 'நீயே அந்த மனுஷன்' என்று நம்மேல் பழிசுமத்தாமல் பார்த்துக்கொள்வோமாக. பிறனுடைய உடலைக் காப்பாற்றாதது பழியாகுமானால், அவனுடைய ஆத்துமாவை இரட்சிக்காமல் என் சகோதரனுக்கு நான் காவலாளியா என்று சொல்வது எப்பேர்ப்பட்ட பாதகமாகும்? ஆண்டவராகிய இயேசு தாமே நமக்குக் கற்

பிக்கிறார், எனக்குக் கற்பிக்கிறார், சகோதரனே, உனக்குக் கற்பிக்கிறார், சகோதரியே உனக்குக் கற்பிக்கிறார். என்ன கற்பிக்கிறார்? 'நீங்கள் உலகெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்று கற்பிக்கிறார். அதற்கு நாம்: 'இல்லை, அதற்கு எங்களுக்கு அசந்தர்ப்பமாயிருக்கிறது. ஆண்டவரே' என்போமா? ஆண்டவரே, மீன்பிடிக்கிற சோலியிலிருக்கிறோம், ஆதலால் போகமுடியாது. நிலம் வாங்கியிருக்கிறோம், ஆகையால் போகமுடியாது. ஐந்து ஏர் மாடு வாங்கியிருக்கிறோம், கலியாணம் செய்திருக்கிறோம், அல்லது இவைகளிலும் அதிக மனவசப்படுத்தும் வேலைகளில் தலையிட்டிருக்கிறோம், ஆகையால் போகக்கூடாது என்று அவருக்குச் சொல்வோமா? வெகுகாலம் ஆகுமுன் 'நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் வரவேண்டும். அப்போது அவனவன் தன் தன் சரீரத்தில் நடப்பித்ததற்குப் பலனை யடைவான்.' சுவிசேஷப் பிரபல்லியத்தை யடையாத சீனரை மனதில் வைப்போமாக; அவர்களுக்காக ஜெபிப்போமாக, அவர்களுக்காக உழைப்போமாக. அப்படிச் செய்யாவிட்டால் நாம் நம் சுய ஆத்துமாவுக்கே துரோகிகளாயிருப்போம். 'மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும் கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. அதை அறியேன் என்பாயாகில் இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத் தக்கதாய்ப் பலனளியாரோ?' இப்படிச் சொன்னவர் யார் என்பதை மனதில் வைத்திருக்கக்கடவோம்.

மசிதொனி விருந்துபல்
கோடியர் கூக்குரல்படும்
கஞ்செவியுள வலமாய்—
'நிசியிரு டனிமெனமை
    மீள்வியுயன்றேல் மாளுவம்
        ஒளியுளீ ரிங்கீரோ?'

புடவியிற் பாதிமசி
தோளும் குறைவார் நம்மை—
ஐயன்மீ ரருளான்வீரிங்
கடல்புரி சாவுவாய்க்கெம்
    மாருயிர் மீட்கவம்மின், வம்
        மின்னெனக் கதறுகின்றார்.

மசிதொன் கூப்பாடர் கேட்டார்
வேறுகூச்சல் புக்காதன்? '
'ஊதியந்தேடுமின்' என்ன
நிசிபக லெழுமொலி
'வந்தெமைப் புரமின்' என்பார்
குரல்புதைத் தடக்கிடும்.

'என்பெருநாள் கடந்துய்ய
மனமுளார் அவ்வடவி
போனிலந் திருத்திவழி
மன்னெனக் காக்குக; அவர்
அங்கிடுகுரல் என்குரல்'
என்பர் நங்கிறிஸ்திறைவர்.

ஐய, யேசு, மாஸிடேச!
மசிதொன் கூப்பாடென்கு
ராமானால், நாங்கள் மாளாமல்
உய்ய அன்னோர்ச் சார்ந்தங்கவர்க்
குன்சுவி சேடஞ் சொல்வாம்
நல்கெமக்கிந் நானிலத்தே.

(இன்னும் வரும்.)

The Letter to Pergamos

By the Rev. F. Goodwill

பெர்கமு சபையின் தூதனுக்கு எழுதின நிருபம்

வெளி. 2^{12-17}

நாம் முன் பார்த்த சிமிர்னா துறைமுகத்தைவிட்டு, கிழக்கே பதினைந்து மைல் தூரம் உள்நாட்டில் சென்றால் விசாலமும் விஸ்தாரமுமான பள்ளத்தாக்கிலுள்ள குன்றண்டை பெர்கமு என்னும் பட்டணம் கட்டப்பட்டிருந்தது என்று பார்ப்போம். இராஜதானிக்கு இது ஏற்ற ஸ்தலம். இது நான்கு நூற்றாண்டுகளாய் இத்தேசத்து பழைய இராஜாக்களும், ரோம தேசாதிபதிகளும் வாசஞ் செய்து வந்த பிரதான நகரமாக விருந்தது. சத்திய வேதத்தில் இந்த ஊரைக்குறித்து வேறெங்கும் நாம் வாசிக்கிறதில்லை. இது எபேசு, சிமிர்னா முதலிய பட்டணங்களுக்குச் சமீபத்தில் இருந்தபடியால்

பரி. பவுல் இங்கேயும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருப்பார் என்று ஊகிக்க இடமுண்டு. இந்த நிருபத்தில் எழுதியிருக்கிறபடி பரி. பவுலைப் பார்க்கிலும் பெரியவர் ஒருவர் இப்பட்டணத்தைச் சந்திக்கப்போகிறார். ஓர் இராஜனைப்போல் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைத் தரித்தவராக ஆண்டவராகிய இயேசு இப்பட்டணத்துக்கு வந்து தமது சத்துருக்களைக் கண்டுபிடித்து, அவர்களைத் தண்டிக்கவும் தமது உண்மையுள்ள இராஜபக்தரை சோதித்து அறியவும் போகிறார்.

1. பெர்கமு சபையின் நிலைமை.

ஆண்டவர் இப்பட்டணத்துக்கு வந்தபோது வேறொரு இராஜன் சிங்காசனம் போட்டு அரசாளுகிறதைப் பார்க்கிறார். பதின்மூன்றாம் வசனத்தில் கண்டிருக்கிறபடி இந்த ஊர் சாத்தானுடைய சிங்காசனம் இருக்கிற இடமாயும், அவன் குடிகொண்டிருக்கிற இடமாயும் இருக்கிறது; ஆதலால் சாத்தான் அதிகாரத்தோடும் ஆதிக்கத்தோடும் ஆரவாரத்தோடும் தன் வேலையை இங்கே நடப்பித்து வருகிறான். சகல பாவத்துக்கும் அக்கிரமத்துக்கும் இவ்வூர் பேர்போனது என்று நாம் சொல்வதற்குச் சந்தேகமில்லை.

நாம் முன்னே பார்த்த இரண்டு துறைமுகப் பட்டணங்களிலேயுள்ள தீமைகளும் பொல்லாப்புகளும் இந்த ஊரில் இல்லாவிட்டாலும், இராஜதானி பட்டணங்களில் சாதாரணமாய்க் காணப்படும் பாவங்களும் அக்கிரமங்களும் இங்கே இருந்தன என்கலாம். இராஜாக்களும் அதிகாரிகளும் பிரபுக்களும் தாங்கள் ஆளுகை புரிந்த காலத்தில் தங்கள் தங்கள் குல தெய்வங்களை கூடவே கொண்டுவந்து, தங்கள் குடிகளும் அவைகளைத் தங்களைப்போல் சேவிக்கும்படி வைப்பது வழக்கம். கிரேக்கர், ரோமர், ஆசியா தேசத்தார் முதலானவர்கள் இப்படியே தங்கள் தேவர்களைக் கூடக் கொண்டுவந்து கௌரவதையோடும் கனத்தோடும் அவைகளைப் பிரதிஷ்டை செய்து, தங்கள் பூஜையை இங்கே ஸ்தாபித்தார்கள். குடிகளுக்கு அதிகாரிகளே முன் மாதிரி காட்டி அத்தேவர்களைச் சேவிக்கும்படி ஏவினால் அவர்கள் கொண்டுவந்த அந்த அஞ்ஞான பூஜை எவ்வளவு டம்பமாகவும் விமரிசையாகவும் நடந்திருக்கவேண்டும் என்று நாம் ஊகிக்கக்கூடும். அஸ்க்லேபியஸ் (Asklepios) என்னும் தேவனுடைய பெரிய கோவில் இங்கே இருந்தது. இது ஆசியாவிலுள்ள மற்ற அஸ்க்லேபியஸ் கோவில்களைப்பார்க்கிலும் பெரிதாக விருந்தது. இந்த சுவாமியின் முக்கிய அடையாளம் சர்ப்பம். இந்த நாட்டிலுள்ளவர்கள் வெகு சாதாரணமாய் 'பெர்கமு பட்டணத்திலுள்ள சர்ப்பத்தின்பேரில்

ஆணையிட்டுச் சத்தியம்பண்ணுகிறேன்' என்று சொல்வார்கள். பரி. யோவான் அப்போஸ்தலன் இதே புஸ்தகத்தில் இரண்டு மூன்று தடவை பிசாசானவனைப் பழைய சர்ப்பம் என்றழைக்கிறார். இந்த ஊரார் சர்ப்ப பூஜையை மிகச் சாதாரணமாகச் செய்துகொண்டுவந்தபடியால் இந்த ஊரை 'சாத்தானுடைய சிங்காசன மிருக்குமிடம்' என்கிறார். சிலர் நிக்கொலாய் மதஸ்தருடைய கொள்கையில் விழுந்திருக்கிறார்கள் என்றும் குறைகூறுகிறார் (இந்த மதஸ்தரைப்பற்றி தியத்தீரா சபையைப்பற்றி எழுதும்போது திட்டமாய்த் தெரிவிப்போம்).

விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக வைக்கும்படி பாலாக் என்பவனுக்கு பிலேயாம் போதனை செய்ததுபோல இந்த ஊராரும் அதிகாரிகளால் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் விபசாரஞ் செய்யவும் அதிகாரிகளால் ஏவப்பட்டார்கள். இந்தப் பட்டணத்திலே கைத்தொழிலாளிகள் ஒன்றாய்ச் சேர்ந்து ஸ்தாபித்த சங்கங்கள் அநேகமிருந்தன. அந்தந்தச் சங்கத்தில் அங்கங்களானவர்கள் ஒருமிக்கச் சேர்ந்து தங்கள் தேவர்களைப் பூஜித்தபிறகு தங்கள் தேவர்களான விக்கிரகங்களுக்கு அர்ப்பிக்கப்பட்ட மாமிசத்தைச் சாப்பிடுவார்கள். பற்பல கைத்தொழில்களைச் செய்கிற கிறிஸ்தவர்கள் அந்தந்தச் சங்கங்களில் சேராவிட்டால் அவர்களுக்கு ஜீவனமுமில்லை; சேர்ந்தால் அவர்களுக்கு ஆத்மீக ஜீவனுமில்லை. இதன்னியில் இவ்விடத்தில் சுமார் அறுபது வருஷகாலமாக சக்கரவர்த்திக்கென்று பிரதிஷ்டிக்கப்பெற்ற கோவிலும் ஒன்றிருந்தது. அப்பட்டணத்தார் தாங்கள் இராஜபக்தியுள்ளவர்கள் என்று காட்ட விரும்பினால், தங்கள் குலதெய்வங்களுக்கு மாத்திரமல்ல, சக்கரவர்த்திக்கும் பூஜை செய்யவேண்டும். அதிகாரிகள் சிலவேளை அங்குள்ள கிறிஸ்தவர்களுடைய இராஜபக்தியைப் பற்றிச் சந்தேகங்கொள்ளும்போது, இந்த சக்கரவர்த்திக்குப் பூஜை செய்வதில் சேரும்படி அழைக்கப்படுவார்கள். 'போலிகார்ப் என்னும் இரத்தச்சாட்சி யிடத்தில் (Cæsar) சீஸர் என்பவர் தேவன் என்று சொல்வதும் அவர்போல் தூபங்காட்டுவதும் பாவமா?' என்று அதிகாரி ஒருவன் வெகு குயுக்தியான கேள்வியைக் கேட்டான். சூட்சம சோதனைகளும் கேள்விகளும் உத்தம கிறிஸ்தவர்களுக்குண்டானாலும் இயேசுகிறிஸ்துவைக்காட்டிலும் வேறு ஒரு பெரிய எஜமான் தங்களுக்கு இல்லையென்று எண்ணி, அவர்கள் அதை பூஜிக்கமாட்டோம் என்பார்கள். நியாயாதிபதிகள் தெய்வங்களைப் பூஜிக்கும்படி கிறிஸ்தவர்களைக் கேட்கிறபோது அவர்கள் கீழ்ப்படியாவிட்டால், மரண ஆக்கினையையே அடைவார்கள். அந்திப்பா

என்பவன் இப்படியே இரத்தச்சாட்சியாய் மரித்திருக்கலாம் என்று நம்ப ஏதுவுண்டு. ஒருவனுடைய பேர்மாத்திரம் இங்கே கண்டிருந்தாலும் அநேக கிறிஸ்தவர்கள் இரத்தச்சாட்சிகளாய் அப்போது மரித்தார்கள். பெர்கமு சபைக் கிறிஸ்தவர்கள் அஞ்ஞான பூஜையாலும் சுகபோகங்களினாலும் சோதிக்கப்பட்டு, பட்டயங்களால் பயமுறுத்தப்பட்டாலும் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை மறுதலியாமலிருந்து ஆண்டவருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டார்கள் என்பதாக வாசிக்கிறோம்.

2. சபைக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தங்கள்.

(a) ஜெயங்கொள்ளுகிறவனுக்கு மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும் கல்லின்மேல் எழுதப்பட்ட புதிய நாமத்தையும் கொடுப்பதாக ஆண்டவர் வாக்கருளுகிறார். இஸ்ரவேலருக்குத் தேவன் அற்புதமாக மன்னாவைப் புசிக்கக் கொடுத்தார். அவர்கள் புசித்துத் திருப்தியடைந்தார்கள். உடன்படிக்கைப் பெட்டியிலும் அந்த மன்னாவை வைத்திருந்தார்கள் என்று நாமறிவோம். எரேமியாவின் காலத்தில் எருசலேம் பட்டணம் சத்துருக்களால் பிடிபட்டபோது, உடன்படிக்கைப் பெட்டியிலுள்ள சாமான்களை எரேமியா சீனாய் மலையிலிருந்த குகைக்குக் கொண்டுபோனார் என்று யூதருக்குள் ஒரு பாரம்பரியமிருந்தது. அவர்கள் கொண்ட அபிப்பிராயப்படி மேசியா வரும்வரைக்கும் அந்த மன்னா இந்தக் குகையில் மறைவான பொருளாக இருக்கும் என்று நம்பினார்கள். இந்த வசனத்தின் ஞானக்கருத்தாவது:—தேவன் இஸ்ரவேலருக்கு மன்னாவைக் கொடுத்துப் போஷித்ததுபோல, நமதாண்டவரும் விசுவாசிகளுக்கு மறைவான மன்னாவாகிய ஜீவ அப்பத்தைக் கொடுத்துக் காப்பாற்றுவதாய் வாக்கருளுகிறார். யூதர்களுக்குக் கிடைக்காத மறைவான மன்னாவை விசுவாசிகளுக்குத் தருவேன் என்கிறார். அஞ்ஞானிகளுடைய விருந்தில் சேர்ந்து விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைச் சாப்பிடாமலிருக்கிறவர்களுக்குத் தமது ஆகாரத்தைக் கொடுத்துப் போஷிக்கச் சித்தங்கொண்டிருக்கிறார். எப்படியென்றால் நமது ஆண்டவர் சமாரிய ஸ்திரீயோடு சம்பாஷித்து முடித்தபின், தமது சீஷர்களைப் பார்த்து, நீங்கள் அறியாத போஜனம் எனக்குண்டு என்று சொன்னாரல்லவா? விசுவாசிகளுக்கும் அந்த விதமான மறைவான போஜனத்தைக் கொடுத்துப் போஷிக்க விரும்புகிறார்.

(b) வெண்மையான குறிக்கல்லையும் கொடுப்பேன் என்கிறார். இந்த வெண்மையான கல் என்னத்தைக் காட்டுகிறது என்று அநேகர்

விசாரித்தும் தர்க்கித்தும் வந்திருக்கிறார்கள். அக்காலத்திலிருந்த நியா
யாதிபதிகளான மாஜிஸ்திரேட்டுகள் குற்றவாளி ஒருவனை விசாரித்து
தண்டனை விதிக்கிறபோது ஒரு கறுப்புக்கல்லையும், அவனை விடு
விக்கிறபோது ஒரு வெண்கல்லையும் ஒரு பெட்டியில் வைப்பது
வழக்கம். இந்த நியாயத்தைக்கொண்டே இராஜாதி ராஜாவும்
கர்த்தாதி கர்த்தாவுமானவர் பாவத்தை எதிர்த்து ஜெயிப்பவர்களை
ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தாமல், அவர்களுக்கு வெண்கல்லைக்
கொடுத்து விடுவிப்பார் என்று சிலர் அறிந்துகொள்ளுகிறார்கள்.
விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களுக்குக் குறிக்கற்கள் கொடுக்கப்
படும், அந்தக் கற்களை வாசற்காப்போருக்குக் காட்டி விருந்துண்ண
வருவது அவர்களுக்கு வாடிக்கை. இதை உணர்ந்து ஆண்டவரும்
பரம வீட்டிலே வைக்கும் தமது சொந்த விருந்துக்கு வரும்படி
உத்தரவு கொடுப்பார் என்று வேறு சிலர் நினைக்கிறார்கள். ஜால
வித்தைக்காரர் செதுக்கின கற்களை ஜாலவித்தையில் உபயோகித்து
விசேஷித்த சக்தியைப் பெற்றுக்கொள்ள விரும்புவதும் அப்பட்ட
ணத்தாருக்குள் இயல்பாயிருந்தது. விசேஷித்த சக்தி அந்தக் கற்
களுக்கு உண்டென்று நினைத்து, ஆண்டவரும் தமது ஜனங்களுக்கு
மேலான சக்தியுள்ள உத்தம கற்களைக் கொடுப்பார் என்று அவர்
கள் எண்ணியிருக்கலாம். கடைசியாக, பந்தயசாலையில் போரா
டினவர்கள், நன்றாய்ப் போராடி வயது சென்றவர்களானபோது
சாலையின் அதிகாரிகள் அவர்களுக்கு நற்சாட்சி பத்திரமாக செதுக்
கின வெண்கற்களைக் கொடுப்பார்களாம். இந்த வழக்கத்தைக் கவனிக்
கிறவர்கள் உலகமாகிய போராட்ட சாலையில் நன்றாய்ப் போராடி
ஜெயிக்கிறவர்களுக்கு வல்லமையுள்ள தேவன் வெண்கற்களை நற்
சாட்சி பத்திரமாக மோட்சத்தில் அளிக்கிறார் என்றும் நினைக்
கிறார்கள். ஒருவேளை ஆண்டவர் இந்த நிருபத்தை எழுதினபோது
மேற்கூறியவைகளிலுள்ள ஒரே ஒரு வழக்கத்தை விசேஷமாய்த்
தெரிந்துகொண்டு அதின்படியே கொடுப்பதாக நினைத்ததில்லை.
அநேகவிதமான வெண்கற்கள் மங்களமாகவும் சுபமாகவும் உபயோ
கிக்கப்படுகிறதினிமித்தம் ஆண்டவர் தமது ஜனங்களுக்கும் தங்கள்
சந்தோஷத்தையும், சிலாக்கியத்தையும், அதிகாரத்தையும் குறிக்கும்
படி வெண்கற்களைக் கொடுக்கிறார் என்கலாம்.

(c) வெண்கல்லைப் பார்க்கிலும் அதின்மேல் எழுதப்பட்ட
மறைவான புதிய நாமம் விசேஷமானது. மனுஷர் இடும் பெயர்
கள் பொதுவாக திறமையையும், கைத்தொழிலையும், முகரூபத்தை
யும், ஜீவிய சரித்திரத்தையும் காட்டுகிறவைகள். வேறு சில பெயர்கள்
நிந்தைப் பெயர்களாயும் காரணப் பெயர்களாயுமிருக்கின்றன. இந்த

நோக்கப்படியே மனிதர் நாமகரணம் சூட்டும்போதும் ஞானஸ்நானம்
பெற்றுக்கொள்ளும்போதும் அவர்கள் குணகுணங்களைக் காட்டும்
புதுப் பெயர்களைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். பலஸ்தீனாவிலிருக்
கிற யூதர் அபாயகரமான வியாதியால் மனிதர் கஷ்டப்படுகிறபோது
ஜீவனையும் சுகத்தையும் பலத்தையும் காட்டுகிற புதுப் பெயர்களை
அவர்களுக்கு இடுவது வழக்கம். பிணியாளி லட்சணமான பெயர்
களைத் தரித்துக்கொண்டபின் அதின்படியே சுகப்படுவான் என்பதும்
அவர்கள் நம்பிக்கை. அதேபிரகாரம் மரணபரியந்தம் உண்மையா
யிருந்து ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு நூதன நாமம் சூட்டப்படும்
என்று ஆண்டவர் சொல்லுகிறார். இவர்கள் தங்கள் கஷ்டத்தையும்
உபத்திரவத்தையும் விட்டு க்ஷேமமான நிலைமைக்கு வரப்போகிற
படியால் அந்தச் சுகத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் தக்க பெயர்களைச்
சூட்டுவார். அவர்கள் தம்மைப் பற்றிக்கொண்டதினிமித்தம் அவர்
களுக்குப் புதிய நாமத்தோடேகூடத் தமது சொந்த நாமத்தையுங் கூட்
டித் தரிப்பார். இந்தப் புதிய நாமம் கல்லிலே செதுக்கிக் கொடுக்கப்
படும். பெர்கமு பட்டணத்தில் பார்ச்மெண்ட் (Parchment) என்னும்
நேர்த்தியான தோல் கடுதாசி தயார்செய்து அதின்மேல் எழுதுவார்
கள். அந்த எழுத்துக்கள் வெகுகாலம் அழியாமல் தெளிவாயிருக்கும்.
ஆண்டவரோ கெட்டு அழிந்துபோகும் தோல் கடுதாசிமேல் தமது
ஜனங்களுடைய பெயர்களை வரையாமல் என்றென்றைக்கும் சாஸ்
வதமாய் நிற்கும் வெண்கல்லின்பேரில் செதுக்கிப் பொழியப்போ
கிறார். மேலும் இப்படிச் சூட்டப்படும் இந்த நவமான நாமம்
வேறொருவனும் அறிந்துகொள்ளக் கூடாததாக விருக்கும். அந்
தேசத்தவர்கள் கொண்ட அபிப்பிராயத்தின்படி ஒருவன் பேரை
மற்றொருவன் அறிந்துகொண்டால் ஜாலவித்தையில் அப்பெயரை
உச்சரிப்பதினால் அந்த ஆளுக்குக் கேடு விளையக்கூடும். ஒருவேளை
இந்த அபிப்பிராயத்தைக்கொண்டே இந்த தேசத்து மங்கிலிய ஸ்திரீ
கள் தங்கள் புருஷர் பெயர்களை அந்நிய மனிதருக்குச் சொல்லமாட்
டார்கள் போலும். சாத்தானும் பிசாசும் பாவமும் விசுவாசிகளு
டைய பெயரை அறிந்துகொண்டு அவர்களுக்குத் தீங்கும் இம்சையும்
செய்யாதபடிக்கு மறைவான பெயரைச் சூட்டுகிறார். உண்மையும்
ஊக்கமுமுள்ள போர்வீரர் புதுப் பெயர்களை அவரிடத்தில் பெற்றுக்
கொள்வார்கள். நாம் இந்த வாக்குத்தத்தங்களைக் கவனிக்கையில்,
இந்த பெர்கமு ஊரார் கேடான பாவங்களுக்கும், பொல்லாப்புகளுக்
கும் குறியானவர்களானதால் ராஜாதி ராஜனானவர் அவர்களைத்
தப்புவித்து, தமது சம்பூரணமான களஞ்சியத்திலிருந்தும் பொக்கி
ஷத்திலிருந்தும் நிறைவான செல்வத்தையும் ஆசீர்வாதத்தையும

அருளி, தம்முடைய பாதுகாவலில் வைத்து, அவர்களுக்கு நித்திய ஆஸ்தியைக் கொடுக்க அவர்கள் பெற்றுக்கொள்ளுகிறார்கள் என்று நாம் அறியவேண்டும். பெரிய சோதனையை ஜெயிக்கிறவனுக்குப் பெரிய ஆசீர்வாதம் அருளப்படுகிறது என்பது நிச்சயம். ஆதலால் பிரியமானவர்களே, நாம் அவருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டு அவரைப் பற்றும் விசுவாசத்தை மறுதலியாமலிருப்போமானால், அவர் நமக்கு மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, வெண்மையான குறிக்கல்லையும், வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் நமக்குத் தருவார். 'நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.' (1 யோவா 5[5].)

Holiness

By the Rev. A. Paramanandham

பரிசுத்தம்

முகவுரை

சத்தியவேதம் நமக்குத் தெரிவிக்கிற முக்கிய சங்கதி இரட்சண்யமே. இரட்சண்யத்தின் முக்கிய பலன் பரிசுத்தம். யாத்திரிகனாகிய ஒருவன் பிரயாணஞ் செய்கையில் காசிப்பட்டணத்தை அடைய வேண்டும் என்பதைக் குறியாக வைத்துக்கொள்ளுகிறபடி சத்திய வேதம் காட்டியிருக்கிற முக்திமார்க்கத்தில் யார் யார் நடந்துகொள்ளுகிறார்களோ அவர்கள்" யாவரும் பரிசுத்தம் என்கிற ஸ்திதிக்கு வரவேண்டுமென்று எண்ணவேண்டும். பக்தாதிகளில் அநேகர் தாங்கள் அடையவேண்டிய உத்தம ஸ்திதியின் பேரை மாத்திரம் கேட்டிருப்பார்களேயொழிய அந்த ஸ்திதி எப்பேர்க்கொத்ததென்றும், அது தங்களுக்கு எப்போது எவ்வாறு கிடைக்கக்கூடுமென்றும் அறியார்கள். சிலர் தாங்கள் அத்தேசத்தைச் சேரத்தக்க மார்க்கத்தை யடைந்திருக்கிறோம் என்கிற சங்கதியைத் தெரிந்துகொண்டு அவ்வளவிலே திருப்திப்பட்டு, அவ்வழியில் முன்னேறிச் செல்ல பிரயத்தனிக்கிறதேயில்லை. பக்திமார்க்கத்தில் நாம் சரியாய் பிரயாணம் செய்கிறபோது அம்மார்க்கத்தின் குறிப்பு நமக்கே முதலில் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். காசிக்குப் புறப்பட்டவன் அப்பட்டணம் உத்தர தேசத்தில் எங்கேயோ இருக்கிறது என்று அறிந்திருப்பது போதாது. அந்த ஊர் இன்னவிடத்தில் இருக்கிறது

என்று திட்டமாய் அறிந்திருக்கவேண்டும். நாம் பரிசுத்தம் என்கிற பட்டணத்தில் சேரும்படி எத்திசையை நோக்கிப் பிரயாணஞ் செய்ய வேண்டும்? எவ்வழியைப் பிடித்துப் போகவேண்டும்? எத்தனை தினங்களில் அவ்வூர்ப் போய்ச் சேரலாம். அது மரணம் என்னும் பட்டணத்தின் அப்பக்கத்திலிருக்கிறதோ, இப்பக்கத்திலிருக்கிறதோ? அதின் இலட்சணங்களென்ன? இத்தியாதி காரியங்களை அதைப் பற்றி விசாரிப்பது அவசியமாயிருக்கிறது. இந்தச் சங்கதிகளையெல்லாம் சத்தியவேதம் என்னும் சித்திரப்படத்தினால் நாம் தெரிந்துகொள்ளக்கூடும். இப்படத்தைக் கவனித்து சூட்சம திருஷ்டியினால் பரீட்சிக்கவேண்டும்.

இவ்வித விசாரணையை நடப்பிக்கிறதற்குமுன் பரிசுத்தம் இப்பேர்க்கொத்தது என்று நாம் சாதாரணமாய்க் கொண்டிருக்கிற அபிப்பிராயத்திலிருந்து நம்முடைய மனதை விடுவிக்கவேண்டியது. சத்தியவேதத்தின் எல்லா போதனைகளுக்குள்ளும் மிகச் சிரேஷ்டமான இப்போதனையின் பூரண சாராம்சத்தை பரிசுத்தம் என்கிற ஒரே வார்த்தையில் அடக்கமுடியாது. பிரயாணியாகப் புறப்பட்டவன் காசி என்கிற வார்த்தைக்குப் பிரகாசிக்கிற என்னும் அவயவ அர்த்தத்தை அறிந்துகொண்டு கொஞ்சதூரம் மாத்திரம் நடந்துபோய் தனதவென்று பிரகாசிக்கிற கோபுரமொன்றைக் கண்டு இதே காசி என்று பாவித்து முன்னுக்குச் செல்லாமல் தன் பிரயாணத்தை அங்கேயே நிறுத்திவிட்டால் மூடன் என்றெண்ணப்படுவானல்லவா? அதேபிரகாரம் நாம் பரிசுத்தம் என்கிற வார்த்தையின் அருத்தம் சுசி அல்லது சுத்தம் என்று அறிந்துகொண்டு சுத்தமாக இருந்தால் போதும்; இதிலிருந்தே பரிசுத்தம் என்னும் போதனையைக் கைக்கொண்டாயிற்று என்று நினைத்துக்கொள்வது வீண் யோசனை. பரிசுத்தம் என்கிற வார்த்தை இந்தப் போதனையின் மூல விஷயத்தைக் காட்டுகிறதேயன்றி அதின் பூரண தாற்பரியத்தையும் கொள்கையையும் காட்டுகிறதில்லை.

பூர்வகாலமுதல் தேவன் ஒரு தேசத்தாரைத் தெரிந்துகொண்டு அவர்கள் மூலமாய்த் தமது விஷயமான ஞானத்தைப் பிறப்பிக்க வேண்டுமென்று அபேட்சித்து, அவர்கள் பரிசுத்தர்களாக வேண்டுமென்று உத்தேசித்து, தமது உத்தேசத்தை அவர்கள் அற்பபுத்தி கிரகிக்குமட்டும் அவர்களுக்குத் தெரிவித்து காலாவட்டத்தில் அதை விவரித்துக்கொண்டே வந்தார். ஆயினும் கிறிஸ்துவானவர் அவதரிக்குமுன்னமே ஜனங்கள் தேவனுடைய அபிப்பிராயத்தை கொஞ்ச மாத்திரம் கிரகித்துக்கொண்டிருந்தார்கள் என்று பரி. பவுல் சொன்ன வார்த்தைகளால் நாமறிந்துகொள்ளலாம். மேலும் அவர் கொலோசெ

யருக்கு நிருபம் ஒன்றை எழுதி, சிரேஷ்டமான இந்தப் போதனையைக் கைக்கொள்ளவேண்டுமென்று அவர்களேவி அதின் விஷயமாய் அவர்களுக்குச் சொன்னது என்னவென்றால், 'அந்த வாக்கியம் எல்லாக் காலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இரகசியமானதாயிருந்தாலும் இக்காலத்தில் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்டிருக்கிறது' என்பதே (கொலோ. 1[26]). பவுலின் காலத்திலிருந்து இதுவரைக்குமுள்ள ஜனங்கள் கிரமங்கிரமமாய் இந்தப் போதனையின் அபிப்பிராயத்தை அதிகமதிகமாய்த் தெரிந்துகொண்டு, அதின் விஷயமான தங்கள் அறிவை நிச்சயமாய்ப் பிடித்துக்கொள்வதற்கு வேறே வேறே பேர்களை அதற்குக் கொடுத்திருக்கிறார்கள். பரிசுத்தம் என்பதுமல்லாமல், பூரண இரட்சிப்பு, பூரண சுத்திகரிப்பு, பூரணமாய் ஒப்புக்கொடுத்தல், பூரண அன்பு, கிறிஸ்தவ சித்தி, இவை முதலான பேர்கள் இந்தப் போதனைக்கு உண்டு. நாம் முன் விசாரணைசெய்தபடி, ஒருவேளை இன்னும் சில பேர்கள் அதற்கு ஏற்றவைகளாயிருக்கிறது என்று சொல்லத்தகும். பூலோகத்தாரின் விஷயமாய் தேவன் இட்டிருக்கிற சாஸ்வதமான நோக்கத்தை மனுஷர் பாஷையின் ஒரே வார்த்தையில் சுருக்கிச் சொல்வது கூடாமை. இந்தப் போதனையைக் கூடியமட்டும் நாம் தெரிந்துகொள்ளவேண்டுமானால் தேவன் தமது மனதை மனுஷருக்கு முதலில் வெளிப்படுத்தின காலத்தை யோசித்து, லோகத்தார்கள் தங்கள் விஷயத்தில் தேவனுக்கிருக்கிற அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளும்படி அவர் எந்த வழியில் நடத்திக்கொண்டு வந்தாரோ அந்த வழியை விசாரித்துக் கண்டுகொள்வது உசிதம்.

(இன்னும் வரும்.)

C. L S. PRESS, MADRAS—1915

No. 113 அக்டோபர் 1915

வேதியர் விளக்கு

REGISTRAR OF ... 8 - OCT 1915 ... MA

The Gospel according to St. Luke

[From *Lectures on the Gospels* by Dr. Findlay]

I. The Biography of Luke.

The Third Gospel is as distinctly Gentile as the first is Jewish. Luke is probably the only non-Jewish writer in the Bible. He became a companion and intimate friend of Paul. He is doubtless 'the beloved physician' of Col. iv. 14, Philem. 24. He was Paul's only attendant when he wrote to Timothy (2 Tim. iv. 11) on the eve of his martyrdom. There is some reason to think that Luke was the unnamed brother, highly commended in the Church (2 Cor. viii. 18–19). It is thought that Luke and Titus were brothers.

Luke's presence with Paul shows itself in the story of the Acts by the sections where the word 'we' is used. It first appears in Paul's embarking for Europe at Troas (Acts xvi. 10) and then disappears in Acts xvii, when Paul and Silas left him at Philippi as Paul's first missionary in Europe.

In the same neighbourhood six years later (A.D.59) the 'we' reappears and continues to the end of Acts, where Paul is left a prisoner in Rome.

From Colossians we learn that Luke was with Paul during the latter part of the third journey and the first imprisonment in Rome. From 2 Timothy we learn that he was again with him during the second and fatal imprisonment in Rome.

The fact of his being a doctor accounts for the superior literary skill with which he writes and for the accuracy with which he describes the miracles of healing.

His name is Lucas, which is short for Lucanus. Probably like many physicians of that day he was a freedman and he may have taken the name of the family in which he had formerly been a slave.

II. The Characteristics of Luke's Gospel

This is specially the Gospel concerning the Man, Christ Jesus

It unfolds His ***human*** character and work among men. In this respect Luke's Gospel is the complement of the Fourth Gospel, which is the Gospel of the *Son of God.*

1. The Genealogy.

This leads up to Adam, and through Adam to God. Matthew like a Jew stopped at Abraham. Luke is a Gentile. He gives the *natural* descent whereas Matthew gives the line through which the Crown came.

2. Luke gives the history of the birth and childhood of Jesus. Also the beautiful story concerning our Lord's boyhood.

3. Our Lord's pity for the outcast and the despised is prominent in this Gospel.

We see not so much the Jewish Messiah, as the world's healer, redeemer and lover of men.

This is the gospel of philanthropy.

E. g.	The Parable of the good Samaritan	x. 33
	The Grateful Samaritan	xvii. 16
	The Pharisee and the Publican	xviii. 9–14
	The Poor widow	xviii. 9–14
	The Penitent thief	xxiii. 29–42
	The Prodigal son	xv.

4. The Doctrines of Salvation—the virtue of Faith; forgiveness of sins; the Fatherhood of God—are more largely illustrated than in any other Gospel.

Four times in Luke, Jesus says:

'Thy faith hath saved thee'—vii. 50; viii. 48; xvii. 19; xviii. 42.

This is the characteristic of the one who was a companion of St. Paul.

III. Outline of St. Luke's Gospel

(1) *The Saviour's Birth and Childhood*

Scene—Bethlehem and Nazareth — chs. i, ii.

(2) *The Saviour's Anointing, Baptism and Temptation*

Scene—Jordan and Desert (Here comes in the genealogy as an introduction to His Mission) — chs. iii–iv. 13.

(3) *The Saviour's Ministry to the people*

His words of grace and works of healing; Scene—Galilee—especially Capernaum — chs. iv. 14–ix. 50.

(4) *The Saviour's journey to the Cross*

Scene—The way to Jerusalem (During which His character and purpose and the wickedness and impending doom of His enemies become more and more apparent) — chs. ix. 52–xix. 28

(5) *The Saviour's Final work of Salvation*

His atoning death and resurrection; Scene—Jerusalem and Calvary — chs. xix. 29–xxiv.

Holiness

By the Rev. A. Paramanandham

பரிசுத்தம்

முதலாம் அதிகாரம்

பரிசுத்தத்தின் உற்பத்தி (தொடர்ச்சி)

1. குடியானவன் ஒருவன் உழுதுகொண்டிருக்கையில் தன்னுடைய கலப்பையின் கொழுவில் புராதன காலத்திலுள்ள சட்டியொன்று மாட்டிக்கொண்டால், அவன் அதை எடுத்துப் பார்க்கை

யில் அது பூர்வகாலத்தில் எந்த வேலைக்கு உபயோகிக்கப்பட்டதோ என்று அறியாமல் அது தான் உபயோகிக்கிற கொழுவின் ரூபமாயிருப்பதைப் பார்த்து பூர்வீகத்தார் தன்னைப்போலவே அதை உழுகிறதற்கு உபயோகித்துக்கொண்டிருந்தார்கள் என்று நினைப்பான். அதேபிரகாரம் புராதன காலத்துக் கிரந்தங்களை நாம் வாசிக்கிறபோது அவைகளில் நமக்குக் கிடைக்கிற சில வார்த்தைகள் இக்காலத்திலுங்கூட ஒருவாறு வழங்கப்பட்டு வந்தாலும் பூர்வீகத்தில் அவைகளுக்கு என்ன அர்த்தம் இருந்தனவோ என்று முதலில் நமக்குத் தென்படுகிறதில்லை. சத்தியவேதத்தின் முதல் பாகத்தில் பரிசுத்தம் என்கிற வார்த்தையின் அர்த்தத்தை விசாரித்தால் இந்தக் காலத்து அர்த்தத்துக்கு இசையாமல் இடம் பொருள் ஏவல் விஷயமாய் விபரீதப்பட்டு வேறே விதமான கருத்தைக் கொடுக்கிறாப்போல் நமக்குத் தோன்றுகிறது.

பவித்திரம் அல்லது பரிசுத்தம் என்கிற வார்த்தையானது முதல் முதல் மனித லட்சணத்தைக் குறிக்காமல் தேவலட்சணத்தைக் குறிப்பதாய் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. எந்த ஸ்தலத்தில் தேவன் தமது வல்லமையை விளங்கச் செய்தாரோ அந்த ஸ்தலமும் பரிசுத்தமாக எண்ணப்பட்டது. ஓரேப் என்கிற மலையில் எரிகிற முட்செடியின் மூலமாய், தேவன் மோசேக்குத் தம்மை வெளிப்படுத்தினபோது அந்த முட்செடியினின்று 'இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி' (யாத். 3^{5}) என்கிற அசரீர சப்தம் மோசேக்கு உண்டாயிற்று. தேவன் சீனாய் மலையை மேகத்தினால் மூடி நியாயப்பிரமாணத்தை மோசேக்கு அங்கே உபதேசித்தபோது அவனுக்குச் சொன்னது: யாரும் இந்த மலையைத் தொடாதபடி இதற்கு 'எல்லை குறித்து அதைப் பரிசுத்தப்படுத்துங்கள்' என்று கற்பித்தார் (யாத். 19^{23}). தேவன் மனுஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினவிடம் காட்டிலே சாமான்ய விடமாயிருந்தாலும் அது பரிசுத்தமாயிற்று.

தேவன் தம்மை வெளிப்படுத்தின ஸ்தலம் மாத்திரம் பரிசுத்தமானது என்றல்ல அவருக்காக பிரித்துவைக்கப்பட்ட வஸ்துக்களும் அவருக்குச் சம்பந்தமானவைகளும் எல்லாம் பரிசுத்தமானவை என்பதே அக்காலத்து ஜனங்களுடைய எண்ணம். தேவனை ஆராதிப்பதற்காகக் கட்டின கூடாரத்துக்குப் பரிசுத்த ஸ்தலம் என்கிற பேரும், அதின் மூலஸ்தானத்துக்கு மகா பரிசுத்த ஸ்தலம் என்கிற பேரும் கொடுக்கப்பட்டு இருந்தது (26^{33}). பலிபீடம் அதிக பரிசுத்தமானது. பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்றும் (யாத். 29^{37}), கூடாரத்திலுள்ள மேசை, விளக்கு; தூபபீடம்,

சட்டு முதலானவைகளெல்லாம் அதிகப் பரிசுத்தமாகும்படி அவைகளை அபிஷேகஞ் செய்யவேண்டுமென்றும் (யாத். 30^{26-29}), ஓய்வுநாள் பரிசுத்தமானது ஆதலால் அதைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டுமென்றும் (யாத். 31^{13-14}), ஆரோனும் அவன் வஸ்திரங்களும், அவன் பிள்ளைகளும் அவர்கள் வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படி அவர்கள் மேலேயும், அவர்கள் வஸ்திரங்கள்மேலேயும் அபிஷேக எண்ணெயைத் தெளிக்கவேண்டுமென்றும் (யாத். 29^{21}), இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்தினாலே அறிந்துகொண்டு, இவைகள் தெய்வசம்பந்தமாயிருக்கிறபடியால் பரிசுத்தமாயிருக்கின்றனவென்று அபிப்பிராயப்பட்டார்கள். மேற்சொன்ன பரிசுத்த சமயம், இடம் வஸ்துக்களுக்கும், ஏனைய சமயம், இடம், வஸ்துக்களுக்கும் இயற்கையாக எந்த வித்தியாசங்களுமிருந்ததில்லை; எந்தவித சிரேஷ்டமுமிருந்ததில்லை. தேவ சம்பந்தத்தினால் மாத்திரம் பரிசுத்தமென்று கூறப்படலாயிற்று. பரிசுத்தத்தின் விஷயமாய் இஸ்ரவேலருடைய நம்பிக்கையானது தங்களைச் சுற்றிலுமிருந்த தேசத்தவர்களுடைய நம்பிக்கையைப்பார்க்கிலும் அல்லது இக்காலத்து விக்கிரகாராதனைக்காருடைய நம்பிக்கையைப்பார்க்கிலும் மேலாயிருந்தது என்று சொல்வதற்கிடமில்லை. விக்கிரகாராதனைக்காருங்கூட இந்தப் பதார்த்தம் தேவாராதனைக்கு வேண்டுமென்றும், இதை வேறு காரியத்துக்கு உபயோகிக்கப்படாதென்றும், இந்த ஸ்தலத்தில் தேவசக்தி காணப்பட்டதால் இது புண்ணியஸ்தலம் என்றும் சொல்லுகிறார்களல்லவா? இந்த அபிப்பிராயம் தேவன் இருக்கிறார் என்கிற நம்பிக்கையின் மேல் நின்றிருந்தது. தேவன் எப்படிப்பட்டவர் என்று அக்காலத்தாருக்குத் தெரியவில்லை. தேவனை யெகோவா என்றால் இருக்கிறவராய் இருக்கிறவர் (யாத். 3^{14}) என்கிற ஓரே பேரால் அழைத்தார்கள். தேவன் இருக்கிறார் என்பதை அவர்கள் நிச்சயமாய் அறிந்துகொண்டு, பரிசுத்தம் என்கிற விஷயத்தில் மேற்கூறிய அபிப்பிராயங்களோடிருந்தார்கள். இவர்கள் தேவனை அறியாமலிருந்தால் எதையாகிலும் பரிசுத்தம் என்று எண்ணியிருக்கமாட்டார்கள். எசேக்கியேல் தான் கண்ட சொர்ப்பனத்தில் வெளிப்பட்ட பிரவாகத்தையும் அதில் புலப்பட்ட விஷயங்களையும் தமது சரித்திரத்தில் தெரிவித்திருக்கிறானல்லவா? (எசே. 47^{1-12}.) அந்தப் பிரவாகத்தின் ஜலம் தேவஸ்தானத்தின் வாசற்படியின் கீழினின்று மெதுவாகப் புறப்பட்டு முன்னே நடந்து வரவர அதிகரித்து பாதம் முழுகும் வரை வந்து, அதிலிருந்து முழங்கால்வரைக்கும் ஏறி, அதின்மேல் இடுப்புவரைக்கும் வந்து கடைசியில் தாண்டக்கூடாத பெரிய நதியாய்ப் பாய்ந்தது. பரிசுத்தத்தின் விஷயமான அபிப்பிராயம் அந்த

ஜலப்பிரவாகத்துக்கு சமானமாயிருக்கிறது. அந்த அபிப்பிராயம் காலக்
கிரமத்தில் அதிகரித்து, அகலமாயும் ஆழமாயும் விரிந்து கடைசியில்
ஓர் பெரிய நதியைப்போலாயிற்று, என்பதை நாம் முதலில் விசா
ரித்தறியவேண்டும். இது எந்த விதமாயுண்டாயிற்று; எவ்விட
மிருந்து புறப்பட்டது? என்பதை இப்போது ஞாபகங்சொல்வது
போதுமானது. எசேக்கியேல் கண்ட பிரவாகம் எப்படி கொஞ்சம்
கொஞ்சமாய்த் தேவஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வந்ததோ அப்ப
டியே பரிசுத்தத்தின் விஷயமான அறிவு முதலில் சூட்சுமமாய் தேவ
சந்நிதியினின்று புறப்பட்டது என்று நாம் அறிந்துகொள்ளவேண்
டும். பரிசுத்தம் என்கிற சப்தத்தை நாம் கேட்கும்போதெல்லாம் பரி
சுத்தம் நமக்கும் தேவனுக்குமிருக்கிற சம்பந்தத்தினால் உண்டாகிறதே
யொழிய நம்மிலுள்ள எந்தவிதமான யோக்கியதையினாலும் பிறக்கிற
தில்லை என்று ஞாபகங்கொள்ளவேண்டும். நம்முடைய பரிசுத்தம்
வளரவேண்டுமானால் நாம் தேவனிலுள்ள அந்நியோந்நிய சகவாசத்
தை விருத்திசெய்வதற்கு ஏற்ற பிரயத்தனஞ் செய்யவேண்டும். நிஜ
மான பரிசுத்தம் தேவசம்பந்தத்தினாலேயே உண்டாகிறது.

2. தேவன், தாம் ‘இருக்கிறவராக இருக்கிறேன்’ என்பதை
இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தி, தமக்குச் சம்பந்தமானவைகளை
யெல்லாம் பரிசுத்தமாக எண்ணவேண்டுமென்று கட்டளை கொடுத்து,
அவ்வளவோடு நிறுத்திவிடவில்லை. தம்மை அவர்களுக்கு வெளிப்
படுத்தி, அவர்களை அடிமைத்தனத்தினின்று விடுவித்த கொஞ்சக்
காலத்துக்குப் பின் நியாயப்பிரமாணத்தை அவர்களுக்குக் கொடுத்
தார். இந்த நியாயப்பிரமாணத்தில் நாம் முன் பார்த்தபடி, தேவ
னுக்குச் சம்பந்தப்பட்டவைகளைப் பரிசுத்தமாக எண்ணவேண்டு
மென்கிற நியமங்கள் இருந்தது மாத்திரமல்ல, இன்னும் அநேக
விசேஷமான கட்டளைகளுமிருந்தன. அந்நிய தேசத்தவர்கள் தங்
கள் தேவர்களின் சிரேஷ்டத்துவத்தை யறிந்துகொண்டு, அதற்
கேற்ற ஆசாரங்களினால் மரியாதை செய்வது போதும் என்று
நினைத்து, மனம் வந்தபடி நடந்துகொண்டார்கள். ஆனால் தேவன்
இஸ்ரவேலருக்கு விதித்த நியாயப்பிரமாணத்தில் சடங்குகள் மாத்
திரம் முக்கியமானவை என்று சொல்லவில்லை (எரே. $7^{22, 23}$). அந்தப்
பிரமாணம் நியாயப்பிரமாணம்; அதின் முக்கிய கருத்து நீதிதான்.
தேவன் அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தி, தம்மைக் கனம்பண்ண
வேண்டுமென்று கட்டளையிட்டது மாத்திரமல்ல, அவர்கள் நடத்தை
விஷயமாய்க் கற்பனைகளை நியமித்து தமக்கு அடங்கினவர்களாயிருக்க
வேண்டுமென்று வற்புறுத்தத் தெரிவித்தார். இஸ்ரவேலர் நியாயப்
பிரமாணத்தினாலே தேவனோடே சம்பந்தத்தை யடைந்தபடியால்,

தாங்கள் அந்நிய ஜனங்களைப்போல சுயேச்சையாய் நடந்துகொள்வது
கூடாமை என்று அறிந்துகொண்டார்கள். தங்கள் துர்க்குணங்
களுக்கு அநுகூலமாயிருந்த கொலை, விபசாரம், கள்ளத்தனம், விக்
கிரக ஆராதனை முதலான துர்க்கிரியைகளைத் தாங்கள் செய்யக்கூடா
தென்றும் அவர்களுக்குத் தெரியவந்தது. அது முதற்கொண்டு
பரிசுத்தம் என்கிற பதத்தில் தேவனுக்குச் சம்பந்தம் என்கிற அர்த்
தம் மாத்திரமல்ல, அவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்கிற
தாற்பரியமும் கூடியிருந்தது. இந்தச் சங்கதியை தேவன் தமது
தாசன் மோசே மூலமாய் அவர்களுக்குத் தெளிவாய்த் தெரிவித்தார்.
‘நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக்
கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச்
சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்...நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்ய
மும் பரிசுத்த ஜாதியுமாயிருப்பீர்கள்’ (யாத். $19^{5, 6}$). இஸ்ரவேலர்
‘இருக்கிறவர்’ என்கிற ஒரே பெயரால் தெரியக்கூடிய ஞானத்தை
அடைந்திருந்த காலத்தில் ‘கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பா
னவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்
படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பான
வர் யார்?’ (யாத். 15^{11}) என்று ஸ்தோத்திரஞ் செய்து, தேவன்
தமது மகிமையை தமக்குச் சிரேஷ்டமாக விளங்கச் செய்தார் என்
பதை மாத்திரம் அறிந்துகொண்டார்கள். தேவன் நியாயப்பிர
மாணத்தை யளித்த காலத்தில் தம்முடைய ஜனம் தம்முடைய
கற்பனைகளை அகத்தியமாய்க் கைக்கொள்ளவேண்டுமென்று அபேட்
சித்து, ‘எரிச்சலுள்ள தேவன்’ (யாத். 20^{5}) என்கிற மற்றொரு
பெயரைத் தாம் தரித்துக்கொண்டு அவர்களுக்கு அதைத் தெரி
வித்தார். அக்காலமுதல் இஸ்ரவேலர் தேவன் பரிசுத்தர் என்று
அவரை நினைக்கிறபோது, பரிசுத்தம் என்கிற பதத்தைக் கனமான
என்கிற அர்த்தத்தினால் அல்ல, கடின அல்லது கண்டித என்கிற
பொருளினால் அறிந்துகொண்டார்கள். ஜனங்கள் சம்பந்தமாயும்
தேவன் விஷயமாயும் பரிசுத்தம் என்னும் வார்த்தைக்கிருந்த அருத்
தம் காலக்கிரமத்தில் விருத்தியாகிக்கொண்டே வந்தது. தேவஸ்
தானத்திலுள்ள வாசற்படியின்கீழ் நின்று புறப்பட்ட நீர் அதிகரிக்க
அதிகரிக்க பாதம் முழுகத்தக்க ஆழமாயிற்று; அது வேறே பிரவாக
மல்ல; தேவனுடைய சந்நிதானத்தினின்று புறப்பட்ட பிரவாகமே.
தேவனுக்குச் சம்பந்தமாயிருப்பதும், அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பது
மாகிய இவ்விரு அருத்தங்களும் பரிசுத்தம் என்கிற வார்த்தையி
லடங்கியிருக்கின்றன. தேவனுடைய சமீபந்தமில்லாமல் பரிசுத்தம்
உண்டாகிறதில்லை. நன்னெறியில்லாமல் பரிசுத்தம் நிலைநிற்ப

தில்லை. வெவ்வேறு காலங்களில் சிலர் அக்கியோக்கியம் என்கிற பரிசுத்தத்தைத் தாங்கள் தேவனிடத்தில் அடைந்திருப்பதினாலே அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதற்கு எந்த ப்ரத்தியதையும் தங்களுக்கில்லை என்று எண்ணுகிறார்கள். இப்போர்க்கொத்த யோசனை பொய்யும் தேவனை அலட்சியம் பண்ணுகிறதாயுமிருக்கிறது. மெய்யான பரிசுத்தத்தில் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற காரியம் சாதாரணமாய்ச் சேர்ந்திருக்கிறது.

3. இஸ்ரவேலர் தங்கள் தேவனுக்குச் சொந்த ஜனங்களும் தாசர்களுமாயிருக்க வேண்டுமென்று நன்றாய் அறிந்துகொண்டிருந்தாலும், அப்படி இருக்கிறதற்கு அவர்களுக்கோ மனம் வரவில்லை. நியாயாதிபதிகளும் இராஜாக்களும் ஆண்ட காலங்களில் தேவன் விலக்கின விக்கிரக பூஜைகளுக்கும், நானாவித துராச்சாரங்களுக்கும், பற்பல சமயங்களில் தங்கள் மனதைச் செலுத்தி, சன்மார்க்கத்தினின்று இடறி விழுந்தார்கள். தங்களுக்கும் தேவனுக்கும் விசேஷ சம்பந்தமுண்டென்று அவர்கள் நம்பினாலும், அவருடைய கற்பனைகளைச் சரிவரக் கைக்கொள்ளவேண்டுமென்று அவ்வளவாய்ப் பிரயாசப்படவில்லை. அநேக வேளைகளில் அவர்களைத் தங்கள் சத்துருக்களுக்கு முன் தோற்றுப்போகச் செய்து கஷ்டங்களுக்குட்படுத்தி, அவர்களைத் தண்டித்து நல்வழியில் நடத்தியிருந்தாலும், திரும்பவும் பாக்கியமும் சௌக்கியமும் தங்களுக்கு வந்தவுடனே நல்வழியைத் துறந்து தீய மார்க்கத்தில் மனசு வந்தபடியே நடந்தார்கள். அக்காலத்திலும் தேவன் தாம் எத்தன்மையானவர் என்றும், தமது ஜனங்களும் எவ்விதமாய் இருக்கவேண்டுமென்றும் தீர்க்கதரிசிகள் மூலமாய்த் தமது நோக்கத்தைப் பரிஷ்காரமாய் வெளிப்படுத்தினார். ஏசாயா கண்ட திவ்விய தரிசனத்தை நாம் விசாரித்தால், எல்லா சங்கதிகளையும் தேவன் தீர்க்கதரிசிகளுக்கு அறிவித்து, தாமே தமது ஜனங்களுக்கு உபதேசிப்பதுபோல அவர்களை அவர்கள் மத்தியில் அனுப்பினார் என்று அறிந்துகொள்ளவேண்டும். ஏசாயா உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் ஆண்டவர் வீற்றிருக்கிறதையும், சேராபீன்கள் அவருடைய திவ்விய மகிமையைப் பார்ப்பதற்கு அஞ்சி, தங்கள் செட்டைகளால் தங்கள் முகங்களை மூடிக்கொண்டு ஒருவரையொருவர் நோக்கி: 'சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று கூப்பிட்டுச் சொல்லுகிறதைக் கேட்டு, தேவனுடைய பரிசுத்தத்தைத் தானுங் கண்டு ஆச்சரியப்பட்டு 'ஐயோ நான் அசுத்தன் நான் வசிக்கும் தேசத்தாரும் அசுத்தர் என்று மிகப் பயத்தோடும் துக்கத்தோடும் பிரலாபித்தானே (ஏசா. 6^{1-5}). தீர்க்கதரிசிகள் இவ்விதமான திவ்விய தரிசனங்களைக் கண்டு, தேவனுடைய

இலட்சணம் எவ்வளவோ சிரேஷ்டமானது என்றும், அவ்வித பரிசுத்தருக்கு எதிரில் பாவத்தினால் நிறைந்திருக்கிற தங்கள் குணமும் சுபாவமும் எவ்வளவோ அசுத்தமானவை என்றும் அறிந்து சுய ஜனங்களிடத்தில் போய், பரிசுத்தம் என்கிற தேவனுடைய குணத்தை அவர்களுக்கு விவரமாய்த் தெரிவித்து, நீங்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரை அசட்டை செய்தீர்கள் என்று அவர்களைக் கண்டித்து, 'உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்' என்று அவர்களுக்குப் போதித்தார்கள் (ஏசா. $1^{4,16}$). இஸ்ரவேலரில் அநேகர் தேவன் தங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிறபடியால் தாங்கள் பரிசுத்த ஜனம் என்று எண்ணி, தீர்க்கதரிசிகள் செய்த போதனைகளினிமித்தம் அவர்கள்பேரில் கோபமூண்டு 'கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள்மேல் வராது' (மீகா, 3^{11}) என்று சொன்னார்கள். அதற்கு தீர்க்கதரிசிகள் பிரதியுத்தரமாக: 'நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்' (ஆமோ. 5^{14}) என்று அவர்களை எச்சரித்தார்கள். தீர்க்கதரிசிகளின் போதனையைக் கேட்ட உத்தமரான ஜனங்களில் சிலர், தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால் தங்களிடத்தில் நீதியில்லாமலிருந்தால், அவருக்கும் தங்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லாமல் போய்விடும் என்றும், தாங்கள் பரிசுத்த ஜனமல்லவென்றும் தெளிவடைந்து ஒத்துக்கொண்டார்கள். அவர்களுடைய பூர்வீக அறிவின்படி தேவன் மிகக் கடினமான எஜமான் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். தீர்க்கதரிசிகளின் போதனைகளினாலே தேவனைப்பற்றி சிரேஷ்டமான ஞானத்தையடைந்தார்கள். அதெப்படியென்றால், 'பரிசுத்தமுள்ள தேவன் நீதியினால் பரிசுத்தராய் விளங்குவார்' (ஏசா. 5^{16}) என்பதே. பரிசுத்தம் என்கிற விஷயம் நாளடைவில் அதிகமதிகமாய் விருத்தியாகிக்கொண்டே வந்தது. இதினால் அக்காலத்து ஜனங்கள் பரிசுத்தராகிய தேவன் தங்கள் மத்தியில் வாசமாயிருப்பதற்கு ஒத்துக்கொண்டதுபோல, தங்களிடத்தில் இருக்கவேண்டிய குணம் நீதியோடு கூடின பரிசுத்தத்துவம் என்றும் அறிந்துகொண்டார்கள். தேவனுடைய சந்நிதானத்தினின்று புறப்பட்ட பிரவாகம் அப்போதே முழங்கால்வரை ஏறியிருந்தது. தேவன் எவ்வளவோ பரிசுத்தராயிருக்கிறாரென்றும், அவரோடு சம்பந்தப்பட்டிருக்கும் தாங்கள் எவ்வளவோ அவருக்கு எதிரிடையாக குணத்தையுடையவர்களாயிருக்கிறார்கள் என்றும் திட்டமாய்த் தெரிந்துகொள்ளாவிடில் நிஜமான பரிசுத்தம் தங்களுக்கு உண்டாகாது என்றும் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

(இன்னும் வரும்)

Pillars in Scripture

தூண்கள்

1. 'அம்முட் ('*Ammud*) தூண் என்பது எபிரெய பாஷையில் வழங்கின இரண்டு பதங்களைக் குறிக்கும். இவற்றுள் அம்முட் ('*mmud*) என்பது மாளிகைகளிலும் ஆசரிப்புக் கூடாரத்திலும் உள்ளவைகளும் வெண்கலத்தினாலும் மரத்தினாலும் செய்யப்பட்டவைகளுமான தூண்களைப் பொதுவாய்க் குறிக்கும் (யாத். 26^{32}. நியா. 16^{25}. 1 இரா. 7^{2}). உவமையாய் இந்தப் பதம் மேகஸ்தம்பத்தையும் அக்கினிஸ்தம்பத்தையும் குறிக்கும் (யாத். 13^{21}. நியா. 20^{40}). தூண் என்பது புதிய ஏற்பாட்டிலே உவமையாகமாத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. (கலா. 2^{9}. 1 தீமோ. 3^{15}. வெளி. 3^{12}.)

2. மச்சேபா. (*Mazzebah.*) சில வசனங்களில் தூண் என்பது மச்செபா (*Mazzebah*) என்னும் எபிரெய பதத்தைக் குறிக்கிறது. 'மச்செபா' என்னும் இத்தூண்கள் முன்சொன்ன வெண்கலம் மரம் முதலியவற்றால் செய்யப்பட்ட மாளிகைத் தூண்கள் அல்ல, சில இடங்களில் நிறுத்தப்பட்டிருந்த கல்தூண்கள். கானானியர் பெனிக்கேயர் முதலியவர்கள் இவ்வித கல்தூண்கள் பலவற்றை நட்டுவைத்திருந்தார்கள். பூர்வீகத்தில் எபிரெயர்களும் அப்படியே செய்து வந்தார்கள்.

பழைய ஏற்பாட்டில் 'மச்செபா' தூண்கள் மூன்று விஷயங்களுக்காக நிறுத்தப்பட்டது என்று காண்கிறோம்.

i. மரித்தவர்களுக்காக ஞாபகஸ்தம்பமாய் நடப்பட்ட கல்தூண்கள். (ஆதி. 35^{20}. 2 சாமு. 18^{18}.)

ii. சாட்சிக்காக நிறுத்தப்பட்ட கல்தூண்கள். இவைகள் தேவதூதன் தரிசனமானதை அல்லது கடவுள் செய்த ஒரு விசேஷித்த சகாயத்தைக் குறிக்கும். தமிழ் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் இந்த வசனங்களில் தூண் என்பதற்குப் பதிலாகக் கல் என்று மாத்திரம் சொல்லியிருக்கிறார்கள். (ஆதி. 28^{18}; $31^{13, 44}$; 35^{14}. யோசு. 4^{7}; 24^{27}. 1 சாமு. 7^{12}.)

iii. கானானிய தேவஸ்தலங்களிலுள்ள பலிபீடத்தின் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த கல்தூண்கள். எபிரெயர்கள் கானான்தேசத்தில் பிரவேசித்த பிறகு இந்த ஸ்தலங்களில் அவர்கள் பூஜை செய்யும்போது இக்கல்தூண்களை வணங்கிவந்ததினாலே, இவ்விதத் தூண்களை நிறுத்தக்கூடாதென்று நியாயப்பிரமாணத்திலே கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறது. தமிழ் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள்

சில வசனங்களில் இந்தமாதிரிக் கல்தூண்களைச் 'சிலை' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் இவை சிலை அல்ல, உளியால் வெட்டப்படாத வெறுங்கல். தரையில் கிடக்கும் இப்படிப்பட்ட கல்லைக் கானானியர் எடுத்து, அதை உளியால் வெட்டாமல் பூமியில் நிறுத்துவார்கள். (உபா. 7^{5}; 12^{3}. ஓசி. 3^{4}; 10^{1}.)

இதுவும் அல்லாமல் சூரிய ஆராதனையில் ஒருவிதமான கல்தூணை அந்நிய மார்க்கத்தார் நிறுத்துவார்கள். (லேவி. 26^{30}. 2 நாளா 16^{5}. எசா. 27^{9}.)

'மச்செபா' என்னும் கற்கள் இரண்டு அடிமுதல் பத்து அடிவரையில் உயரமாய் இருக்கும். இவைகளின் நுனி வழுவழுப்பாய் இருந்ததினால் இதின்மேல் எண்ணெய் பூசினார்கள் என்று தோன்றுகிறது. பூர்வீகத்தில் இந்தக் கல்தூண்கள் ஞாபகஸ்தம்பமாய் நிறுத்தப்பட்டிருந்தாலும், இவற்றின் பக்கத்தில் பலிபீடத்தைக் கட்டினதினாலே, தாங்கள் வணங்கின தெய்வத்துக்கு இவை இருப்பிடம் என்று ஜனங்கள் நினைத்தார்கள் என்று தோன்றுகிறது. இதின்மேல் எண்ணெய் பூசுவது அல்லது பலியின் இரத்தத்தைத் தடவுவது அதற்குள் குடியிருந்த தெய்வத்துக்கு ஆகாரம். பிந்தின காலங்களில் எபிரெயர் முதலிய சேமியர்கள் கடவுளினுடைய ஆவிக்குரிய தன்மையை இன்னும் தெளிவாய் அறிந்ததினாலே, அவர்கள் வானலோக வாசிகளான தெய்வங்களுக்கு இந்தக் கல்தூண்கள் இருப்பிடம் அல்ல, அவைகளுக்கு ஞாபகஸ்தம்பங்களாய் மட்டும் இருந்தனவென்று எண்ணிவந்ததாகத் தோன்றுகிறது.

3. யாகீனும் போவாசும். — *Jachin and Boaz.* (1 இரா. 7^{15-22}. 2 நாளா. 3^{17}.)

இவ்வசனங்களில் சொன்ன யாகீனும் போவாசும் இரண்டு பெரிய வெண்கலத் தூண்கள். சிற்பாசாரியாகிய ஈராம் மகா விநோதமாகவும் அலங்காரமாகவும் நாற்பது அடி உயரத்தில் செய்த இந்தத் தூண்கள் சாலொமோன் கட்டின தேவாலயத்தின் மண்டபத்தின் முன் நின்றது. இவைகள் அம்மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் அல்ல; இத்தேசத்துத் தேவாலயங்களில் தனித்தனியாய் நிற்கும் ஸ்தம்பங்களைப் போன்றவை. 'யாகீன்' என்னும் பதத்துக்கு 'அவர் ஸ்தாபித்தார்' என்றும், 'போவாஸ்' என்பதற்கு 'இதில் பலம்' என்றும் அர்த்தஞ் சொல்லுவதற்குக் காரணம் இருந்தபோதிலும், இவற்றின் அர்த்தம் இன்னதென்று திட்டமாய்ச் சொல்வது அரிது. பெனிக்கேயர் தங்கள் தேவஸ்தலங்களில் எப்பொழுதும் பலிபீடத்தின் பக்கத்தில் கல்தூண்களை நிறுத்துவதை ஈராம் பார்த்திருந்ததினால், அவன் இவ்விதமாய் இந்த வெண்கலத் தூண்களை

நிறுத்தியிருப்பான் அல்லது தேவாலயத்தின் அலங்கரிப்பைமட்டும் கருதி இப்படிச் செய்திருப்பான். இவற்றையன்றி வேறே காரணம் நமக்குத் தோன்றவில்லை.

St. Paul

பவுலின் உபதேசம்

பரி. பவுல் கொண்ட கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அவர் எழுதிய நிருபங்களைக்கொண்டே அறிகிறோம். ஆயினும், அவைகளில் கண்டிருக்கும் சித்தாந்தங்களை அவர் கிறிஸ்தவ சமயாசார நூலாக, ஒழுங்காகவும் வரிசைக்கிரமமாகவும் எழுதாமல், அந்தந்தச் சபையின் அவசரத்துக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் தக்கபடி எழுதினார். மேலும் அந்நிருபங்களை வாசித்தவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தின் மூலாதாரமானச் சங்கதிகளை அறிந்து விசுவாசித்து மிருந்தார்கள் என்றும் கிறிஸ்துவின் தெய்வீகம் இயேசு கிறிஸ்து செய்த பிராயச்சித்தம், அவர் ஏற்படுத்திய ஞானஸ்நானம், நற்கருணை என்னும் சாக்கிரமெந்துக்களாகிய (Sacraments) இவைகளையெல்லாம் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்றும் பாவித்து எழுதினார் என்பதையும் காண்கிறோம். (2 தெச. 2^{15}; 3^{6}. 1 கொரி. 11^{2}. ரோ. $3^{25,26}$; 5^{17}.)

1 கொரி. 5^{3-5}-லும், 1 தீமோ. 3^{16}-லும் ஒருவிதமான விசுவாசப் பிரமாணம் உண்டென்பதைச் சிலர் நினைக்கிறார்கள். ஆயினும் அக்காலத்திய பக்திமான்கள் தாங்கள் விசுவாசித்தவைகளை ஓர் பிரமாணத்தில் அடக்கியிருப்பார்களோ என்பதைப்பற்றி அதிகச் சந்தேகம்.

தேவனுடைய பிதாத்துவம்

பழைய ஏற்பாட்டிலே தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பிதாவாகச் சொல்லப்படுகிறார். அப்போஸ்தலனாகிய பவுலின் உபதேசத்திலேயோ, அவர்

(*a*) இயேசுகிறிஸ்துவுக்குப் பிதாவாயிருக்கிறார்.

2 கொரி. 1^{3}. எபே. 1^{3}. முதலானவை இயேசு தேவனுடைய குமாரன். ரோ. 1^{4}. 1 கொரி. 1^{9}. எபே. 4^{13}. 1 தெச. 1^{10}. ரோ. 8^{32}-ல் தம்முடைய சொந்த குமாரன் என்பதினால், கிறிஸ்து தேவனோடு ஒரே தன்மையுடையவர் என்பதைக் குறிக்கிறார். மாற். 1^{11}. யோவா. 3^{16}-ஐக் காண்க.

(*b*) எல்லாருக்கும் பிதாவாயிருக்கிறார். எபே. 4^{6}; $3^{14,15}$. கலா. 1^{4}. ('நம்முடைய பிதா'—பொதுவாக.) எபே. 1^{17}. ('மகிமையின் பிதா.')

(*c*) விசேஷமாய் கிறிஸ்தவர்களுக்குப் பிதாவாயிருக்கிறார். அவர்களுக்குப் புத்திர சுவிகாரத்தின் ஆவியை அருளிச் செய்கிறார். (ரோ. 8^{15-21}. கலா. 3^{26}; 4^{6}. எபே. 1^{5}.)

நாம் சுவிகாரத்தினால் பிள்ளைகளாகிறோம்: கிறிஸ்துவோ ஏக சுதனாயிருக்கிறார். 'என் பிதா' 'உங்கள் பிதா' என்று சொல்லி (யோவா. 20^{17}), இயேசுதாமே இந்தப் பேதத்தை விளக்கினார். புத்திர சுவிகாரத்தைப்பற்றிப் பேசும்போதெல்லாம் பவுல் இப்போதகத்தை மனதில் வைத்து எழுதினார்.

1. மனிதனின் வீழ்தல்.

மானிடர் யாவரும் பாவிகள் என்று அவர் அடிக்கடி சாதிக்கின்றார். முக்கியமாய் ரோமருக்கு எழுதிய நிருபத்திலே இந்தக் கொள்கையை வற்புறுத்துகிறார் (ரோ. 1^{7}; $1^{18,23}$; $2^{1,16}$; 3^{9}). 'யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்.' இதின் மூலகாரணம் ஆதாம் செய்த பாவமே (ரோ. $5^{1,2}$). ஆயினும் நாம் செய்கிற பாவத்துக்கு நாம் தனித்தனியாய் உத்தரவாதிகளாயிருக்கிறோம் (1^{20}). 'பாவத்தின் சம்பளம் மரணம்.' ஆதாம் செய்த பாவத்தினால் நமது அவயவங்களில் 'பாவப்பிரமாணமானது' உண்டாயிருக்கிறது (ரோ. 7^{23}). அதினாலே 'ஜென்ம சுபாவமான' மனுஷனுக்குப் பாவம் செய்வது இயல்பாயிருக்கிறது. இது 'ஜென்ம பாவம்' எனச் சொல்லப்படுகிறது. இந்த ஜென்ம சுபாவமாகிய பாவத்துக்கு நாம் இடங்கொடுக்கிறதற்குச் சாத்தானும் அவனுடைய தூதர்களும் நம்மைத் தூண்டிவிடுகிறார்கள். (1 கொரி. 7^{5}. எபே. 6^{12}.)

2. கிறிஸ்துவின் மனுஷாவதாரம்.

சர்வ சாதாரணமாயிருக்கிற பாவத்தை நீக்கும்பொருட்டாகக் கிறிஸ்து மனிதனானார். இதிலே பிதாவானவருடைய அன்பும், குமாரனுடைய அன்பும் விளங்குகின்றது. (ரோ. 8^{32}. கலா. 2^{20}. எபே. 5^{2}.)

பவுல் பலதடவைகளில் கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் சாதிக்கிறார் (ரோ. 1^{5}; 8^{3}; 9^{5}. பிலி. 2^{6-8}. 2 கொரி. 9^{8}). அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறதினால், அவர் சகலத்துக்கும் முந்தினவர் என்பது விளங்குகிறது. 1 கொரி. 8^{6}. கொலோ. 1^{15}-ல் அவருக்கும் பிதாவுக்கும் இருக்கிற சம்பந்தத்தையும் 2 கொரி. 4^{4}-லும் எபி. 1^{3}-லும் அவருக்கும் சிருஷ்டிக்கும் இருக்கிற சம்பந்தத்தையும் காண்கிறோம்.

அவர் பிதாவாகிய தேவனுடைய குடும்பத்தில் முதற்பேறுனவரானதால், அந்தக் குடும்பத்துக்குத் தலைவரும் அதை ஆளுகை செய்கிறவருமாயிருக்கின்றார். (சங். 89[27]. எபி. 1[23]. ரோ. 8[29].)

ஒவ்வொரு நிருபத்திலும் அவர் இவ்விதமாய்க் கிறிஸ்துவின் தெய்வீகத்தை விளக்கிக் காட்டுகிறார் (1 தீமோ. 3[16]. தீத். 2[13]). அவர் உபதேசித்த எல்லாவற்றிற்கும் அதுவே அஸ்திபாரமாயிருந்தது. அதினாலேதான் அவர் கிறிஸ்துவின் அடிமையானார். (ரோ. 1[1].)

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டேய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

பதினைந்தாம் அதிகாரம்

நான் நிங்போவில் குடியிருந்தது

நிங்போ சீனாவின் கரையடுத்த நகர்களில் மிகப் பழமையும் செல்வாக்கும் உள்ளவைகளில் ஒன்று. 1856-ம் வருடம் நான் அதில் வந்து சேருமுன்னேயே இலையுதிர்காலம் பெரும்பான்மையும் கழிந்துபோயிற்று. சங்கீன் உடன்படிக்கையினால் அது 1842-ம் வருடம் பிறதேசத்தார் குடியேற்றத்திற்குத் திறந்துவிடப்பட்டது. அதின் மதில் ஐந்துமைல் சுற்றளவுள்ளது. அதற்குள்ளும் அதைச் சூழவும் நாலு லக்ஷம் ஜனம் வசிக்கிறார்கள். அவர்கள் எல்லாரையும் இயேசு நேசித்து அவர்களுக்காகத் தம் பிராணனைக் கொடுத்தார்.

உறைபனிக்காலம் நெருங்கினபின் உஹுகியாவோ—டியோவில் (எரித்தலைத் தெரு) ஒரு சுதேசி வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன். அக்காலத்தில் அது வசதியுள்ளதல்ல. ஒருநாள் இரவில் நான் தூங்கும்போது என் மேற்போர்வையில் விழுந்திருந்த உறைபனியில் என் பெயரின் முதலெழுத்துக்களை விரலாற் கீறக் கூடியதாயிருந்தது. நான் தூங்கின அறை மேல்மாடியறை. அது அக்காலத்தில் ஒரு பெரிய தானியம் கொட்டிவைக்கிற களஞ்சியம் போல் விசாலித்திருந்தது. இக்காலத்தில் அதை நாலைந்து சிறு அறைகளாய்த் தடுத்து மேலே தளம் போட்டிருக்கிறது. தளம் போடா

மல் ஓட்டுக்கூரையாயிருந்தால், சீனாவில் உறைபனி இடுக்குகள் வழியாய் உள்ளே வரும். அதினால் குளிர் அவஸ்தை பொறுக்கமுடியாது. நான் அமர்த்தின வீடு எவ்வளவு வசதியற்றதானாலும், ஜனங்களிடத்திற் போக்குவரவு செய்வதற்கேற்றதாகவே யிருந்தது. அதிலே காலை, மதியம், இரவு, இம்மூன்று காலமும் ஜனங்களிடத்தில் திருஊழியம் செய்வதற்குக் கூடியதாயிருந்தமையால் ஆண்டவருக்குத் துதிசெலுத்தி அதிலே குடியேறினேன்.

எனக்குச் சம்பளம் கொடுத்து நடத்தின சொசைட்டி இக்காலத்தில் அடிக்கடி கடன்படுவதாயிருந்தது. அதைப்பற்றி இவ்வருஷக் கடைப்பாகத்தில் அந்தச் சொசைட்டியின் சம்பந்தத்தில் இருக்கலாமா இருக்கலாகாதா என்கிற நினைவு அடிக்கடி என் மனதிலுண்டாயிற்று. என்மட்டில், நான் எவ்வளவு நெருக்கமிருந்தாலும் எப்போதும் என் வரவுக்குள்ளேயே செலவுசெய்து கடனைக் கண்ணெதிரே வரவொட்டாமலிருந்தேன். இக்காலத்தில் எனக்குச் சம்பளமும் அதிகம், ஊரில் அகவிலையும் நயம். அதினால் கடன்படாமல் பிழைப்பது எனக்கு இப்போது வெகு இலேசுதான். எனக்கும் என்னோடொத்தவர்களுக்கும் வந்த கால் கால்வருஷச் சம்பளம் கடன் வாங்கியே வந்தது. அதைப்பற்றி பரஸ்பரம் கடிதங்கள் போக்குவரத்தாயிருந்து, கடைசியாக, என் மனச்சாக்ஷிக்குத் திருப்திசெய்துகொள்வதற்கு என் சம்பளத்தை மனோராசியாகவே வேண்டாமென்று விட்டுவிட்டேன்.

'ஒருவனுக்கும் ஒன்றும் கடன்பட்டிராதேயுங்கள்'. இந்தத் திருஉபதேசம் எனக்குக் களங்கமில்லாமல் தெளிவாயிருந்தது. திருஊழியத்திற்காகப் பணக்கடன்படுதல் என் மனதிற்கேற்ற திருவசனச் சொல்லைப் பொய்ப்பிக்கிறதுபோலும் நமக்கு அவசியமான ஒரு நன்மையை தேவன் கொடுக்காமலிருக்கிறாரென்று அவரைத் தூற்றுவதுபோலும், அவர் கொடுக்கத் தவறினதை நாம் சுயபிரயாசையால் சம்பாதித்துக்கொள்ளவேண்டும் என்கிறதுபோலும் தோன்றினது. ஒவ்வொரு தனிக்கிறிஸ்தவனும் செய்யத்தகாதது ஒரு கிறிஸ்தவ சங்கம் செய்யத்தகுமா? இந்தத் தகாத விஷயத்தில் பிறர் வைக்கிற முன்மாதிரி எவ்வளவு பெரும்பான்மையாய் இருந்தாலும், அதை நாம் பின்பற்றுவது சரியா? திருவசனம் எனக்கு ஒன்றைத் தெளிவாய் உணர்த்தினால் கடனுக்கும் உனக்கும் சம்பந்தம் வேண்டாம் என்கிறதை அப்படி உணர்த்துகிறது. தேவன் ஏழை என்றாவது, அவருக்குப் பணத்தாழ்வு நேரிடும் என்றாவது, அவருடையதாகிய எந்த வேலையிலும் தம்மூழியருக்குக் குறைவு நிவிர்த்திசெய்ய மனமில்லாதவர் என்றாவது நினைக்க எனக்கு மனந்துணியவில்லை. ஏதாவது

ஒரு திருப்பணிக்குக் கைமுதல் கிடைக்காவிட்டால், அந்தத் திருப்பணி சம்பந்தப்பட்டவரையிலாவது, அதை நாம் விரும்புகிற சமயத்திலாவது அது தேவன் விரும்புகிற கிரியையல்ல என்பது எனக்கு விளக்கமாயிருந்தது. இதுபற்றி என் மனச்சாக்ஷிக்கு வேதனையில்லாதிருக்கும்பொருட்டு என்க்கிதுவரையில் சம்பளம் உதவின சங்கத்தின் ஐக்கியத்திலிருந்து விலகினேன்.

சீனச் சுவிசேஷ பிரபல்விய சங்கத்தைச்சேர்ந்த என் நண்பரும் உடனூழியருமாகிய ஜோன்ஸ் என்பவரும் என்னைப்போலவே நடந்துகொண்டார். அது என் மனதிற்கு ஆறுதலாயிருந்தது. எங்களுக்கும் எங்களை இதுவரைப் பராமரித்த சங்கங்களுக்கும் அன்புத்தாழ்வில்லாமலே இந்தப் பிரிவினை நடைபெற்றதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தினோம். நாங்கள் நடந்துகொண்டவிதம் எங்கள் சங்கங்களுக்குப் பொதுவில் சம்மதமில்லாவிட்டாலும் அதின் பல அவயவங்களுக்கு அதுவே பிரியம் என்றறிந்து சந்தோஷித்தோம். எங்கள் சங்கங்கள் நிலைத்திருந்த காலமெல்லாம் நாங்கள் முன்போலவே பிரசுரித்து வெளிப்படுத்தத்தக்க பத்திரிகைகளையும் விஷயங்களையும் அவைகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம் எங்கள் ஜீவனத்துக்கு ஆண்டவர் கையை மாத்திரமே பார்த்திருந்தோம்.

இது எங்கள் விசுவாசத்திற்குக் கொஞ்ச நஞ்சக் கஷ்டமாயிருந்ததில்லை. தேவன் எனக்கு என்ன வேலை வைத்திருந்தார் என்பதும் நான் முந்திச் செய்த வேலையையே இனியும் தாழ்வில்லாமல் செய்ய அவர் எனக்குச் சகாயம் செய்வாரா என்பதும் என் மனதுக்கு நிலைவரப்பட்டதில்லை. எனக்கு அவசியமானவைகளைத் தந்து உதவச் சிநேகிதரைத் தேடிக்கொண்டதுமில்லை. தேவன் எனக்குச் சகாயம் செய்யப்போகிற வழியும் எனக்குத் தெரியாதிருந்தது. என் ஜீவனத்துக்கு அத்தியாவசியமானதை மாத்திரமே தேவன் எனக்குக் கட்டளையிட்டாலும் அதைக்கொண்டே அஞ்ஞானிகளிடத்தில் சுவிசேஷப் பிரபல்வியம் செய்யத் தீர்மானித்தேன். அப்படிச்செய்ய அவருக்கு மனதில்லையானால், ஏதாவது ஒரு பிழைப்பைத் தேடிக்கொண்டு அகப்பட்ட ஒழிவு நேரத்தையெல்லாம் சுவிசேஷ வேலையில் செலவிட உறுதிசெய்தேன். சங்கத்தைவிட்டு நான் விலகிக்கொண்ட சமயத்தில் என் மனதில் வந்த சந்தோஷம் சொல்லமுடியாது. பரம பிதாவின் திருமுகத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டு அவர் எந்தெந்தச் சமயத்தில் எதெது செய்யச்சொல்வாரோ அதைச் செய்ய மனமுள்ளவனாய்க் காத்திருந்தேன். அவர் என்னை அன்பாய்ப் பராமரிப்பார் என்கிற முழு நிச்சயம் எனக்குள்ளிருந்தது.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1915

No. 114 ...ம்பர் 1915

RAS

வேதியர் விளக்கு

The Gospel according to St. John

This Gospel differs very widely from the other three. It surpasses them in loftiness of aim and perfection of structure.

It is the greatest book of the Bible

The author was 'that disciple whom Jesus loved'. In mind and heart he was the greatest of the twelve. He was probably the youngest of the disciples. He must have been young as he lived until the end of the first century.

From John xix. 25 compared with Matt. xxvii. 56 and Mark xv. 40, we gather almost certainly that Salome, John's mother, was the sister of Mary the mother of Jesus. John was therefore cousin to Jesus.

He long survived Peter and Paul and at the Fall of Jerusalem (A.D. 70) he removed to Ephesus the centre of Greek thought and Gentile Christian life in Asia Minor. We have already referred in Lecture II to the tradition which says that John's Gospel was written at the request of the Ephesian Elders.

Heresy had sprung up in many forms and it assailed the Person of Christ.

(i) His true humanity was denied by those afterwards called *Docetists*, who affirmed that His body and His death on the cross were mere phantasms—mere appearances.

(ii) His Deity was also denied by *Gnostics*, who held that Christ was merely an emanation from God, one of a series with many others.

John was the only apostle left and he had to meet and refute these false doctrines.

Meanwhile the Church had entered on a new era. Jerusalem had fallen. The power of Judaism was broken. The kingdom of God had come to the Gentiles. The Christian church had been well established and had become a world-wide institution. Its strength was now to be tested by the struggle with false doctrine.

The other three Gospels had been written and circulated for some time, say twenty years. Matthew's was in use in the Jewish and eastern churches. Mark's in Rome and the Western churches. Luke's probably in all the regions of Paul's missionary labours. The life of Jesus had been made familiar to the people everywhere.

The call upon John then was not to write the story of the life of Christ as the other three had done. The work that he had to do was to show forth certain aspects of the teaching of Christ so as to defend the church from false teaching.

The Gospel was written between 90–100 A.D.

Contents and Characteristics of the Gospel

1. The Prologue ch. i. 1–18

It is a unique feature. The prologue gives the author's leading ideas and general conceptions of the Person of Christ in His relation to God on the one hand and to the world and His disciples on the other.

It prepares us for what we find in the book, namely a sublime drama in which God reveals Himself incarnate to the ever-growing faith of the disciples and against the ever-deepening unbelief of the world.

2. Christ's Judæan Ministry

The work in Judæa bulks largely in this Gospel. It is implied though not related in the other Gospels. Except the conversation with the woman of Samaria (ch. iv.) and the address in the synagogue at Capernaum (ch. vi.), all the discourses of the Gospel were at Jerusalem. In Judæa its most decisive miracles were wrought (chs. v. ix. xi.). Hence the prominence of the Feasts in the Gospel, for it was on these occasions that Christ and His disciples went up from Galilee according to national custom.

3. Difference in style between John and the other three.

This difference can be accounted for in this way:

In the first three Gospels, Christ is usually found addressing the multitudes of Galilee—who were unlearned men.

In St. John's Gospel, Christ is arguing with the Scribes and Pharisees—keen Jewish scholars who were striving in debate to drive matters to a crisis. Or else He is discussing in the later chapters, with His apostles, things which they will better understand hereafter. His words often baffle the penetration of the Rabbis (ch. ii. 19–20–x. 24) and the intelligence of His most sympathetic followers (ch vi. 60, xvi. 1–18) Yet John's Christ can speak with all the simplicity and charm of the Christ of the other Gospels (e.g. ch. iv.)

4. Miracles or signs

There are only eight miracles or signs. Six of them are peculiar to John—that is all except the feeding of the five thousand and the walking on the water.

The eight miracles are:—

- (i) Wedding at Cana ch. ii.
- (ii) Healing the nobleman's son ch. iv.
- (iii) Impotent man at Bethesda ch. v.
- (iv) Feeding of five thousand ch. vi.
- (v) Walking on the water ch. vi.
- (vi) Blind man cured at Siloam ch. ix.
- (vii) Raising of Lazarus ch. xi.
- (viii) Draught of fishes ch. xxi.

5. Marks of time

The marks of time given by John are much more numerous and distinct than those given by the other three.

(i) ***The Feasts which brought Jesus to Jerusalem are noted.***

- (a) Passover, ii. 13.
- (b) A Feast of the Jews, v.

(c) Passover following the feeding of five thousand which Jesus spent in Galilee, vi. 4.
(d) Feast of Tabernacles in same year, vii. 2–10.
(e) Feast of Dedication, x. 22.
(f) Last Passover, xi. 55–59.

Thus we learn from John that the public ministry of Jesus included three Passovers and covered a period of not less than three years.

(ii) For further marks of time note the successive days in John i. 29, 35, 43; ii. 1.

(iii) Note also i. 39; iv. 6; iv. 43 etc.

6. The Parting Discourses xiii–xvii.

The section of the Gospels most endeared to Christians is chapters xiii–xvii. Our Lord's parting discourses and the prayer for His church.

It declares the love of Christ to His own which are in the world. It assures them of the safety and ultimate triumph of the church, joined with Him henceforth through the spirit in an imperishable union.

7. The authenticity of two sections of the Gospel is questioned.

(i) Chapter xxi

This appears to be an addition to the original work whose design finished in xx. 31. But there is no trace of the book ever being in circulation without it. It seems most likely that this was a postscript added by John himself before his Gospel was published.

(ii) Chapters vii. 53–viii. 11.

This section is wanting in many of the oldest and best manuscripts. Its style is not like John's and it interrupts the connexion. It is at any rate an ancient and trustworthy piece of tradition. It is a specimen of the 'many other things Jesus did' which are referred to in John xxi. 25. It may have been inserted in this place by the mistake of a copyist.

8. St. John sees a deep spiritual meaning *in common* objects and in seemingly casual events, E. g.

The Temple, ii. 19.
Serpent, iii. 14.
Living Bread, vi. 51.
Living Water, vii. 38 etc.

Analysis of John's Gospel

The Prologue Ch. I. 1–18.

Sets forth the relation of Christ the Word.

(i) to God } vv. 1-5.
(ii) to creation and mankind }
(iii) to mankind in general. vv. 6-13.
(iv) to Disciples more specially vv. 14-18.

The Incarnate Revelation

A. *To the World* i. 19–xii. 50.
B. *To the men of Faith*—13–17.
C. *The Catastrophe* 18-20.

A. Manifestation of Christ to the World. I. 19–xii. 50.

1. Testimony delivered (i. 19–iv. 54).

(i) *By Baptist* i. 19–34.
Accepted by faith of first disciple, i. 35–56.
Confirmed by miracle of Cana, ii. 1–12.

(ii) *By Christ Himself*
In Judæa, ii. 13–iii. 36.
In Samaria, iv. 1–42.
In Galilee, iv. 43–54.

2. The conflict developed v–x.

(i) *Questions raised*
(a) As to Christ's relation of sonship to the Father, v.
(b) As to Christ as source of life to mankind, vi.

(ii) *Debate continued*

Christ asserts Himself to be :

(a) The Living Water, vii.
(b) The World's Light, viii, ix.
(c) The Door and Shepherd, x.

3. The Crisis Reached (xi. 1–xii. 50)

Brought about by

(a) Raising of Lazarus, xi. 1–xii. 11.
(b) Royal entry into Jerusalem, xii. 12–19.
(c) Presentiment of the end, xii. 20–43.
(d) Final warning to unbeleiving World, xii. 44–50.

B. Manifestation of Christ to men of Faith. xiii–xvii.

Christ now reveals Himself to His own.

1. By His last token of Love, xiii.
2. By the last discourse of comfort, xiv–xvi.
3. By His last Prayer of Intercession, xvii.

C. The Catastrophe. xviii–xx.

1. The world's unbelief in apparent triumph, with betrayal, trial, death, xviii–xix. 30.

2. The conclusive vindication of faith commencing on the cross, secured by resurrection and culminating in the confession of Thomas, xix 31–xx. 31.

The Epilogue ch. 21.

Concerning the Risen Christ and His church.

1. His relation to disciples at large, xxi. 1–14.
2. His relation to individuals at large, xxi. 15–25.

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்நோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

பதினைந்தாம் அதிகாரம்

அவர் என்னைப் பராமரித்து நடத்தின விதம் தக்கபடி விவரித்தடங்காது. அது நான் என் சுயதேசத்திலிருக்கையில் அவர் என்னை ஆதரித்த விதத்தின் தொடர்ச்சியே போலிருந்தது. என் விசுவாசத்திற்குச் சோதனை வந்ததில்லை யென்று சொல்லேன். அது பலமுறை துவண்டு விழுந்தது. அப்பேர்ப்பட்ட தகப்பன்மேல் நம்பிக்கை வைக்க அஞ்சினேனே என்று விசனமும் வெட்கமும் அடிக்கடி வந்தது. நடந்ததென்னவென்றால், அக்காலத்தில் அவரையறிகிற பாடத்தின் ஆரம்பக் கல்வி கற்கலானேன். அப்படிச் சோதனை வரலாமா என்று நான் அப்போதுகூட மலைத்து சொன்னதில்லை. அவர் நாளுக்குநாள் எனக்குக் கிட்டினவரும், பிரிய நேசருள்ளவரும், என் கைக்கெட்டின பொருளுமானார். வேளாவேளைகளில் வந்த பண நெருக்கம் எங்கள் சுய தேவைகளைப்பற்றி வந்ததில்லை, எங்களைச் சூழப் பசியால் வருந்திச் சாகிறவர்களுக்கு உதவி யளிக்கிற விஷயத்தைப்பற்றி வந்தது. வேறு வேறு காரியங்களிலேயும் எங்களுக்குப் பெரிய சோதனைகள் வந்தன. அவைகள் மேற்சொன்ன நெருக்கங்களை நாங்கள் ஒரு பொருட்டாய் எண்ணாமலிருக்கச் செய்தன. அவைகள் ஆழ்ந்த சோதனைகளானதால் அரிய பலன்களை விளைவித்தன.

'ஊன்றியவரை நம்பினோர்
உண்மையரென் றறிவார்'

என்றது எங்களுக்கு அனுபவிக்கக் கிடைத்ததுமன்றி அவரை ஊன்றி நம்பாத சமயங்களிலும் அவர் மாறாத உண்மையுள்ளவரே என்பதும் அனுபவமாயிற்று. 'நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார், அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்'. அவர்மேல் நம்பிக்கையற்றிருக்கும்போது அவரை எவ்வளவு இழிவாய் நினைக்கிறோம்? அந்த உண்மைக்கு உறைவிடமானவருக்கு விரோதமாய் நாம் இப்படிப் பாவம் செய்யும்

போது எப்பேர்ப்பட்ட மனச்சமாதானத்தையும் சந்தோஷத்தையும் வல்லமையையும் இழந்துவிடுகிறோம்! நாம் அவரை நம்பாத தோஷத்திற்கு எந்நாளும் ஆளாகாதிருப்போமாக.

1857-ம் வருஷம் உபத்திரவங்கள் நிறைந்த வருஷமாயிருந்தது. அந்த வருஷமுடிவில் பிரிட்டிஷார் கண்டன் நகரை வெடிகுண்டு பொழிந்து நாசமாக்கினார்கள். அதோடே இரண்டாம் சீனயுத்தம் ஆரம்பித்தது. எங்கும் உபத்திரவங்களைப்பற்றிய கூக்குரல் எழும்பிற்று. மிஷனரிகளுக்கு உண்டாயிருந்த ஜீவமோசம் கொஞ்சமல்ல. நிங்போவில் அது விசேஷமாயிருந்தது. எங்கள் ஜெபங்களைக் கேட்டு ஆண்டவர் எங்களைப் பாதுகாத்த அதிசயங்களும் யாவரும் பார்க்கக்கூடியனவாயிருந்தன. கண்டன் நகரம் வெடிகுண்டுக்கு இரையான பயங்கரச் செய்தி நிங்போவுக்கு எட்டினதும் அங்கு வலசை வந்திருந்த கண்டன் நகரார் எல்லையில்லாத கோபம் மூண்டவர்களாய் நிங்போவிலிருந்த அந்நிய தேசத்தாரையெல்லாம் சங்கரிக்கச் சதியோசனை செய்தார்கள். நிங்போவிலிருந்த ஐரோப்பிய அந்நியர் ஞாயிறுதோறும் ஒரு பெரிய மிஷனரி மாளிகையில் கூடி ஆராதனை செய்வது வழக்கம். இந்த வழக்கம் ஊராருக்கெல்லாம் தெரியும். சங்கேதம் செய்துகொண்ட ஒரு நாளில் வந்து அந்தக் கட்டடத்தைச் சூழ்ந்து அகப்பட்டவர்களையெல்லாம் அதம்பண்ணி விட்டு, அகப்படாதவர்களைப் பிறகு பிடித்துக் கொல்லவேண்டும் என்கிற மர்மம் செய்துகொண்டார்கள்.

நகராளிக்கு டவுட்டாய் என்று பெயர். நிங்போ டவுட்டாயின் சம்மதம் இதற்கு வெகு எளிதாய்க் கிடைத்தது. இந்த மர்மம் அந்நியரெவருக்கும் தெரியாதாகையால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு எந்தக் காரணமுமிருந்ததில்லை. (இதற்குச் சில மாதங்களுக்குப் பின்னர் இவர்கள் இங்கிருந்த போர்த்துக்கேசருக்கு விரோதமாய்ச் செய்த சதியை எந்தத் தடையுமில்லாமல் நிறைவேற்றி பட்டப்பகலில் ஐம்பது அறுபது பேரைச் சங்கரித்தார்கள்.) இந்தச் சதிக்கு உள்ளாயிருந்த ஒருவனுக்குச் சிநேகிதனானவன் மிஷனரிகளுடைய சேவகத்தில் இருந்தான். அவனைத் தப்புவிக்க நினைத்து, இன்னின்னபிரகாரம் மோசம் வரப்போகிறது நீ வேலையைவிட்டு ஓடிப்போ என்று உளவாளி அவனை எச்சரித்தான். அந்த வேலைக்காரன் அதை எஜமானுக்கு வெளிப்படுத்தினதினால் அந்நியரான சிறு கூட்டத்தார் தங்களுக்குண்டாகப்போகிற மோசத்தை யறிந்தார்கள். அவர்கள் தங்களுள் ஒருவருடைய வீட்டில் கூடி உன்னதமானவர் தங்களைத் தம் செட்டைகளின் மறைவில் வைத்துக் காக்கும்படி விண்ணப்பம் செய்து வந்தார்கள். அவர்கள் விண்ணப்பம் வீணாகவில்லை.

நாங்கள் ஜெபித்துக்கொண்டிருந்த அதே தருணத்தில் ஆண்டவர் எங்களுக்காகக் கிரியையு செய்தார். சர்க்கார் நீர்வைக்கு மேலதிகாரியாயிருந்த ஒரு மந்தாரீனை டவுட்டாயிடம் அவர் அனுப்பி அவன் இடம் கொடுக்க மனதுவைத்த தீமை நடைபெறுமானால் அது எத்தனை புத்திமோசம் என்று அவனுக்கு உணர்த்தினார். அது ஐரோப்பிய அந்நியரைக் கோபமூட்டி யெழுப்பி அவர்கள் சேனையோடு வந்து தங்களவர்களுடைய கொலைப்பழியைத் தீர்த்துக்கொள்ளவும் இந்த நகரத்தைத் தரைமட்டமாக்கவும் செய்யுமே என்று அவனுக்கு மந்தாரீன் சொன்னதற்கு டவுட்டாய் சொன்ன உத்தரம் இது:— 'அந்த அந்நியர் வந்தால் இந்தச் சதி எனக்குத் தெரியாது, அதற்கு நான் சம்மதிக்கவுமில்லை; அதெல்லாம் கண்டன் நகரருடைய கபடச்செயல் என்று வற்புறுத்தி அவர்களுடைய கோபத்தைக் கண்டன் நகரார்மேல் திருப்பிவிடுவேன். அவர்கள் இங்குள்ள கண்டன் நகராரையெல்லாம் அழித்துப் பழிதீர்த்துக்கொள்வார்கள். இந்த நல்ல ராஜதந்திரத்தினாலே ஒரே காலத்தில் கண்டன் நகராரையும் ஐரோப்பிய அந்நியரையும் இந்த நகரத்தைவிட்டு வேரறத் தொலைக்கலாமே.' நீர்வைக்கு அதிகாரி அதைக்கேட்டு 'அப்படியா? அந்த ஜாலம் வாய்க்காது' என்று காட்டவே, டவுட்டாய் கண்டன் நகராரை அழைத்து, அவர்களுக்குக் கொடுத்த உத்தரவைப் பிடுங்கிக்கொண்டு, அவர்கள் எண்ணின தீமையைத் தடுத்தான். இது நாங்கள் ஜெபித்த காலத்திலேயே நடந்ததாயினும், சில வாரங்களான பின்பே எங்கள் காதுக்கு எட்டிற்று. இவ்வாறு, இந்தத் தடவையும்

'அடியாரைக் காக்க
ஆண்டவர் கரமே போதும்'

என்பதின் உண்மையை எங்களனுபவத்தில் அறிந்தோம்.

(இன்னும் வரும்)

Holiness

By the Rev. A. Paramanandham

பரிசுத்தம்

முதலாம் அதிகாரம்

பரிசுத்தத்தின் உற்பத்தி (தொடர்ச்சி)

4. தேவன் தம்முடைய ஜனங்களோடு சேரவேண்டுமானால் அவர்கள் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்கிற நியமம் அவசியமானது

என்று போதனையடைந்திருந்தும், அவர்களில் முக்கியமான பக்ஷத்தார் தாங்கள் அநீதிமான்களாயிருந்தாலும் தேவன் தங்கள் மத்தியிலிருந்து நீங்கிப்போகமாட்டார் என்றும், தாங்கள் பரிசுத்தராகிய தேவனுடைய தயைக்குப் பாத்திரராயிருக்கிறபடியினால் பரிசுத்த ஜனங்களாகவே வாழ்வோம் என்றும் திடமாய் நம்பினார்கள். தேவன் தங்கள் மத்தியில் இருக்கிறார் என்னும் குறிப்புகள் இருக்கிற வரைக்கும், அவர் தங்கள் சங்கத்தோடு சேருவதற்குத் தீர்க்கதரிசிகள் தெரிவித்த நியமத்தை ஆசரிக்கவேண்டுமென்று அவர்கள் எவ்வளவும் பிரயத்தனஞ்செய்யவில்லை. தேவன் கொடுத்த தேசத்தில்தான் அவர்கள் வாசமாயிருந்தார்கள். என் நாமம் அங்கே இருக்கிறது என்று அவர் சொன்ன தேவஸ்தானத்திலேயே தேவாராதனை நடத்திக்கொண்டிருந்தார்கள். இவ்வித பகிரங்க பரிசுத்தம் தங்களுக்கிருக்குமட்டும் தீர்க்கதரிசிகள் தங்களுக்குப் போதித்த அந்தரங்க பரிசுத்தத்தையடையும்படி பிரயாசப்படவேண்டும் என்று அவர்களுக்கு மனம் வரவில்லை. அவர்கள் விசேஷமான கஷ்டத்துக்குட்படுவதினால் தேவனுக்குச் சம்பந்தமாவது எப்படியென்று கற்றுக்கொள்வது அவசியமாயிருந்தது; ஆகையால் தேவன் அவர்களைச் சத்துருக்களின் கைக்கு ஒப்புக்கொடுத்து அடிமைகளாய் அந்நிய தேசத்தில் வசிக்கும்படி செய்தார். இதினால் அவர்களில் அநேகர் முன்போல் தேவன் நம்மிடத்தில் இராமல் நம்மைவிட்டு நீங்கிவிட்டார் என்றும், இனி நம்மைப் பரிசுத்தமாக்குகிற தெய்வ சம்பந்தம் அற்றுப்போயிற்றென்றும் எண்ணி விசனப்படத் தொடங்கினார்கள். தேவபக்தரான வேறு சிலரோ தாங்கள் சத்துருக்களின் கைக்குட்பட்டிருந்தாலும் தேவன் தங்களை முழுவதுமாய்க் கைவிடவில்லை என்று ஸ்திரமாய் நம்பி, அவருக்கும் தங்களுக்கும் இன்னும் இருக்கிற சம்பந்தமானது எப்பேர்க்கொத்ததாயிருக்கலாம் என்று சிந்தித்து வந்தார்கள். அந்த சம்பந்தம் ஸ்தல சம்பந்தமாயிருக்கவில்லை; ஏனென்றால் பரிசுத்த பூமி என்று எண்ணப்பட்ட தேசத்தைவிட்டுப் பரதேசிகளாய் அந்நிய நாட்டில் குடியிருந்தார்கள். பூஜை செய்கிற விஷயமாகவுமிருக்கவில்லை; பரிசுத்த தேவாலயம் பாழாகி, அதிலுள்ள பலிபீடம், தீபஸ்தம்பம் முதலானவை அழிந்துபோயிருந்தன. தேசாச்சாரத்தின் விஷயமாகவுமிருக்கவில்லை; தேசப்பிரஷ்டராய் சுதேசத்திலுள்ள முக்கிய ஒழுங்குகளையும் ஆசாரங்களையும் அநுஷ்டிக்கிறதற்கு சுதந்தரமிருந்ததில்லை. முன் பரிசுத்தம் என்று எண்ணினவைகள் எவைகளோ அவைகளெல்லாம் அவர்களைவிட்டுப் பிரிக்கப்பட்டுப் போயிற்று. இவ்விதமாக விசனம், கஷ்டம், குறைகள் முதலானவைகளுக்குட்பட்டு, தங்களைச் சேர்ந்த எல்லா புறம்பான தட்டுமுட்டுகளிலும் தேவனுடைய சம்பந்தம் இல்லை

என்று அறிந்து, தேவனுக்கும் தங்களுக்கும் ஏதாவது ஒரு சம்பந்தம் இருக்கவேண்டுமானால் அது தங்கள் அந்தரங்கத்தில், அதாவது தங்கள் உள்ளான குணங்களில், இருக்கவேண்டும் என்கிற அறிவையடைந்தார்கள். தேவனுடைய லட்சணம் மிகப் பரிசுத்தமுள்ளது என்கிற மேலான போதனையைத் தீர்க்கதரிசிகளால் அறிந்திருந்தார்கள். இந்தச் சிறந்த போதனையைக் கிரகித்துத் தியானித்து, தேவன் பரிசுத்தம் என்கிற லட்சணத்தோடு கூடியிருப்பதினால், தாங்கள் அவருடைய ஐக்கியத்தில் சேரவேண்டுமானால், தங்களுடைய குணமும் அவருடைய லட்சணத்துக்கொப்பாகவேண்டும் என்று அறிந்துகொண்டார்கள். இதற்குமுன் தாங்கள் பரிசுத்தத்துவம் என்னும் தேவ ஐக்கியத்தைப் பெறுவதற்கு நீதியை ஆசரிப்பது தேவன் நியமித்த ஓர் சாதனம் என்பதை மாத்திரம் அறிந்துகொண்டிருந்தார்கள். இப்போதோ நீதியானது தெய்வீக சம்பந்தத்தை அடைவதற்கேற்ற ஓர் சாதனமாத்திரமல்ல நீதியே தெய்வ சம்பந்தம் என்கிற ஞானம் என்பதும் அவர்கள் மனதில் புதிதாய்ப் பிறந்தது. பரிசுத்தமாவது என்னவென்று கேட்டால், அது தேவனுடைய சம்பந்தம் என்று உத்தரவு கொடுத்து வந்தார்கள். தேவனுடைய சம்பந்தமாவது என்னவென்று கேட்டால், அது பரிசுத்தராகிய தேவனுடைய குணத்தைப்போன்ற குணம், என்று சொன்னார்கள். முதலாவது, இந்த அபிப்பிராயம் அக்காலத்தில் கிரந்த ரூபமாய் எழுதப்பட்ட வேதாகமத்தில், தேவனுடைய வாக்கியங்களில் காணப்படுகிறது. அதாவது, 'நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால் உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக' (லேவி. 11[44]); 'உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நான் பரிசுத்தர்' (லேவி. 21[8]) என்பதே. பரிசுத்தம் என்கிற அபிப்பிராயம் தேவாலயத்திலிருந்து புறப்பட்ட பிரவாகத்தைப்போலவே அகலமாயும் ஆழமாயும் வந்து இப்போது இடுப்புமட்டும் எட்டிற்று. பரிசுத்தமானது தேவன் மனிதரிடத்தில் செய்த உடன்படிக்கையோடு சேர்ந்த ஓர் நிபந்தனை மாத்திரமல்ல, அது தேவனுடைய குணத்துக்கு அநுசாரமாய் மனிதரிடத்தில் விளங்கும் குணமே. மனிதருடைய பரிசுத்தத்துவமும் தேவனுடைய பரிசுத்தத்துவமுமாகிய இரண்டும் ஒரே தன்மையுடையவை.

5. பரிசுத்தத்துவத்தைப்பற்றி இஸ்ரவேல் ஜனங்கள் அடைந்த அறிவு சிரேஷ்டமாய் விருத்தியாகி வந்தாலும் அதை அடைவதற்கு இன்னும் வெகு தூரமாயிருந்தார்கள். பரிசுத்தம் எவ்வளவு சிரேஷ்டமாய்த் தோன்றினதோ அதை அடையவேண்டும் என்கிற ஆவலும் ஆசையும் அவர்களுக்கு அவ்வளவு குறைவாயி

ருந்தது. ஜனங்கள் தங்களுக்கு மூன்று குறைகள் உண்டென்று அறிந்து விசனத்தில் அமிழ்ந்திருந்தார்கள். ஆதலால் தாங்கள் பரிசுத்தத்தைச் சம்பாதித்துக்கொள்வது அசாத்தியமானது என்று நினைக்கிறதற்குக் காரணமாயிருந்தது.

(*a*) முதலாவது, ஜனங்களுக்கு சுதந்தரம் இருக்கவில்லை. பாவமானது பரிசுத்தத்துக்கு விரோதமானது என்று அவர்கள் தெளிவாய் அறிந்திருந்தாலும், அதினின்று தப்பித்துக்கொள்வதற்கு அவர்களால் கூடாமற்போயிற்று. பட்சி ஒன்று வலையில் சிக்கிக்கொண்டிருக்கையில் மேலே பறப்பது அதற்கு எவ்வாறு அசாத்தியமாகவிருக்குமோ அவ்வாறே ஜனங்கள் தங்கள் பாவபாசத்தினின்று தங்களை விடுவித்துக்கொண்டு பரிசுத்தத்துவத்தை யடைவது கூடாமை.

(*b*) இரண்டாவது, ஜனங்களுக்குத் தக்க ஞானம் இருக்கவில்லை. பரிசுத்தராயிருப்பது எப்படியென்றால், தேவனுடைய குணத்துக்குச் சமானமான குணமுள்ளவர்களாயிருப்பது என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது சரிதான்; ஆனால் பரிசுத்தம் என்கிற தேவனுடைய குணம் எத்தன்மையானது என்று அவ்வளவு பரிஷ்காரமாய் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. சூரியனானது சந்திரனுக்கு மறைந்திருக்கையில் சந்திரன் வெளிச்சத்தைக் கொடுப்பது அசாத்தியமாயிருக்கிறபடியே, ஜனங்கள் தேவனுடைய பரிசுத்தத்தை நோக்குவதற்கு முன் தாங்களே பரிசுத்தராவது அசாத்தியமானது.

(*c*) மூன்றாவது, ஜனங்களுக்குத் தக்க சக்தி இருக்கவில்லை. அதாவது: தேவன் இத்தன்மையுடையவர் என்று தெளிவாய் அறிந்திருந்தாலும், தங்கள் குணத்தை அவருடைய குணத்துக்குச் சமானமாய் ஆக்கிக்கொள்வதற்கு அவர்களால் ஆகவில்லை. தாமரைப் புஷ்பம் ஒன்று சூரியனைப் பார்ப்பதற்காக தன்னாலானமட்டும் பூரணமாய் விரிந்தாலும் தான் சூரியனைப்போல் பிரகாசிக்க முடியாது. அதே பிரகாரம் ஜனங்கள் தேவனுடைய பரிசுத்தத்தை எவ்வளவு ஸ்பஷ்டமாய் மனோசக்தியால் அறிந்திருந்தாலும் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்வதற்கு அவர்களால் ஆகாது.

தேவன் ஒருவரே பரிசுத்தராயிருக்கிறாரென்றும், தங்கள் பாவங்கள் தங்களை அப்படிப்பட்ட தேவனிடத்தினின்று பிரித்துவிடுகிறது என்றும் ஜனங்கள் எந்தக் காலத்தில் அறிந்துகொண்டார்களோ, அந்தக் காலத்தில் பரிசுத்தராகிய தேவன் முக்தி மார்க்கத்தைக் காட்டும்படி இயேசுகிறிஸ்து என்னும் அவதாரம் எடுத்து, ஜனங்களிடத்தில் சேர்ந்தார். சூரியன் உதயமாகி மந்தாரமான தேசத்தில் தன் கிரணங்களை வீசி, அத்தேசத்தின் நிலைமையை எப்படிக் காட்டுகின்றதோ அப்படியே இயேசுகிறிஸ்துவும் நீதியின் சூரியனாய்க்

காணப்பட்டு, முக்திமார்க்கத்தையும் தேவனுடைய இராஜ்யத்தின் மற்ற இலட்சணங்களையும் பிரகாசிக்கச் செய்தார். (லூக். 1[78,79].)

(1) முதலாவதாக, கிறிஸ்து ஜனங்களைப் பாவத்திலிருந்தும் அதின் பலத்திலிருந்தும் இரட்சித்தார். பரிசுத்தரான தேவனுக்கும் பாவிகளாகிய தங்களுக்கும் யாதாமொரு சம்பந்தமும் இருக்காது என்று பல ஆண்டுகளாய் ஜனங்கள் தெரிந்துகொண்டிருந்தார்கள். ஆனால் ஜனங்கள் கிறிஸ்துவானவருடைய மரணத்தைப் பார்த்தபோது 'பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று' (ரோ. 5[20]) என்றும் அந்த மரணத்தினால் தங்களுக்குப் பாவப்பரிகாரம் கிடைக்குமென்றும் அவர்களுக்குப் புலப்பட்டபடியால் பரிசுத்தத்தைப் பெறுவதற்கிருந்த முதலாம் தடை தொலைந்துபோயிற்று.

(2) இரண்டாவதாக, கிறிஸ்துவானவர் தம்முடைய போதனையினாலும் சாதனையினாலும் தேவனுடைய குணத்தை மனுஷருக்கு வெளிப்படுத்தி, அவர்கள் இவ்வித பிரமாணத்தினாலேயே பூரண பரிசுத்தத்தை அடையவேண்டுமென்பதைத் தெரிவித்தார். அந்தக் காலம் வரைக்கும் ஜனங்கள் தேவனுடைய குணத்தைப் பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயமாவது, தேவனிடத்தில் எந்தவிதமான குறைவும், களங்கமும், தோஷமும் இருப்பதில்லை என்பதே. கிறிஸ்து பாவமில்லாதவராய் ஜீவித்திருந்தது மாத்திரமல்ல, தேவனுடைய குணத்தோடு கூடியிருக்கிற இலட்சணங்களையும் தம் நடக்கையிலே காட்டினார். இது விஷயமாய், அவர் தமது சீஷருக்குச் சொன்னதாவது, 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' (யோவா. 14[9]) என்பதே. கிறிஸ்துவின் குண நடத்தைகளில் பூரண, பரிசுத்தத்துக்குச் சரியானமாதிரி விளங்கினது. பரிசுத்தத்தை அடைவதற்கிருந்த இரண்டாம் தடை தொலைந்துபோயிற்று.

The Letter to Thyatira

By the Rev. F. Goodwill

தியத்திரா சபையின் தூதனுக்கு எழுதின நிருபம்

தியத்திரா என்னும் ஊர் பெர்கமு என்னும் பட்டணத்திலிருந்து கிழக்குத் திசையாய்ப் போகும் இராஜபாதை யோரத்தில் நாற்பது மைல் தூரத்திற்கப்பால் இருக்கிறது. இந்த ஊர் விசாலமான ஓர்

பள்ளத்தாக்கில் கட்டப்பட்டிருக்கிறது. துருக்கமாவது பலத்த கோட்டையாவது இங்கே கிடையாது. ஆதலால் இந்த ஊரைப் பாதுகாப்பது மிகவும் கஷ்டம். இது ஒரு சின்ன பட்டணம். இதின் சரித்திரம் மிகக் கொஞ்சந்தான் தெரியவரும். இந்த ஊர் இருந்த நாடு மிகவும் வளப்பமானது. அநேகந்தடவை சத்துருக்கள் வந்து இதைத் தாக்கிப் பாழாக்கிவிட்டபடியால், திரும்பத் திரும்பக் கட்டப்பட்டது. இந்த ஊரின் வியாபாரம் மிகுதியாகவிருந்தது. கம்பளி நெசவும், சாயங் காய்ச்சலும் சாதாரணமான கைத்தொழில். இந்தப் பட்டணத்தில் பழைய பட்டணங்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் கைத்தொழிலாளிகள் சங்கங்கள் அநேகமிருந்தன என்று சில குறிப்புகளால் அறிகிறோம். இந்த ஊரில் 'லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ குணப்பட்டாள்' (அப். 16^{14}). இவள் இவ்வூரார் சித்தஞ்செய்கிற இரத்தாம்பரம் விற்கிறவள். இவளைத்தவிர இப்பட்டணத்திலுள்ள வேறே யாரையுங்குறித்து நாம் வாசித்ததில்லை.

பதினெட்டாம் வசனத்தில் நாம் வாசிக்கிறபடி நம்முடைய ஆண்டவர் இச்சபையைச் சந்திக்க வருகிறார். அவர் இந்தப் பட்டணத்துக்கு வருகிற வழியிலுள்ள தூளில் அவருடைய பாதங்கள் வெண்கலம்போல் பிரகாசிக்கிறதாம். வெண்கலம் என்னும் வார்த்தையின் பொருள் இன்னது என்று திட்டமாய்ச் சொல்வது கூடாமை. ஆயினும் சிற்சில குறிப்புகளால் இப்பட்டணம் வெண்கல வேலைக்குப் பேர்போனது என்றும், அதின் பிரயோஜனம் இன்னின்னவை என்று இந்த ஊராருக்குத் தெரியும் என்றும் பலமும் பிரகாசமுமான லோகத்தால் செய்த பாதரட்சைகளை ஆண்டவர் தரித்துக்கொண்டு தமது பிரயாணத்தில் பாதரட்சையாகவும், தமது சத்துருக்களைக் காலின்கீழ் மிதிக்கிறதற்கு ஆயுதமாகவும் அணிந்துகொண்டிருக்கிறார் என்றும் அறியலாம். தேவகுமாரனுடைய கண்கள் அக்கினிஜுவாலைபோல் எரிகிறது. 23-ம் வசனத்தில் கண்டிருக்கிறபடி உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறதற்கு வல்லவராயிருக்கிறார். தம்முடைய சத்துருக்களுக்கும் பாவிகளுக்கும் அவர் பயங்கரமானவராகக் காணப்பட்டாலும், 28-ம் வசனத்தில் நாம் பார்க்கிறபடி அவர் தம்முடைய பக்தருக்கு விடிவெள்ளி நட்சத்திரத்தைப்போல் இன்பமான பிரகாசமுடையவராயிருக்கிறார்.

இந்த நிருபம் மற்ற நிருபங்களைப்பார்க்கிலும் பெரியதாயும், அதின் பொருள் அறிகிறதற்குக் கஷ்டமானதாயுமிருக்கிறது. ஆயினும் சில குறிப்புகளாலும் மற்ற சபைகளின் வரலாறுகளாலும் இச்சபையின் ஸ்திதியும் சரித்திரமும் இன்னவிதமானது என்று சொல்லக்கூடியவர்களாயிருக்கிறோம்.

முதலாவது: ஆண்டவர் இந்தச் சபையை முதலில் மெச்சிப் பேசுகிறார். 19-ம் வசனத்தில் கண்டிருக்கிறபடி இந்தச் சபையார் நற்கிரியையைச் செய்கிறவர்கள் என்றும் தேவனிடத்தில் அன்பும் விசுவாசமும் வைத்து, மனிதரிடத்திலும் பிரியமாயிருந்து நல் ஊழியஞ்செய்கிறவர்கள் என்றும் பார்க்கிறோம். இந்த வசனத்தைப் பரீட்சித்துப் பார்க்கையில், முதலில் அவர்கள் கிரியைகளும் ஊழியமும் இரண்டாவது அவர்கள் அன்பும் விசுவாசமும் சிறந்தவை என்று காணலாம். சாதாரணமாக பவுல் விசுவாசத்தை முதல் ஸ்தானத்தில் வைப்பது வழக்கம். யோவான் அப்போஸ்தலன் அன்பை விசேஷித்து எழுதுவது சகஜம். இந்த நிருபமோ யாக்கோபின் நிருபத்தைப்போல கிரியைகளையும் ஊழியத்தையும் முக்கியப்படுத்திச் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இந்தச் சபையார் தாங்கள் தேவன் பேரில் வைத்த விசுவாசத்தை சகோதரருக்குச் செய்த ஊழியத்தில் காண்பித்தார்கள். நாம் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட எல்லா நிருபங்களையும் கவனத்தோடு பார்த்தால் ஆதிச் சபையார் முழுமனதோடே ஒருவருக்கொருவர் செய்த ஊழியமும் புரிந்துவந்த உபகாரமும் விஸ்தாரமானது என்று விளங்கும். அப்போஸ்தலர்களாகிய யோவானும் பவுலும் உள்ளான குணங்களைக்குறித்து வற்புறுத்தி எழுதினாலும், வெளியரங்கமான தருமக்கிரியைகளையும் சேவைகளையும்பற்றி எழுதக் கவலையற்றிருக்கவில்லை. இன்னும், இந்தச் சபையார் செய்த கிரியைகளைப்பற்றிப் பேசும்போது 'முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமானது' என்பது மகா விசேஷமான புகழ்ச்சி. ஆயினும் இதுவரை நாம் கவனித்து வந்த மற்றெல்லா நிருபங்களைப் பார்க்கிலும், இந்த நிருபத்தில் இந்தச் சபையை அதிகமாய்க் கண்டித்து எழுதியிருக்கிறதையுங் காணலாம். முன் அவர்களுக்குள்ள நற்குணங்களையும் அவர்கள் செய்த நற்கிரியைகளையும் எடுத்துக் காட்டிப் புகழ்ந்து பேசி, பின்பு 'உன்பேரில் எனக்குக் குறை உண்டு' என்று ஆண்டவர் கண்டிக்கிறார். சகோதரரே, ஆண்டவர் நாம் செய்த கிரியைகள் பெரியவைகளாயிருந்ததினிமித்தம் நம்மைப்பற்றியும் இவ்விதம் புகழ்ச்சியாய்ப் பேசக்கூடுமானால் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்களாயிருப்போம். நம்முடைய நிலைமை எவ்வளவு சிறந்ததாயிருக்கும். ஆண்டவர் உன் கிரியைகள் அதிகமாய் இருக்கிறதை அறிந்திருக்கிறேன் என்று நம்மைப்பற்றிச் சொல்வாரானால் நாம் பாக்கியவான்களே. அவர் அறியும்படி பெரிய கிரியைகளைச் செய்வோமாக.

இரண்டாவது: ஆண்டவர் இந்தச் சபையைக் கண்டிக்கிறார். (2^{20-23} வசனங்கள்). இந்த ஊருக்குச் சமீபத்திலிருந்த பெர்கமு பட்

டணத்தில் நிக்கொலாய் மதஸ்தர் வெகுபேர் இருந்தார்கள். இவர்களுடைய செல்வாக்கும் வேலையும் மிகுதியாயிருந்தன. பெர்கமு சபையாரில் சிலர் இந்த மதஸ்தருடைய போதகத்தைக் கைப்பற்றி அனுசரித்து வந்தார்கள். தியத்தீரா சபையிலுள்ள மிகுதியானவர்களும் இந்த மதஸ்தரோடு பழகி அவர்களுடைய கொள்கைகளைக் கைக்கொண்டு அவற்றின் அனுசாரிகளாயுமிருந்தார்கள். சபையில் மூப்பர்களும் செல்வாக்குள்ளவர்களும் அவர்களோடு கலந்து, அம்மதஸ்தருடைய போதனைகளுக்கு இணங்கி, அக்கொள்கைகள் தழைக்க இடங்கொடுத்திருந்தார்கள். ஆதிச்சபையில் ஏழுபேரை உதவிக்காரராக ஏற்படுத்தினார்கள். அவர்களில் நிக்கொலா என்பவன் ஒருவன் இருந்தான் என்று அப். 5^{6}-ல் வாசிக்கிறோம். இவன் பெயர் இந்த மதஸ்தருக்கு வந்திருக்குமோ என்று நாம் அனுமானிக்க இடமில்லை. இந்த நிக்கொலாய் மதஸ்தருடைய கொள்கைகள் அனைத்தும் கிரேக்க ஞான சாஸ்திரத்துக்கு ஒப்பாயிருந்தது. தங்களுக்கு ஆழ்ந்த ஞானமும் மேலான போதனைகளும் உண்டென்று எண்ணி சுத்த சுவிசேஷ போதனைகளைக் கைப்பற்றினவர்கள் பேதைகள் என்று பழிப்பாய்ச் சொல்வது அவர்கள் குணம். தேவனைப்பற்றிய ஆழமான காரியங்களை அறிந்திருக்கிறோம் என்று அவர்கள் பெருமையாய்ச் சொல்லிக் கொண்டு திரிந்தாலும், அவைகள் அனைத்தும் 'சாத்தானுடைய ஆழமான விஷயங்கள்' என்று காட்டுகிறார். இந்த மதஸ்தருடைய போதனைகள் விசேஷமாய் நம்முடைய தேசத்தில் இப்போது எழும்பியிருக்கிற (Theosophical Society) தியாசோபிக்கல் சொஸைற்றியாருடைய கொள்கைகளுக்கும் போதனைகளுக்கும் சமானமானவைகள் என்று சொல்லத்தகும். 'இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது' (1 கொரி. $3^{19,20}$) என்று பவுல் கண்டனஞ் செய்கிறார். 'மனுஷனுடைய யோசனைகள் வீணென்று கர்த்தர் அறிந்திருக்கிறார்' (சங். 94^{11}) என்று சங்கீதக்காரனும் அறிக்கை செய்திருக்கிறார்.

(இன்னும் வரும்)

C. L. S. PRESS, MADRAS—1915

No. 115 டிசெம்பர் 1915

வேதியர் விளக்கு

The Spirit of Christmas

By the Rev. J. S. M. Hooper, M. A.

If when Christmas comes we are to enter into all its meaning, during the days that come before it we shall be wise if we do our best to realize its associations and to capture as far as may be its elusive spirit. If, for a moment, we transport ourselves to England at Christmas time, in what a wonderful fairy-land of gifts and feasts and merrymaking do we find ourselves. Out of doors, the earth all white with snow, the trees sparkling with the fairy jewelry of the frost; indoors, the roaring fireplace, with its yule-log, the walls and chandeliers bright with holly and tempting with mistletoe, and round the fire, the family, separated it may be during the rest of the year, but united now for this one festival, playing games, telling ghost stories, and rejoicing in reunion and recollection. So much is familiar not only to those whose childhood has been spent in a Christian land, but to many a student of English literature; Christmas stands out as the great and joyful feast of family life.

But Christmas sheds its radiance over more than the family. It is the one time in the year when social sympathy seems to be not only right, but inevitable. The barriers of birth and riches are more easily overstepped then than at any other time, and kindness to the poor, charity in deed and word and thought, are given for the day the place that in our heart of hearts we know they ought to have all through the year. The hardest heart and the most closely guarded purse are not proof against the enticements of a more generous spirit when the Christmas bells are ringing, and it is perhaps in this that we

come nearest to an appreciation of what Christmas really means. The antiquarian may trace many of the Christmas customs back to the Saturnalia of Rome, back to some primeval feast of the sun, back to the wild orgies of remote Norse forefathers; but the Christmas spirit is not to be confounded with any Christmas custom, and is not to be derived from any source but Jesus Christ, whose birthday feast the Christian keeps on that day.

To a little child Christmas is the great day for receiving presents; and to us who are no longer children, Christmas is the great day for remembering God's gift of His Son to a needy world. All our Christmas hymns remind us of what cause for thankfulness we have in the historic gift of Jesus Christ. We sing of the little Babe of Bethlehem, and our hearts are warmed as we allow ourselves to 'dwell again on that most beautiful of all the stories of the world. We recall the angels' song, of peace and goodwill and joy, and think of all the nineteen hundred years in which their message has been repeated to a turbulent and anxious world, with so little apparent welcome. Then, away from the historic Jesus of Bethlehem and Galilee and Calvary, with another word, 'Immanuel', as starting point, our minds range again over the long Christian centuries through the experience of the many who have found God with them in a new and wonderful way since the first Christmas Day, to our own time and ourselves. If the gift of God in Jesus Christ is to be real and valuable to me, to-day in my heart there must be found the same peace and goodwill of which the angels sang when they heralded the first coming of their Lord to earth. If Christmas is to be more than the celebration of an old-fashioned anniversary, we must receive on this Christmas Day the very gifts that Jesus first came to give. And of all His gifts, Jesus is Himself the chief; it is He whom we must have born again in our own hearts, so that, whether or not there is room in the inn or the church or the prayer-meeting for Him, there may never be any doubt about the eagerness of the welcome with which we cry to Him: 'There is room in my heart, Lord Jesus, there is room in my heart for Thee'.

But exactly what does it mean to have 'room in our heart' for Jesus? It means certainly, without any figures of speech, that the same mind that was in Christ Jesus shall be found in us; that the character which is Christlike shall be ours. To sing hymns about the over-crowded inn, and the welcome that we should have been prepared to give if we had been in Bethlehem at the time when a resting-place was needed for the new-born Saviour, is the merest sentiment, if at the same time our heart is full of desires and thoughts which cannot exist with the thought of Jesus. To give Him room means, not to give Him *a* room, part of the space, in our life, but to give Him all the room, the full control, of our whole being. Instead of our own desires, His; instead of our will, His; instead of our outlook, His.

Now the very heart of the character of Jesus Christ is summed up in the word Love; and Love involves giving rather than receiving. In our thought of Christmas and its spirit thus far we have been dwelling on all that we have received of love and goodness at the hands of God. It is the first part of Christmas for us all, to be receivers; God so loved that He gave; Christ so loved that He gave; we were so loved that we received. But we cannot rest content with that. On a memorial stone a sorrowing husband inscribes the words 'To the memory of my loving and beloved Wife'; and it is only when the beloved is also the lover that a relationship reaches perfection. We must not merely thank God that in giving us Jesus Christ He has given us peace and joy; if that is all, the blessedness of Christmas is not fully ours; we are still in the position of receivers, and 'it is more blessed to give than to receive'. Christmas for us should be not chiefly a time when other people give us presents and do their best to make us happy; it should be a time when, more than at all other times, we remind ourselves that it is our business, as those who possess the mind of Jesus, to give love and joy and peace, wherever we go. We should see to it that in every gathering in which we are during the Christmas season there is so much love and kindness that there is no room whatever for grudges, and spite, and selfishness and gossip.

Our main thought, if it is our privilege to take part in anything like a family gathering during these days, must be, not to have a good time ourselves, but to give other people a good time. Wherever we find any trace of evil-speaking or unkindness we should crowd it out by love, overcoming evil by the sheer force of good. This is to have the greatest gift of all—the gift of a Christlike spirit, transforming the world; and against this no closed doors, no deliberate hostility, can ultimately stand; the one prevailing power, the power that is another name for God Himself, is that of a Love that will take no refusal or rebuff, that disarms hatred or opposition, and by its all-compelling power transforms even those who are our enemies into friends. And this spirit of Love it is which is the essential spirit of Christmas.

The Letter to Thyatira

By the Rev. F. Goodwill

தியத்தீரா சபையின் தூதனுக்கு எழுதின நிருபம்

(தொடர்ச்சி)

இந்தப் போதனையினால் விளைந்த பலனை இருபதாம் வசனத்தில் காண்கிறோம். இப்போதனை வேசித்தனம் செய்யவும், விக்கிரகாராதனை செய்யவும் தூண்டிவிட ஏதுவாயிருந்தது. பாலாம் என்பவன் எப்படி இஸ்ரவேலரைச் சோதிக்கும்படியாக யோசனை செய்தானோ, அப்படியே நிக்கொலாய் மதஸ்தரும் சுத்த சுவிசேஷ போதனையால் ஆட்கொண்டவர்களைப் பாவவலையில் பிடிக்கும்படி பிரயாசப்பட்டார்கள். எப்படியென்றால், கிறிஸ்தவ கைத்தொழிலாளிகளை அந்தந்த கைத்தொழில் சங்கங்களில் சேரவேண்டுமென்று ஒருவேளை ஏவியிருக்கலாம். வெவ்வேறு கைத்தொழில் செய்த சபையார்கள் அவ்வித சங்கங்களில் சேருவதினால் கைத்தொழில் செய்வதிலும் வியாபாரம் பண்ணுவதிலும் சகாயத்தையும் லாபத்தையும் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அந்தச் சங்கங்கள் அஞ்ஞான தேவர்களின் பேரால் ஆராதனை நடத்தினதால் கிறிஸ்தவர்களுடைய பக்தி விசுவாசத்திற்கு நஷ்டமும் ஊனமும் வந்தது. போர்ச்சேனையில் சேர்ந்த கிறிஸ்தவன் அந்தப் பட்டணத்துத் தலைவர் செய்யும் அஞ்ஞான சடங்காசாரங்களில் பங்கடைய வேண்டியதாயிருந்தது. இப்படிப்பட்ட பட்டணங்களில் வசித்த கிறிஸ்தவ கைத்தொழிலாளிகள் அஞ்ஞானச் சவகாசம் செய்யாவிட்டால் அவர்கள் பிழைப்புக்கு நஷ்டம் வரும். அவர்களோடு சேர்ந்திருந்தாலோ அவர்களுடைய கிறிஸ்தவ ஜீவியத்துக்கும் நடத்தைக்கும் கேடு வரும்.

இன்னும் இருபதாம் வசனத்தினால், இச்சபையிலுள்ள ஒரு ஸ்திரீயானவள் இந்த நிக்கொலாய் மதஸ்தருக்குச் சகாயம் புரிகிறவளாயிருந்தாள் என்றும் பார்க்கிறோம். இவர்கள் செல்வாக்கும் போதனையும் ஆகாபின் மனைவியாகிய யேசபேலின் செல்வாக்குக்கும் போதனைக்கும் ஒத்திருப்பதால் அவள் பெயரே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த யேசபேலாகிய தீர்க்கதரிசி அஞ்ஞான தேவர்களை வழிப்படும் ஜனங்களுக்குப் பூசாரியாயிராமல், சபையில் கிறிஸ்தவளாகத் தன்னைக் காட்டிக்கொண்டிருந்தாளாம். இவள் செய்த துர்க்கிரியையைப்பற்றி இருபத்திரண்டாம் வசனத்தில் வேறோர் காரியம் உவமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புருஷரை வேசி மார்க்கத்திற்கு இழுக்கிற ஸ்திரீயாயிருந்தாள். இவள் மனந்திரும்பாமற்போனால், இவளும் இவளோடே சேர்ந்து விபசாரஞ் செய்தவர்களும் அந்த ஸ்தலமாகிய கட்டிலிலேயே தண்டனையை அடையவேண்டும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். நாம் ஆதிச் சபை சரித்திரங்களை வாசிக்கிறபோது ஸ்திரீகள் செய்த ஊழியத்தைப்பற்றியும் வாசிக்கிறோம். தோர்க்காள் 'நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள்' என்று அறிகிறோம். ஆ, அவளுடைய குணம் எவ்வளவு சிறந்தது. 'சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்' என்கிற சத்திய வசனம் அவள் மனதில் பதிந்திருந்தது. ஸ்திரீகளுக்குள் பக்தர் அநேகர் இருந்தார்கள். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரரைத் தங்கள் வீடுகளில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குப் பணிவிடை செய்து, அவர்களை உபசரிக்கிறவர்களாயுமிருந்தார்கள். தியத்தீரா சபையிலுள்ள லீதியாள் யூதமார்க்கத்தின்படி பக்தியுள்ளவளாயிருந்தாலும் கர்த்தருக்குப் பூட்டப்பட்டிருந்த தன் இருதயத்தை அவரை ஏற்றுக்கொள்ளும்படி பவுல் செய்த பிரசங்கத்தைக் கேட்டபோது திறந்தாள். நல்ல ஸ்திரீகளால் நன்மை உண்டானதுபோலவே கெட்ட ஸ்திரீகளால் தீமைகளும் விளைந்தது. யேசபேல் ஆண்டவருடைய பக்தரைக் கெடுக்கும்படி கைவிரித்தவளாய் நின்று அவர்களைச் சோதிக்கிறாள் என்று ஆண்டவர் கண்டிக்கிறார். 'தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறிந்துகொள்.' (ரோ 2:4.)

மூன்றாவது, சபைக்குண்டான ஏவுதலும் வாக்குத்தத்தமும். பொய்ப்போதகத்தைப் பற்றிக்கொள்ளாத மெய்ப்பக்தருக்கு முன் கொடுக்கப்பட்ட பழைய கற்பனைகளையேயன்றி வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன் என்று ஆண்டவர் 24-ம் வசனத்தில் சொல்லுகிறார். 'உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்' என்றும் அடுத்த வசனத்தில் கட்டளை கொடுக்கிறார். இவர்களுக்கு நூதனமான போதனையும் கற்பனைகளும் தேவையில்லை. ஏனென்றால் சத்தியத்தை அறிந்திருக்கிறார்கள். தங்களுக்கு அருளப்பட்ட அறிவின்படி நடப்பது போதும் என்று சொல்லுகிறார். இக்காலத்திலுள்ள அநேகர் நூதனமான போதனைகளைக் கேட்கவும், நவமான காரியங்களை அறியவும் பிரியப்படுகிறார்கள். ஆண்டவரோ அப்படிப்பட்டவர்கள் பழைய கற்பனைகளைக் கைக்கொண்டு, முதலில் கற்றுக்கொண்ட போதனைகளைக் கவனித்து நடக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறார். 'ஆண்டவருடைய கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குத் தாம் தமது பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்' (2^{26}) என்று வாக்கருளுகிறார். அதுவுமன்றி, இருப்புக் கோலால் அவர்களை ஆளும் பலத்தையும் தருவார் (2^{27}). இந்த வார்த்தைகளால் இச்சபை இனிமேல் உலகத்தில் செலுத்தவேண்டிய செல்வாக்கைக்குறித்தும், புரியப்போகிற நற்கிரியைகளைக்குறித்தும் ஞாபகப்படுத்தப்படுகிறோம். நாம் இந்த நிருபங்களை வாசிக்கிறபோது, அந்தந்தப் பட்டணத்தின் அந்தஸ்தையும் சரித்திரத்தையும் எடுத்துக்காட்டி ஆண்டவர் தமது ஜனங்களுக்கு அருளும் பலத்தையும் ஜெயத்தையும் தெரிவிக்கிறார். இந்த நிருபத்திலோ ஆண்டவர் இந்தச் சபையாருக்கு ஒரு காலத்திலும் இராத ஜெயத்தையும் ஆளுகையையும் கொடுப்பதாக வாக்குக் கொடுக்கிறார். முந்தின காலத்தில் இந்த ஊர் அநேகந்தடவை சத்துருக்கள் கையில் அகப்பட்டுப் பாழானாலும், இங்கே வளரும் சபையோ எல்லா சத்துருக்களையும் வென்று அவர்களை இருப்புக்கோலால் மண்பாண்டங்களைப்போல நொறுக்கி, கீழ்ப்பட்ட இவர்கள்மேல் அதிகாரம் செலுத்தும் பலத்தைக் கொடுப்பதாக வாக்கருளுகிறார். இதுவுமன்றி 'விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவர்களுக்குக் கொடுப்பேன்' (2^{28}) என்கிறார். இந்த நிருபங்களில் சபைகள் விளக்குகளாகவும் சபையின் தூதர் நட்சத்திரங்களாகவும் காணப்படுகிறார்கள். இவருடைய பிரசன்னமோ விளக்குகளையும் நட்சத்திரங்களையும் பார்க்கிலும் பிரகாசமாயிருக்கிற விடிவெள்ளியாய் இருந்து வெளிச்சம் வீசுமாம். இந்த விடிவெள்ளி சமாதானமாகவும் இன்பமாகவும் பிரகாசிக்கும்போது உலகத்தின் பாவமாகிய இரவு நீங்கி, நித்தியநாளும்

நீடூழி நாளுமாகிய பகல் ஆரம்பிக்கும் என்று இவர்கள் அறியலாம். இந்தச் சபையார் இந்த நிருபத்தில் வெகுவாய்க் கண்டிக்கப்பட்டிருந்தாலும் இவர்கள் உண்மையாயிருந்து இவ்வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, தங்கள் கிரியைகளைக் கைக்கொண்டு வந்தால் உத்தமமான கதி அவர்களுக்குண்டாகும் என்றறிகிறோம். ஆண்டவர் அவனவன் கிரியைகளுக்குத் தக்க பலனை அளிப்பேன் என்கிறார்.

வயல் விளைந்த வண்ணமே
நல் வார்த்தை எங்கள் நெஞ்சிலே
பலித்து நற்கனிகளும்
கொடுக்க அருள் ஈந்திடும்.

A Grace-filled Life

The 'Retrospect' of Rev. Hudson Taylor

Translated by the Rev. N. Devasagayam, B.A.

திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்நோக்குச் சரித்திரம்'

பதினைந்தாம் அதிகாரம்

(தொடர்ச்சி)

இந்தக் காலப் பகுதியில் நிகழ்ந்த சரித்திரமெல்லாம் சொல்ல இங்கே இடம் போதாது 1857-ம் ஆண்டு முடிவடையு முன்னரே தேவன் என்னையும் ஜோன்ஸ் என்பவரையும் மறக்காமல் எங்களுக்கு நன்மைசெய்து உற்சாகப்படுத்தினார். நாங்கள் கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்துப் பிழைத்த ஆரம்பத்தில் எங்களுக்குத் தைரிய மூட்டின சம்பவங்களைக் கேட்கிறது ஆனந்தமாயிருக்கும்.

கிறிஸ்து செய்து முடித்திருக்கிற கிரியையின் மூலமாய் இலவசமாய் நமக்குக் கிடைத்திருக்கிற இரட்சிப்பை நான் பிரசங்கித்துக் கொண்டிருந்த ஒருநாள் ஒரு முதிய பிராயத்து ஆள் எழுந்து அவனுக்குள் இருந்த விசுவாசத்துக்குப் பின்வருமாறு சாட்சி பகர்ந்தான்:

'என் மூதாக்களைப்போலவே நானும் வெகு காலமாய் சத்தியம் எங்கே அகப்படுமென்று தேடிக்கொண்டிருந்தேன். அது இது

காறும் அகப்படவேயில்லை. அதை நாடித் தொலையிலும் கிட்டத்திலும் போய் அலுத்தேன். என் நாட்டம் கிட்டினதில்லை. கன்பியுசியுமார்க்கம், புத்தமார்க்கம், தவுமார்க்கம், இவைகளில் ஆத்தும இளைப்பாறல் அகப்படாமல் தவித்த எனக்கு இன்று இரவு கேட்ட வசனத்தில் அது அகப்பட்டது. இனி நான் இயேசுவை விசுவாசிக்கிறவன்.

இவன் நிங்போவில் இருந்த புத்தசமயச் சீர்திருந்தின வகுப்புகளில் ஒன்றைச் சேர்ந்தவன். அவ்வகுப்பில் அவன் ஒரு முக்கிய காரிய நிர்வாகி. அவன் கிறிஸ்தவனான பின்பு அந்தப் புத்த வகுப்புச் சபை கூடிற்று. அந்தச் சபைக்கு நானும் அவனுடன் போனேன். அங்கே அவனுடைய முந்தின கூட்டாளிகளுக்குக் கிறிஸ்துவை விசுவாசிக்கிறதினால் தனக்குக் கிடைத்திருக்கிற ஆத்தும அமைதியைப் பற்றிச் சாட்சியிட்டான். அதைக்கேட்டு அவனுடைய பழைய கூட்டாளிகளில் ஒருவன் விசுவாசியாகி ஞானஸ்நானம் பெற்றான். இருவரும் இப்போது இயேசுவில் இளைப்பாறுகிறார்கள். முந்தித் திரும்பினவன் வெகுகாலம் தன் நாட்டாருக்கு இரட்சிப்பின் பெரிய சந்தோஷ செய்தியை அறிவித்துக்கொண்டிருந்தான். அவன் மனந்திரும்பின இரண்டொரு நாட்களுக்குப்பின் என்னைப் பார்த்து இந்தச் சுவிசேஷம் இங்கிலாந்தில் எவ்வளவு காலம் தெரிந்திருந்தது என்று கேட்டான். பல நூறாண்டுகளாய்த் தெரிந்திருந்தது என்றேன்.

'என்ன அநியாயம்! இந்த மங்கள செய்தி பல நூறாண்டுகளாய் உங்களிடமிருந்தும் இப்போதுதானா அதை எங்களுக்குக் கொண்டு வந்தீர்கள்? என் தகப்பன் இருபது வருஷம் சத்தியம் எங்கே கிடைக்கும் என்று பாடுபட்டு, கிடைக்காமல் செத்துப்போனான். ஐயோ! ஏன் நீங்கள் முந்தியே வரவில்லை?'

இந்தத் துயரக் கேள்வி கேட்டு இப்போது ஒரு தலைமுறையாயிற்று. ஆயினும், ஐயோ அந்தக் கேள்வியையே எத்தனைபேர் இன்றைக்கும் கேட்கலாகும்? இந்தக் காலப்பகுதிக்குள் இரண்டு கோடிக்கதிகம் பேர் இரட்சிப்பை யறியாமலே மறுமையை யடைந்தார்கள். இந்தப் பரிதாபம் இன்னம் எவ்வளவு காலம் நடைபெறும்? 'சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்று ஆண்டவர் சொன்ன வார்த்தை எத்தனை நாள் இன்னம் அசட்டை பண்ணப்படும்?

பதினாறும் அதிகாரம்

இடுக்க வேளைகளுக்குத் தாமதமில் உதவி கிடைத்தது.

நம் தேவன் தம்மவர்களை வேண்டுமென்றே அடுத்தடுத்து இடுக்கங்களுக்குள் போகச் செய்கிறார். இது ஏனென்றால் அவர்கள் வேறு

விதமாய்த் தம்மை யறிந்து அண்டிக்கொள்ளத் துணியமாட்டார்கள் என்பதினிமித்தம். அந்த வேளைகளில் அவர் தம்மை 'ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையாக' நமக்கு வெளிப்படுத்துகிறார். ஒவ்வொரு தடவையும் அவர் தமக்குப் பிதா உள்ளத்துக்குரிய கரிசனம் இருக்கிறதை வெளிப்படக் காட்டி நம் உள்ளத்தை மகிழ்விக்கிறார். இப்போது நமக்கு வரும் ஒவ்வொரு இடுக்கமும் கடைசியாய் இன்பமாய் முடிகிறதைப் பார்க்கும்போது, அது வராமல் நின்றுபோகச் சம்மதியோம். இனிமேல், அதின் ஒவ்வொரு பாகமும் இன்பமே என்று வெளிப்படையாய்ப் பார்க்கிற காலம் வரும். அப்போது நமக்கு வந்த துன்பங்களுக்கெல்லாம் ஆண்டவரை எவ்வளவாய் மகிமைப்படுத்தித் துதிப்போம்!

1857-ம் ஆண்டு சரற்காலம் நான் நிங்போவில் குடியேறி ஒரு வருஷம் பூர்த்தியான காலம். அக்காலத்தில் தேவன் எங்களை மறக்காமல் எப்பேர்ப்பட்ட கவலையும் கரிசனமும் எங்கள்மேல் வைத்திருந்தார் என்று காட்டுகிற ஒரு சம்பவம் நடந்தது. அது பின் வருமாறு—

அமெரிக்கன் பிரஸ்பிட்டீரியன் மிஷனைச் சேர்ந்தவரும் கர்த்தருக்குள் எங்கள் பிரிய சகோதரரும் ஆகிய யோவான் குவார்ட்டர்மான் ஐயர் அகோர வைசூரி வார்த்திருக்கையில் அவருடைய பக்கத்திலிருந்து பரிகாரம் பார்த்ததும் அவர் மரித்தபோது அடக்கம் செய்ததும் நான். பரிகாரம் பார்க்கையில் நான் அணிந்திருந்த உடைகளை அழித்துவிடுவது அவசியமாயிற்று. மற்றப்படி அந்த நோய் பிறருக்குப் பற்றுவதான மோசமுண்டாகும். மாற்று வஸ்திரம் வாங்குவதற்கு என் கையில் நிருவாகமிருந்ததில்லை. இந்தத் தறியில் ஜெபந்தான் ஒரே சாதனமாயிருந்தது. ஆண்டவர் நாங்கள் நினையா வண்ணம் எங்கள் ஜெபத்துக்கு உத்தரமருளினார். வெகு காலத்திற்குமுன் நான் ஷங்காய்க்குப் போகையில் ஸ்வாட்டோவில் ஒரு பெட்டி வஸ்திரம் வைத்துப்போனேன். அது காணாமலே போனதென்று இதுவரையும் நினைத்திருந்தேன். அதை உவில்லியம் பர்னேஸ் போதகர் எடுத்து வைத்திருந்ததினால் இப்போது எப்படியோ எனக்கு வந்து சேர்ந்தது. அது இந்தத் தறிக்கு வந்து உதவினது பரமபிதாவே செய்த உபகாரமென என் மனதில் பதிந்தது.

இதற்கு இரண்டு மாதங்களுக்குப் பின் பிறகு வரும் பதிவு செய்யலாயிற்று:—

1857-ஆண்டு, நவெம்பர் மீ, 18உ

வெகுபேர் என்னைப் பரம ஏழை என்று நினைக்கிறார்கள். இது ஒருவிதத்தில் நிஜமே. ஆகிலும் என் தரித்திரம் எப்படிப்பட்டதென்றால்: 'தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்

களாக்குகிறவர்களாகவும் ஒன்றுமில்லாதவர்கள்' என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாக்குகிறவர்களாகவும் எங்களை விளங்கப் பண்ணுகிறோம்' என்ற மாதிரியானது. இதற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். என் தேவன் என் பிழைப்புக்குத் தேவையானதை எல்லாம் தாமே தருவார்: அவருக்கே சகல மகிமையும் செலுத்தப்படுவதாக. நான் இப்போது எனக்கு வேண்டிய ஊண் உடை மற்றும் அவசியங்களுக்கு தேவனை நம்பி அவர் கையையே பார்த்திருக்கிறேன். அதுவுந்தவிர, அகதிகளான வேறு பேர்களுக்கு அவர் தருகிற உபகாரத்தை வாங்கித் தருகிற வாயிலாகவும் இருக்கிறேன். இந்த நிலைமையை மாற்றி வேறு மாதிரி பிழைக்க வழியுண்டானாலும் அந்த வழியில் போக எனக்கு மனது வராது.

இந்த மாதம் 4உ சனிக்கிழமையில் எங்கள் தேசத்திலிருந்து எங்களுக்கு ஒழுங்காய் வருகிற தபாற் கடிதங்கள் வந்தன. அன்று காலையில் எப்போதும்போல அன்ன உபகாரத்துக்கு ஏழைகள் எங்களிடம் வந்தார்கள். எவ்விதத்திலும் தங்களை ஆதரித்துக் கொள்ள ஏலாத அகதிகளுக்குக் காலை அன்னம் கொடுப்பது எங்கள் வழக்கம். அதற்குச் சிலவேளை நாற்பதுபேர், சிலவேளை எண்பது பேர் இப்படி வருவார்கள். ஞாயிறுதோறும் இந்த வழக்கம் நிறுத்தப்படும். ஏனெனில், அகதிகளுக்கு ஊழியம் செய்தபிறகு எங்களுடைய மற்றக் கடமைகளைச் செய்ய நேரமிராது. அந்தச் சனிக்கிழமையில் வந்தவர்களுக்குக் கொடுத்து மறுநாள்வரையும் எங்களுக்குத் தேவையானவைகளைச் சவதரித்துக்கொண்ட பிறகு, அடுத்த நாள் சாப்பாட்டிற்கு எங்கள் கையில் ஒரு காசுகூட மீதியிருந்ததில்லை. திங்கட்கிழமை ஆண்டவர் எங்களுக்கு எப்படி அன்னம் போடப்போகிறார் என்பது தெரியாதிருந்தோம். எங்கள் கணப்புக் கூடத்தின் சுவரிலே, சீன பாஷையில் எழுதின இரண்டு காகிதத் துண்டுகள் ஒட்டியிருந்தது. ஒன்றில் 'எபெனேசர்' (இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு ஒத்தாசை செய்தார்); இன்னொன்றில் 'ஜெகோவாயீரே' (ஆண்டவர் பராமரிப்பார்) என்கிற வாசகங்கள் இருந்தன. அவரே எங்கள் மனதில் விசாரக் கவலை வராமல் வழியடைத்தார். அன்றைக்கு எங்களுக்கு சீமைத்தபால் வந்தது. அது கெடுவுந்த ஒரு வாரம் முந்தி. அதில் ஜோன்ஸம்மாக்கு இருநூற்றுப் பதினாலு டாலருக்கு உண்டிச் சீட்டு இருந்தது. ஆண்டவருக்கு நன்றி செலுத்தித் தைரியமடைந்தோம். அந்தச் சீட்டை எடுத்துக்கொண்டு ஒரு வியாபாரியிடம் போனோம். சீட்டு மாற்றுகிறதென்றால் இவ்விடத்தில் அநேக நாள் தாமதமாகும். இந்த முறை வியாபாரி 'திங்கட்கிழமை என்னிடம் அதை அனுப்புங்கள்' என்றார். அனுப

பினோம். அவர் உடனே எழுபது டாலர் கொடுத்து, மீதிப் பணத்தைப் பிறகு தருவதாகச் சொன்னார். இப்படி எங்களுக்குத் தாழ்வு வருவது நிவிர்த்தியாயிற்று. சமயந் தாழாமல் இப்படிச் சகாயம் செய்கிற ஆண்டவருடைய பராமரிப்பிலேயே இருந்துகொண்டு உழைப்பது எவ்வளவு இன்பமாயிருக்கிறது!

(இன்னும் வரும்)

Holiness

By the Rev. A. Paramanandham

பரிசுத்தம்

முதலாம் அதிகாரம்

பரிசுத்தத்தின் உற்பத்தி (தொடர்ச்சி)

(3) மூன்றாவதாக, மனுஷ சுபாவத்தை தேவசுபாவத்துக்கு ஒப்பிடலாம் என்று நம்புவதற்குக் கிறிஸ்துவின் அவதாரமானது மூலாதாரமாயிருந்தது. தேவனுடைய பரிசுத்தம் என்கிற சமுத்திரமானது மனுஷருடைய சுபாவம் என்கிற சின்னப்பாத்திரத்தில் அடங்குவது அசாத்தியம் என்று ஜனங்கள் பொதுவாய் நினைத்திருந்தார்கள். தேவனே தமது திவ்விய சுபாவத்தோடு மனுஷ சுபாவத்தைச் சேர்த்து நராவதாரம் எடுத்தபோது, தேவனுடைய குணத்துக்குச் சமானமாயிருக்கிற பரிசுத்தத்தை நர சுபாவத்தில் நிரப்புவது அசாத்தியமல்ல என்று தெரியவந்தது. தேவன் மனுஷ சுபாவத்தோடு ஒன்றாகக் கூடுவாரானால், மனுஷரும் தேவனோடு ஐக்கியப்பட்டு அவருடைய பரிசுத்தமான சமுகத்தை அடையக்கூடும் என்பதும் தீர்ந்த விஷயமே. ஆகவே பரிசுத்தத்தை அடைவதற்கிருந்த மூன்றும் தடையும் தொலைந்துபோயிற்று. பரிசுத்தத்தைப்பற்றி கிறிஸ்து வருவதற்கு முன்னிருந்த அபிப்பிராயத்தையும், அவர் வந்ததிலிருந்து இருக்கிற அபிப்பிராயத்தையும் நாம் ஒப்பிட்டுப்பார்க்கையில் இரண்டும் ஒன்றே என்று அறிந்துகொள்வது கஷ்டமாயிருக்கிறது. தேவாலயத்திலிருந்து சின்னதாகப் புறப்பட்டு வரவர அகலமாயும் ஆழமாயும் வந்து, இடுப்பு முழுகும்வரைக்கும் ஏறின பிரவாகம் திடீரென்று பெருக்கம் எடுத்து கடக்கமுடியாமல் நீஞ்சல் அடித்து தாண்டவேண்டிய பலமாய் ஓடும் நதியாயிற்று. கிறிஸ்து பூலோகத்

துக்கு வந்ததினாலேயே இது இப்படி அபிவிருத்தியாயிற்று. கிறிஸ்து இல்லாமல் பவித்திரத்வம் என்பதற்குத் தெளிவான அபிப்பிராயமுமில்லை. பரிசுத்தத்தை அடைவதற்குத் தகுந்த சாதனமும் இல்லை. நிஜமான பரிசுத்தத்தில் கிறிஸ்துவின் மரண ஐக்கியத்தினால் உண்டாகிற தேவனுடைய குணத்தின் சந்நிதி கூடியிருக்கிறது.

(4) பரிசுத்தத்தைப் பெறுவது மனுஷருக்கு சாத்தியப்படுவதற்கு முன் மற்றொரு சாதனம் உண்டாகவேண்டியதாயிருந்தது. கிறிஸ்து அவதாரமெடுத்து, இரட்சண்ணியக் கிரியையை முடித்தது நிஜம்தான். ஆயினும் அக்கிரியையினால் உண்டாகும் சகாயம் மனுஷருக்குக் கிடைக்கத்தக்கதாகத் தகுந்த சாதனமும் இருக்கவில்லை. கிறிஸ்துவானவர் செய்த வேலை எப்படிப்பட்டதென்றால், நீரில்லாத தரிசு நிலத்தண்டை ஒருவன் குளமொன்றை வெட்டினதற்கொப்பானது. குளம் நீரினால் நிறைந்திருப்பதினால் மாத்திரம் தரிசு நிலம் பயிராகுவதில்லை. ஒரு வயல் குளத்துக்கு ஐம்பதுகெஜ தூரத்தில் இருந்தாலும் கூட, நீரில்லாமல் உலர்ந்திருக்கக்கூடும். நெற்பயிர் பசுமையாய் வளருகிறதற்கு, வயல்களுக்கு நீர் குளத்திலிருந்து ஏராளமாய் ஓடுவதற்காக மடைகளும் வாய்க்கால்களும் இருக்கவேண்டும். அதேபிரகாரம் மனுஷர் பரிசுத்தமடைய சாத்தியப்படுவதற்கு முன் கிறிஸ்து நடப்பித்த இரட்சண்ணிய கிரியையினால் உண்டாகிற ஜீவனுள்ள சக்தி அவர்களுடைய ஆத்துமாவில் சேரவேண்டியதாயிருக்கிறது. மனுஷருக்கு தேவ சக்தியை அளிப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவர் வந்தார். இந்த அபிப்பிராயம் அவருடைய திவ்விய நாமத்தில்தான் அடங்கியிருக்கிறது. மனுஷரை பரிசுத்தம் என்கிற தேவ சம்பந்தத்தில் சேர்க்கத்தக்கவர் அவரே. பரிசுத்தாவியானவர் யாரென்றால், மனுஷருடைய ஆத்துமாக்களில் வசித்து, தம்முடைய சுபாவத்தை அவர்களில் சேர்த்து, அவர்களுடைய சுபாவத்தை நூதனமாக்கிக்கொண்டிருக்கிற தேவன்தான். இச்சங்கதி தெரிய வந்ததினால் பரிசுத்தம் என்கிற போதனை பூர்த்தியாயிற்று. இனி பரிசுத்தம் என்பதின் போதனைமாத்திரமல்ல, மனுஷருடைய ஆத்துமாவில் வியாபிக்கிற பரிசுத்தாவியினுடைய சக்தியின் மூலமாய் அந்தப் போதனை அனுபவத்தில் சித்திபெற்றது. எசேக்கியேல் கடைசியில் பிரவாசத்தைப் பார்த்தபோது, இதோ, நதியோரத்தில் இப்பக்கமும் அப்பக்கமும் அநேக அநேக மரங்களிருந்தன; அந்நதியைக் காண்பித்தவன் சொன்னதாவது, நதியிலே ஆகாரத்துக்கு உதவுகிற எல்லா மரங்களும் வளருகின்றன. அவைகளின் இலைகள் வாடுவதில்லை. அவைகளின் கனிகள் ஓய்வதுமில்லை; ஏனென்றால், அந்நதியின் நீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகிறது என்பதே.

சத்திய வேதத்தில் அடங்கியிருக்கிற பரிசுத்தத்தின் போதனை தேவ சிம்மாசனத்திலிருந்து புறப்படுகிற ஸ்படிகக் கல்லைப்போலப் பிரகாசமாயிருக்கிற சுத்தியம் என்கிற நதிமாத்திரமல்லாமல், பாவத்தினால் வாடி வதங்கின மனுஷருடைய ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கிற ஜீவநதியாயுமிருக்கிறது (வெளி. 22[1],[2]). பரிசுத்தமாவது என்னவென்றால், தேவன் பரிசுத்தாவியின் சக்தியினால் தமது குணத்துக்குச் சமானமாய் மனுஷரில் உண்டாக்குகிற குணம்தான். மெய்யான பரிசுத்தம் பரிசுத்தாவியால் உண்டாகிற கனிகளே (கலா. 5[22],[23]). இப்போது நாம் பின்னுக்குத் திரும்பி, தேவன் வெவ்வேறு காலங்களில் பரிசுத்தத்தின் விஷயமாய் மனுஷருக்குத் தெரிவித்த போதனைகளை ஒன்றாய்ச் சேர்த்து, கிறிஸ்து வந்து ஒவ்வொரு போதனையையும் நிறைவேற்றும்வரைக்கும் அது அந்தக் காலத்து ஜனங்களுக்கு சம்பூரணமாய்த் தெரிந்திருக்கவில்லை என்பதை பரீட்சித்துப் பார்க்கக் கடவோம்.

(1) பரிசுத்தம் தேவனோடு சம்பந்தப்படுவதினால் உண்டாகிறது.

தேவனுடைய ஐக்கியத்தில் எப்படிச் சேரவேண்டுமென்பது இஸ்ரவேலருக்குச் சரியாய்த் தெரிந்திருக்கவில்லை. தேவன் மனுஷரை மெய்யாய்ச் சந்திக்கிற பரிசுத்த ஸ்தலம் எதென்றால், இயேசு கிறிஸ்துவே. தேவன் உலகத்தை கிறிஸ்துவிலே தமக்குச் சமாதானப்படுத்திக்கொள்ளுகிறவராயிருந்தார். (2 கொரி. 5[19].)

(2) பரிசுத்தத்தில் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற விஷயம் சாதாரணமாய்ச் சேர்ந்திருக்கிறது.

இஸ்ரவேலர் நியாயப்பிரமாணம் பரிசுத்தமானது என்று நன்றாய் அறிந்திருந்தாலும், அதின் பாரத்தைச் சுமந்துகொள்ளுவதற்கு ஆகவில்லை. ‘விசுவாசிக்கிறவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.’ (ரோ. 10[4].)

(3) தேவனுடைய குணம் எவ்வளவோ பரிசுத்தமாயிருக்கிறதென்றும் பாவத்தோடு கூடின நம்முடைய குணம் அதற்கு எவ்வளவோ விரோதமாயிருக்கிறதென்றும் திட்பமாய் அறிந்துகொள்வதினால் பரிசுத்தமுண்டாகிறது.

அஞ்ஞானம் என்கிற இருள் மூடின ஜனங்கள் தங்களுடைய குணம் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியில் பிரத்தியக்ஷமாவதற்கு முன்னே அது எவ்வளவோ நீசத்தனத்தையுடையது என்று ஒத்துக்கொள்வது கூடாமலிருந்தது. (2 கொரி. 4[6].)

(4) தேவனுடைய பரிசுத்தமும் மனுஷரிடத்தில் இருக்கத்தக்க பரிசுத்தமும் ஒரேவிதமானது.

கிறிஸ்துவில் தெய்வ சுபாவமும் நர சுபாவமும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறது. அவருடைய பரிசுத்தமும் தெய்வீகமாயும் மனுஷீகமாயும் இருந்தது. இனிமேல் மனுஷருடைய பரிசுத்தம் தேவனுடைய பரிசுத்தத்துக்குச் சமானமாயிருக்கக்கூடும் என்பதற்கு எவ்வித சந்தேகமுமில்லை.

(5) பரிசுத்தத்தில் கிறிஸ்துவின் மரணத்தின் ஐக்கியத்தினாலுண்டாகிற பாவ விமோசனமும், அவருடைய ஜீவனின் ஐக்கியத்தினாலுண்டாகிற தேவனுடைய குணத்தின் சமானமும் கூடியிருக்கிறது, ஆகவே பரிசுத்தம் பரிசுத்தாவியானவராலுண்டாகிற கனியாம்.

(இன்னும் வரும்)

A New Creature—Sermon Outline

புது சிருஷ்டி

பிரசங்கக் குறிப்பு

எபே. 4²²⁻²⁴

ஒருவன் தேவனுடைய பிள்ளையாக வேண்டுமானால் அவன் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நமது இரட்சகராகிய இயேசுவானவர் சொன்னார் (யோவா. 3³; 1¹²,¹³). இந்த மறுபிறப்பைப்பற்றி பேசும்போது பரி: பவுல் வேறொரு வார்த்தை சொன்னாலும் அதற்கும் இதற்கும் ஒரே அர்த்தம்தான் என்று சொல்லலாம். 2 கொரி. 5¹⁷-ல் ‘ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்’ என்றார். எபே. 4²²⁻²⁴-ல் அதே விஷயத்தைப்பற்றி அவர் இன்னும் தெளிவாய்ப் பேசி நாம் புது சிருஷ்டிகளாக வேண்டிய விதத்தைத் திட்டமாய்ச் சொல்லுகிறார்.

i. பழைய மனுஷனைக் களைந்துபோடவேண்டும்.
ii. புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளவேண்டும்.
iii. அதைச் செய்வதற்கு உள்ளத்திலே புதிதாக்கப்படவேண்டும்.

I. பழைய மனுஷனைக் களைந்துபோடவேண்டும்.

பழைய மனுஷன் என்றால் பழைய சுபாவம் என்பதே. களைந்துபோடுதல் என்கிற பதமானது மூல பாஷையிலே ஓர் வஸ்திரத்தைக் களைந்துபோடுவதைக் குறிக்கும். நாம் அழுக்காய்ப்போன வஸ்திரத்தை

எப்படி களைந்து சுத்தமான வஸ்திரம் தரித்துக்கொள்ளுகிறோமோ, அப்படியே நம்முடைய பழைய சுபாவம் முற்றிலும் மாற்றப்படவேண்டும். அதிலுள்ள சில குணங்களைமாத்திரம் மாற்றினால் பிரயோஜனமில்லை. அது வேரோடே பிடுங்கப்படவேண்டும். ஏனெனில் அது கெட்டுப்போகிறபடியால் நம் முழு ஆத்துமாவும் அதனால் கொஞ்சங் கொஞ்சமாய்க் கெட்டுப்போகும்.

அந்த பழைய சுபாவத்தின் தன்மை இன்னதென்பது 22-ம் வசனத்தில் சொல்லப்படுகிறது. நம்மில் பாவம் குடிகொண்டிருப்பதால் துராசைகளுக்கு இடம் கொடுத்து, மோசம் போய்க் கெட்டுப்போகிறோம். (யாக். 1¹⁵-ஐக் காண்க.) ஒட்டகத்தின் தலையை தன் கூடாரத்தில் நுழையும்படி இடம் கொடுத்த மனிதன் கடைசியில் அதினாலேயே முற்றிலும் துரத்தப்பட்டதுபோல் நாமும் துர் இச்சைகளுக்கு இடங்கொடுப்பதால் அவைகளால் முழுமையும் ஆட்கொள்ளப்பட்டு வருகிறோம். ஆகவே அவைகளை நிர்மூலமாக்க வேண்டியதவசியம். அசுத்தமான வஸ்திரத்தைக் களைந்துபோடுவதுபோல் அந்தப் பழைய சுபாவத்தைக் களைந்துபோட்டு,

II. புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளவேண்டும்.

பழைய சுபாவத்தைத் தள்ளிப்போடுவது போதாது: அதற்கீடாக புதிய சுபாவத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். சங்கீதக்காரன் சொல்லுகிறபடி தீமையைவிட்டு விலகுவதோடுகூட நன்மையைச் செய்யவேண்டியதவசியம். இயேசுவானவர் மத். 12⁴³-ல் சொல்லிய உவமை இதற்கு இசைவானது. நாம் பழைய சுபாவத்தைத் தள்ளிவிட்டு அதற்குப் பதிலாக புதிய சுபாவத்தை அடையாவிட்டால் நம் முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும்.

புது சுபாவத்தின் தன்மையானது பழைய சுபாவத்துக்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது. மோசத்துக்குப் பதிலாக நீதி: துராசைகளுக்குப் பதிலாக பரிசுத்த விருப்பம் (வ. 24). பழைய சுபாவம் பிசாசின் சுபாவத்துக்கு ஒப்பாயிருக்கிறது. புதிய சுபாவமோ தேவனுக்கு ஒப்பாயிருக்கிறது. நம் ஆத்துமத்தில் நாம் அவருடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டோம் (ஆதி. 1²⁷). பாவமானது அந்தச் சாயலைக் கெடுத்துப்போட்டிருந்தாலும் அதைத் திரும்பவும் பெறக்கூடியவர்களாயிருக்கிறோம். அதைப் பெறுவதற்கு,

III. நம் உள்ளத்திலே புதிதாக்கப்படவேண்டும்.

நம்மை ஏவுகிற ஆவியானது புதிய ஆவியாயிருக்கவேண்டும்; நம் நோக்கம், ஆசை, எண்ணம், நடக்கை எல்லாம் புதிதாகவேண்டும்.

'இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.' ஆகவே நமது பேச்சு, நடத்தை முதலானவை செம்மையாயிருக்கவேண்டுமானால் நமது இருதயம் புதிதாகவேண்டும்.

சில வியாதிகளுக்கு வெளியரங்கமான அடையாளங்களுண்டு; ஆயினும் வைத்தியர் அவ்வடையாளங்களினால் குறிக்கப்படுகிற வியாதிக்குச் சிகிச்சை செய்வார்களேயொழிய அடையாளங்களுக்கு மாத்திரம் சிகிச்சை செய்யமாட்டார்கள். அதுபோலவே நம் எல்லா துர்நடத்தைக்கும் பாவம் நிறைந்த உள்ளமே காரணமாயிருப்பதால் நமது நடத்தை சீர்ப்படவேண்டுமானால் நமது இருதயம் புதிதாகவேண்டும். பழையவைகள் ஒழிந்துபோகவும் எல்லாம் புதிதாகவும் வேண்டும்.

இது தேவ பெலனாலே ஆகும் (எசேக். 36[26]). என்றாலும் நாம் அதற்குத் தக்க பிரயாசப்படவேண்டும். நாமே பழைய சுபாவத்தைக் களைந்துபோட்டு புது சுபாவத்தின் நற்காரியங்களில் ஓங்கி வளரவேண்டிய பிரயத்தனம் செய்வது அவசியம். நாமே நம்முடைய 'இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண்டும்' (பிலி. 2[12]). மற்றவர்களை இரட்சிப்பதில் நாம் கர்த்தரோடு உடன் ஊழியரா யிருப்பதுபோல நம்முடைய சுய இரட்சிப்பு என்கிற விஷயத்திலும் நாம் அவரோடுகூட உழைக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். அந்த இரட்சிப்பானது நடந்தேறி வருகிற காரியமாயிருக்கிறதினால் நாம் ஓயாமல் அவர்கூட வேலைசெய்து அநுதினமும் 'தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் புதிதாக்கப்பட்டு வருகிற புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டு' (கொலோ. 3[9,10]), 'தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக' ப் பிரயாசப்படவேண்டும். (எபே. 4[15].)

162015
600 008

C. … PRESS, MADRAS—1915